ஆன்மிக வினா-விடை

ஐந்தாம் பாகம்



சுவாமி கமலாத்மானந்தர்

ஆன்மிக வினா-விடை

(632 கேள்வி - பதில்கள் அடங்கியது.)

ஐந்தாம் பாகம்

சுவாமி கமலாத்மானந்தர்

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
பெரியநாயக்கன்பாளையம்
கோயம்புத்தூர் - 641 020

First Edition: July 2011
COPIES : 2000

- TITLE :AANMIGA VINAA-VIDAI, VOLUME V
- AUTHOR :SWAMI KAMALATMANANDA
- LANGUAGE :TAMIL
- SUBJECT :RELIGIOUS QUESTIONS & ANSWERS
- EDITION :FIRST EDITION, July 2011
- PAPER USED :HI-TECH MAPLITHO-WHITE
- TOTAL NO PAGES :X+362 (DEMY SIZE)
- PUBLISHED BY :
  SECRETARY
  RAMAKRISHNA MISSION VIDYALAYA
  PERIANAICKENPALAYAM
  COIMBATORE-641 020.
- **PRICE : Rs.70-00**

Laser Typeset at:
Ramakrishna Mission Vidyalaya Printing Press
Ramakrishna Mission Vidyalaya
Coimbatore - 641 020, Phone: 0422-2692676

Printed at:
Ramakrishna Mission Vidyalaya Printing Press
Ramakrishna Mission Vidyalaya
Coimbatore - 641 020.

 5-1

பதிப்புரை

சென்னை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' என்ற ஆன்மிக மாத இதழை, கடந்த 91 ஆண்டுகளாக வெளியிட்டு வருகிறது.

இதன் ஆசிரியராக (இப்போது மதுரை, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவராக இருக்கும்) சுவாமி கமலாத்மானந்தர் 24 ஆண்டுகள் (1977 ஜனவரி முதல் 2000 டிசம்பர் வரை) பணி புரிந்தார்.

அப்போது அவர், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் (விஜயம்) பத்திரிகையில் வாசகர்களின் கேள்வி களுக்கு, 'ஆன்மிக வினா-விடை' என்ற பகுதியில் பதில் எழுதி வந்தார்.

அவ்விதம் 'விஜயம்' பத்திரிகையில் வெளி வந்த கேள்வி - பதில்களைத் தொகுத்து நாங்கள், 'ஆன்மிக வினா - விடை' என்ற பெயரில் முதல் பாகம், இரண்டாம் பாகம், ன்றாம் பாகம், நான்காம் பாகம் என்று நான்கு நூல்கள் வெளியிட்டிருந்தோம்.

அந்த நான்கு தொகுதிகளிலும், விஜயம் பத்திரிகையில் 1982 முதல் 1998 வரை வெவ்வேறு இதழ்களில் வெளிவந்த கேள்வி - பதில்களைத் தனித்தனித் தலைப்பின் கீழ் தொகுத்துக் கொடுத்தி ருந்தோம்.

ஏற்கெனவே நான்கு பாகங்கள் வெளிவந்த அதே முறையில் இப்போது, 'ஆன்மிக வினா- விடை, ஐந்தாம் பாகம்' என்ற இந்த நூலை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இந்த நூலில், 'விஜயம்' பத்திரிகையில் 2000, 2001, 2002, 2003, 2004 ஆகிய ஐந்து

ஆண்டுகளில் வெளிவந்த 632 கேள்வி - பதில்கள் இடம் பெற்றுள்ளன.

'இந்து மதம் பற்றிய ஒரு பொது அறிவு நூல்' போன்று, இந்த 'ஆன்மிக வினா - விடை' ஐந்து பாகங்களும் விளங்குகின்றன.

இந்த ஐந்து நூல்களிலும் 1.இறைவன், 2.ஹிந்து தெய்வங்கள், 3.மகான்கள், 4. ஆன்மிக சாதனை, 5. ஹிந்து சம்பிரதாயம், 6.ஒழுக்கம், 7.அறம் போன்ற கருத்துகள் உள்ளன. அந்த வகையில் இந்த ஆன்மிக வினா - விடை ஐந்து தொகுதிகளும், பல்வேறுபட்ட ஐயங்களுக்குத் தெளிவூட்டும் ஓர் ஆன்மிக அகராதி போன்று விளங்குகின்றன.

இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் கேள்விகள் 'விஜயம்' பத்திரிகையில் வெளிவந்தபோது, கேள்வி கேட்டவர்களின் பெயர்களுடன் வெளிவந்தன. இப்போது இந்த நூலில் அந்தப் பெயர்களை நீக்கி வெளியிட்டிருக்கிறோம்.

இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் கேள்வி - பதில்களில் ஆன்மிகத்துடன் இலக்கியச் சிந்தனையும், சமுதாயநலச் சிந்தனையும் இழையோடுவதைப் பார்க்கலாம்.

இதில் நூலாசிரியர் எளிமையான பண்பட்ட நடையில், எல்லோருக்கும் எட்டும் விதத்தில் சிக்கலான கேள்விகளுக்கும் கூட சுவாரஸ்யமான வகையில் பதில் சொல்லியிருக்கிறார்.

இந்த நூல் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டிய ஓர் உயர்தரப் பொக்கிஷம் என்பதில் ஐயமில்லை.

இந்த நூலுக்கு அச்சுப்பிரதிகள் திருத்துவதில் மதுரையைச் சேர்ந்த தமிழறிஞர் கி.வேலாயுதம், பேராசிரியர் சொ.சொ.மீ.சுந்தரம், இரா.செல்லன் ஆகியோர் உதவினார்கள். அவர்களுக்கு நன்றி.

ஆன்மிக அன்பர்கள் இந்தப் புனித நூலின் பெருமையுணர்ந்து, இதை வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

- பதிப்பாளர்

15.7.2011
குரு பூர்ணிமா

ஸ்ரீ ராதாராணியின் திருவடிகளில் இந்த நூல் சமர்ப்பணம்

மிகவும் உயர்ந்த தூய பக்திக்கு - பிரேமை பக்திக்குத் தலைசிறந்த முன்னுதாரணம் ஸ்ரீமதி ராதை. அந்தப் பிருந்தாவனேஸ்வரி ஸ்ரீமதி ராதாராணியின் திருவடிகளுக்கு இந்த நூல் காணிக்கை.

-சுவாமி கமலாத்மானந்தர்

பொருளடக்கம்

பகுதி - 1

பகுதி - 2

பகுதி - 3

<u>பகுதி - 5</u>

பகுதி - 6

பகுதி -1

1. இறைவன்

1. கேள்வி: இறைவனின் 'தொன்மைக்கோலம்' எது?

□பதில்:சிவ ர்த்தங்களில் (சிவபெருமானின் வடிவங்களில்) 'தொன்மைக்கோலம்' என்று, மாணிக்கவாசகர் அர்த்தநாரீஸ்வரரைக் குறிப்பிடு கிறார்.

வைணவத்தில் 'தொன்மைக்கோலம்' என்று வாமன அவதாரம் சொல்லப்படுகிறது.

2. கேள்வி: 'ஹரி' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

□பதில்:'ஹரி' என்றாலும், 'ஹரன்' என்றாலும் 'அபகரிப்பவன்' என்றுதான் அர்த்தம். 'பக்தர்க ளிடம் உள்ள பாவங்களை, தீயவற்றை பகவான் அபகரிக்கிறான் (நீக்குகிறான்)' என்பது பொருள்.

3. கேள்வி:'ராதா ரமணன்' என்ற சொல் கிருஷ்ணனைக் குறிப்பிடுகிறது. 'பார்வதி ரமணன்' என்ற சொல் சிவபெருமானைக் குறிப்பிடுகிறது.

இவற்றில் 'ரமணன்' என்ற சொல்லின் பொருள் என்ன?

□பதில்:'ரமணன்' என்ற சொல்லுக்கு 'மனத்திற்கு இனியவன்' என்பது பொருள்.

4. கேள்வி: இயற்கைக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்ன?

□பதில்: இயற்கையின் வடிவத்தில் இறைவனே விளங்குகிறான். இயற்கையின் அனைத்து அம்சங்களும் இறைவனே ஆகும்.

5. **கேள்வி: 'இறைவன் உண்டு' என்ற கருத்தைப் பாமர மனிதனும் புரிந்துகொள்ளும்படி கூறுங்கள்?**

□பதில்:அநாதைச் சிறுவன் ஒருவனைப் பார்க்கிறோம். அவனுக்கும் நமக்கும் அவனுடைய பெற்றோர்கள் யார் என்று தெரியாமல் இருந்தாலும், அவனுக்குப் பெற்றோர்கள் உண்டு என்று ஊகிக்கிறோம். அதுபோல் இந்த உலகைப் பார்க்கும்போது, இதைப் படைத்த இறைவன் ஒருவன் உண்டு என்று ஊகிக்கிறோம்.

எள்ளைப் பார்க்கிறோம். ஆனால் அதனுள் மறைந்திருக்கும் எண்ணெயை நாம் கண்ணால் பார்க்க முடிவதில்லை. கண்ணால் காண முடியாத காரணத்தால் மின்சாரம் போன்றவற்றை இல்லை என்று நாம் சொல்லிவிட முடியாது. அதுபோல், நமது அஞ்ஞானம் காரணமாக இறைவனை நாம் காண முடியாவிட்டாலும், 'இறைவன் என்ற ஒருவன் இருக்கிறான்' என்பது முற்றிலும் உண்மை, உண்மை, உண்மை.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்விதம் கூறியுள்ளார்:

''இரவில் ஆகாயத்தில் எண்ணற்ற நட்சத்திரங்களைப் பார்க்கிறாய்; ஆனால் சூரியன் உதித்ததும் அவைகள் தென்படுவதில்லை; ஆதலால் பகல் பொழுதில் ஆகாயத்தில் நட்சத்

திரங்களே இல்லையென்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞான காலத்தில் நீ இறைவனைக் காண முடியவில்லை என்பதால், இறைவனே இல்லையென்று சாதிக்காதே.''

6. கேள்வி:இறைவனின் குரலை நாம் கேட்க முடியுமா?

☐பதில்: நீண்ட கடினமான தவம் காரணமாக மனத்தூய்மையைப் பெற்றிருக்கும் சிலரால், இறைவனின் குரலைக் கேட்க முடியும் என்பது உண்மை.

பொதுவாக, தூய சாதகர்கள் ஆழ்ந்த அமைதியான சூழ்நிலையிலும், மௌனத்திலும், உள்முகமாக தியானத்தில் இருக்கும்போதும் இறைவனின் குரல் தங்கள் உள்ளத்தில் ஒலிப்பதைக் கேட்க முடியும்.

7. கேள்வி: 'இறைவனின் சௌலப்யம்' என்றால் என்ன?

☐பதில்:இறைவனின் எளிமைப் பண்பு 'சௌலப்யம்' எனப்படும்.

8. கேள்வி: கடவுளின் நண்பன் யார்?

☐பதில்: நேர்மையான மனிதன்தான் கடவுளின் நண்பன். ஏனென்றால் அவன் கடவுளைப் போலவே இருக்கிறான்.

நல்லொழுக்கங்களுடன் நேர்மையாகவும், உலக நன்மைக்காகவும் உழைப்பவர்களுக்கு - தெய்வங்கள் தாங்களாக வரிந்து கட்டிக்கொண்டு ஓடி வந்து உதவி செய்வார்கள்.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.'' (குறள்-1023)

பொருள்: ''‘என் குடியை உயரச் செய்வேன்’ என்று முயற்சி செய்யும் ஒருவனுக்கு உதவுவதற்கு, தெய்வம் ஆடையை வரிந்துகட்டிக்கொண்டு தானே முற்பட்டு நிற்கும்.''

9. **கேள்வி: ‘இறைவனின் முன்பு எல்லோரும் சமம்’ என்பதற்கு உதாரணம் சொல்லுங்கள்?**

□பதில்: எல்லோரும் இறைவனின் குழந்தைகள்; எல்லோரும் இறைவனின் அன்புக்குரியவர்கள்; இறைவன் முன் எல்லோரும் சமம்; இறைவன் முன்பு ஆண்-பெண் என்ற வேற்றுமை இல்லை என்பதுதான் முழு உண்மை.

திருநாளைப்போவார், திருப்பாணாழ்வார் போன்றவர்களின் வரலாறுகள் - இறைவன் முன்பு அனைவரும் சமம் என்ற உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

10. **கேள்வி: தவறு செய்யும் தன்னுடைய பக்தர் களைப் பற்றி இறைவன் என்ன நினைப்பார்?**

□பதில்: பக்தர்கள் மீது இறைவன் கொண்டிருக்கும் தயையும் கருணையும் எல்லையற்றவை. தவறு செய்யும் பக்தர்களையும் திருத்தி நல்வழிப் படுத்தி ஆட்கொள்ளவே இறைவன் விரும்புகிறான்.

சந்திரன், ராவணன் ஆகியவர்கள் செய்த பெரும் பிழையையும் மன்னித்து சிவபெருமான் அருள் புரிந்தார்.

ஸ்ரீ ராமர், காகாசுரன் செய்த பெரும் பிழையையும் மன்னித்து அருள் புரிந்தார்.

மனத்தூய்மையின்றிச் செய்யப்படும் பக்தி - உரிய பலனை, உயர்ந்த பலனைத் தருவதில்லை.

உள்ளத்தில் காமம், கோபம், பொறாமை, கள்ளம், கபடு போன்ற மாசுகளை வைத்துக் கொண்டு செய்யப்படும் பிரார்த்தனைக்கு இறைவன் செவிசாய்க்க மாட்டான்.

மனிதன் மனம் திருந்தித் தூய வாழ்க்கையும், தியான வாழ்க்கையும் மேற்கொண்டால் வீடுபேறு அடைய முடியும். பழிக்குப் பழி வாங்கத் துடிப்பது ஆன்மிகமல்ல; பிறர் குற்றத்தை மன்னிப்பதுதான் ஆன்மிகம்.

நாமும் நமக்குத் தீமை செய்தவர்களை மன்னித்து நன்மை செய்து வாழ வேண்டும்.

பிறர் குற்றத்தை மன்னித்து வாழ்பவன் மகிழ்ச்சியோடும், மனஅமைதியோடும் வாழ்வான்.

11. கேள்வி: 'கடமை' என்பதற்கு இலக்கணம் என்ன?

☐பதில்: கடமை என்பதற்குக் 'கடவுள் தன்மை உடைய செயல்கள்' என்றும் பொருள் கொள்ளலாம்.

12. கேள்வி: 'காலம்' என்பது தமிழ்ச் சொல்லா, வடமொழிச் சொல்லா?

☐பதில்: 'கால்', 'காலே' என்ற சம்ஸ்கிருதச் சொல்லைத் தமிழில் 'காலம்' என்று வழங்கி வருகிறோம்.

'காலம்' என்ற சொல், 'பரம்பொருளிடம் (இறைவனிடம்) சென்று முடிவது' என்ற பொருளை உடையது.

13. கேள்வி: இறைவனுக்கும் எனக்கும் (நமக்கும்) உள்ள தொடர்பு என்ன?

(நமக்குத் தாய் இறைவன், நமக்குத் தந்தை இறைவன், நமக்குத் தாயாகவும் தந்தை யாகவும் இருப்பவன் இறைவன் என்று பதில் சொல்ல வேண்டாம்.)

☐பதில்: கடலிலுள்ள ஒவ்வொரு துளி நீரும் கடலுடன் தொடர்புடையது. அதுபோல் நாம் ஒவ்வொருவரும் இறைவனின் ஓர் அம்சமாக இருப்பதால், இறைவனுடன் நிரந்தரமான தொடர்புடையவர்கள்.

2. குரு

14. கேள்வி: 'குரு' என்பவர் யார்?

☐பதில்: நமது உள்ளம் இறைவனிடம் ஒடுங்க வேண்டும். இதற்கு நமக்கு உதவுபவரே குரு ஆவார்.

15. கேள்வி: 'குரு' என்பவர் யார்?

☐பதில்: உலக வாழ்க்கை என்பது கரை காண இயலாத ஆழ்கடல் போன்றது. இதைக் கடப் பதற்குத் திசைகாட்டியாக விளங்குபவர் குரு.

'கு' என்ற சொல்லுக்கு 'அஞ்ஞானம்' என்றும், 'ரு' என்ற சொல்லுக்கு 'அஞ்ஞானத்தை நீக்குபவர்' என்றும் பொருள்-இதுவே முதலாவது பொருள்.

'கு' என்பது குண விசேஷத்தையும், 'ரு' என்பது ரூப விசேஷத்தையும் குறிக்கும். எனவே 'குரு' என்பது குருவின் குண விசேஷத்தையும் (தெய்விகக் குணங்களையும்), ரூப விசேஷத்தையும் (தெய்விக உருவத்தையும்) குறிக்கிறது - இது இரண்டாவது பொருள்.

குறுந்தொகையில் உள்ள 252-ஆம் பாடல் குருவை 'குலபதி' என்று குறிப்பிடுகிறது.

16. கேள்வி: 'குரு' என்று ஒருவர் அவசியமா?

பதில்: ''குரு இல்லாத வித்தை பாழ்'' என்று, பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

காலத்திற்கும் எல்லைக்கும் உட்பட்ட சமையல், நீச்சல் பயிற்சி, கார் ஓட்டுதல் போன்ற கலைகளைக் கற்பதற்கே ஒருவரின் துணை வேண்டுமானால், காலத்தையும் எல்லையையும் கடந்த இறைவனை அடைய - இறைவனை அறிய ஞானகுரு ஒருவர் வேண்டாமா?

குருவின் உபதேசத்தைப் பின்பற்றி வாழ்ந்தால், மனம் இறைவனிடம் ஒடுங்கும்.

குருவை நாடி நாடித்தான் போக வேண்டும்; தேடித் தேடித்தான் செல்ல வேண்டும்.

மன இருளைப் போக்கும் ஞானவிளக்கு குரு ஆவார்.அவர் இம்மையிலும் மறுமையிலும் நம்மைச் சூழ்ந்த, சூழ இருக்கும் அஞ்ஞான இருளை நீக்கும் ஞானதீபமாக விளங்குகிறார்.

17. கேள்வி:''குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே தேவதேவராகிய மகேஸ்வரன், குருவே

சாட்சாத் பரப்பிரம்மம். அவரை நான் வணங்குகிறேன்'' என்று, புகழ் பெற்ற ஒரு சுலோகம் கூறுகிறது.

(சுலோகம்: குருர் பிரம்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மகேஸ்வர: குருஸ் ஸாட்சாத் பரம்பிரம்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:)

எனக்கு இந்த உலகில் குரு என்று ஒருவர் இருக்கிறார். (நான் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தஜி மகராஜ் அவர்களிடம் மந்திரதீட்சை பெற்றவன்.) அவர் நம்மைப் போன்று கை, கால்கள் என்று மனித உருவத்தில் இருந்தவர்.

அப்படியிருந்தவரை, 'அவர்தான் பிரம்மா அவர்தான் விஷ்ணு, அவர்தான் சிவன், அவர்தான் சாட்சாத் பரப்பிரம்மம்' என்று நான் எப்படி கருத முடியும்?

''என்னுடைய குரு பிரம்மாவைப் போல் படைக்கும் ஆற்றல் உள்ளவர், விஷ்ணுவைப் போல் காக்கும் ஆற்றல் உடையவர், மகேஸ்வ ரனைப் போல் அழிக்கும் ஆற்றல் உள்ளவர். அவரே இந்த உலகத்தின் தோற்றத்திற்கு அடிப் படைக் காரணமான பிரம்மம்'' - என்று நான் எப்படி நினைக்க முடியும்?

எனக்கு குரு பக்தி நிறையவே உண்டு. என் குருவை ஒரு ரிஷி, ஞானி, மகான் என்று என்னால் சுலபமாக நினைக்க முடியும். ஆனால் இந்த சுலோகம் கூறுவதுபோல், என் மனம் என் குருவை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

எனவே அன்புகூர்ந்து சுலோகம் குறிப் பிடும் கருத்துக்கு, சரியான விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

□பதில்: நீங்கள் குறிப்பிடும் சுலோகத்தை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இந்தியா முழுவ திலும் உள்ள ஆன்ம சாதகர்கள் அனைவரும் (ஏன், ஞானிகளும்கூட), பக்தியுடன் நாள் தோறும் கூறி வருகிறார்கள்.

மின்சாரம் என்று ஓர் ஆற்றல் இருப்பது நமக்கெல்லாம் தெரியும். அந்த மின்சாரம் என்ற ஒரே ஆற்றல்தான் மின்விளக்கு, மின்விசிறி, வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி போன்ற எத்தனை எத்தனையோ விதங்களில் மின்சாதனங்களாக வெளிப்படுகிறது.

மின்சாரத்தின் ஆற்றல் என்பது, ஒரே ஆற்றல்தான். அமெரிக்காவில் இருக்கும் மின்சார சக்தி வேறு, ஐரோப்பாவில் இருக்கும் மின்சார சக்தி வேறு, இந்தியாவில் இருக்கும் மின்சார சக்தி வேறு என்று வெவ்வேறு விதமான மின் சக்திகள் உலகில் இல்லை.

இருப்பது ஒரே மின்சார சக்திதான். அந்த ஓர் ஆற்றல்தான் மின்விளக்கு முதலான எண்ணற்ற மின்சாதனங்கள் லம் - உலகம் முழுவதும் வெளிப்படுகிறது; இயங்குகிறது.

மின்சாரசக்தி என்பது போன்ற ஈடுஇணை யற்ற அருள்சக்தி பரப்பிரம்மம்.

அந்தப் பரப்பிரம்மமே பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகிய வடிவங்கள் கொண்டு ஆன்மாக்களைப் பக்குவப்படுத்தும் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற உலகக் கிருத்தியங்களைச் செய்கிறது. மின்சாரசக்தி மின் விளக்கு, மின்விசிறி, வானொலி, தொலைக்

காட்சி ஆகியவற்றின் லம் வெளிப்படுவது போல் பரப்பிரம்மம் பிரம்மா, விஷ்ணு, ஈசுவரன் ஆகிய ர்த்தங்கள் லம் வெளிப்படுகிறது; அதே பரப்பிரம்மம் குருவின் லமாகவும் தன்னுடைய அனுக்கிரகச் சக்தியை வெளிப்படுத் துகிறது.

ஆதலால் குருவிடம் வெளிப்படும் அருள் சக்திதான் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியவர்களிடமும் இருக்கிறது.

'குருசக்தி' என்ற ஒரு சக்திதான் உலகில் மனித குருமார்கள் லம் வெளிப்படுகிறது.

அந்த வகையில் நமக்கு யார் குருவோ அவரே பிரம்மாவும், விஷ்ணுவும், மகேஸ் வரனும், பரப்பிரம்மமும் ஆவார்.

தங்கம் என்ற ஓர் உலோகத்தைக் கொண்டு மோதிரம், வளையல், கம்மல், சங்கிலி போன்ற பல தங்க ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. இந்த ஆபரணங்கள் எல்லாவற்றுக்கும் ஆதார மாக இருப்பது தங்கம்.

அது போல் குரு, பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியோர்கள் லம் வெளிப்படும் அருள்சக்திக்கு ஆதாரமாக இருப்பது பரப் பிரம்மம்.

களிமண் என்ற ஒரு பொருளைக்கொண்டு சட்டி, பானை போன்ற பல மட்பாண்டங்கள் செய்யப்படுகின்றன. அவ்விதம் செய்யப்படும் மட்பாண்டங்களுக்கு ஆதாரம் களிமண்.

களிமண் என்ற பொருள் மட்பாண்டங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கிறது.

அதுபோல் குரு, பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் ஆகியவர்கள் லம் வெளிப்படும் அருள் ஆற்ற லுக்கு அடிப்படை பரப்பிரம்மம்.

சென்னை கார்ப்பரேஷன் தண்ணீர் என்ற ஒன்று, சென்னை மாநகரத்தைச் சேர்ந்த பகுதிகள் எல்லாவற்றிலும் உள்ள குழாய்கள் லம் வெளிப்படுகிறது.

அதுபோல் குருசக்தி என்ற ஒன்றே, காலம் முழுவதும் வந்தபடியே இருக்கும் மனித குருமார்கள் லம் வெளிப்படுகிறது.

கங்கை இமயமலையில் கோமுக் என்ற இடத்தில் உற்பத்தியாகி, 1000கி.மீ-க்கும் அதிக மாகப் பாய்ந்து சென்று, வங்காளத்தில் கங்கா சாகர் என்ற இடத்தில் கடலில் கலக்கிறது.

கோமுக், உத்தரகாசி, ரிஷிகேஷ், ஹரித்து வார், அலகாபாத், காசி, கங்காசாகர் உட்பட கங்கை பாயும் எந்த இடத்திலிருந்து அந்த நீரை எடுத்தாலும், அதற்கு 'கங்கா தீர்த்தம்' என்றுதான் பெயர்.

அதுபோல் எல்லாக் காலங்களிலும், உலகில் எந்தப் பகுதியிலும் - எந்த மதத்தைச் சேர்ந்த குருவின் லமும் - குரு சக்தி வெளிப்பட்டாலும் - அது, குருசக்தி என்ற ஒரே லத்திலிருந்துதான் (குருசக்தி என்ற உற்பத்தி ஸ்தானத்திலிருந்துதான்) வெளிப்படுகிறது.

(''ஸ்ரீமத் சுவாமி விரேஸ்வரானந்தஜி மகராஜ் அவர்களின் லம் 'குரு சக்தி' என்பது சிறப்பாக வெளிப்பட்டது'' என்று, ஸ்ரீமத்

சுவாமி கம்பீரானந்தஜி மகராஜ் தமது ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.)

★★★

மேலே குறிப்பிட்ட விளக்கத்தைத் தவிர, இன்னொரு விதமாகவும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். அது வருமாறு:

பிரம்மா சிருஷ்டிக்கும் தொழிலைச் செய் கிறார். அதுபோல் குரு, சீடனின் உள்ளத்தில் ஆத்ம ஞானத்திற்கு வழி காட்டும் உயர்ந்த ஆன்மிகச் சிந்தனைகளைத் தோற்றுவிக்கிறார்.

விஷ்ணு காக்கும் தொழிலைச் செய்கிறார். அது போல் குரு, ஆத்ம ஞானத்திற்கு வழி காட்டும் அருள் மயமான சிந்தனைகளைச் சீடனின் உள்ளத்தில் நிலைநிறுத்திப் பாதுகாக் கிறார்.

மகேஸ்வரன் அழிக்கும் தொழிலைச் செய்கிறார். அதுபோல் குரு, சீடன் ஆத்ம ஞானம் பெறுவதற்கு இடையூறாக இருப்ப வற்றை அழித்து அனுக்கிரகம் செய்கிறார்.

மற்றபடி பிரம்மாவுக்குரிய படைத்தல், விஷ்ணுவுக்குரிய காத்தல், மகேஸ்வரனுக்குரிய அழித்தல் ஆகிய முத்தொழில்கள் குருவுக்குரிய தொழில்கள் அல்ல; அவர் அவற்றைச் செய்ய மாட்டார்; செய்வதில்லை.

"குருவைச் சாதாரண மனிதன் என்று நினைக்கக் கூடாது. இறைவனைத் தரிசிப்பதற்கு முன்னால், அந்தத் தெய்விக தரிசனத்தின் முதல் அங்கமாக குருவைத்தான் சீடன் முதலில் தரிசிக்கிறான். பிறகு அந்தக் குருவே இறை

வனாக மாறி, இறைவன் சொரூபத்தைக் காட்டு கிறார். பின்னர் இறைவனும் குருவும் ஒருவரே என்று சீடன் தெரிந்துகொள்கிறான்'' என்று, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார்.

★★★

ஏழை ஒருவன் வேலை கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவனுக்கு ஒருவர், தனது சிபாரிசின் பேரில் வேலை வாங்கித் தருகிறார்.

ஏழை அந்த அன்பரைப் பற்றிச் சொல்லும்போது, ''அவர்தான் என் தெய்வம்'' என்று கூறுகிறான்.

அந்த அன்பரே உண்மையில் தெய்வம் இல்லை. ஆனால் தனக்குப் பெரிய உபகாரம் செய்ததால் அவரை ஏழை, 'என் கண்கண்ட தெய்வம்' என்று குறிப்பிடுகிறான்.

அந்த ஏழையின் நிலைதான் சீடனின் நிலை.

சீடன் பிரம்மாவையோ, விஷ்ணுவையோ, மகேஸ்வரனையோ, பரப்பிரம்மத்தையோ நேரில் கண்ணால் பார்த்ததில்லை. அவன் குருவை மட்டுமே கண்ணால் பார்க்கிறான். பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், பரப்பிரம்மம் ஆகியவர் களின் அருளைத் தனக்குப் பெற்றுத் தருபவராகச் சீடன்-தன் குருவைத்தான் பிரத்தியட்சமாகத் தன் கண் முன்னால் காண்கிறான்.

எனவே சீடனைப் பொறுத்த வரையில் குருதான் அவனுக்குக் கண்கண்ட தெய்வம்; பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், பரப்பிரம்மம்

ஆவார்கள் - இப்படியும் சுலோகத்திற்கு ஒரு பொருள் கொள்ளலாம்.

★★★

இந்தப் பதிலைத் தவிரவும், வேறு விதமாகவும் சில கருத்துகளை இங்கு குறிப்பிட முயல்கிறேன்.

குரு, ஆச்சாரியன், ஞானிகள், பாகவதோத்தமர்கள், முற்றும் துறந்த துறவிகள் ஆகியவர்களையும் நாம் இறைவனுக்குச் சமமாகக் கருத வேண்டும் என்று நமது ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்.

ஆதலால், குருவை மும் ர்த்திகளுக்குச் சமமாகக் கருதி நாம் பூஜிக்க வேண்டும் என்றும் நாம் பொருள் கொள்ளலாம்.

மனித குருமார்கள் (சத்குருமார்கள்) தங்கள் சீடர்களுக்கு மந்திர தீட்சை வழங்குகிறார்கள் (அருள் உபதேசம் செய்கிறார்கள்). அப்போது அந்த குருமார்களிடம் இறைவனே எழுந்தருளி, உலக மக்களுக்கு அனுக்கிரகம் செய்கிறான்.

எனவே உபதேசம் செய்யும் அந்தச் சமயத்தில் சத்குருமார்கள் இறைவனாகவே இருக்கிறார்கள்; இறைவனுடன் ஒன்றியிருக்கிறார்கள். மற்றபடி அவர்களுக்குப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களைச் செய்யும் ஆற்றல் கிடையாது; அதிகாரம் கிடையாது.

உயர்ந்த ஆத்ம சாதகர்கள் குருவை இறைவனாகவும், இறைவனுக்கு அடுத்த நிலையிலும் வைத்துப் போற்றி வந்திருக்கிறார்கள். அந்த

அளவில் நாம் எடுத்துக்கொண்டால் போதும். மற்றபடி, ''குரு என்பவர் படைப்பாரா, காப்பாரா, அழிப்பாரா? என்றெல்லாம் நாம் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை'' என்று நான் நினைக்கிறேன்.

வானத்திலிருந்து பெய்யும் மழை மொட்டை மாடியில் விழுகிறது. அவ்விதம் பெய்த மழையால், மொட்டை மாடியில் நீர் சேருகிறது. அந்த மொட்டை மாடியில் பெய்த நீரை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக யானை, சிங்கம், புலி, மான் தலைகள் கொண்ட பொம்மைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பொம்மைகளின் வாய் வழியாக மொட்டை மாடியில் பெய்த நீர் வெளியேறி பூமியில் சென்று விழுகிறது.

வானத்திலிருந்து வரும் மழை நீர் போன்றது பரப்பிரம்மம். அந்த மழை நீர் பல்வேறு வடிவங்கள் கொண்ட பொம்மைத் தலைகள் வழியாகக் கொட்டுவது போன்று பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், சத்குரு ஆகிய வர்களின் லம் பரப்பிரம்மம் தன் அருள் சக்தியை உலக நன்மையின் பொருட்டு வெளிப் படுத்துகிறது.

பூமியைத் தொடுவதற்காக வானத்தி லிருந்து வந்து கொண்டிருக்கும் மழைநீர், மொட்டை மாடியில் சேர்ந்த நீர், யானை முதலான பொம்மைகளின் வாய் வழியாக வெளிவந்த நீர் ஆகிய எல்லாவற்றுக்கும் ஆதாரம் மழை என்று சொல்லப்படும் ஒரு நீர்தான்.

மழை நீர் என்ற நிலைதான் பரப் பிரம்மத்தின் நிலை - இது வேதாந்த ரீதியில் அமைந்த ஒரு பதில்.

★★★

குருவை 'ஞானி' என்று ஒப்புக்கொள்ளும் மனோபாவனை இருக்குமானால், அவரை இறைவன் என்று ஏற்றுக்கொள்ளத் தயங்க வேண்டியதில்லை.

பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணன், ''ஞானி என் ஆத்ம சொரூபமே என்பது என் கருத்து'' என்று, ஏழாம் அத்தியாயத்தில் 18-ஆம் சுலோகத்தில் கூறியிருப்பதை இங்கு நாம் நினைவு படுத்திக் கொள்ளலாம்.

''ஞான குரு பிரணவதேகம் கொண்டவர்'' என்று, சைவ சமயத்தினர் கூறுகிறார்கள். ''அத்தகைய ஞானகுருவின் சொல் அனைத்தும் இறைவனின் சொற்கள்தான், அவர் செயல்கள் அனைத்தும் இறைவனின் செயல்கள்தான்'' என்று சிவனடியார்கள் குறிப்பிடுகிறார்கள்.

''இறைவனே மனித வடிவத்தில் குருவாக வருகிறான்'' என்று, சைவ சித்தாந்தம் உறுதியாகக் கூறுகிறது.

பல முகங்களுடனும், பல கைகளுடனும், பல ஆயுதங்களுடனும் இறைவன் வந்தால் மக்கள் அவரைச் சுலபமாகவும் இயல்பாகவும் நெருங்கமாட்டார்கள். எனவே இறைவன் மனிதர்களைப் போலவே, மனிதச் சட்டை அணிந்து மனித உருவத்தில் வருகிறான்.

மானைப் பிடிப்பவர்கள், மானைக் காட்டியே மானைப் பிடிப்பார்கள்; யானையைப் பிடிப்பவர்கள், யானையைக் காட்டியே யானையைப் பிடிப்பார்கள். அது போல் மனிதர்களை ஆட்கொள்வதற்காக இறைவன், மனித குரு வடிவம் தாங்கி உலகில் எழுந்தருள்கிறான்.

மனித வடிவத்தில் வரும் இறைவன்தான் 'குரு' என்று கூறப்படுகிறார்.

உயிரானது மெய், வாய், கண், க்கு, செவி என்னும் ஐந்து புலன்கள் என்ற வேடர்களிடம் அகப்பட்டு, அளவற்ற துன்பங்களை அனுபவிக்கிறது. இந்தப் பொல்லாத வேடர்களிடமிருந்து விடுவித்து உயிரைக் காப்பாற்றி, முக்தி வழங்குவதற்காக இறைவனே குருவாக வருகிறார்.

குருவின் உபதேசத்தின்படி தவநெறியில் நிற்கும் உயிர், இடைவிடாமல் இறைவனையே நினைத்து பக்தி செலுத்துகிறது. அதன் பயனாக என்றும் இறவாத நிலையான முக்தியை அடைகிறது.

காந்தக் கல்லுடன் இரும்பைச் சேர்த்து அதற்குக் காந்தம் ஏற்றினால், இரும்பு காந்தமாகிறது. ஆனால் அது வடிவத்தில் இரும்பாக இருக்கிறது.

அதுபோல், இறைவன் மனிதனின் ஆன்மாவில் தன் அருளைப் பதிக்கிறான். அதன் பயனாக ஆன்மா அருள் மயமாகிறது. இந்த நிலையை 'சீவன் சிவனாகிறான்' என்று கூறுவார்கள்.

இரும்பில் காந்தம் பரவியது போல், ஆன்மாவில் பதிந்த அருள் ஸ்தூல உடம்பிலும் பரவுகிறது.

அருள் மயமான உடம்பைப் 'பிரணவ தேகம்' என்று கூறுவார்கள்.

சிவனாகியவர்கள் அல்லது தெய்வத் தன்மை அடைந்தவர்கள், இறைவனுக்குச் சமம் என்று சொல்வார்கள். சிலவற்றில் மட்டும்தான் சமம் என்பதே இதன் கருத்து.

இறைவன் குரு ர்த்தியாக வரும்போது, சீடர்களின் ஆன்மிக நலனுக்கு எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ, அதைச் செய்வார்.

மனித வடிவம் தாங்கி வரும் இறைவனான குருவும், சீடனுக்குத் தேவையானவற்றையே பக்குவம் அறிந்து அருள்வார்.

தட்சிணா ர்த்தி வடிவத்தை 'ஆதிகுரு' என்று வேதாந்திகள் சிறப்பாகப் போற்றுகிறார்கள்.

குரு வேறு, இறைவன் வேறு இல்லை. இந்த உண்மையை, ''சிவன் வேறு, குரு வேறு அல்ல'' என்ற ஆன்றோர் வாக்கும் உறுதிப்படுத்துகிறது.

''குருவே சிவமெனக் கூறினன் நந்தி'' என்று, திரு லர் தமது திருமந்திரத்தில் கூறியிருக்கும் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது.

சிவன் குரு வடிவம் தாங்கி, உலகில் எழுந்தருளி மக்களுக்கு அருள் வழங்குகிறான்.

இந்த உண்மையை திருவாசகம், ''அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரனாகிய கொள்கை'' என்று குறிப்பிடுகிறது.

கச்சியப்ப சிவாச்சாரியர் எழுதிய கந்த புராணத்தில், மார்க்கண்டேயப் படலத்தில் தகுதி யான மணமகனைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''தேசிகரை (குருவை) மனிதன் என்று நினைப் பவனை மணமகனாக ஏற்றுக்கொள்ளக்கூடாது'' என்று குறிப்பிடுகிறார்.

இதன் லம், ''குருவை மனிதன் என்று நினைக்கக் கூடாது. குருவை இறைவனாகவே கருத வேண்டும்'' என்று கந்தபுராணம் வலியு றுத்துகிறது.

சைவத்தில் தட்சிணா ர்த்தி ஆதிகுரு என்பதுபோல், வைஷ்ணவத்தில் கீதாச்சாரியன் ஏ்ன்ற கண்ணனையும், ஹயக்ரீவரையும் குரு வடிவமாகப் போற்றுகிறார்கள்.

3. ஆன்மிகம்

18. கேள்வி: ஆன்மிக வாழ்க்கையின் சாரம் என்ன?

□பதில்: மனத்தூய்மை.

19. கேள்வி: ஆன்மிகத்தின் முதல் நோக்கம் என்ன?

□பதில்: மனிதன் முதலில் தன்னைத் தானே தூய் மைப்படுத்திக்கொள்ள வேண்டும். இதையே ஆன்மிகம் தன் முதல் நோக்கமாகக் கொண்டி ருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது.

20. கேள்வி: ஆன்மிக வாழ்க்கையின் ஆரம்பம் எது?

□பதில்: ஆன்மிக நெறியில் செல்லும் வாய்ப்பு இருந்தும், அதை ஜீவாத்மா அஞ்ஞானம் காரண மாகச் செய்யாமல் இருக்கிறது. இந்த நிலையில் இறைவனின் அருள் ஜீவாத்மாவின் மீது படுவது தான், ஜீவாத்மாவின் ஆன்மிக வாழ்க்கையின் முதல் தொடக்கமாக அமைகிறது. அதனால் ஜீவாத்மாவுக்கு மனித உடல் கிடைக்கிறது.

21. கேள்வி: ஆன்மிக வாழ்க்கையின் முதல்படி எது?

□பதில்: உள்ளத்தில் தர்ம சிந்தனைகள், தூய சிந்தனைகள், உயர்ந்த சிந்தனைகள், நன்மைக்கு அழைத்துச் செல்லும் சிந்தனைகள், தெய்விகச் சிந்தனைகள், அருள் சிந்தனைகள் இருப்பதுதான் ஆன்மிக வாழ்க்கையின் முதல்படி எனலாம்.

ஆதிசங்கரர் இயற்றிய 'விவேக சூடா மணி' என்ற நூலிலுள்ள 367-ஆம் சுலோகம் இவ்விதம் கூறுகிறது:

''1.மௌனம், 2.உடலைக் காப்பாற்றுவ தற்கு அவசியமில்லாத பொருளை ஏற்றுக்கொள் ளாமல் இருத்தல் (அபரிக்ரகம்), 3.வைராக்கியம், 4.அவாவின்மை, 5.எப்போதும் தனிமையில் நாட்டம்'' ஆகியவை யோகத்தின் (ஆன்மிக வாழ்க்கையின்) முதல் வாயில் படியாகும்.

22. கேள்வி: அறநெறிக்கும், ஆன்மிகநெறிக்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்: நாம் இறைவனின் கட்டளையைப் பின் பற்றி வாழ்வதே அறநெறியும், ஆன்மிகநெறியும் ஆகும் என்று நான் கருதுகிறேன்.

23. கேள்வி: மனிதன் இறைவன் ஆக முடியுமா?

□பதில்: சொல், செயல்,சிந்தனையால் நாம் எதனோடு சேர்கிறோமோ அதன் மயமாக ஆகி றோம். கடலை எட்டும் நதிதான் கடலாக ஆகும். அதுபோல் இறைவனை நாடுபவர்களே இறைவன் ஆகிறார்கள்.

கொடி, மரத்தை நோக்கிப் படர்வதுபோல் ஜீவன் இறைவனை நாடிச் சென்று படர வேண்டும். ஆன்மிகப் பயணம் சென்று முடியும் இடம் இறைவன்.

24. கேள்வி: மனிதனுக்கு ஆன்மிகம் ஏன் தேவை?

□பதில்: கடவுளைப் பற்றிய விஞ்ஞானத்தையே ஆன்மிகம் என்கிறோம். மனித வாழ்க்கையின் அடிப்படையை ஆன்மிகம் காட்டுகிறது. மனத்தின் செழுமைக்கு ஆன்மிகம் கட்டாயம் தேவை.

ஆன்மிகச் சிந்தனைகள் உள்ளத்தில் அதிக மாகவும் ஆழமாகவும் இடம் பெறும் அளவுக்கு, ஒருவனிடமிருந்து குற்றம் குறைகள் நீங்கு கின்றன.

25. கேள்வி: இந்தியா ஆன்மிகத்திற்கென்றே அமைந்த புண்ணிய பூமி. எனினும் இந்தத் திருநாட்டில் ஆன்மிகவாதிகள் பலராக இல்லாமல் சிலராக இருப்பது ஏன்?

□பதில்: நீதி என்ன என்று தெரியாமல் ஒருவர் நீதிமானாக விளங்க முடியாது. நோய்களின் தன் மைகளை அறியாத ஒருவர் சிறந்த மருத்துவராக விளங்க முடியாது. ஒரு தொழிலின் தன்மை களை அறியாத ஒருவர் சிறந்த தொழிலதிபராக விளங்க முடியாது. அதுபோல், 'ஆன்மிகம் என்றால் என்ன?' என்பதைச் சரியாகத் தெரிந்து

கொள்ளாத ஒருவர் ஒரு சிறந்த ஆன்மிகவாதியாக விளங்க முடியாது.

'ஆன்மிகம் என்றால் என்ன?' என்பதைச் சாதாரண மக்களும் சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஸ்ரீமத் பகவத்கீதையும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் - சுவாமி விவேகானந்தர் நூல்களும் பெரிதும் உதவும்.

26. கேள்வி: பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஆன்மிகம் தேவையா, தேவையில்லையா?

□பதில்: மனிதராகப் பிறந்த அனைவருக்கும் விதிவிலக்கின்றி, ஆன்மிக வாழ்க்கையும் கட்டாயம் இருக்க வேண்டும்.

காந்திஜியின் அரசியல் பொதுவாழ்க்கையில் ஆன்மிகத்திற்கும் முக்கிய இடம் இருந்தது.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டு தொண்டு செய்ய விரும்புகிறவர்களுக்கு, ஆன்மிக வாழ்க்கையும் இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். இது தூய மனநிலையில் தொண்டு செய்ய உதவும்.

4. ஆன்மிக சாதனை

27. கேள்வி: 'ஆத்ம சாதனை' என்றால் என்ன?

□பதில்: ஆன்மிக சாதனை என்பது ஓர் அற்புதமான விஞ்ஞானம். மன மாசுகளை அகற்றி, நற்குணச் செயல்களால் மனத்தை இறைவனின் பாதகமலங்களில் அர்ப்பிக்கும் வழிமுறைகள்

அனைத்தையும் 'ஆத்ம சாதனை' என்று கூறலாம்.

28. கேள்வி: 'ஆத்ம சாதனை' என்றால் என்ன?

☐பதில்: இறைவனை உணர்ந்து இன்பம் பெறுவதற்கு உரிய வழிமுறைகள் - தன்னை (ஆத்மாவை) அறிந்து இன்பமுறும் வழி முறைகள் - அனைத்தும் ஆன்மிக சாதனையாகும்.

மனிதன், தான் செய்யும் எல்லாச் செயல்களையும் தவம் என்று கருதிச் செய்யும்போது தான் அவனது ஆன்மிக வாழ்க்கை முழுமையடையும்.

29. கேள்வி: நீங்கள் 'ஞான சாதனை' என்று எதைக் கருதுகிறீர்கள்?

☐பதில்: எந்த ஒரு நற்செயலையும் தொடர்ந்து செய்து வந்தால், அது ஒரு ஞானசாதனையாகும்.

நல்ல எண்ணங்களைத் திரும்பத் திரும்ப நினைக்கும்போது, அவை நம்மை இறைவனுடன் தொடர்புபடுத்தி வைக்கின்றன. எனவே நல்ல எண்ணங்கள் அனைத்தும் ஞானசாதனையே ஆகும்.

இறைவனிடம் அரிய ஆன்மிகப் பொக்கிஷங்கள் உள்ளன. அவற்றைப் பெறுவதற்குரிய தகுதிகளை நாம் வளர்த்துக்கொள்வதே ஞான சாதனை ஆகும்.

30. கேள்வி: செயல்களில் உயர்ந்த செயல் எது, தாழ்ந்த செயல் எது?

☐பதில்: ஆன்மாவை வெளிப்படுத்த (இறைவனை அணுகுவதற்கு) உதவும் எல்லாச் செயல்களும் உயர்ந்த செயல்கள்தான்.

ஆன்மாவை மறைக்கும் (இறைவனிடமிருந்து விலகச் செய்யும்) எந்தச் செயலும் தாழ்ந்த செயல்தான்.

31. கேள்வி: 'தபஸ்' என்றால் என்ன? அதனால் பெறப்படும் பயன் என்ன?

□பதில்: ''நான், நான் என்பது எங்கிருந்து புறப்படுகிறதோ, அதைக் கவனித்தால் மனம் அங்கே லீனமாகும் (ஒடுங்கும்); அதுவே தபஸ். ஒரு மந்திரத்தை ஜபம் செய்தால், அந்த மந்திரத் த்வனி (சத்தம்) எங்கிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால், மனம் அங்கே லீனமாகிறது; அது தான் தபஸ்'' என்று ஸ்ரீ ரமண மகரிஷி கூறியுள்ளார்.

பலர் தபஸ் பழகுவதில்லை. தபஸ் பழகுபவர்களுக்குள்ளும் மனோலயம் சித்திப்பவர்கள் இன்னும் அபூர்வம்.

பொதுவாக ஆன்மிக சாதனைகள் அனைத்தையும் 'தபஸ்' என்ற சொல் குறிக்கிறது. தபஸால் பெறப்படும் பயன்தான் முக்தி நிலை.

32. கேள்வி: மனிதன் தெய்வத்தின் நிலைக்கு உயர முடியுமா?

□பதில்: மனத்தில் அருள் மயமான சிந்தனைகள் நிறைந்திருந்தால், அது மனிதனை தெய்வத்தின் நிலைக்கு உயர்த்தும்.

33. கேள்வி: மனிதன் தெய்வமாவதற்கு என்ன வழி?

□பதில்: நமக்குள்ளே தெய்வத்தைக் கண்டு தெளிவதுதான், மனிதன் தெய்வமாவதற்கு உரிய

வழி. இதற்கு மனிதநேயத்தைத் தெய்வநேயமாக மலரச் செய்ய வேண்டும்.

தெய்வச் சிந்தனைகள் நம்மைத் தூய்மைப் படுத்துகின்றன; நம்மைத் தெய்வ நிலைக்கு உயர்த்துகின்றன.

34. கேள்வி:ஆன்மிக சாதனைகளின் முக்கியத்துவம் பற்றிக் கூறவும்.

□பதில்: பயிரை வளர விடாமல் களை தடுக்கிறது. அதுபோல் இறைவனை நாம் உணர முடியாதபடி, நமது வினைகள் தடுக்கின்றன. நமது ஆன்மிக சாதனைகளால் நாம் நம் வினைகளை நீக்கிக்கொள்ளும்போது, ஊற்றுநீர் பெருக்கெடுப்பதுபோல் இறையருள் நம் மீது பாய்ந்து பதிகிறது.

உடல் நலனுக்கு உணவு தேவைப்படுவது போல், ஆன்மநலனுக்கு ஆத்ம சாதனை தேவை.

விளக்கை நாடிச் சென்று அழியும் விட்டில் பூச்சியைப் போல, தடம் மாறிச் செல்லும் மனிதனைச் சரியான பாதைக்கு அழைத்து வர ஆன்மிகத்தால்தான் முடியும்.

ஆன்மிக சாதனை ஒரு நியதிக்கு உட்பட்டு மனிதனின் மனநிலையை மாற்றி தெய்விக நிலைக்கு உயர்த்துகிறது.

ஆன்மிக சாதனைகளில் ஈடுபடுவது, அகங்காரத்தையும் சுயநலத்தையும் குறைக்கிறது.

துருப்பிடித்த கத்தி பட்டை தீட்டப்பட்டு ஒளிர்வதுபோல், ஆன்மிக சாதனையால் பாவம் ஒழிந்து மனிதன் தெய்வப் பண்புகள் உள்ளவன் ஆகிறான்.

கடுந்தவம் புரிந்தால் கடைத்தேற முடியும்.

35. கேள்வி:'நான்', 'எனது' என்ற எண்ணங்களி லிருந்து விடுபடுவது எப்படி?

□பதில்: குருவின் கருணையால், இறைவனிடம் மனத்தை நிலைத்திருக்கச் செய்வதால், கடுந் தவத்தால், ஆன்ம விசாரத்தால், சத்சங்கத்தால் 'நான்', 'எனது' என்ற அகங்காரம், மமகாரம் ஒடுங்கும்.

36. கேள்வி: மனிதகுலத்திற்கு இறைவனின் கட்டளை என்ன?

□பதில்: மனிதனிடம் தெய்விக இயல்புகள், அசுர இயல்புகள் ஆகிய இரண்டும் உள்ளன. இவற்றில் விவேகத்தின் துணையுடன் பயிற்சியும் முயற்சியும் மேற்கொண்டு, அசுர இயல்பைத் தவிர்த்துத் தெய்விக இயல்புகளில் மனிதன் நிலைத்திருக்க வேண்டும் - இதை இறைவனின் கட்டளை என்று சொல்லலாம்.

37. கேள்வி: நான் இறைவனை நெருங்கிக் கொண்டிருக்கிறேன், அல்லது நெருங்கவில்லை என்பதை எப்படி புரிந்துகொள்வது?

□பதில்: மனம் எந்த அளவுக்கு உள்ளே ஒடுங்கு கிறதோ, அந்த அளவுக்கு அது ஆண்டவனுக்கும் மோட்சத்திற்கும் அருகில் இருக்கும்.

நாம் ஆசாபாசமாகிய மேக ட்டத்தைக் கடந்து சென்றால், இறைவனைத் தரிசிக்கலாம்.

கடுமையான தவப்பயிற்சிகளும் முயற்சி களும்தான், நம்மை இறைவனிடம் அழைத்துச் செல்லும்.

'கடவுள்' என்ற சொல்லுக்கு, 'உள்ளத்தைக் கடந்து செல்லுதல்' என்று பொருள்.

5. ஆன்மிக இன்பம்

38. கேள்வி: ஆன்மிக இன்பம் பெறுவது எப்படி?

□ பதில்: உலகப்பற்றில் உழலும் மனம், இறைவன் மீது நாட்டம் கொண்ட மனம் என்று இரண்டு விதங்களில் மனம் செயல்பட்டால் - அந்த மனத்தால் ஆன்மிக இன்பத்தை உணர முடியாது.

ஆன்மிக இன்பம் பெறுவதற்கு, இறைவன் மீது நாட்டம் என்ற ஒருமுகப்பட்ட மனம் தேவை.

''ஓடி அலையும் மனத்தை ஒன்றில் நிலை நிறுத்து'' என்று அப்பர் சுவாமிகள் கூறியிருக் கிறார்.

39. கேள்வி: இறைவன் மீது பக்தி கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அனைவருக்கும் ஆன்மிக இன்பம் கிடைப்ப தில்லை.

இதற்கு என்ன காரணம்?

□ பதில்: நோயில் இருப்பவனுக்கு உணவின் சுவை தெரியாது. அதுபோல் அஞ்ஞானத்தில் இருப்பவர்கள், உலகப் பற்றில் இருப்பவர்கள் - ஆன்மிகத்தின் சுவையை அறிய இயலாதவர் களாக இருப்பார்கள்.

40. கேள்வி: ஆன்மிக ரீதியில் இன்பம் எது? துன்பம் எது?

□பதில்: ஆன்மிக ரீதியில் இறைவனுடன் இணைந்த வாழ்க்கையே இன்பமாகும். ஆன்மிக ரீதியில் இறைவனைப் பிரிந்த வாழ்க்கையே துன்பமாகும்.

இறைவனுடன் தொடர்புகொண்டு வாழும் வாழ்க்கையே மெய்வாழ்க்கையாகும். இறைவன் தொடர்பின்றி வாழும் வாழ்க்கை பொய் வாழ்க்கையாகும்.

மனம் உலகப்பொருள்கள் மீது அலை பாய்ந்துகொண்டிருந்தால், அதனால் துன்பங்கள் தான் ஏற்படும். இதற்கு மாறாக, இறைவனிடம் மனத்தை நிலைநிறுத்தினால் மனஅமைதி, ஆன்மிக இன்பம் கிடைக்கும்.

எல்லாத் துன்பங்களுக்கும் ஆணிவேராக இருப்பது அஞ்ஞானம்; எல்லா இன்பங்க ளுக்கும் ஆணிவேராக இருப்பது ஞானம்-இதை அனுபவமாக உணரும்போதுதான் உண்மையான ஆன்மிக வாழ்க்கை ஆரம்பமாகிறது.

இந்த உலகம் நிலையற்றது. நிலையற்ற உலகம் நமக்குத் தரும் இன்பங்களும் கூட நிலை யற்றவையாகவே உள்ளன. இறைவன் நிலை யானவன். அவன் தரும் முக்தியின்பமும் நிலை யானதாக இருக்கிறது.

41. கேள்வி: பேரின்பம் பெறுவதற்கு உரிய வழி என்ன?

□பதில்: புலன்களால் அனுபவிக்கப்படும் இன்பங்கள் அனைத்துமே - அளவுக்கு உட்பட்ட வையாகும். பேரின்பமான இறையின்பம் ஒன்று

மட்டுமே - அளவுக்கு உட்படாததாக விளங்கு கிறது.

உலகம் முழுவதற்கும் சூரியன் ஒளி தரக் கூடியது என்றாலும், அதை மேகம் மறைக்கும் போது சூரியன் தனக்கே உரிய இயல்பான ஒளியை இழந்ததுபோல் காணப்படுகிறது. அது போல் மனிதனிடமே பேரின்பம் என்ற தெய்விக ஒளி இயல்பாகவே உள்ளது. அந்த ஒளி காம-காஞ்சனம் முதலான ஆசைகள் என்ற மேகத்தால் டப்பட்டு, தன் ஒளியை இழந்ததுபோல் காணப்படுகிறது.

அருள் வழியில் வாழ்ந்தால் இருள் வழி நீங்கிப் பேரின்பம் பெற முடியும். நீண்ட தேட லுக்குப் பிறகுதான் இறைவனைத் தரிசித்துப் பேரின்பம் பெற முடியும். ''(தீய) மனம் இறந்தாலன்றி அபரோக்ஷ அனுபூதிகிட்டாது'' என்று, மகாகவி பாரதியார் ஞானரதத்தில் குறிப் பிடுகிறார்.

இதயத்தில் ஆன்மஒளியைக் கண்டவன் - பேரின்பத்தின் சுவையை உணர்ந்தவன் - பிறப் புக்கும் இறப்புக்கும் ஆளாவதில்லை.

42. கேள்வி: உலகம் துன்பமயமானது என்பது என் கருத்து. உங்கள் கருத்து என்ன?

□பதில்: வாழ்க்கையில் சோதனைகள், இடை யூறுகள், துன்பங்கள் வருவது இயல்பு என்பதை நாம் சரியாகப் புரிந்துகொண்டால், நாம் ஒரேய டியாக மனம் ஒடிந்து போகமாட்டோம். மேற் போக்காக எண்ணற்ற துன்பங்களை வைத்துக் கொண்டிருக்கும் உலகம், உள்ளே தன்னுள்

எல்லையற்ற ஆன்மிக இன்பத்தை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறது.

6.இறைவன் நாமத்தை ஜபம் செய்தல்

43. **கேள்வி: *1.இறைவன் நாமத்தை ஜபம் செய்வது, 2.இறைவனிடம் சரண் புகுவது ஆகிய இந்த இரண்டில் உயர்ந்தது எது?***

□பதில்'.நாமஜபம் விதை போன்றது. சரணாகதி அந்த விதைக்கு நீர் விடுவது போன்றது. இரண்டும் சேருமிடத்தில் பக்திப் பயிர் நன்கு செழித்து வளரும்.

44. **கேள்வி:'மயர்வற மதிநலம்' எப்படி பெறுவது?**

□பதில்: இறைவன் திருநாமத்தை இடைவிடாமல் ஜபம் செய்பவர்களுக்கு இறையருளால், 'மயர்வற மதிநலம்' நிச்சயம் கிட்டும்.

45. **கேள்வி: நானாக எனக்குப் பிடித்த இறைவனின் ஒரு நாமத்தை ஜபம் செய்து வருகிறேன். இது எனக்கு நன்மையைத் தருமா?**

□பதில்: நாமாக இறைவனின் ஒரு நாமத்தை ஜபம் செய்வது நல்லதுதான். அதைவிட ஞான குரு ஒருவரிடம் மந்திரதீட்சை பெற்று ஜபம் செய்வது மேலும் சிறந்தது.

46. **கேள்வி:''நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்ற நிலையை நான் பெறுவதற்கு, எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்?**

□பதில்:அந்த நிலை எப்போதும் சிவ நாம ஜபம் சொல்லிப் பழகினால் ஏற்படும்.

47. **கேள்வி: மகான் தியாகராஜர் போல், அதிக எண்ணிக்கையில் ஸ்ரீராமநாம ஜபம் செய்தவர்**

களின் பெயர்களைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

□பதில்: சபரியின் குரு மதங்க மகரிஷி. அவர் சபரிக்கு உபதேசம் செய்தபோது, ''இந்த மந்திரத் திற்குரிய தெய்வம் உன்னைத் தேடி வரும்'' என்றார்.

முதன்முதலில் அதிகமாக ராமநாம ஜபம் செய்தவள் சபரி; இரண்டாமவர் ஆஞ்சநேயர், ன்றாவது வரிசையில் வால்மீகி, துளசிதாசர், தியாகராஜர் போன்ற சிலர் இருப்பார்கள்.

48. **கேள்வி: சிலர் இறைவன் நாமத்தைக் கூறுவ தற்குப் பதிலாக, சில மகான்களின் பெயர்களை நாமஜபம் போன்று பலமுறை கூறுகிறார்கள். இவ்விதம் கூறி ஜபம் செய்வது நல்லதுதானா?**

□பதில்: இறைவன் மீது பக்தி, இறைவன் அடியார்கள் மீது பக்தி, குருபக்தி என்று பக்தி ன்று விதங்களில் செயல்படுகிறது.

இறைவன் நாமத்தைக் கட்டாயம் ஜபம் செய்ய வேண்டும். அதோடு, மகான்களின் பெயரையும் சேர்த்து ஜபம் போன்று கூறுவது சிலருக்கு ஏற்புடைதாக இருக்கும்.

மகான்களின் பெயர்களை மட்டும் நாம ஜபம் போன்று கூறலாம். ஆனால் அது பொது விதி அல்ல - விதி விலக்கு உதாரணம்.

ஒருவர் எப்போதும் இறைவனுடன் சேர்ந் திருப்பதாலேயே, மகான் என்ற நிலையைப் பெறுகிறார். இறைவனை விட்டுப் பிரியாமல் இறைவனுடன் எப்போதும் சேர்ந்திருப்பவர் களையே 'மகான்கள்' என்று சொல்கிறோம்.

எனவே, மகான்களின் நாமத்தை ஜபம் செய்வது, நம்மை நிச்சயம் இறைவனிடம்தான் அழைத்துச் செல்லும்.

''ஆச்சாரியனை உடையவன் பிரம்மத்தை அறிகிறான் (ஆச்சாரியவான் புருஷோவேத:)'' என்பது வேத வாக்கு. இது ஆச்சாரியனிடம் கொள்ளும் பக்தி, பிரம்மானுபவம் பெறச் செய்யும் என்பதை உணர்த்துகிறது.

49. கேள்வி: ஜபமாலையைக் கொண்டுதான் ஜபம் செய்ய வேண்டுமா? ஜபமாலை இல்லாமல் ஜபம் செய்யக் கூடாதா?

☐பதில்: ஜபமாலை இல்லாமலும் ஜபம் செய்ய லாம். ஆனால் ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்கள் மனத்தை ஒருமுகப்படுத்தி ஜபம் செய்வதற்கு, ஜபமாலை பெரிதும் உதவும்.

மிக உயர்ந்த ஆன்ம பக்குவம் பெற்றவர் களும் கூட, ஜபமாலையைப் பயன்படுத்தி ஜபம் செய்யும் வழக்கம் உடையவர்களாக இருந்திருக் கிறார்கள். ஆதலால் ஜபமாலையின் முக்கியத்து வத்தை நாம் சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது.

ஜபமாலையைக் கொண்டு ஜபம் செய்வது தான் நல்லது. அது இயலாத நேரங்களில் வேண்டுமானால், ஜபமாலை இல்லாமல் நீங்கள் ஜபம் செய்யுங்கள்.

உள்ளத்தில் தெய்விகச் சிந்தனைகளையே, அருள் மயமான சிந்தனைகளையே, தூய சிந்தனைகளையே எப்போதும் தொடர்ந்து

கொண்டிருப்பவர்களுக்கு வேறு ஜபமாலை வேண்டாம். மற்றவர்களுக்கு ஜபமாலையின் உதவி அவசியம் என்று நான் கருதுகிறேன்.

50. கேள்வி:நான் நமது ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் மந்திர தீட்சை பெற்றுக்கொண்ட ஒரு பெண் மணி. இப்போது ருத்திராட்ச மாலையைக் கொண்டு ஒரு நாளைக்கு 142 சுற்று ஜபம் செய்கிறேன்.

என் மாமியார் தருமபுர மடத்தில் மந்திர தீட்சை பெற்று ஜபம் செய்து வந்தார். அவர் இப்போது உயிருடன் இல்லை. அவர் ஜபம் செய்து வந்த ஜப மாலையை நான் பயன்படுத்தி ஜபம் செய்து வருகிறேன். ''அந்த ஜப மாலையை நீங்கள் பயன்படுத் தினால் ஜப சித்தி கிடைக்கும்'' என்று சிலரும், ''அந்த ஜப மாலையில் அவர்களின் சம்ஸ்காரங்கள் படிந்திருக்கும். எனவே அதைப் பயன்படுத்துவது சரியில்லை'' என்று வேறு சிலரும் கூறுகிறார்கள்.

நான் அந்த ஜப மாலையைப் பயன்படுத் தலாமா, பயன்படுத்தக் கூடாதா என்பது பற்றித் தங்களின் கருத்தை அறிந்து அதன்படி செய்ய விரும்புகிறேன்.

□பதில்: தங்கள் மாமியார் தருமபுரம் மடத்தில் தீட்சை பெற்றவர் என்பதால், அவரிடம் ருத்தி ராட்ச மாலையைப் பயன்படுத்தி ஜபம் செய்யும் வழக்கம் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக் கிறேன். எனவே நீங்கள் அந்த ஜப மாலை யைப் பயன்படுத்தி ஜபம் செய்வது நல்லது.

வீட்டில் சிவலிங்கம், சாளக்ராமம் ஆகியவற்றைப் பரம்பரை பரம்பரையாகப் பூஜித்து வருவது உண்டு. அதுபோல் ருத்திராட்ச மாலையையும் கூடப் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தலாம். அதனால் அந்த ஜப மாலையின் ஆன்மிகச் சக்தி அதிகரிக்கவே செய்யும்.

7. தியானம்

51. கேள்வி: தியானம் பற்றி இரண்டு வரியில்...?

☐பதில்:சூரியன் உதிப்பதால் புற இருள் நீங்குவது போல, இறைவனை தியானம் செய்வதால் நமது அகஇருள் நீங்கும்.

52. கேள்வி: தியானத்தின் பயன் என்ன?

☐பதில்:தியானம் ஆண்டவன் இருக்கும் திசையைக் காட்டும். அது பிறப்பை அறுக்கக் கூடியது.

53. கேள்வி: மனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது எப்படி?

☐பதில்:தியானத்தினால் மனக் கட்டுப்பாடு பெருகும்.

54. கேள்வி:நான் புருவ மத்தியில் தியானம் செய்கிறேன். இது சரியா?

☐பதில்:''புருவ மத்தியில் சதாசிவனை தியானம் செய்யுங்கள்'' என்று, பதினெண் சித்தர்களில் ஒருவரான சட்டைமுனி சித்தர் கூறியுள்ளார்.

பொதுவாக ஞானயோகத்தைப் பின்பற்றுபவர்கள் புருவ மத்தியிலும், பக்தியோகத்தைப்

பின்பற்றுபவர்கள் இதயத்திலும் இறைவனை தியானம் செய்வது வழக்கம்.

55. **கேள்வி: நேரம் இருந்தாலும் பலரால் நீண்ட நேரம் தியானம் செய்ய முடிவதில்லை. இதற்கு என்ன காரணம்?**

☐பதில்:பிரம்மச்சரியம் அனுஷ்டிப்பவர்களால் தான் நீண்ட நேரம், பல மணி நேரங்கள் தியானம் செய்ய இயலும். மற்றவர்களுக்கு அது இயலாது.

பிரம்மச்சரியம் இல்லாத நிலையில், நீண்ட நேரம் தியானம் செய்வது காரணமாகப் பலருக்கு ளை உஷ்ணமடைவதும் உண்டு.

56. **கேள்வி: தியானம் நன்றாக அமைவதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?**

☐பதில்:'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதுபோல், தன்னை உணரச் செய்யும்-இறைவனை உணரச் செய்யும் - நல்ல தியானமும் நீண்ட நெடிய முறையான பயிற்சி யாலேயே அமைகிறது. உழைப்பிற்கேற்பப் பயன் என்பது இயற்கை விதி.

57. **கேள்வி: எனக்கு தியானம் நன்றாக அமைய வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?**

☐பதில்: தூய மனம்தான் தியானத்திற்கு முதல் தேவை. தூய உள்ளம் இல்லாதவர்களால், நன்றாக தியானம் செய்ய முடியாது.

சொல்லால், செயலால், சிந்தனையால் கூடிய வரையில் மனத்தை அமைதியாக வைத்தி

ருக்க வேண்டும். இவ்விதம் எந்த அளவுக்கு மனத்தை அமைதியாக வைத்திருக்கிறோமோ, அந்த அளவுக்கு தியானம் சிறப்பாக அமையும்.

58. கேள்வி:'தன்னை அறிதல்' என்றால் என்ன? அதை எப்படி செய்வது?

□பதில்: தன்னை அறிதல் என்பது, தன்னுள் இருக்கும் இறைவனை அறிவதைக் குறிப்பிடு கிறது. முழுமையான தியான உணர்வு உடைய வர்களால்தான் தன்னை அறிய முடியும்.

தன்னை அறியும் அறிவே உண்மையறிவு அல்லது மெய்யறிவு. மற்ற அறிவுகள் அனைத்தும் பொய்யறிவு.

59. கேள்வி:இறைவனைக் குறித்து தியானம் செய்ய வேண்டும் என்று உட்காருகிறேன். ஆனால் தியானம் செய்ய முடிவதில்லை. இப்படி என்னைப் போன்று பலர் இருக்கக்கூடும்.

எங்களைப் போன்றவர்கள் தியானம் செய்வதற்கு உதவியாக, ஏதேனும் யோசனை சொல்லுங்கள்?

□பதில்: ஒருவரிடம் பக்தி ஆழ்ந்ததாகும்போது, நல்ல தியானம் சுலபமாக அமைகிறது. ஆழ்ந்த பக்திக்கு அடிப்படையாக இருப்பது தூய மனம். ஆழ்ந்த பக்தி இல்லாவிட்டாலும்கூட, தியானப் பயிற்சியை நாம் விட்டுவிடக் கூடாது.

ஆன்மிகமயமான கற்பனைகளை உங்கள் தியானத்திற்கு உதவியாக நீங்கள் வைத்துக் கொள்வது நல்லது. அதற்குச் சில உதாரணங்கள் வருமாறு:

1.நீங்கள் ரிஷியின் நிலையில் இருப்பதாக நினையுங்கள்.

2. நீங்கள் ஆத்மஞானம் அடைந்துவிட்டதாக நினையுங்கள்.

3. நீங்கள் உட்கார்ந்திருக்கும்போது, கடவுளும் உங்களோடு உட்கார்ந்திருக்கிறார் என்று நினையுங்கள்.

4. நீங்கள் நடக்கும்போது, கடவுளும் உங்களோடு நடக்கிறார் என்று நினையுங்கள்.

5. நீங்கள் படுத்திருக்கும்போது, கடவுளும் உங்களோடு படுத்திருக்கிறார் என்று நினையுங்கள்.

6. எல்லாப் பாவங்களும் உங்களை விட்டு நீங்கிவிட்டதாகக் கருதுங்கள்.

7. எல்லாத் தெய்விகக் குணங்களும் உங்களை வந்தடைந்து விட்டதாக நினையுங்கள்.

8.உங்களுடைய இஷ்டதெய்வம் நீங்கள் தான் என்று நினையுங்கள்.

9. எல்லா விதமான உலக ஆசைகளிலிருந்தும், உலகப் பற்றுகளிலிருந்தும் இறைவன் உங்களை விடுவித்துவிட்டதாக நினையுங்கள்.

10.உங்களுக்குப் பிடித்த இறைவனின் லீலைகள் என்று, பலவற்றை நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்; அந்த லீலைகள் நடைபெறுவது போலவும், அந்த லீலையில் இறைவனுடன் நீங்களும் இருப்பது போலவும் நினையுங்கள் - இவை போன்ற ஆன்மிகச் சிந்தனைகளை நீங்கள்

எத்தனையோ விதங்களில் வளர்த்துக்கொள்ள லாம்.

இவை போன்ற சிந்தனைகளை எவ்வளவு அதிகமாக இயலுமோ, அவ்வளவு அதிகமாக நினைப்பது நல்லது. இவை போன்ற எண்ணங்கள் நம்மிடம் உறுதிப்படும் அளவிற்கு, நம்மிடம் இடைவிடாத ஆன்மிக மாற்றங்கள் ஏற்படும். அதனால் நாம் ஆன்மிகத்திலும் முன்னேறுவோம் என்பது நிச்சயம்.

8. பூஜை

60. கேள்வி: 'ஆத்மார்த்த பூஜை' என்றால் என்ன? 'பரார்த்த பூஜை' என்றால் என்ன?

□பதில்: வீடுகளில் செய்யப்படும் வழிபாடுகள் அனைத்தும் 'ஆத்மார்த்த பூஜை' எனப்படும்.

திருக்கோயில்களில் நடைபெறும் வழி பாடுகள் அனைத்தும் 'பரார்த்த பூஜை' எனப் படும்.

61. கேள்வி:'பஞ்சகவ்யம்' சிவ பூஜையில் சிறப் பிடம் பெற்றிருப்பது ஏன்?

□பதில்: பசுவின் பால், தயிர், நெய், சாணம், கோமயம் ஆகிய ஐந்து பொருள்களும் சேர்ந்தது என்ற பொருளில் 'பஞ்சகவ்யம்' என்ற சொல் வழங்கப் பெறுகிறது. இதுவே 'ஆனிரை ஐந்து' என்றும், 'கோ' எனப்படும் பசுவிடமிருந்து கிடைக்கும் செல்வம் என்ற பொருளில் 'கோநிதி' என்றும் கூறப்படும்.

பசுவின் பால் சந்திரனின் இருப்பிடம், தயிர் வாயு பகவானின் இருப்பிடம், நெய் சூரிய

பகவானின் இருப்பிடம், சாணம் அக்கினி பகவான் இருப்பிடம், கோமயம் வருண பகவானின் இருப்பிடம் என்று கூறுவர்.

இவ்விதம் பஞ்சகவ்யம் தேவர்களின் வாசஸ்தலம் என்பதால், அதை சிவ பூஜைக்குப் பயன்படுத்துவது சிறப்புக்கு உரியதாயிற்று.

9. பிரார்த்தனை

62. கேள்வி: 'பிரார்த்தனை' என்றால் என்ன?

□பதில்: இறைவனை வணங்குவது என்பது, பிறரிடம் எதையேனும் எதிர்பார்த்து அவரை வணங்குவது போன்றது அன்று. இறைவனிடம் மனம் திறந்து பேசுவதுதான் பிரார்த்தனை.

பிரார்த்தனை என்பது இறைவனிடம் பிச்சை கேட்பதல்ல. அது ஆன்மா அருள் தாகத்துடன் இறைவனுடன் தொடர்புகொள்வதாகும்.

பிரார்த்தனை போன்றவற்றால் கிடைக்கும் உன்னதமான அனுபவங்கள்தான், வாழ்க்கையில் அர்த்தமுள்ள அத்தியாயங்கள்.

ரமலான் மாதத்தில் விரத நாள்களில் இஸ்லாமிய அன்பர்கள், இரவு முழுவதும் இறைவனைப் பிரார்த்திக்கவும் தியானிக்கவும் செய்கிறார்கள்.

63. கேள்வி: பிரார்த்தனை, தொண்டு ஆகியவற்றில் உயர்ந்தது எது?

□பதில்: இறைவனிடம் பிரார்த்தனை செய்வது, மக்களுக்குத் தொண்டு செய்வது ஆகிய இரண்டும் ஒருவரது வாழ்க்கையில் இடம் பெற

வேண்டும். பிரார்த்தனையின் மற்றொரு வடிவம் தான் தொண்டு.

தனக்காக வாழாமல் பிறர் நலனுக்காக வாழ்பவர்கள் - தவம் செய்பவர்கள் என்றே கருதப்பட வேண்டியவர்கள்.

நாம் செய்யும் பிரார்த்தனை, இறைவனிடம் நம்மை அழைத்துச் செல்லும். நாம் தூய மனநிலையில் செய்யும் தொண்டு, இறைவனை நாம் இருக்கும் இடத்திற்கு அழைத்து வரும்.

மேலும் பிரார்த்தனையைப் பற்றி ஒரு கருத்து:

இறைவன் நம்மைப் பார்த்துக்கொண்டிருக் கிறான்; இறைவன் நாம் செய்யும் பிரார்த் தனையைக் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்ற எண்ணத்தில், இறைவனிடம் நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

'குற்றங்களும் தீமைகளும் விலகி, தர்மங் களும் நன்மைகளும் உலகில் பெருகட்டும்' என்று, நாம் அனைவரும் பிரார்த்தனை செய் வோமாக.

64. கேள்வி: ஒருவர் மற்றவருக்காகப் பிரார்த்தனை செய்வது நல்லதா?

□பதில்:மிகவும் நல்லது. சுயநலமின்றி எத்தனை அதிகம் பேருக்கு நம்மால் பிரார்த்தனை செய்ய முடியுமோ, அத்தனை அதிகம் பேருக்காக நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இதனால் மற்ற வர்கள் நலன் பெறுவதோடு நமது இதயமும் விரிவடையும் - இது நிஷ்காம பிரார்த்தனை.

சுயநலமின்றிப் பொதுநன்மையின் பொருட்டுச் செய்யப்படும் பிரார்த்தனையை இறைவன் நிறைவேற்றுகிறான் என்பது, ஓர் அனுபவ உண்மையாகும்.

ஒருவர் தனக்காக மட்டுமல்லாமல், உலக மக்களின் (மற்றவர்களின்) நலனுக்காகவும் கட்டாயம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இதனால் மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுகிறதோ இல்லையோ, தனக்குப் பெரிதும் நன்மை ஏற்படும் என்பதை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

துன்பத்தில் இருப்பவர்களுக்காக, நோயால் வருந்துபவர்களுக்காக, விபத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்காக நீங்கள் பிரார்த்தனை செய்தால், அது போன்ற நிலைகள் உங்களுக்கு ஏற்படுமானால் உங்களுக்காக எவராவது பிரார்த் தனை செய்வார்; உங்களுக்கு எவராவது உதவி செய்வார் - இது பிரதிபலனை எதிர்பார்த்துச் செய்யப்படும் காமிய பிரார்த்தனை.

65. ***கேள்வி: மற்றவர்களின் நன்மைக்காக ஒரு நல்ல காரியம் நடைபெற வேண்டும் என்று நினைக்கிறேன்.***

அதன் பொருட்டு நான் செய்யும் பிரார்த்தனையை ஏற்று இறைவன் அருள் புரிவாரா?

□*பதில்:* எந்தக் காரியத்தைப் பற்றி நாம் தீவிரமாக நினைக்கிறோமோ, அந்தக் காரியம் நிறைவேற இறைவன் அருள் புரிவார் என்பது நிச்சயம்.

இறைவனை முன் வைத்துச் செய்யப்படும் செயல்கள் தோல்வி அடையாது. ஜபம், தியானம், பிரார்த்தனை, பூஜை, பாராயணம் ஆகியவற்றைப் போல மற்றவர்களுக்காக நாம் பிரார்த்தனை செய்வதும்கூட ஓர் ஆன்மிக சாதனைதான்.

66. கேள்வி: இறைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுவது ஏன்?

☐பதில்: புலர்காலைப் பொழுதில், ''பள்ளியெழுந்தருளாயே!'' என்று இறைவனை அடியார்கள் துதிக்கிறார்கள். இது, ''எங்கள் உள்ளத்தில் ஆன்மிக விழிப்பைத் தந்தருள்வாயாக!'' என்று பிரார்த்தனை செய்வதாக அமைந்துள்ளது.

இறைவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுவது, நாம் நமது அஞ்ஞானத்திலிருந்து விழித்துக்கொள்வதற்கு உதவுகிறது.

மகாகவி பாரதியார், இந்திய மக்கள் சுதந்தரம் பற்றிய விழிப்புணர்வு பெற வேண்டும் என்பதற்காகத்தான் பாரதமாதாவுக்குப் பள்ளியெழுச்சி பாடினார்.

67. கேள்வி: பிரார்த்தனைக்குப் பயன்படும் நல்ல கருத்துகள் சிலவற்றைச் சொல்லுங்கள்?

☐பதில்:''பிரார்த்தனைகளில் பெரிய பிரார்த்தனை பொறுமைதான்'' என்று, பகவான் புத்தர் கூறியிருக்கிறார்.

பிரார்த்தனையின்போது நான் கூறி வரும் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன். இவற்றில் உங்களுக்குத் தேவையானதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம்:

1. இறைவா! என்னுடைய கடந்த கால வினைகள், நிகழ்கால வினைகள், எதிர்கால வினைகள் ஆகியவற்றை உங்கள் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன். என்னை இந்த வினைகளி லிலிருந்து விடுவித்து, எனக்கு இந்தப் பிறவியி லேயே முக்தி தந்து அருள் புரியுங்கள்.

2. இறைவா! எனக்கு விவேகம் தந்தரு ளுங்கள். என்னை எப்போதும் விவேக வழியில் அழைத்துச் செல்லுங்கள்.

3. எல்லாவிதமான உலக ஆசைகளிலி ருந்தும், உலகப்பற்றுகளிலிருந்தும் என்னை அறவே விடுவித்து எனக்கு அருள் புரியுங்கள்.

4. எல்லாவிதமான மாயையிலிருந்தும், அஞ்ஞானத்திலிருந்தும் என்னை விடுவித்து அருள் புரியுங்கள்.

5. ஒரு சிறிய தவறும், ஒரு சிறிய பாவமும் இல்லாத அறவழியில், ஆன்மிக வழியில் என் கையைப் பிடித்து என்னை எப்போதும் அழைத்துச் செல்லுங்கள்.

6. ஞானம் உள்ள வாழ்க்கையாக என் வாழ்க்கை எப்போதும் இருப்பதற்கு அருள் புரியுங்கள்.

7. உங்கள் பாத கமலங்களில் தூய பக்தியை எனக்குத் தந்தருளுங்கள்.

8. என்னுடைய ஸ்தூல கர்மங்களையும், சூட்சும கர்மங்களையும், காரண நிலையிலுள்ள கர்மங்களையும் உங்கள் திருவடிகளில் சமர்ப்பிக் கிறேன். இந்தக் கர்மவினைகள் எல்லாவற்றிலி ருந்தும் என்னை விடுவித்து, இந்தப் பிறவியி லேயே எனக்கு முக்தி தந்தருளுங்கள்.

9. விபீஷணனுக்கு ஸ்ரீ ராமரின் திருவடிகளில் இருந்ததைப் போன்று, உங்கள் திருவடிகளில் எனக்குப் பூரண சரணாகதி இருக்கும்படி அருள் புரியுங்கள்.

ஆஞ்சநேயருக்கு ஸ்ரீ ராமரின் திருவடிகளில் இருந்ததைப் போன்ற பூரண சரணாகதியை, உங்கள் திருவடிகளில் எனக்குத் தந்தருளுங்கள்.

அர்ஜுனனுக்கு கீதை உபதேசம் சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணனிடம் அர்ஜுனன் இருந்தது போன்று, உங்கள் திருவடியில் எனக்குப் பூரண சரணாகதியைத் தந்தருளுங்கள்.

உங்கள் திருவடிகளில் தூய, உண்மையான, பூரண சரணாகதியை எனக்குத் தந்தருளுங்கள்.

10. உங்களுடைய பூரண கிருபையைப் பெற்ற வாழ்க்கையாக, என் வாழ்க்கை இருப்பதற்கு எனக்கு அருள் புரியுங்கள்.

11. எந்த நிலையிலும் புலனடக்கம் கொண்ட வாழ்க்கையாக, என் வாழ்க்கை அமைய வேண்டும் என்று அருள் புரியுங்கள்.

12. என் மனம் எப்போதும், உங்கள் தாமரைத் திருவடிகளை தியானம் செய்வதில் பூரணமாக ஒடுங்கியிருக்க வேண்டும் என்று அருள் புரியுங்கள்.

13. உங்களுடைய ஆன்மிக வாரிசு, ஆன்மிகப் பிரதிநிதி என்ற வகையில், என் வாழ்க்கை பரமபவித்திரமாக எப்போதும் விளங்க வேண்டும் என்று அருள் புரியுங்கள்.

14. என்னை எப்போதும் உங்கள் பாது காப்பில், உங்கள் அருள் பெற்ற குழந்தையாக வைத்திருங்கள்.

15. நான் எங்கிருந்தாலும், எந்தச் சூழ் நிலையில் இருந்தாலும், எந்த நிலையில் இருந் தாலும் என்னை உங்கள் தெய்விகப் பாது காப்பில் வைத்திருங்கள்.

16. 'நான் - எனது' என்ற அகங்காரம் - மமகாரம் நீங்கிய வாழ்க்கையாக, என் வாழ்க்கை அமைய வேண்டும் என்று கருணை புரியுங்கள்.

10. இறைவனை நினைத்தல்

68. கேள்வி: மனிதன் ஏன் இறைவனை நினைக்க வேண்டும்?

□பதில்: மனித உடலுக்கு இரத்தம் எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்குத் தெய்வச் சிந்தனை ஆத்மாவுக்குத் தேவை.

பெரிய புராணத்தில் சேக்கிழார் பெரு மான், ''நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்'' என்று, திருநீலகண்ட நாயனார் பற்றிக் குறிப்பிடுகிறார். இதன் லம், இறைவன் திருவடிகளை வணங்குவதே நமக்கு நலம் தருவது என்பதை உணரலாம்.

69. கேள்வி: மனிதன் இறைவனை நினைக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்?

□பதில்: சிற்றின்ப நாட்டமும், உலகப்பற்றும் மனிதனை இறைவனை மறக்கச் செய்து விடுகின்றன.

70. கேள்வி: தீமை செய்பவர்களும் கூட இறைவனை நினைக்கிறார்கள். இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

□பதில்:தீமை செய்பவர்களும் தெய்வபக்தியைத் தொடர்ந்து கடைப்பிடித்தால், அந்தத் தெய்வ பக்தியே அவர்களைத் தீமைகள் செய்வதிலிருந்து விடுவித்துவிடும்.

11. இறைவனை வணங்குதல்

71. கேள்வி:நாம் ஏன் இறைவனை வணங்க வேண்டும்?

□பதில்:இறைவனை வணங்குவது நாம் நல் வாழ்வு வாழ்வதற்காக ஆகும்.

மனத்தை இறைவனை நோக்கிச் செலுத்தி னால் மனம் தெளிவாக இருக்கும்; சாந்தமாக இருக்கும்; நடுநிலையில் இருக்கும்.

இறைவன் எல்லா நன்மைகளையும் உடையவன்; பரிபூரணன். நாம் இறைவனை வழிபடுவதன் நோக்கம், இறைவனுக்குரிய நற் பண்புகளை நாமும் பெற வேண்டும் என்பது தான். தெய்வபக்தி, இறுதியில் மரணமற்ற அமர வாழ்வை அளிக்கும்.

72. கேள்வி: இறைவனை வணங்கினால் எனக்கு என்ன லாபம் கிடைக்கும்?

□பதில்:இறைவனை வணங்குபவனுக்கு பிறவிப் பிணியிலிருந்து நிரந்தர விடுதலை கிடைக்கிறது. இது 'ஆத்ம லாபம்' என்று கூறப்படுகிறது.

73. கேள்வி: என் நண்பர் ஒருவர் இறைவனை வணங்குவதில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியுமா?

□பதில்: இறைவனை ஒருவர் வணங்காமலும் வாழ்த்தாமலும் இருப்பதற்கு - அறியாமைதான் காரணம்.

இந்திய ஆன்மிகத்தைப் போற்றாதவர்களை, 'தாதையர்களுக்குத் துரோகம் செய்தவர்கள்' என்று நான் கருதுகிறேன்.

நமக்குக் கிடைத்திருக்கும் மனிதப் பிறவியை, இறைவனோடு சேர்ந்து வாழ்வதற்கு நாம் பயன்படுத்த வேண்டும். இதுவே அறிவுடைமை. வாழ்க்கையில் மனிதன் நிறைவு காண விரும்புகிறான். அந்த நிறைவு சுயநல நிறைவு, ஆன்ம நிறைவு என்று இரண்டு வகைப்படும்.

சராசரி மனிதன் சுயநல நிறைவில் திருப்தி அடைந்துவிடுகிறான். அதே மனிதன் காலப் போக்கில் மனப்பக்குவம் பெறும்போது, ஆன்ம நிறைவைப் பெற இறைவனை நாடுகிறான்.

12. இறைவனுக்காக அழுதல்

74. கேள்வி:இறைவனுக்காக நாம் ஏன் அழ வேண்டும்?

□பதில்: பக்திக்கென்றே அமைந்த நூல் திருவாசகம். மாணிக்கவாசகர் திருவாசகத்தில், ''அழுதால் உன்னைப் பெறலாமே!'' என்கிறார். இது இறைவனுக்காக நாம் அழுதால், இறைவனை நாம் பெற முடியும் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

தனக்காகப் பக்தர்கள் அழுவது என்பது, இறைவனுக்கும் பிரியமானது.

உடலைத் தண்ணீரால் கழுவுகிறோம். அதனால் உடலிலுள்ள அழுக்கு நீங்குகிறது; புறஅழுக்குப் போய்விடுகிறது. அதுபோல் நம் ஆன்மாவிலுள்ள அழுக்கு, இறைவனுக்காக நாம் அழும்போது நீங்கிவிடுகிறது.

''இறைவனை அடைந்தவர்கள் அனைவரும் அழுது அழுதுதான் இறைவனை அடைந்திருக்கிறார்கள். சிரித்துக்கொண்டே இறைவனை அடைய முடியும் என்றால், எல்லோரும் இறைவனை அடைந்திருப்பார்களே!'' என்று கபீர்தாசர் கூறியுள்ளார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், காளிதேவியின் தரிசனத்திற்காக எவ்வளவோ அழுததை அவரது வரலாற்றில் நாம் படிக்கிறோம்.

அவர் இவ்விதம் கூறியிருக்கிறார்:

''எந்த வழியாக நமக்கு இறைவன் தரிசனம் கிடைக்கும்? உருகிய உள்ளத்துடன் அவனுக்காக உன்னால் கதறி அழ முடியுமா? மனைவி, மக்கள், பொருள் ஆகியவைகளுக்காக மக்கள் குடம் குடமாகக் கண்ணீர் வடிக்கிறார்கள்; ஆனால் இறைவன் வேண்டும் என்று அழுபவர் யார்? குழந்தை, விளையாட்டுச் சாமான்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும் வரையில் - தாய் தன் சமையல் வேலைகளையும் மற்ற வேலைகளையும் கவனிக்கிறாள். விளையாட்டுச் சாமான்கள் குழந்தையின் பசியை நீக்குவதில்லை; எனவே குழந்தை அவைகளை வீசி எறிந்துவிட்டு, தாயை வேண்டிக் 'கோ'வென்று கத்தி அழுகிறது. உடனே தாய் என்ன வேலை செய்துகொண்டி

ருந்தாலும் - சாதம் பாதி வடித்துக்கொண்டிருந் தாலும் கூட - எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு, ஓடிவந்து குழந்தையை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொள்கிறாள்.

''இறைவனைக் காண வேண்டும் என்று ஒரு முறையாவது அழ வேண்டும்... உள்ளம் உருகி, அழுது அழைத்தால்தான் இறைவனைப் பெற முடியும்.''

★★★

தூய பக்தி - ஆத்மஞானம் ஆகியவற்றின் பொருட்டு இறைவனுக்காக அழுவது என்பது, பக்தனின் பலமும் ஆயுதமுமாகும். அது ஆன்மிக வீரம் என்று போற்றுவதற்கு உரியது; தூய உள்ளத்திலிருந்து எழுவது. இந்த அழுகை பலவீனத்தைச் சேர்ந்ததல்ல; உலக மக்கள் உலகியல் பொருள்களுக்காக அழுவது போன்றதுமல்ல.

மனம் சத்துவ குணத்தில் இருக்கும்போது தான், தூய மனநிலையில் இருக்கும்போதுதான் இறைவனுக்காக அழ முடியும். அப்படி அழுப வர்கள் புண்ணியாத்மாக்கள்; பாக்கியசாலிகள்; வணக்கத்திற்குரியவர்கள்.

ஞானயோகம், பக்தியோகம், கர்மயோகம், ராஜயோகம் ஆகியவை போல இறைவனுக்காக அழுவதை 'அழுகை யோகம்' என்று கூடச் சொல்லலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஸ்ரீ ரமண மகரிஷி இவ்விதம் கூறுகிறார்:

''அழுவது பலவீனத்துக்கு அடையாளம்' என்று, சாதாரணமாகச் சொல்வது வழக்கம்.

ஆனால், மகாபுருஷர்களான சைதன்யரும் ராமகிருஷ்ணரும் நிச்சயமாகப் பலவீனமானவர்கள் அல்ல. அவர்களின் அழுகை போன்றவை, அவர்களை இழுத்துச் சென்ற மகத்தான ஆன்மிக உணர்வுகளின் வெளிப்பாடுகள்தான். அவர்கள் அடைந்த லட்சியத்தையே நாம் கவனிக்க வேண்டும்.''

13. இறைவனைக் காணுதல்

75. **கேள்வி: இறைவனைக் காண முடியுமா?**

□பதில்: ''உன்னை நீ இழந்துவிட்டு என்னிடம் வந்தால், என்னை நீ காணலாம்'' என்று இறைவன் கூறுகிறான்.

நாம் நம்மிடம் உள்ள ஆன்மிகத் தடைகளை நீக்கிக்கொண்டால், இறைவனைக் காண முடியும். மனத்தில் உள்ள குற்றங்கள் நீங்காமல் இறைவன் தரிசனம் கிட்டாது.

76. **கேள்வி: இறைவனின் காட்சியைப் பெறுவதற்கு என்ன வழி?**

□பதில்: ஆணவம் அகலும்போது இறைவனின் காட்சி கிடைக்கும். அவ்விதம் ஆணவம் அகலுவதற்கு இறைவனின் கிருபையே வேண்டும்.

77. **கேள்வி: இறைவனைச் சந்திக்க முடியுமா?**

□பதில்: என்றும் இறைவனைச் சிந்திப்போம். அவ்விதம் செய்தால் அவனை ஒரு நாள் சந்திப்போம்.

78. **கேள்வி: இறைவனை அறிவது எப்படி?**

□பதில்:இறைவன் அருளால் அன்றி அறிய இயலாதவன் இறைவன். அவன் காட்டாமல்

அவனைக் காண முடியாது; அவன் உணர்த் தாமல் அவனை நாம் உணர முடியாது.

''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்கிறது திருவாசகம்.

இறைவன் அருளால்தான் அவன் தாளை நாம் வணங்க முடியும் என்பதை, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்விதம் கூறுகிறார்:

''இறைவன் தமது ஒளியைத் தாமே தமது முகத்தின்மீது ஒருமுறை திருப்புவாரானால், அவரை நாம் காண முடியும். போலீஸ்காரன் இரவு வேளையில் கையில் டார்ச் விளக்கை வைத்துக்கொண்டு சுற்றுகிறான். அவனுடைய முகத்தை யாரும் பார்க்க முடிவதில்லை. ஆனால் அந்த விளக்கின் ஒளியால், அவன் மற்ற வர்களின் முகத்தைப் பார்க்க முடிகிறது; மற்ற வர்களும் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த் துக்கொள்ள முடிகிறது. யாராவது போலீஸ் காரனைப் பார்க்க விரும்பினால், அவனிடம் சென்று, 'ஐயா, தயவுசெய்து விளக்கை உங்கள் முகத்தின் பக்கமாக ஒருமுறை திருப்புங்கள். உங்களைப் பார்க்க விரும்புகிறேன்' என்று கேட்க வேண்டும். 'பகவானே! ஞானஒளியைக் கருணைகூர்ந்து உங்கள்மீது ஒருமுறை திருப்புங் கள், நான் உங்களைப் பார்க்கிறேன்' என்று பிரார்த்தனை செய்.''

79. கேள்வி:மனிதன் தன் அறிவால் இறைவனைக் காண முடியுமா?

☐பதில்:மனிதன் தன் சிற்றறிவால் இறைவனைக் காண முடியாது. அதில் இறைவனின் அருளும் சேர்ந்தால்தான் இறைவனை உணர முடியும்.

மனிதனின் பகுத்தறிவு என்பது ஓர் எல்லை வரையில்தான் செல்கிறது. அந்தப் பகுத் தறிவையும் மீறி நம்மை இறையருள் அழைத்துச் செல்கிறது.

14. கோயில்கள்

80. கேள்வி: இறைவன் எங்கும் இருக்கிறான். அப்படியிருக்கும்போது நாம் அவனை ஆலயம் சென்று ஏன் வழிபட வேண்டும்?

□பதில்:எங்கும் நீர் இருந்தாலும் அதை எடுத்துப் பயன்படுத்துவதற்கு ஒரு கிணறு தேவைப் படுவது போல - பசுவின் பாலைப் பெற அதன் மடி உதவுவது போல - எங்கும் உள்ள இறை வனை நாம் வழிபடுவதற்குப் பூஜையறைகளும், ஆலயங்களும் உதவுகின்றன.

பக்தியுடனும், சிரத்தையுடனும் ஆலய வழிபாடு செய்தால் மனம் தூய்மை பெறும்; புண்ணியம் பெருகும்.

81. கேள்வி:கோயில்களில் தெய்வத் திருவுருவங் களில் நாம் காணும் அபய ஹஸ்தம், வரத ஹஸ்தம் ஆகியவற்றுக்கு விளக்கம் வேண்டும்.

□பதில்: ஆலயங்களிலும், தெய்வத் திருவுருவப் படங்களிலும் உள்ள கடவுள்களின் கை அமைப்பு பற்றிச் சொல்லும்போது அபய ஹஸ்தம், வரத ஹஸ்தம் ஆகிய சொற்களை நாம் பயன்படுத்துகிறோம்.

இறைவன் அல்லது இறைவியின் வலக்கை விரல்கள் மேல்நோக்கி நீட்டிய நிலை யிலும், உள்ளங்கை எதிரில் இருக்கும் பக்தர் களுக்கு அடைக்கலம் தரும் நிலையிலும் இருப் பது

அபய ஹஸ்தம் அல்லது அபய முத்திரை எனப்படும். இதில் இறைவன் அல்லது இறைவி தன் எதிரில் நின்று தன்னை வழிபடும் பக்தர்களுக்கு, ''நான் உங்களுக்கு அடைக்கலம் தருகிறேன், நான் உங்களைக் காப்பாற்றுகிறேன், நான் இருக்கும்போது நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை; கவலைப்பட வேண்டியதில்லை'' என்று உணர்த்தும் கருத்துகள் அடங்கியுள்ளன.

இறைவன் அல்லது இறைவியின் இடக்கை உள்ளங்கை எதிரில் இருக்கும் பக்தர்களின் பக்கமும், விரல்கள் திருவடிகளைச் சுட்டிக் காட்டும் நிலையிலும் இருக்கும் வடிவம் வரத ஹஸ்தம் அல்லது வரத முத்திரை எனப்படும். இதில் இறைவன் அல்லது இறைவி, ''என் திருவடிகளை நீங்கள் சரணடைந்தால், அனைத்து நன்மைகளையும் அடைவீர்கள்; முழுமை பெறுவீர்கள்'' என்று உணர்த்தும் கருத்துகள் அடங்கியுள்ளன.

82. கேள்வி: ஹம்சம் (அன்னம்) எந்தத் தெய்வத்திற்கு உரிய வாகனம்?

□பதில்: பிரம்மாவின் வாகனம் அன்னம். என்றாலும் அன்னம் எல்லா தேவ தேவியருக்கும் பொதுவான வாகனமாகும்.

எனவேதான் ஆலயங்களில் அன்ன வாகனம், பல்வேறு தெய்வங்களுக்கும் உற்சவ காலத்தில் வாகனமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

83. கேள்வி:நமது கோயில்களில் இறைவன் - இறைவியின் சந்நிதிகளில் பக்தர்கள் நெய்விளக்கு ஏற்றுகிறார்கள். அதற்கு என்ன காரணம்?

□பதில்: சென்னை, சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனில் பல ரயில்கள் வந்து நிற்கின்றன. அவற்றிலிருந்து ஏராளமான மக்கள் இறங்கி வருகிறார்கள்.

''இவர்கள் சென்னை வந்ததற்கு என்ன காரணம்?'' என்று என்னைக் கேட்டால், அதற்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்?

அவர்கள் சென்னைக்கு வந்ததற்கு, எத்தனை எத்தனையோ காரணங்கள் இருக்கும். அந்தக் காரணங்கள் அவர்களுக்குத்தான் தெரியும்.

அது போல் எந்த நோக்கத்தில், எந்தப் பிரார்த்தனை நிறைவேற வேண்டும் என்ற கருத்தில், எந்த பக்தி மனநிலையில் பக்தர்கள் நெய்விளக்கு ஏற்றுகிறார்கள் என்பது-அவ்விதம் நெய் விளக்கு ஏற்றுபவர்களுக்குத்தான் சரியாகத் தெரியும்.

பொதுவாக எந்த வகையில் கோயிலுக்குத் தொண்டு செய்தாலும்-தெய்வ காரியங்களுக்குத் தொண்டு செய்தாலும் - ஆன்மிகத் தொண்டு செய்தாலும் அவற்றைச் சமயச் சான்றோர்கள் ஊக்குவித்திருக்கிறார்கள். அவர்களைப் போன்றே நாமும் இது போன்ற காரியங்களில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபடும்படி செய்ய வேண்டும்.

நெய்விளக்கு ஏற்றும்போது நெய் உருகி விடுகிறது. அது போல் நாம் கோயிலில்

இறைவன் - இறைவியின் சந்நிதியில் நெய் விளக்கு ஏற்றும்போது, நமது பாவங்களும் தீவினைகளும் உருகிவிடும்; அதனால் பாவங்களிலிருந்தும் தீவினைகளிலிருந்தும் நாம் விடுபடலாம் என்றும் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள்.

கோயிலில் எரியும் நெய்விளக்கு நாம் நமது வாழ்க்கையை, இறைவன் தொண்டிற்கும் மக்கள் தொண்டிற்கும் தியாகம் செய்ய வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது எனலாம்.

மகாகவி பாரதியார் இவ்விதம் கூறியுள்ளார்:

''தன்னையே எரித்துக்கொண்டு சந்நிதியில் ஒளி பரப்பும் எண்ணெய் விளக்கைப் பார்த்தேன். ஆயுள் உள்ளவரை ஆண்டவனின் சேவை செய்யும் அருங்குணம் தேவை என்று உணர்ந்தேன்.''

84. கேள்வி: ''நாம் நமது உள்ளத்தை இறைவனின் கோயிலாக வைத்திருக்க வேண்டும்'' என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி வைத்திருப்பதால் என்ன லாபம்?

□ பதில்: உள்ளத்தை இறைவனின் கோயிலாக வைத்திருப்பதால், ஏற்கெனவே நம்மிடமுள்ள தீய இயல்புகள் நம்மிடமிருந்து வெளியேறி விடும்; மேலும் புதிய தீய இயல்புகள் நம் உள்ளத்தில் நுழையவும் நுழையாது. இறைவனின் கோயிலாக வாழ்வதைவிட, பெரும் சிறப்பு

ஒருவருக்கு உலகில் வேறு என்ன இருக்க முடியும்?

15. கர்ப்பூர தீபத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ளலாமா?

85. **கேள்வி: பொதுவாக இந்துக்களாகிய நாம் சுவாமிக்குக் கர்ப்பூரம் காட்டிய பிறகு, அதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்கிறோம்.**

சிலர் கர்ப்பூரத் தீபத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்வதில்லை. ஆனால் அவர்களும் சுவாமிக்குக் கர்ப்பூர தீபம் காட்டத் தவறுவதில்லை.

அப்படிச் சிலர் கர்ப்பூரத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளாததற்கு என்ன காரணம்?

□பதில்: ஸ்தூல உலகத்தையும்-சூட்சும உலகத் தையும் இணைப்பவர் அக்கினி பகவான்.

வேள்வியின்போது நாம் சமர்ப்பிக்கும் ஆஹுதிகளை, அக்கினி பகவான் மேல் உலகங் களிலுள்ள அந்த அந்தத் தெய்வங்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறார் என்பது இந்துக் களின் கருத்தாகும்.

மேலும் அக்கினி தூய்மையின் வடிவ மாகும். அக்கினியில் எதைப் போட்டாலும் அதை அக்கினி எரித்துவிடுகிறது. அதனாலேயே 'நெருப்புப் போன்ற தூய்மை' என்ற ஒரு சொற்றொடரும் வழங்கி வருகிறது.

'அக்கினியை வலம் வருதல்' என்ற சில சடங்குகளும் உண்டு. சந்நியாசிகள் புனித

அக்கினியை வளர்த்து, அதைப் பரப்பிரம்மமாகக் கருதி அதன்முன் தியானம் செய்வதும் உண்டு.

எந்த இறைவனை அல்லது இறைவி யைக் குறித்து ஹோமம் செய்யப்படுகிறதோ, அந்த ஹோமத்திலுள்ள அக்கினி அந்த இறை வன் அல்லது இறைவியைக் குறிக்கும்.

பெரும்பாலும் இந்துக்கள் எல்லோருமே சுவாமிக்குக் கர்ப்பூர தீபம் காட்டிய பிறகு, அதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்கி றோம். இந்தப் பழக்கம் இந்தியா முழுவதும் மட்டுமின்றி, உலகின் அனைத்து பகுதிகளிலும் வாழும் இந்துக்களிடம் இருந்து வருகிறது.

இப்படிச் செய்வதன் லம், 'இறை வனின் அருள் நமக்குக் கிடைக்கிறது' என்று, பக்தர்களாகிய நாம் கருதுகிறோம்.

விக்கிரகத்தில் அல்லது படத்தில் எழுந்த ருளியிருக்கும் இறைவன் 'கர்ப்பூர தீபம்' என்ற அக்கினி வடிவத்திலும் இருக்கிறான். எனவே கர்ப்பூர தீபத்தைத் தொட்டு வணங்குவதன் லம், அக்கினி வடிவத்தில் அதே கடவுளை வணங்குகிறோம் என்று நாம் எடுத்துக்கொள்ள லாம்.

இறைவனிடமிருந்து வரும் திருநீறு, தீர்த்தப் பிரசாதம், நிர்மால்யம் (இறைவனுக்கு அர்ப்பிக்கப்பட்ட மலர்) மற்றும் லட்டு, வெண்பொங்கல் ஆகியவை போன்று இறைவ னிடமிருந்து வருவதால் - கர்ப்பூர தீபத்தையும் பிரசாதமாகக் கருதி அதைத் தொட்டு நாம் கண்களில் ஒற்றிக்கொள்கிறோம்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் சுவாமிக்குக் கர்ப்பூர தீபம் காட்டுவார்கள். ஆனால் அப்படி பெருமாளுக்குக் காட்டிய கர்ப்பூர தீபத்தை, ஸ்ரீவைஷ்ணவர்கள் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ள மாட்டார்கள்

அதற்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூறும் காரணங்கள் ஒன்றுபோலவே இல்லாமல் வேறுபடுகின்றன.

அவை பின்வருமாறு:

முதல் காரணம்: பகவான் தீப சொரூபமாக காஞ்சீபுரத்தில் எழுந்தருளியுள்ளார். ஆதலால் நாம் அவரைத் தொட முடியாது.

இரண்டாவது காரணம்: பக்தன், பகவான் மீது கொண்டிருக்கும் பிரேமையால் எல்லா அலங்காரங்களையும் செய்துவிட்டு எம்பெருமானின் அழகை வெகுவாக ரசிக்கிறான். பிறகு தன் கண்ணே பட்டுவிடும் என்று கருதி, பகவானுக்குத் திருஷ்டி கழிக்கும் பொருட்டுக் கர்ப்பூர ஆரதி எடுக்கிறான். எனவே அதை மற்றவர்கள் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்வதற்கு, ஸ்ரீவைஷ்ணவச் சான்றோர்கள் அனுமதிப்பதில்லை.

ஆனால் சைவர்கள், ஸ்மார்த்தர்கள் (ஸ்ரீவைஷ்ணவர்கள் அல்லாதவர்கள்) கர்ப்பூர ஆரதி என்பதை இறைவனுக்கு ஓர் அர்ப்பணிப்பாகச் செய்கிறார்கள். எனவே அதை அவர்கள் இறைவனின் பிரசாதமாக ஏற்றுக் கண்களில் ஒற்றிக்கொள்கிறார்கள்.

மூன்றாவது காரணம்: நமது பக்தியின் ஒரு வெளிப்பாடாக நாம் பெருமாளுக்குக் கர்ப்பூர

ஆரதி செய்கிறோம், கர்ப்பூரம் காட்டுகி றோம். இங்குள்ள கர்ப்பூர தீபம் அக்கினி பகவானையே குறிப்பிடுகிறது. பெருமாளும், அக்கினி பகவானும் சேர்ந்து வந்தால் - நாம் பெருமாளைத்தான் வணங்க வேண்டும். எம் பெருமான் இருக்கும் இடத்தில் எம்பெரு மானைத்தான் நாம் வணங்க வேண்டும்; தேவர் களில் ஒருவனாகிய அக்கினியை நாம் வணங்க வேண்டியதில்லை - என்று வைஷ்ணவர்களில் சிலர் கருதுகிறார்கள்.

'பெருமாளுக்குக் காட்டிய கர்ப்பூர தீப ஆரதியைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ளக் கூடாது' என்பதை இப்போதும் ஆச் சாரம் மிகுந்த, வயது முதிர்ந்த ஸ்ரீவைஷ்ண வர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். அவர்க ளைத் தவிர நவீன காலத்தில் வாழும் ஸ்ரீவைஷ் ணவர்களும் பெரும்பாலும் தங்கள் சம்பிரதாயம் தெரியாததால், வழக்கமாக இந்து மதத்தின் எல்லாப் பிரிவினரும் செய்வதுபோல் - கர்ப்பூர தீபத்தைக் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

சிவன் கோயில்களில் நவக்கிரகங்களுக்குச் சந்நிதி உண்டு. வைணவக் கோயில்களில் நவக்கிரகங்களுக்குச் சந்நிதி கிடையாது.

அதற்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் கூறும் காரணம் பின்வருமாறு: 'நவக்கிரக தேவதைகள் ஆற்றல் உடையவர்கள்தான். ஆனால் பெரு மாளின் முன்னால் அவர்களைத் தனியாக வணங்க வேண்டியதில்லை. நாம் பெருமாளை வணங்கினால் அவரே நமக்கு அனுக்கிரகம்

செய்துவிடுவார்; பெருமாளின் பார்வை நம் மீது படுவதைப் பார்த்தே நவக்கிரகங்கள் நமக்கு அருள் புரிந்துவிடுவார்கள்' - என்பது ஸ்ரீவைஷ்ணவத்தின் கருத்தாகும்.

''யத் பாவம் தத் பவதி - நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்'' என்பதற்கேற்ப பக்தர்கள் எத்தகைய மனநிலையுடன், நம்பிக்கையுடன் இறைவனை வழிபடுகிறார்களோ, அந்த நிலையிலிருந்து இறைவனும் பக்தர்களுக்கு அருள் புரிகிறான்.

எனவே இறைவனைப் பக்தர்கள், தங்கள் நம்பிக்கைக்கேற்ப எப்படி வேண்டுமானாலும் வணங்கலாம்.

16. விரதம்

86. கேள்வி: பட்டினி, நோன்பு ஆகிய இரண்டு சொற்களும் உணர்த்தும் பொருள் ஒன்றுதான் இல்லையா?

□பதில்:பட்டினி என்பது வேறு; நோன்பு என்பது வேறு.

கையில் காசு இல்லாததால், வேறு வழியின்றி இருப்பது பட்டினி.

உணவு கைவசம் இருந்தும் உயர்ந்த நோக்கத்திற்காக, இறைவனுக்காக உண்ணாமல் இருப்பது நோன்பு.

87. கேள்வி: நாம் விரதங்களை ஏன் அனுஷ்டிக்க வேண்டும்?

□பதில்: பாவங்களிலிருந்து விடுபடவும், தெய்வ பக்தி உறுதி பெறவும் விரதங்கள் (நோன்புகள்) பெரிதும் உதவுகின்றன.

விரதங்கள் மனிதனின் விலங்கு இயல்பை அழித்து, தெய்விக இயல்பை வளர்க்கின்றன.

மனத்தை இறைவனை நோக்கிச் செலுத்தும் மிகவும் நல்ல ஒரு பயிற்சியாக, நோன்புகள் விளங்குகின்றன.

நோன்பு சமயத்தில் ஆன்மிக வலிமையும், மனவலிமையும் பெறுவதற்காக நாமாக விரும்பி உணவைத் தவிர்க்கிறோம்.

வாழ்க்கை முழுவதையுமே ஒரு விரதமாக வைத்துக்கொண்டு நாம் வாழ்வோமானால், எல்லையற்ற ஆன்மிக வலிமையை நாம் சம்பாதித்து விடலாம்.

88. கேள்வி:'ஏகாதசி பாரணை' என்று சொல்கிறோம். பாரணை என்றால் என்ன?

□பதில்: 'பாரணை' என்ற சொல்லுக்குப் 'பட்டினி இருந்து உணவு உட்கொள்வது' என்பது பொருள்.

89. கேள்வி:ஏகாதசி போன்ற விரதங்களைக் கடைப் பிடிப்பதால் ஏற்படும் நன்மை என்ன?

□பதில்: நாம், 'நம் ஆடையில் அழுக்குப்படக் கூடாது; நம் உடலில் அழுக்கு இருக்கக் கூடாது' என்று நினைக்கிறோம். ஆனால் அதுபோல் நம் மனத்தில் அழுக்கு இருப்பதைப் பற்றி, நாம் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை.

நம் மனதில் உள்ள அழுக்குகளை நீக்கிக் கொள்வதற்கு, தவமும் விரதங்களும் உதவு கின்றன.

விரதங்களின் மூலம் இறைவனுக்கும் நமக்கும் இடையிலுள்ள தடைகளை, நாம் நீக்கிக்கொள்கிறோம்.

ஒருவர் கடைப்பிடிக்கும் விரதமும் அவரது ஞானமும், அவர் இறந்தபிறகும் அவருடன் வாழும்.

90. கேள்வி:திங்கட்கிழமை விரதம் அனுஷ்டித்து வருகிறேன். அதைச் சில சமயங்களில் அனுஷ்டிக்க இயலாமல் போய்விடுகிறது.

அந்த நிலையில் நான் என்ன செய்வது?

□பதில்:உடல்நலக் குறைவு, வெளியூர் பிரயாணம் போன்ற சில நியாயமான காரணங்களால் சில சமயங்களில் விரதத்தைப் பின்பற்ற இயலாமல் போய்விடும். அந்த நிலையை 'விதி விலக்கு' அல்லது, 'ஆபத் தர்மம்' என்று கருத வேண்டும். மற்றபடி பொதுவாக விரதத்தைக் கடைப்பிடிப்பதில், உண்மையான முயற்சி இருக்க வேண்டும்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் மகாத்மா காந்திஜி மௌன விரதம் இருப்பது வழக்கம். நாடு விடுதலை பெற்ற 1947 ஆகஸ்ட் 15 ஒரு திங்கட்கிழமையாகும். அந்த மகத்தான தினத்திலும் காந்திஜி, தமது மௌன விரதத்தைக் கைவிடவில்லை.

91. கேள்வி:மௌன விரதம் கடைப்பிடிப்பது, ஆன்மிக வாழ்க்கைக்கு எவ்விதம் உதவுகிறது?

□பதில்: அதிகமாகப் பேசுவதும் பயனற்ற பேச்சுகளைப் பேசுவதும், தீமையையும் பாவத்தையும் விளைவிக்கும்.

பூரண மௌனத்தில்தான் ஆத்ம ஞானத்தை உணர முடியும். பூரண மௌனத்தில்தான் அகந்தை அழியும்.

''மோனம் என்பது ஞான வரம்பு'' - இது அவ்வைப் பாட்டியின் அமுதமொழி

''பலவந்தமாகப் பேசாமல் இருப்பதும், வெறுமனே வீண் பேச்சில் ஈடுபடுவதும் மனிதனுக்குக் கேடு விளைவிக்கின்றன. மனம் அடங்கப் பெற்றிருப்பதே வாய் திறந்து பேசாமல் இருப்பதைவிட, நிச்சயமாக மேலானது. ஆதலால் எப்பொழுதும் மனத்தை அடக்க முயற்சி செய்யுங்கள். மௌன விரதத்தை வற்புறுத்தி மேற்கொள்வதைவிட, தேவையான அளவுதான் பேசுவது என்று வைத்துக் கொண்டால் தீமை ஒன்றும் ஏற்படாது. மேலும் அதனால் முறையான மௌன விரதத்தின் பலனும் கிடைக்கும்'' என்று, சுவாமி பிரம்மானந்தர் கூறியுள்ளார்.

''நன்மை தரும் சொற்களை ஆராய்ந்து, சிந்தித்து அவற்றை இனிமையாகச் சொல்ல வேண்டும். அவ்விதம் பேசினால் பாவங்கள் தேய்ந்து அறம் வளரும்'' என்று வள்ளுவம் (குறள்-96) குறிப்பிடுகிறது.

பண்பாடற்ற நாகரிகமற்ற பேச்சுகளைப் பேசுவதற்குப் பெரியோர்கள் கூசுவார்கள்.

''மௌனமே நமது லம்'' - இது ஸ்ரீ ரமண மகரிஷிகளின் கருத்து.

17. பொங்கல் விழா தத்துவம்

92. கேள்வி: பொங்கல் நாளன்று சூரியனை வழிபடும்போது வாழை, கரும்பு, மஞ்சள், இஞ்சி ஆகியவற்றை வைத்து வழிபடும் வழக்கம் இருக்கிறது.

இவற்றை வைத்து வழிபடுவதற்கு, சிறப்பான காரணம் ஏதேனும் உண்டா?

□பதில்: வாழை, வாழையடி வாழையாக வளரும் இயல்புடையது. வாழை போன்று நமது குடும்பமும், நமது சமுதாயமும் வாழையடி வாழையாக வளமுடன் செழிப்பாக வாழ வேண்டும் என்ற கருத்தில், வாழை - பொங்கல் வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது.

கரும்பு, ஓங்கி உயர்ந்து வளரும் இயல்புடையது. அதுபோல் நம் வாழ்க்கையும் ஓங்கி உயர்ந்து இனிய சுவையுடன் வளர்ச்சி பெற வேண்டும் என்ற கருத்தில், கரும்பு - பொங்கல் வழிபாட்டில் இடம் பெறுகிறது.

மஞ்சள் பூமிக்கடியில் ஆழமாகப் பதிந்து வளரும் இயல்புடையது. அதுபோல் உயர்ந்த, புனிதமான கருத்துகள் நம் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து, நம் வாழ்க்கையை மங்களகரமாக நெறிப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், பொங்கல் நாளில் மஞ்சள் படைக்கப்படுகிறது.

இஞ்சி, நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நாம் வாழ வேண்டும் என்ற கருத்தில் பொங்கல் வழிபாட்டில் இடம் பெறுகிறது.

18. வழிபாடு

93. கேள்வி:'இறைவழிபாடு' என்பதற்கு இலக்கணம் என்ன?

□பதில்: இறைவன் வழியில் நிற்பது இறைவழி பாடாகும்.

94. கேள்வி:இறைவனை வழிபடுவதற்குப் பல முறைகள் உள்ளன. இவற்றில் மேலான வழிபாடு எது?

□பதில்:மற்றவர்களுக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்வதுதான், இறைவனுக்கு நாம் செய்யும் மேலான வழிபாடாகும்.

95. கேள்வி:இறைவனை வழிபடுவதற்கு எந்த மொழி நல்லது?

□பதில்:இறைவனை வழிபடுவதற்கு குறிப் பிட்ட ஒரு மொழியை மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை.

அதற்கு உங்களுக்குப் பிடித்த எந்த மொழியையும் நீங்கள் பயன்படுத்தலாம்.

19. சரணாகதி

96. கேள்வி: 'ஆத்மார்ப்பணம்' என்றால் என்ன?

□பதில்:இறைவனிடம் ஒருவர் தன்னை முழு மையாக அர்ப்பணித்து விடுவது 'ஆத்மார்ப் பணம்' எனப்படும்.

97. கேள்வி: 'சரணாகதி' என்றால் என்ன?

□பதில்: இறைவன் ஒருவனே, மனிதனின் இறுதிப் புகலிடமாக விளங்குகிறான். 'தஞ்சம்' என்று தன்னை வந்தடைந்தவர்களை, இறைவன்

ஒருபோதும் கைவிடுவதில்லை. ஆதலால் எல்லாப் பொறுப்புகளையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு - நம்முடைய ஆணவமும், தன்முனைப்பும் இன்றி - இறைவன் திருவருளில் பூரணமாக அடங்கி வாழ்வது சரணாகதி எனப்படும்.

''எனக்கு என்று தனியான ஒரு சிந்தனை யில்லை; எது தேவரீரின் கட்டளையோ அதற் கேற்ப பணி செய்வோம்'' என்று, மாணிக்க வாசகர் திருபள்ளியெழுச்சியில் குறிப்பிடுகிறார். இது, இறைவனிடம் சரண் புகுந்த பக்தனின் மனநிலைக்கு, நல்ல ஓர் எடுத்துக்காட்டு.

'இறைவன் திருவுள்ளப்படியே அனைத் தும் நடைபெறுகிறது' என்று நினைப்பது, முதிர்ந்த உள்ளத்தின் அடையாளமாகும்.

சிறிய விஷயமாக இருந்தாலும், பெரிய விஷயமாக இருந்தாலும் - இறைவனின் சங்கல் பத்திற்குக் கீழ்ப்படிந்து இறைவனிடம் சரண் புகுந்தவர்கள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் நடந்துகொள்வார்கள்.

தங்கள் முயற்சி வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் - இறைவனிடம் சரண் புகுந்தவர்கள் தங்கள் மனத்தைச் சமநிலையில் வைத்திருப்பார்கள்.

இறைவனிடம் சரண் புகுந்து, 'நாம் இறைவனின் கருவி' என்ற மனநிலையை வளர்த்துக்கொள்ளும் அளவிற்கேற்ப நம்மிடம் நற்குணங்கள் இடம் பெறும்; மலரும்; வளரும்.

பிரம்மாண்டமான பெரிய ஒரு மாளிகை.

அதில் நுழைவதற்குப் பல நுழைவாயில் இருக்கின்றன. என்றாலும் அவற்றில், முக்கிய நுழைவாயில் (Main Gate) என்று ஒன்று இருக்கிறது. அதுபோல் முக்தி அடைவதற்குப் பல வழிகள் இருந்தாலும், சரணாகதிதான் முக்கிய நுழைவாயிலாக விளங்குகிறது.

98. கேள்வி: 'தத்துவம், இதம், புருஷார்த்தம்' என்றால் என்ன?

□பதில்: தத்துவம் - பகவான், இதம்-சரணாகதி, புருஷார்த்தம் - முக்தி என்பது பொருள்.

தத்துவம் பகவான் என்பதை உணர்ந்து, இதமான சரணாகதி செய்தால், புருஷார்த்தமான மோட்சம் கிடைக்கும் என்பதில் என்ன சந்தேகம்?

99. கேள்வி:அகங்காரத்துடன் இருப்பவர்களுக்கு, இறைவனிடம் பூரண சரணாகதி ஏற்படுமா?

□பதில்: அகங்காரம், மமகாரம் உள்ளவரை பூரண சரணாகதி என்பது ஏற்படவே ஏற்படாது. 'நான்' என்ற அகந்தை நீங்கிய உள்ளத்தில் இறைவன் வெளிப்படுகிறான். அந்த நிலையில் தான், ''எல்லாம் எனையாளும் ஈசன் செயல்'' என்று கருதும் பூரண சரணாகதி நிலை வாய்க்கிறது.

நெற்பயிர் நிமிர்ந்து நிற்கும். அதில் மணிகள் முதிர முதிர வளைய ஆரம்பிக்கும். அவை அறுவடை சமயத்தில் படுத்துவிடும்.

அதுபோல் இளமையில் அகங்காரம் காரணமாகத் துடுக்காக இருப்பவர்களிடம் அறிவு முதிர முதிர-மனம் பக்குவப்படப்பட-பணிவும்

அடக்கமும் வளர்கின்றன. முடிவில் அவர்களிடம் நெற்பயிர் படுத்துவிடுவதுபோல், அகங்காரம் நீங்கிப் பூரண சரணாகதி இயல்பாக அமைகிறது.

100. கேள்வி:விபீஷணன் சரணாகதிக்கும், அர்ஜுனன் சரணாகதிக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

□பதில்: விபீஷணனுக்குச் சரணாகதி தந்தது எம்பெருமானின் கடற்கரைச் சொல். போர்க்களத்தில் அர்ஜுனனுக்குச் சரணாகதி தந்தது எம்பெருமானின் தேர்த்தட்டுச் சொல் - இப்படிச் சொல்லலாம் இல்லையா?

101. கேள்வி: 'இறைவன் திருவடிகளில் சரணடைதல்' என்ற கருத்தை, விரிவாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

□பதில்: இறைவனை நோக்கி அழைத்துச் செல்லும் பாதைகள் நான்கு.

அவை முறையே 1.பக்தியோகம், 2.கர்மயோகம், 3.ஞானயோகம், 4.ராஜயோகம் ஆகியவையாகும்.

இந்த நான்கு யோகங்களில் உலகிலுள்ள எல்லாச் சமயங்களின் கருத்துகளும், எல்லாச் சமயப் பிரிவுகளின் கருத்துகளும் ஏதேனும் ஒரு விதத்தில் அடங்கியுள்ளன.

'இறைவன் திருவடிகளில் சரணடைதல்' என்பது, பக்தி யோகத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியாகும்.

மனிதர்களாகிய நாம் சில விரதங்களைக் கடைப்பிடிக்கிறோம்; சில உறுதிமொழிகள் எடுத்துக்கொள்கிறோம்; சில வாக்குறுதிகள்

கொடுக்கிறோம்; சில சங்கல்பங்கள் செய்து கொள்கிறோம். அவற்றை வாழ்க்கையில் பின்பற்றி வாழ்கிறோம்.

அதுபோல் இறைவனும் தனக்கென்று ஒரு விரதம் வைத்திருக்கிறான். அந்த விரதத்தைத் தவறாமல் அவன் கடைப்பிடித்து வருகிறான்.

அந்த விரதம் என்ன என்பதை, ஸ்ரீராமரின் வாய்மொழியாக வால்மீகி ராமாயணம் தெரிவிக்கிறது. தன்னிடம் சரண் புகுவதற்காக விபீஷணன் வந்தபோது, ஸ்ரீராமர் பின்வருமாறு கூறினார்:

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மி இதி யாசதே|
அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம||

சுலோகத்தின் பொருள்:'' 'நான் உன்னைச் சேர்ந்தவன்' என்று சொல்லி ஒரே ஒரு சமயம் என்னை நாடுபவனை, 'எதற்கும் எப்போதும் பயப்பட வேண்டாம்' என்று அறுதியிட்டுப் புகலிடம் தருவேன். இது நான் கொண்ட விரதம். ''

இந்த ஸ்ரீராமபிரானின் வாய்மொழி, 'இறைவனைச் சரணடைந்தவர்கள் எதற்கும், எப்போதும் பயப்பட வேண்டியதே இல்லை. அவர்களை இறைவன் நிச்சயம் பாதுகாப்பான்' என்ற உண்மையைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

இந்தக் கருத்தை, 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற பழமொழியும் உறுதிப் படுத்துகிறது.

ஸ்ரீராமர் கூறியதுபோல், சரணாகதியைப் பற்றி பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணனும் ஓர் உறுதிமொழி வழங்கியிருக்கிறார்.

அது வருமாறு:

ஸர்வதர்மான் - பரித்யஜ்ய
மாமேகம் சரணம்வ்ரஜ|
அஹம்த்வாஸர்வ-பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மா சுச:||
-கீதை 18-66

சுலோகத்தின் பொருள். ''எல்லா தர்மங்களையும் அறவேவிட்டு, என் ஒருவனையே சரண் புகுவாய். நான் உன்னை எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன். வருந்தாதே.''

ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் கூறியிருக்கும் சரணாகதியைப் பற்றிய இந்தக் கருத்தை 'கீதையின் சாரம்' என்றே மகான்கள் கருதுகிறார்கள். சொல்லப் போனால், இது உலகிலுள்ள எல்லா சாஸ்திரங்களின் சாரமாகும்.

தமிழ்த் தாயின் இரண்டு கண்கள் என்று சொல்லத்தக்க பெரும் சிறப்பை கம்ப ராமாயணமும், திருக்குறளும் பெற்றிருக்கின்றன.

கம்ப ராமாயணத்தில் கடவுள் வாழ்த்தாகப் பின்வரும் பாடல் இடம் பெற்றுள்ளது:

''உலகம் யாவையும் தாம் உள வாக்கலும்,
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே.''

இந்தப் பாடலில், ''அன்னவர்க்கே சரண் நாங்களே'' என்பதன் லம் கவிச்சக்கரவர்த்தி,

'இறைவனிடம் சரணடைவது இன்றியமை யாதது' என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

திருக்குறள் கடவுள் வாழ்த்திலுள்ள பத்துக் குறட்பாக்களில், ஏழு குறட்பாக்கள் இறைவனின் திருவடிப் பெருமையைப் பற்றிக் குறிப்பிடு கின்றன.

எனவே திருக்குறளின் தொடக்கத்தி லேயே, சரணாகதியின் முக்கியத்துவத்தை வள்ளுவப் பேராசான் வலியுறுத்தியிருக்கிறார்.

தமிழில் 'தெய்வப்புலவர்' என்ற அடை மொழியை இருவர் மட்டுமே பெற்றிருக்கி றார்கள். ஒருவர் - திருவள்ளுவர், மற்றொருவர் - சேக்கிழார்.

சேக்கிழாரின் பெரிய புராணத்திலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் இது:

''உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.''

இந்தப் பாடலின் இறுதியிலுள்ள, ''மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்'' என்பது, 'இறைவன் திருவடிகளில் சரண் புக வேண்டும்' என்ற சைவ சமயத்தின் கருத்தை உணர்த்துகிறது.

இறைவனிடம் சரண் புகும் அடியார்கள் ஐந்து நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று, வைணவ சமயம் குறிப்பிடு கிறது.

அவை வருமாறு: 1. ஆனுகூல்ய சங்கல் பம், 2.ப்ராதிகூல்ய வர்ஜனம், 3.மகா விசுவாசம், 4.கோப்த்ருத்வவரணம், 5.கார்ப்பண்யம்.

1. இறைவனுக்கு விருப்பமானதை மட்டுமே நாம் செய்ய வேண்டும். இறைவனுக்கு எது சம்மதமோ, இறைவனின் திருவுள்ளம் எதுவோ அதை மட்டுமே நாம் செய்ய வேண்டும் (ஆனுகூல்ய சங்கல்பம்).

2. இறைவனுக்கு விருப்பமில்லாததைச் செய்யாமல் விட்டுவிட வேண்டும் (ப்ராதிகூல்ய வர்ஜனம்).

அவனைத் தரிசிப்பதோ அல்லது வழிபடுவதோ, பிரதிபலன் எதையும் எதிர்பாராமலும் - பிரதிபலன் எதையும் வேண்டாமலும் செய்ய வேண்டும். இது நிஷ்காம்ய பக்தியாகும்.

3. 'இறைவன் நம்மைக் காப்பாற்றுவான்' என்பதில் அசைக்க முடியாத, ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருத்தல் (மகாவிசுவாசம்).

இதற்கு உதாரணம் - பல்வேறு துன்பங்களை அனுபவித்த நிலையிலும் பிரகலாதனும் திருநாவுக்கரசரும் கொண்டிருந்த மனநிலை.

4. இறைவனிடம், ''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று பிரார்த்தனை செய்தல் (கோப்த்ருத்வவரணம்).

5. தன்னுடைய தகுதியின்மையை உணர்ந்து, இறைவனிடம், ''இறைவா! தங்களுடைய அளவற்ற கருணையால் தாங்களே எனக்கு உதவி செய்ய வேண்டும். தங்கள் திருவடிகளில் நான் பூரணமாகச் சரணடைகிறேன்'' என்று பிரார்த்தனை செய்ய வேண்டும் (கார்ப்பண்யம்).

20.சத்சங்கம்

102. கேள்வி: மனிதனுக்கு சத்சங்கம் ஏன் தேவை?

□பதில்: மனிதன் தன் தெய்விக இயல்பை மறந்திருக்கிறான். அவன் மறந்திருக்கும் தெய்விக இயல்பையும், வாழ்க்கையின் இலட்சியத்தையும் சத்சங்கம் அவனுக்கு நினைவுபடுத்துகிறது.

நாம் ச்சு விடுவதற்கு நமக்குக் கற்றுக் கொடுப்பதற்கு ஒருவர் தேவையில்லை. ஆனால் நாம் சிந்திக்கவும், நன்கு வாழவும் கற்றுக் கொடுப்பதற்குச் சத்சங்கம் தேவை.

மனிதன் விலங்கு நிலையிலிருந்தும், அறியாமையிலிருந்தும் விடுபட்டுத் தன்னை அறியும் ஞானம் பெறுவதற்குச் சத்சங்கம் உதவுகிறது.

நாம் உடல் அளவில் வளர்வது தானாகவே நடைபெற்று விடுகிறது. உள்ளம் வளரவும் உயரவும் சத்சங்கமும் உழைப்பும் தேவைப்படுகின்றன.

103. *கேள்வி: சத்சங்கத்தின் சிறப்பு என்ன?*

□பதில்: நன்மைகள் நிலைக்கவும், தீமைகள் ஒழியவும் சத்சங்கம் உதவும்.

சத்சங்கம், வாழ்க்கையில் ஒருவர் பெறக் கூடிய பேறுகளிலேயே தலையாய முக்கியத்துவம் உடையது. அது அரிய மருந்து போன்றது.

சத்சங்கம் என்ற நல்லோர் தொடர்பு, சான்றோர் தொடர்பு, நாளும் நம்மிடம் வளர வேண்டும். அது நம்மை உயர்த்தும்.

துஸ்சங்கம் என்ற தீயவர்கள் தொடர்பு, ஒருவரை மெல்ல மெல்லக் கொல்லும் விஷம் போன்றது. அது நம் வாழ்வைச் சீர்குலைத்து விடும்.

ஒருவருக்கு உயர்ந்த சத்சங்கத்தை விடப் பெரிய செல்வம், உயர்ந்த பாதுகாப்பு, காக்கும் கவசம் வேறு எதுவுமே இல்லை.

104. கேள்வி: சத்சங்கத்தின் முக்கியத்துவம் என்ன?

□பதில்: வானத்திலிருந்து பொழியும் மழைநீர் தூய்மையானதுதான். எனினும் அது சேற்றில் விழுந்தால் சேறாகவும், சாக்கடையில் விழுந் தால் சாக்கடையாகவும், கங்கையில் விழுந்தால் கங்கையாகவும் மாறுகிறது.

அது போல் ஒருவன் எத்தகையவர்க ளோடு சேருகிறானோ, அதற்கேற்பவே அவன் குணமும் அமையும்.

அதனால்தான் நமது வாழ்க்கைக்கு ஊன்று கோலாக, நல்லோர் தொடர்பு என்ற சத்சங்கம் முற்றிலும் இன்றியமையாததாகிறது.

ஒருவரிடம் பக்தி வளர்வதற்கு- ஒருவரின் ஆன்மிக முன்னேற்றத்திற்கு - முதல் மற்றும் முக்கியத் தேவை சத்சங்கம் ஆகும்.

தாங்கள் பெற்ற பேற்றினை, மற்ற வர்களும் பெறுமாறு செய்வது பெரியோர்களின் இயல்பாகும். ஆதலால் சத்சங்கம் என்ற பெரியோர் தொடர்பு, நம்மைப் பெருமை நிலைக்கு உயர்த்தும். இதற்கு மாறான தீயவர்களின் தொடர்பு நம் வளத்தை அழிக்கும்.

குருடன், பார்வையுள்ளவனின் துணை கொண்டு வழிப்பயணம் மேற்கொள்வது போல், நாம் அருளாளர்களின் சத்சங்கத்தின் துணை கொண்டு ஆன்மிகப் பயணத்தைச் செய்து முடிக்க வேண்டும்.

அன்பு கலந்ததாகவும், அறிவு பொருந்திய தாகவும், அருளோடு பிணைந்து பொருள் நிறைந்ததாகவும் இருப்பது எதுவோ அதுவே சத்சங்கமாகும்.

''சான்றோர் இனத்திரு'' என்பது அவ்வை தாட்டியின் அமுத வாக்கு. ஸ்தூலமாக இயலாத நிலையில், மானசிகமாகவாகிலும் அருளாளர்களுடன் நாம் தொடர்புகொள்ள வேண்டும்.

105. கேள்வி: 'த்தோர் சொல் வார்த்தை அமிழ்தம்' எனப்படுகிறது. த்தவர்கள் என்பவர்கள் யார்?

□பதில்: வயது, உருவம், பதவி, பட்டம், ஜாதி, குலம், இனம், மொழி ஆகியவற்றில் இல்லாமல் அறிவும் பண்பும் ஒழுக்கமும் உள்ளவர்களே 'த்தோர்' ஆவர். அவர்களின் சொல்லே அமிர்தம் ஆகும். த்தோர் சொல் காத்தால் வழுவின்றி வையத்தில் வாழலாம்.

'' ன்று உலகங்களிலும் நம்மைக் காப் பாற்றுவது நல்லவர்களின் சேர்க்கை ஒன்றுதான்'' என்று, ஒரு சுலோகம் கூறுகிறது.

21. முக்தி

106. கேள்வி: 'முக்தி' என்றால் என்ன? சுருக்கமான பதில் தேவை.

□பதில்: பிறப்பு, இறப்பிலிருந்து ஆன்மா விடுதலை பெறுவதே முக்தி எனப்படும்.

இதையே இன்னொரு விதத்தில், 'இறைவன் திருவடியின் கீழ் இருப்பதுதான் முக்தியாகும்' என்றும் சொல்லலாம்.

கோடை வெப்பம் போன்றது பிறவி வெப்பம். கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர்தரு போன்று சம்சாரத்தில் உழலும் ஜீவாத்மாக்களுக்கு இறைவனின் திருவடிகள் விளங்குகின்றன. ''மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்'' என்று, திருவாசகம் குறிப்பிடுகிறது.

107. கேள்வி: 'முமுட்சு' என்றால் என்ன?

□பதில்: மனைவி போன்றவர்களுடன் சுகம் அனுபவிப்பதில் பெரிதும் ஆர்வம் கொண்டவனை 'புபுட்சு' என்பர்.

முக்தி பெற வேண்டும் என்ற தீவிர நாட்டம் கொண்டவனை 'முமுட்சு' என்பர்.

108. கேள்வி: முக்தி பெறுவதற்குத் தேவையான முதல் தகுதி என்ன?

□பதில்: ஆசைகளும் வினைகளும் உள்ள வரையில் பிறப்பும் இறப்பும் உண்டு. ஆசைகளி லிருந்து விடுபட்டவன் முக்திக்கு உரியவன்.

நிலையற்ற உலகப் பொருள்களின் மீது தீவிர வைராக்கியம் (பற்றின்மை) கொள்வது, முக்திக்கு முதல் படியாகும்.

இறைவனின் கருணையால்தான் முக்தி பெற முடியும்.

109. கேள்வி: முக்தி - வீடுபேறு பெறுவதற்கு, இறைவனை எந்த வடிவத்தில் வழிபடுவது சிறந்தது?

□பதில்: இறைவனைப் பக்தி சிரத்தையுடன் எந்த வடிவத்தில் வழிபட்டாலும், முக்தி பெற முடியும்.

110. கேள்வி: ஒழுக்கம் என்ற ஒன்றைப் பின்பற்று வதன் லம் மட்டுமே ஒருவர் முக்தி பெற முடியுமா?

□பதில்:நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய ன்றையும் சமண சமயம் 'ரத்தினத் திரயம்' என்று குறிப்பிடுகிறது. இவற்றில் ஒன்று குறைந்தாலும் ஒருவன் வீடுபேறு பெற இயலாது. வீடுபேறு பெறுவதற்கு உரிய நெறி பயனற்றுப் போகும் - என்பது சமண சமயக் கருத்தாகும். இந்தக் கருத்து ஏற்புடைய கருத்து என்று நான் கருதுகிறேன்.

111. கேள்வி: நாம் முக்தி பெறுவதற்கு இடையூறாக இருப்பது எது?

□பதில்: 'நான், எனது' என்ற எண்ணங்களும், தீய எண்ணங்களும்தான் முக்தி பெறுவதற்கு இடையூறாக இருக்கின்றன.

இந்த எண்ணங்களை விட்டு, 'நான் இறைவனைச் சரணடைந்தவன்' என்ற எண்ணத் தில் இறைவனைச் சார்ந்து, இறைவனின் கருவி யாக வாழ்வது நம்மை முக்திக்கு அழைத்துச் செல்லும்.

இறைவனின் விருப்பத்தை - ஆண்ட வனின் கட்டளையை - நிறைவேற்றுவதாக நாம் வாழும் வாழ்க்கை அமைய வேண்டும்.

வினையால் உயிர், இன்ப- துன்பங்களில் சிக்கித் தவிக்கிறது. இவற்றிலிருந்து விடுவிக் கும் ஆற்றல் இறைவனுக்கு மட்டுமே உண்டு.

'பிறவிக்கடலைக் கடப்பது' என்பதை, இறைவனைத் தவிர்த்துவிட்டு மனிதனால்

செய்ய முடியாது. அதற்கு ஒரு வழிதான் - ஒரு வழிப்பாதைதான் - உண்டு. அதுதான், 'இறைவனடி சேர்தல்' என்கிறார் திருவள்ளுவர்.

'நிலையற்ற பொருள்களில் தீவிர வைராக்கியம் (பற்றின்மை) கொள்வதுதான் முக்திக்கு வழி' என்று, சங்கர வேதாந்தம் கூறுகிறது.

காமம், கோபம், பொறாமை, ஆணவம் ஆகிய இழிந்த இயல்புகளிலிருந்து நாம் மீட்சி பெற்றால்தான் - பூரணஞானம் அல்லது பூரண விடுதலை நமக்குக் கிடைக்கும்.

இறைவன் மீது நாம் கொள்ளும் பக்தி - இறைவன் மீது நாம் கொள்ளும் பற்று - நம்மிடமிருந்து உலகப்பற்றை நீக்கும்.

112. கேள்வி: ஒழுக்கமற்றவர்கள் முக்தி - ஞானம் பெற முடியுமா?

□பதில்: ''நற்பண்புகள் இல்லாதவர்கள் சொர்க்கத்திற்குள் போக முடியாது'' என்று, நபிகள் நாயகம் கூறியுள்ளார். இந்தக் கருத்து முக்திக்கும் ஞானத்துக்கும் முற்றிலும் பொருந்தும்.

113. கேள்வி: இறைவனை வழிபடும் ஓர் அரசியல்வாதி, தவறான முறையில் நிறையவே சொத்துச் சேர்த்திருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு முக்தி கிடைக்குமா?

□பதில்: ஆட்சியாளர்கள் அறவழியில் நிற்க வேண்டும். இந்திய சுதந்தரம் என்பது தங்களைப் போன்ற ஒரு சிலரின் சுகபோகங்களுக்காக வந்ததல்ல என்பதை, இன்றைய அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

தீய ஒழுக்கங்கள் உடையவர்களுக்கு அரியவனாகயும், நல்லொழுக்கங்கள் உடையவர்

களுக்கு எளியவனாகவும் இறைவன் விளங்குகிறான்.

உயர்ந்த ஒழுக்கங்களையே உயிர்நாடியாகக் கொண்டது ஆன்மிகம்.

தீயொழுக்கம் கொண்டவர்கள், 'ஆன்ம ஈடேற்றம் பெற்றுவிடுவோம்' என்று நினைப்பது வெறும் பகற்கனவே ஆகும் - இது அரசியலுக்கு மட்டுமின்றி அனைத்துத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் பொருந்தும்.

இறைவன் திருவடிகளை நாளும் நினைத்து, இடைவிடாமல் நல்லறங்களைச் செய்பவர்கள் வீடுபேறு பெறுவார்கள்.

பகுதி -2

22.விநாயகர்

114. கேள்வி: விநாயகரின் திருவுருவம் உணர்த்தும் தத்துவம் என்ன?

□பதில்: <u>ஓங்காரம்:</u> விநாயகர் 'ஓம்' என்றும், பிரணவம் என்றும் சொல்லப்படும் ஓங்கார வடிவமாக விளங்குகிறார் - இதுவே முதல் முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாகும். இதை அதிவீரராமபாண்டியன் தமது வெற்றி வேற்கையில், ''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மந்திரங்கள் அனைத்தும் ஓங்காரத்தில் அடங்கியுள்ளன. தெய்வங்கள் அனைவரும் ஓங்கார வடிவமாகத் திகழும் விநாயகரிடம் அடங்கியிருக்கிறார்கள்.

யானையை மங்கலப் பொருள்களில் ஒன்றாகக் கருதும் மரபு இருந்து வருகிறது. யானை வடிவம் கொண்ட விநாயகர், அனைத்து மங்கலங்களையும் வழங்கும் முழு முதல் தெய்வமாக விளங்குகிறார்.

'விநாயகர்' என்ற சொல்லுக்கு, 'தனக்கு மேலே வேறு ஒரு தலைவர் இல்லாதவர்' என்று பொருள்.

<u>திருவடிகள்:</u> விநாயகரின் இரண்டு திரு வடிகளும் முறையே பரஞானம், அபரஞானம் ஆகியவற்றை உணர்த்துகின்றன. அபரஞானம் என்பது, இந்த உலகில் மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்குத் தேவையான அறிவாற்றலைக் குறிக்கிறது.

பரஞானம் என்பது, ஆன்மிக வாழ்க் கையில் மனிதன் பெற வேண்டிய பூரண ஞானத்தைப் புலப்படுத்துகிறது.

விநாயகரின் திருவடிகள் மக்களுக்கு பரஞானத்தையும், அபரஞானத்தையும் வழங்கு கின்றன.

<u>உடல் அமைப்பு:</u> விநாயகரின் உடல் உயர்திணையாகவும், யானைத் தலை அஃறிணை யாகவும் அமைந்து - ஒரு கொம்பு ஆண் தன்மையும், மற்றொரு கொம்பு பெண் தன்மையும் கொண்டிருப்பதை நாம் பார்க்கி றோம் - இது தேவராகவும், மனிதராகவும், ஆணாகவும், பெண்ணாகவும், உயர்திணை யாகவும், அஃறிணையாகவும் விநாயகர் விளங்குவதை உணர்த்துகிறது.

விநாயகரின் இரண்டு கால்களும் மனிதர்களின் கால்கள் போன்று அமைந்திருக்கின்றன. இது அவர் மனிதர்களுக்குத் தலைவர் என்பதை உணர்த்தும்.

விநாயகரின் இடுப்புக்கு மேலேயுள்ள நான்கு கைகளும், தேவர்களின் கைகள் போன்று அமைந்துள்ளன. இது தேவர்களுக்கும் அவரே தலைவர் என்பதைக் குறிக்கும்.

விநாயகர் யானைமுகம் கொண்டவர். இது விலங்குகளுக்கும் அவரே தலைவர் என்பதைக் குறிக்கிறது.

எனவே விநாயகரின் திருவுருவம் மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் விலங்குகளுக்கும் விநாயகரே அருள் புரிபவராகவும், தலைவராகவும் இருப்பதைப் புலப்படுத்துகிறது.

<u>பேழை வயிறு:</u> விநாயகரின் பேழை வயிற்றில் ஸ்தூலமாகவும் சூட்சுமமாகவும் உள்ள அண்ட பகிரண்டங்களும், அவற்றிலுள்ள உயிர்களும் அடங்கியுள்ளன. இவ்விதம் சகல புவனங்களையும் தன் வயிற்றில் வைத்திருப்பதன் லம், அவற்றை அவர் தனது பேரருளால் பாதுகாத்து வருகிறார்.

விநாயகரின் பெருவயிறு எல்லையற்ற ஆனந்தம், எல்லையற்ற ஆற்றல், எங்கும் நீக்கமற வியாபித்திருக்கும் தன்மை ஆகியவற்றுக்கும் அடையாளமாக விளங்குகிறது.

<u>தெய்வங்கள் சொரூபம்:</u> விநாயகரின் நாபி பிரம்மாவின் சொரூபம், முகம் விஷ்ணு சொரூபம், ன்று கண்கள் சிவ சொரூபம்,

இடப் பாகம் சக்தி சொரூபம், வலப் பாகம் சூரிய சொரூபமாகும்.

''பிரமன், விஷ்ணு, ருத்திரன், ஈசுவரன், சதாசிவம் ஆகிய ஐந்து வடிவங்களைக் கொண்டு விநாயகர் ஐந்து தொழில்களையும் இயற்று கிறார்'' என்று, ரிக் வேதத்தில் இடம் பெற்றி ருக்கும் 'ப்ரஹமணஸ்பதி சூக்தம்' கூறுகிறது.

விநாயகரின் ஒலி சாமவேதம், நாக்கு சரஸ்வதி, மார்பு லட்சுமி, கைகள் கங்கை போன்ற நதிகள் என்பர்.

<u>ஐந்து தொழில்கள்:</u> விநாயகரின் நான்கு கைகளுடன் துதிக்கையையும் சேர்த்து, ஐந்து கைகளை உடையவர் என்ற பொருளில், 'ஐங்கரன்' எனப்படுகிறார்.

விநாயகரின் அமிர்தகலசம் (கும்பம்) ஏந்திய கை உலகைப் படைத்தல் (சிருஷ்டி), மோதகம் தாங்கிய கை உலகைப் பாதுகாத்தல் (ஸ்திதி), அங்குசம் பற்றிய கை உலகை அழித் தல் (சம்ஹாரம்), பாசம் உள்ள கை ஆன்மாக் களைப் பக்குவப்படுத்தும் பொருட்டு மறைத்தல் (திரோதானம்), தந்தம் வைத்திருக்கும் கை அருளல் (அனுக்கிரகம்) ஆகிய தொழில்களைச் செய்கின்றன.

<u>திருவைந்தெழுத்து:</u> விநாயகரின் ஐந்து கைகளும் நமச்சிவாய மந்திரத்தைக் குறிப்ப தாகவும் சொல்வார்கள். இதில் அங்குசம் தாங்கிய வலக்கை 'சி' என்ற எழுத்தையும், பாசம் ஏந்திய இடக்கை 'வா' என்ற எழுத்தையும், தந்தம் உள்ள வலக்கை 'ய' என்ற

எழுத்தையும், மோதகம் பற்றிய இடக்கை 'ந' என்ற எழுத்தையும், துதிக்கை 'ம' என்ற எழுத்தையும் குறிக்கும். இந்த ஐந்து எழுத்துகளும் சேர்ந்தது 'சிவாயநம' என்ற மந்திரமாகும்.

<u>நான்கு யோகங்கள்:</u> விநாயகரின் ஒடிந்த கொம்பை ஏந்திய கை ஞானயோகத்தையும், மோதகம் ஏந்திய கை பக்தியோகத்தையும், கையில் ஏந்திய ஆயுதங்கள் கர்மயோகத்தையும், (வாசுகி என்ற பாம்பை அரைஞாணாகக் கொண்டிருப்பது) நாகாபரணம் குண்டலினிசக்தி என்பதால் ராஜயோகத்தையும் குறிக்கும்.

<u>கைகள்:</u> விநாயகரின் நான்கு கைகளும் முறையே அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை மக்களுக்கு வழங்குபவை என்றும் ஒரு கருத்து உண்டு.

விநாயகரின் பாசம் ஏந்திய கை, தீமை களைக் கட்டிப் போடுவதன் லம் அவை செயல்படுவதைத் தடுக்கிறது. அதனால் ஆன்மாக்கள் ஆசாபாசங்களில் சிக்கிப் பிறவிக் கடலில் ழ்குவது தடுக்கப்படுகிறது.

விநாயகரின் அங்குசம் ஏந்திய கை, ஆன்மாக்களின் பந்தபாசங்களை வெட்டி நன் னெறியில் செலுத்துகிறது.

அவர் தன் கைகளில் வைத்திருக்கும் அங்குசமும் பாசமும், மனித மனங்கள் என்ற மதயானையை அடக்கி அறவழியில் செலுத்து கின்றன.

விநாயகர் யானை உருவம் கொண்டவர். ஆனால் அவரே யானைகளை அடக்கியாளும்

கருவிகளான அங்குசம், பாசம் ஆகியவற்றைத் தன் கைகளில் வைத்திருக்கிறார் - இது விநாயகரே அனைவருக்கும் தலைவர், அவரைவிட மேலான தலைவர் வேறு எவரும் இல்லை, அவரே உயர்ந்தவர், அவரே அதிக ஆற்றல் உடையவர், அவரே தனிப்பெரும் நாயகராகவும், சர்வ வல்லமை படைத்தவ ராகவும் விளங்குகிறார் என்பதைக் காட்டுகிறது.

விநாயகர் கையிலுள்ள மோதகம், தன்னை நம்பி வழிபடும் பக்தர்களைக் காப்பாற்றுவதை உணர்த்தும்.

விநாயகர் தன் இடக் கையில் மோதகம் ஏந்தியிருப்பது, பேரின்பத்தைக் குறிக்கும் என்றும் சொல்வதுண்டு.

அவரது துதிக்கை மறைப்புத்தொழிலைக் குறிக்கும்.

விநாயகர் தன் ஒரு கையில் ஒடிந்த தந்தத்தை ஏந்தியிருப்பது, கஜமுகாசுரனை அழித்து அவர் தேவர்களைக் காப்பாற்றிய ஆற்றலை உணர்த்துகிறது. கஜமுகாசுரனைக் கொல்ல விநாயகர் தன் தந்தத்தை ஒடித்து அவன் மீது ஏவினார் என்பதும், உலக நன்மைக்காக ஒருவன் தியாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கிறது எனலாம்.

விநாயகர் தன் ஒரு தந்தத்தை ஒடித்து உலக நன்மைக்காக மகாபாரதம் எழுதினார். இதுவும் உலக நன்மைக்காக ஒருவன் தியாகங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

விநாயகர் தன் கையில் கும்பம் ஏந்தியிருப்பது எல்லையற்ற கருணை, தூயஞானம், ஏகத்துவம் ஆகியவற்றைப் புலப்படுத்துகின்றன.

<u>பால் வேற்றுமை கடந்தவர்:</u> ஆண் யானை என்றால் இரண்டு கொம்புகள் இருக்க வேண்டும். பெண் யானை என்றால் கொம்பு இல்லாமல் இருக்க வேண்டும். ஆனால் விநாயகர் ஒற்றைக்கொம்பு (ஏகதந்தம்) உடைய வராக இருக்கிறார். அலி என்றால் மதம் இல்லாமல் இருக்க வேண்டும். ஆனால் இவை ன்றும் விநாயகரிடம் காணப்படுகின்ற்ன. எனவே விநாயகர் ஆண், பெண், அலி என்ற நிலைகளை உடையவராகவும், அவற்றைக் கடந்தவராகவும் விளங்குகிறார்.

<u>கண்கள்:</u> விநாயகரின் ன்று கண்களாக உலகிற்கு ஒளி தரும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகியவர்கள் விளங்குகிறார்கள். இவை ன்றும் முறையே இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகியவற்றைக் குறிக்கின்றன என்றும் ஒரு கருத்து உண்டு.

<u>பிறைநிலா:</u> விநாயகர் சிரசில் சூடியிருக்கும் பிறைச்சந்திரன், ஆன்மிகசாதனைகளால் அஞ்ஞானம் தேய்ந்து பூரண ஞானம் பெற்ற ஆன்மாக்களே மிகவும் மேலான நிலையை அடையும் என்பதை உணர்த்துகின்றது.

<u>முகம்:</u> விநாயகரின் முகத்தில் எல்லாத் தேவர்களும் எழுந்தருளியிருக்கிறார்கள். எனவே ''விநாயகரின் முகத்தைத் தரிசித்தால் எல்லா தேவ தேவியர்களையும் தரிசித்த பலன்

கிடைக்கும்'' என்று, ஒரு சம்ஸ்கிருத சுலோகம் கூறுகிறது.

<u>காதுகள்:</u> விநாயகரின் பரந்து விரிந்த காதுகள், அவர் எப்போதும் பக்தர்களின் பிரார்த்தனைகளைக் கேட்டு அருள் புரிவதற்குத் தயாராக இருக்கிறார் என்பதை உணர்த்துகின்றன.

விநாயகரின் காதுகள் பக்தர்களின் குறை களைக் கேட்பதுடன் எட்டுத் திசைகளையும், எல்லாம் அறியும் தன்மையையும் குறிப்ப தாகவும் சொல்வார்கள்.

<u>அஞ்ஞானத்தின் அழிவு:</u> விநாயகரின் வாகனம் ஷிகம். இது ஜீவாத்மாக்களின் அஞ்ஞானத்தையும் அகங்காரத்தையும் நீக்குபவர் விநாயகர் என்பதற்கான அடையாளம்.

தீமைகள் செய்து வந்த ஆணவம் மிகுந்த கஜமுகன் என்ற அசுரன் விநாயகருடன் போரிட்டு, முடிவில் அஞ்ஞானமும் ஆணவமும் அழிந்த நிலையில் அவரது வாகனமாக ஆனான். இது, ஆடாத ஆட்டமெல்லாம் ஆடும் மனிதன் முடிவில் அஞ்ஞானமும் ஆணவமும் அழிந்து, இறைவனின் முன்னால் பணிவாக இருப்பான் என்பதை உணர்த்துகிறது.

23.சிவன்

115. கேள்வி: 'சிவம்' என்றால் என்ன?

□பதில்: சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் என்பது பொருள்.

'அன்பே சிவம்' என்று திரு லரின் திருமந்திரம் கூறுகிறது.

'சுத்த அறிவே சிவம்' என்று தாயுமானவர் குறிப்பிட்டிருக்கிறார்.

116. கேள்வி: சிவபெருமானின் அம்மையப்பர் கோலத்தின் சிறப்பு என்ன?

□பதில்: பெரும்பாலும் பக்தர்களுக்கு அருள் புரியும்போதெல்லாம், இறைவன் அம்மையப்பராகவே வருகிறான். அம்மையப்பர் உருவத்தில் அருள் புரியும் பாங்கு அம்மைக்கே உரியது.

117. கேள்வி: சிவபெருமானுக்கு, 'ஆசுதோஷ்' என்று பெயர் வரக் காரணம் என்ன?

□பதில்: 'பக்தர்கள் செய்யும் பிரார்த்தனைகளுக்குச் சுலபமாக மகிழ்ச்சி அடைந்து விரைவில் அருள் புரிபவர்' என்ற கருத்தில், சிவபெருமானுக்கு 'ஆசுதோஷ்' என்ற பெயர் அமைந்துள்ளது.

118. கேள்வி: சிவபெருமானை, ''தென்னாடுடைய சிவன்'' என்று சைவ சமயப் பெருமக்கள் போற்றுவதற்கு என்ன காரணம்?

□பதில்:இறைவன் சுந்தர பாண்டியனாக வந்து மதுரையை அரசாண்டான். மேலும் தென்னாட்டில் சிவ வழிபாடு அதிகம்; புகழ் பெற்ற சிவாலயங்களும் சிவன் திருவிளையாடல்களும் அதிகம்.

119. கேள்வி: மதுரையில் சிவபெருமான் நிகழ்த்திய செயல்கள், 'திருவிளையாடல்' என்று அழைக்கப்படுகின்றன. அப்படி ஏன் அழைக்க வேண்டும்?

□பதில்:சாதாரண மனிதனுக்கு அப்பாற்பட்ட வியக்கத்தக்க செயல்களை, இறைவன் விளையாட்டாகவே நிகழ்த்த வல்லவன்.

அதனால் அவனது அருட்செயல்களைத் 'திருவிளையாடல்' என்று இறையடியார்கள் குறிப்பிடுவது மரபு.

120. கேள்வி:சிவபெருமானைப் பற்றிக் காரைக்காலம்மையார் பாடிய அந்தாதி நூலுக்கு, 'அற்புதத் திருவந்தாதி' என்ற பெயர் ஏன் ஏற்பட்டது?

□பதில்:காரைக்காலம்மையார் சிவபெருமானின் அருளை வியந்து பாடியது அற்புதத் திருவந்தாதி. இதில் உள்ள 'அற்புதம்' என்ற சொல், சிவ ஞானத்தைக் குறிப்பிடுகிறது.

121. கேள்வி: சைவ சித்தாந்தத்திற்கும், சைவத்திரு முறைகளுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது?

□பதில்: இரண்டும் சிவபெருமானின் பரத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றன. இதை விடவும் உங்களுக்கு வேறு என்ன தொடர்பு வேண்டும்?

திருமுறைகள் இலக்கியம் என்றால், சைவ சித்தாந்தத்தை இலக்கணம் என்று சொல்லலாம்.

24.சைவ சமயம்

122. கேள்வி: 'சைவம்' என்பதற்கு என்ன அர்த்தம்?

□பதில்: சிவத்துடன் (சிவபெருமானுடன்) தொடர்புடையது என்ற பொருளில், 'சைவம்' என்ற சொல் அமைந்துள்ளது.

சிவத்துடன் சம்பந்தமுடைய சைவம், திருமுறை, சைவ சித்தாந்தம் ஆகிய சொற்களை முதன் முதலில் நமக்கு வழங்கியவர் திரு லரே ஆவார்.

123. கேள்வி:பன்னிரு சைவத்திருமுறைகளில் சிறந்தது எது?

□பதில்: இதற்குப் பதில் அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப மாறுபடும். என் கருத்து இது:

சைவ சமயத்தின் மணிமுடியாகத் திருவாசகம் பயன்படுத்தப்படுகிறது. திருவாசகத்திலும் அதிகமாகப் பயன்படுவது சிவபுராணம்.

124. கேள்வி: சைவசித்தாந்தம் குறிப்பிடும், 'திரோதானம்' என்ற சொல்லுக்கு, விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்?

□பதில்: 1.படைத்தல், 2.காத்தல், 3.அழித்தல், 4.மறைத்தல், 5.அருளல் ஆகிய ஐந்து தொழில்களை இறைவன் இயற்றுகிறான். இவற்றில் மறைத்தல் என்பதே 'திரோதானம்' என்று அழைக்கப்படுகிறது.

தன்னைக் காட்டாமல் உலகியல் பொருள்களை ஜீவாத்மாக்களுக்குக் காட்டும் இறைவனின் செயல், 'திரோதானம்' எனப்படும். அந்த நிலையில் ஜீவாத்மாக்கள் இறைவனை மறந்து உலகியலிலேயே ழ்கியிருக்கும். இது சொரூப ஞானத்தைத் தமோகுணம் மறைத்திருக்கும் நிலையாகும்.

125. கேள்வி:சைவ சமயம் கூறும் மெய்யடியார்கள் என்பவர்கள் யார்? அவர்கள் நிலையை நாமும் பெறுவது எப்படி?

□பதில்:எல்லா உயிர்களிலும், எல்லா நிகழ்ச்சிகளிலும், எல்லாப் பொருள்களிலும் இறைவனையே காண்பது மெய்யடியார்களின் இயல்பு.

இறைவனிடம் பாவம் இல்லை. இறைவனிடம் வாழும் மெய்யடியார்களும் பாவம் செய்யமாட்டார்கள்.

ஒரே நாளில் ஒருவன் ஓட்டப்பந்தய வீரன் ஆகிவிடுவதில்லை; கல்விமான் ஆவதில்லை; ஒழுக்கசீலன் ஆகிவிடுவதில்லை. இந்த நிலைகள் பல நாள் பயிற்சியால் பெறப்படுகின்றன. அதுபோல் மெய்யடியார்களுக்குரிய பண்பு நலன்களை, நீண்ட நெடிய பயிற்சிகளின் லமே நாம் பெற முடியும்.

மருந்து சாப்பிடும் நோயாளிகள் பத்தியம் இருக்க வேண்டும். அதுபோல் ஆன்மிக வாழ்க்கையில் ஈடுபடுபவர்களிடம் புலனடக்கம் - மனக்கட்டுப்பாடு - இருந்தால்தான் 'மெய்யடியார்கள்' என்ற இலட்சியத்தை அடைய முடியும்.

உள்ளத்தில் சிவபெருமானை எழுந்தருளச் செய்வதற்கு நாளையும் கோளையும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. உடனே செய்ய வேண்டும்.

126. கேள்வி: ஆன்மிகத்தில் 'பணிவு' என்பதற்குரிய இடம் என்ன?

□பதில்: சைவ சமயம் என்பதற்கு, ''தாழ்வு எனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சார்தல்'' என்று, சைவ சமயத்தினர் இலக்கணம் கூறியிருக்கிறார்கள்.

இந்தத் தாழ்வு, அடக்கம், பணிவு என்பதைச் சைவ சமயத்திற்கு உரிய சிறப்பு என்று சைவ சமயம் வலியுறுத்துகிறது.

இந்தப் பணிவு என்ற ஒன்று அமையும் போதுதான், ஒரு சைவனின் வாழ்க்கை முழுமை பெற்றதாகக் கருதப்படுகிறது.

''புல்லைப் போன்று பணிவுடையவனாக இரு'' என்பது, ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் ஒரு முக்கிய உபதேசமாகும்.

''மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. அது பள்ளமான இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோல், இறைவன் திருவருள் தற்பெருமையும் கர்வமும் உள்ளவர் களில் உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. அது பணிவுள்ளவர்களின் உள்ளத்தில்தான் தங்கி நிற்கும்'' என்று, ஸ்ரீ ராமகிருஷ்ணரும் கூறியிருக் கிறார்.

பணிவு வாழ்க்கையை உயர்த்துகிறது. பணிவின்மை வாழ்க்கையை அழித்துவிடுகிறது.

நெற்கதிர் முதிர்ந்தால் தலைசாயும். அது போல் வாழ்க்கையில் உயர உயர மனிதனிடம் பணிவும் வளர வேண்டும். வாழ்க்கையில் உயர்வு பெற விரும்புபவன், பணிவுடையவனாக இருக்க வேண்டும்.

எல்லோருக்கும் பணிவு வேண்டும் என்பதை, ''எல்லார்க்கும் நன்றாம் பணிதல்'' என்று, (குறள்-125) திருவள்ளுவர் குறிப்பிடு கிறார்.

பணிவுதான் பேரழகு, சுயநலமற்ற செயல் தான் தெய்விகம்.

பணிவு இல்லாவிட்டால் கணவன் - மனைவி உறவுகள், பெற்றோர் - பிள்ளைகள் உறவுகள், ஆசிரியர் - மாணவர் உறவுகள், அதிகாரி - பணியாளர் உறவுகள் அனைத்தும்

சிதறிப்போய்ச் சமுதாயத்தில் குழப்பங்கள், போராட்டங்கள், பிரச்சனைகள் உருவாகும்.

127. கேள்வி: இறைவனை வணங்குவதற்கு ஏற்ற வயது எது என்று சொல்லுங்கள்?

□பதில்: விதி விலக்கின்றி எல்லா வயதினரும் இறைவனை வணங்க வேண்டும்; நற்செயல் களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், நம் சொல், செயல், சிந்தனை அனைத்தும் சிவன் செயல்களாகவே விளங்கும். அத்தகைய மெய்யடியார்களுக்கும், சிவனுக்கும் வேறுபாடு இல்லை என்று சைவ சமயம் கூறுகிறது.

128. கேள்வி: சைவ சமயம் கூறும் மாயா மலம், கன்ம மலம், ஆணவ மலம் ஆகிய கருத்துகளை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

□பதில்: நாம் எதை எல்லாம் உண்மை என்று நினைக்கிறோமோ அது உண்மையல்ல. நாம் எதை எல்லாம் பொய் என்று நினைக்கிறோமோ அது பொய் அல்ல. இப்படி உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும் கருதும் அவிவேகம்தான் 'மாயாமலம்' என்று கூறப்படுகிறது.

செயல்களைச் செய்யும்போது, 'நான் செய் கிறேன், நான்தான் கர்த்தா' என்று நினைக்கும் கர்த்துருத்துவம்தான் 'கன்மமலம்' எனப்படுகிறது.

'நான், எனது, என்னுடையது' என்று எண்ணுவதுதான் 'ஆணவமலம்' எனப்படும்.

மாயாமலமும் கன்மமலமும் ஆச்சாரி யனின் கிருபையால் நீங்கும். ன்றாவதாகச்

சொல்லப்பட்ட ஆணவமலம் இருக்கிறதே, இது இறைவன் திருவடி நம்மீது பட்டால்தான் நீங்கும்.

129. கேள்வி:சைவ சமயம் கூறும் சரியை, கிரியை ஆகியவற்றுக்கு விளக்கம் வேண்டும்?

□பதில்: ஒருவன் தன் உடல் உழைப்பால் இறைவனுக்குச் செய்யும் தொண்டு 'சரியை' எனப்படும். இதில் - தினமும் விடியற் காலையில் கோயிலுக்குச் சென்று வலம் வருதல், கோயிலைத் துப்புரவு செய்தல் (அலகிடுதல், மெழுகிடுதல்), மலர் கொய்தல், சுவாமிக்கு மாலை கட்டிக் கொடுத்தல், சுவாமியைக் கும்பிடுதல், இறைவனின் பொருள்சேர் புகழை இசையோடு பாடுதல், ஆடுதல் - போன்ற உடலால் செய்யும் புறவழிபாடுகள் அனைத்தும் 'சரியை' எனப்படும். இதை விளக்கி வாழ்ந்தவர் அப்பர் சுவாமிகள்.

'சரியை' நெறியில் முறையாக நின்ற பக்தன், அதன் முதிர்ச்சியில் மேற்கொள்ளும் நிலை 'கிரியை' எனப்படும். இதில், உடலாலும் மனத்தாலும் செய்யப்படும் பூஜையில் அகவழி பாடும், சிவலிங்கத்தை வெளியில் வைத்துச் செய்யப்படும் புறவழிபாடும் அமைகிறது. இது 'கிரியை' எனப்படும்.

இந்தக் கிரியை நெறிக்கு விளக்கம் தந்தவர் திருஞானசம்பந்தர்.

130. கேள்வி: வேதாந்தத்தில் 'சச்சிதானந்தம்' என்ற சொல் உள்ளது. இந்தச் சொல்லை சைவ சமயம் எப்படி ஏற்றுக்கொள்கிறது?

□பதில்: 'சத்' என்பது சிவலிங்கத்தையும், 'சித்' என்பது தட்சிணா ர்த்தியையும், 'ஆனந்தம்' என்பது நடராஜரின் ஆனந்த நடனத்தையும் குறிப்பதாகக் கொள்வதுண்டு.

மேலும் 'சத்' என்பது சிவபெருமானையும், 'சித்' என்பது உமாதேவியாரையும், 'ஆனந்தம்' என்பது முருகனையும் குறிக்கும் என்று, சோமாஸ்கந்த ர்த்திக்கு ஒரு விளக்கம் உண்டு.

25. சைவத் திருமுறைகள்

131. கேள்வி: சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் உணர்த்தும் மையக் கருத்து என்ன?

□பதில்: அரசனான அநபாய சோழன் இன்ப நூலைப் படித்துக்கொண்டிருந்தான். அதை அறிந்த அமைச்சர் சேக்கிழார், அரசனை நல் வழியில் செலுத்துவது தன் கடமை என்று உணர்ந்து திருத்தொண்டர் புராணம் இயற்றி, அநபாய சோழனுக்குச் சைவநெறியை உணர்த்தினார்.

இறைவனுக்கும், அந்த இறைவனை வழிபடும் அடியார்களுக்கும் தொண்டு செய்பவர்கள் மிகப் பெரிய பேற்றினைப் பெறுவார்கள் - இது நாயன்மார்களான பெரியவர்கள் பற்றிக் கூறும் பெரிய புராணம் உணர்த்தும் மையக் கருத்தாகும்.

132. கேள்வி: அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்ப் பந்தல் அமைத்தது ஏன்?

□பதில்: அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் மீது எல்லையற்ற பக்தி கொண்டிருந்தார். அது காரண

மாக அவர் தண்ணீர்ப் பந்தலுக்கு மட்டுமின்றி, தன் பிள்ளைகளுக்கும் திருநாவுக்கரசர் பெயரையே சூட்டினார்.

உலகில் தங்கள் பெயரால் அறச்செயல்களைச் செய்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அருளாளர்கள் பெயரால் அறம் செய்வதே சிறப்புக்கு உரியது. இந்த உண்மைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அப்பூதியடிகள் விளங்குகிறார்.

133. கேள்வி: திரு லர் தமது திருமந்திரத்தில், ''உடலை வளர்த்தேன்'' என்று குறிப்பிட்டுள்ளார். அதன் பொருள் என்ன?

☐பதில்: திரு லர், ''உடலை வளர்த்தேன்'' என்று கூறியதற்கு, 'உடலைக் குண்டாக வளர்ப்பது, உடலின் எடையை அதிகரிக்கச் செய்வது' என்பது பொருள் அன்று.

''உடலை வளர்த்தேன்'' என்ற திருலரின் வாக்குக்கு, ''தவம் செய்வதற்கேற்ப உடலை முறையாகப் பாதுகாத்தல்'' என்பது பொருள்.

26.நாயன்மார்கள்

134. கேள்வி: 'நாயன்மார்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

☐பதில்: 'நாயன்' என்ற சொல்லுக்கு 'இறைவன்' என்று ஒரு பொருள் உண்டு. அதிலிருந்து 'இறையடியார்' என்ற பொருளில் 'நாயன்மார்' என்ற சொல் வந்தது.

எனினும் அனைத்து இறையடியார் களையும் 'நாயன்மார்கள்' என்று சொல்லாமல், பெரிய புராணம் குறிப்பிடும் சிவனடியார்களை மட்டும் 'நாயன்மார்' என்று வழங்குவது வழக்கத்தில் இருந்து வருகிறது.

135. கேள்வி: 63 நாயன்மார்களுக்கிடையில் காணப் படும் ஒற்றுமை என்ன? வேற்றுமை என்ன?

□பதில்: 63 நாயன்மார்கள் அனைவரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்லர்; ஒரே இடத் தில் வாழ்ந்தவர்கள் அல்லர்; ஒரே தொழிலைச் செய்தவர்களும் அல்லர் - எனினும் சிவபக்தி யால் ஒன்றுபட்டவர்கள்.

அவர்கள் அனைவரும், ''திருவும் மெய்ப் பொருளும் செல்வமும் எனக்கு உன் சீருடைக் கழல்கள்'' என்று, சுந்தர ர்த்தி நாயனார் கூறிய தற்கேற்ப சிவனிடம் பக்தி செலுத்தி வாழ்ந் தார்கள்.

136. கேள்வி:காரைக்காலம்மையாரின் சிறப்பு என்ன?

□பதில்: புனிதவதி என்ற இயற்பெயருக்கேற்ற புனிதவதியாக வாழ்ந்தார். அதனால் அவரை காரைக்காலம்மையார் என்று சைவ உலகம் போற்றுகிறது.

137. கேள்வி: திருநாவுக்கரசரின் வாழ்க்கை விளக்கும் உண்மை என்ன?

□பதில்: ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பதை வாழ்ந்து காட்டியவர் திருநாவுக்கரசர்.

138. கேள்வி:திருஞானசம்பந்தரின் சிறப்பைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்?

□பதில்:சைவ நெறியும், வேதநெறியும் தழைப்பதற்காக அவதரித்தவர் திருஞானசம்பந்தர்.

வயதில் சிறியவராயினும் சிவத்தொண்டு புரிந்து உலகின் மாயை இருளை நீக்க வந்தவர் என்பதால், திருஞானசம்பந்தரின் பல்லக்கைப் பணிவோடு திருநாவுக்கரசர் சுமந்தார்.

139. கேள்வி:திருஞானசம்பந்தர் தமது பாடல்களில், ''ஆணை நமதே!'' என்று குறிப்பிடுகிறார். அதன் பொருள் என்ன?

□பதில்: ''நாம் கூறுவது இறைவன் திருவருளால் நிச்சயம் நடக்கும்'' என்பது பொருள்.

மேலும், ''வெற்றி நமதே'' என்றும் பொருள் கொள்ளலாம்.

140. கேள்வி: திருஞானசம்பந்தர், ''அப்பரே!'' என்று திருநாவுக்கரசரை அழைத்தது சரியா?

□பதில்:திருஞானசம்பந்தர், ''அப்பனே!'' என்று அழைத்தால் - அது இறைவனை அழைத்தாகும்.

''அப்பா!'' என்று, அழைத்தால் - அது திருஞானசம்பந்தர் தன் தந்தையை அழைத்ததாகும். எனவே திருஞானசம்பந்தர், ''அப்பரே!'' என்ற ஒரு புதிய சொல்லை உருவாக்கி திருநாவுக்கரசரை அழைத்தார்.

141. கேள்வி: சுந்தர ர்த்தி நாயனார் இறைவனை, ''மழபாடியுள் மாணிக்கமே!'' என்று குறிப்பிடுகிறார்.

அவர் இறைவனை 'மாணிக்கம்' என்று குறிப்பிட்டதற்குக் காரணம் என்ன?

☐பதில்:மாணிக்கத்தை ஓர் அண்டாவில் போட்டு நீரை நிரப்பினால், மாணிக்கம் தான் இருப்பதை மறைத்துக்கொண்டு நீரின் நிறத்தைச் சிவப்பாக்கி விடும். அப்போது மாணிக்கம் நீரில் இருப்பதே தெரியாது.

அது போல் இறைவன் தன்னை மறைத்துக்கொண்டு எங்கும் இருக்கிறான்.

அபிராமிபட்டரும் தாம் இயற்றிய அபிராமியந்தாதியில், ''உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்'' என்று தேவியைக் குறிப்பிடுகிறார். இவ்விதம் அருளாளர்கள் பலர் இறைவன் அல்லது இறைவியைத் தங்கள் நூல்களில் மாணிக்கம் என்று குறிப்பிட்டதுண்டு.

தூய உணர்வுகள் இல்லாதவர்களால் இறைவன் அல்லது இறைவி என்ற அந்த மாணிக்கத்தை மதிக்க முடியாது. இது, 'தூசி படிந்த கண்ணாடியில் முகம் பார்க்க முடியாது' என்பது போன்றது.

142. கேள்வி: இறைவனை சுந்தர ர்த்தி நாயனார் 'பித்தன்' என்று குறிப்பிடுகிறார். இது சரியா?

☐பதில்: சரிதான். இறைவனுக்குப் பித்து உண்டு. அடியார்களுக்கு அருள் புரிவது என்பதுதான் அந்தப் பித்து.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ''இறைவனைப் பித்தன் என்று சொல்வது ஏன்?'' என்பதற்குத் தரும் புதிய ஒரு விளக்கம் இது:

''கங்கை ன்று முறைதான் பிழை பொறுப்பாள். அம்பிகையோ எத்தனை தடவை

வேண்டுமானாலும் பிழை பொறுப்பாள். பித்தர் கள் தாறுமாறாகச் செயல் புரிவது போல் ன்று முறை பிழை பொறுக்கும் கங்கையைத் தலை யிலும், எப்போதும் பிழை பொறுக்கும் அம்பி கையை இடப் பாகத்திலும் கொண்டதால் இறைவனுக்குப் பித்தன் என்பது பொருத்தமான பெயர்.''

எப்போதும் பிழை பொறுக்கும் அம்பி கைக்கு இறைவன் தன் தலையில் இடம் கொடுத்திருந்தால், அதை நியாயமான செயல் என்று சொல்லலாம். இறைவனோ அப்படிச் செய்யவில்லையே! அதனால் அவன் பித்தன்தான் என்பது மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் (உயர்வு நவிர்ச்சி) கருத்து.

27.தேவி

143. கேள்வி: அம்மனை 'மகமாயி' என்று குறிப்பிடும் வழக்கம் சிலரிடம் இருக்கிறது. 'மகமாயி' என்றால் என்ன?

□பதில்: 'மகமாயி' என்பதற்கு 'மகத்தான தாய், மகிமை பொருந்திய தாய்' என்பது பொருள்.

ஜகமாயையில் உள்ள நம்மை, மகமாயி யாக இருந்து முக்திக்கு ஜகன்மாதா அழைத்துச் செல்கிறாள்.

144. கேள்வி: 'ஸ்ரீதர்' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

□பதில்: 'ஸ்ரீ' என்ற திருமகளைத் தரித்தவன் என்ற பொருளில் 'ஸ்ரீதர்' என்ற சொல் வழங்கப்படுகிறது.

145. கேள்வி: என் பெயர் ரோகிணி. ரோகிணி என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

□பதில்:27 நட்சத்திரங்களில் ரோகிணியும் ஒன்று. மகாலட்சுமிக்கும் ரோகிணி என்ற ஒரு பெயர் உண்டு. இதற்கு 'ஜீவாத்மாக்களைச் சம்சாரத்தி லிருந்து விடுவிப்பவள்' என்று பொருள்.

146. கேள்வி: ஸ்ரீஹர்ஷர், தான் எழுதிய 'நைஷதம் (நள சரித்திரம்)' நூலைச் சிந்தாமணி மந்திர சக்தியால் எழுதியதாகக் குறிப்பிட்டிருக்கிறார். சிந்தாமணி மந்திரம் என்றால் என்ன?

□பதில்: சரஸ்வதி மந்திரத்தைச் 'சிந்தாமணி மந்திரம்' என்று கூறுவார்கள்.

28.முருகன்

147. கேள்வி: 'முருகன்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்:முருகன் என்ற சொல்லுக்குப் பொது வாக 'அழகன்' என்பது பொருள்.

மேலும் 'மு' என்பது விஷ்ணுவையும், 'ரு' என்பது சிவனையும், 'கு' என்பது பிரம்மாவையும் குறிக்கும் என்றும் ஒரு பொருள் உண்டு.

148. கேள்வி: தைப்பூசம் முருகன் கோயில்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்குக் காரணம் என்ன?

□பதில்: முருகனுக்கு அம்பிகை வேல் கொடுத்த நாள் தைப்பூசம் என்பர்.

149. கேள்வி: முருகப்பெருமானைத் 'தமிழ்க் கிழவன்' என்ற சொல்லால் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இங்கு 'கிழவன்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்: தமிழ் இலக்கியத்தில் 'கிழவன்' என்ற சொல்லுக்கு, 'உரிமையுடையவன்', 'தலைவன்' என்று பொருள்.

150. கேள்வி: நான் திருத்தணி முருகன் மீது பக்தி கொண்டவன். அந்த முருகனின் அருள் பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

□பதில்:வள்ளி என்பது ஜீவாத்மாவைக் குறிப்பிடுகிறது.

வள்ளி முருகனை அடைவதற்கு, அவளுடைய உறவினர்களே தடையாக இருக்கிறார்கள். இதன் பொருள், நமது தீவினைகள் நாம் இறைவனை அடைவதற்குத் தடையாக இருக்கின்றன என்பதாகும்.

'வள்ளியின் தோழி வள்ளியை முருகனிடம் சேர்க்கிறாள்' என்று கந்தபுராணம் கூறுகிறது. இதன் பொருள், உயிரை நல்வினைகள் இறைவனிடம் சேர்க்கும் என்பதாகும்.

வள்ளி-முருகன் திருமணம் என்பது ஜீவ-பிரம்ம ஐக்கியத்தை உணர்த்துகிறது.

எனவே நாம் நல்வினைகளில் ஈடுபடுவது தான், முருகன் அருள் பெறுவதற்கு உரிய வழியாகும்.

29.வைஷ்ணவம்

151. கேள்வி:'விஷ்ணு' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

□பதில்:'எங்கும் நிறைந்திருப்பவர்' என்று பொருள்.

152. கேள்வி: வைஷ்ணவத்திற்கும், ஸ்ரீவைஷ்ணவத் திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்:'நாராயணனே பரத்துவம் (பரம்பொருள், முழுமுதற்பொருள்) என்பது வைஷ்ணவம்' என்று பொதுவாகச் சொல்லலாம்.

'மகாலட்சுமியோடு சேர்ந்த (ஸ்ரீமந்) நாரா யணனே பரத்துவம்' என்று கூறுவது ஸ்ரீவைஷ் ணவம்.

153. கேள்வி: வைணவ சமயத்தின் முக்கியமான கருத்துகள் சிலவற்றைக் கூறுங்கள்.

□பதில்:1.ஸ்ரீமந் நாராயணனே பரதத்துவமாக என்றும் விளங்குகிறான்.

2.அந்தப் பரமாத்மாவாகிய நாராயண னுக்கு எல்லா ஜீவாத்மாக்களும் அடிமைகளாக (சேஷபூதர்களாக) இருக்கிறார்கள்.

3. பகவானை அடைவதற்கு நம்மிடம் உள்ள 'நான் (அகங்காரம்)', 'எனது (மமகாரம்)' ஆகிய செருக்குகள் தடையாக இருக்கின்றன.

4.அந்தத் தடைகளை நீக்கி அருள் புரிப வனும் நாராயணனே.

5. நாராயணனின் பாதகமலங்களில் நாம் சரணடைய வேண்டும். நாராயணனின் திருவடி களுக்கு நாம் தொண்டு செய்ய வேண்டும்.

154. கேள்வி: வைணவம் கூறும் நவவித பக்தியில் 'ஸ்மரணம்' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அதன் பொருள் என்ன?

□பதில்:இறைவனையே இடைவிடாமல் நினைத்தல் 'ஸ்மரணம்' எனப்படும். இது பரகதிக்கு உரிய நிச்சயமான வழியாகும்.

''(இறைவன் நினைவுடன் செய்யப்படும்) நாம சங்கீர்த்தனம் ஒன்றினாலேயே பகவானை அடைய முடியும்'' என்பது, சைதன்ய வைஷ்ணவத்தின் கருத்து.

155. கேள்வி: ஸ்ரீவைஷ்ணவர்கள் குறிப்பிடும் 'சேஷத்துவம்' என்ற சொல்லுக்கு விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

□பதில்: ஸ்ரீராமானுஜர், பிரம்மசூத்திரத்திற்குத் தாம் எழுதிய ஸ்ரீபாஷ்யத்தில் விசிஷ்டாத்வைதக் கருத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''எல்லாப் பிறவிகளுக்கும் ஆத்மா உண்டு. இந்த ஆத்மாக்களின் ஆத்மாவான இறைவனுக்குப் பரமாத்மா என்று பெயர். ஆத்மாவுக்கும் (ஜீவாத்மாவுக்கும்) பரமாத்மாவுக்கும் உள்ள (ஆண்டான்-அடிமை போன்ற) உறவை சேஷத்துவம் என்கிறோம். பரமாத்மா முழுமை யானது; அதில் ஓர் அம்சம் ஆத்மா. (பூரண மான பரமாத்மாவின் ஓர் அம்சம்தான் ஜீவன்.) - இதைத்தான் சேஷத்துவம் என்ற சொல் குறிப்பிடுகிறது.

''ஜீவன் இறைவனைச் சார்ந்திருக்கிறான். ஜீவன் என்றுமே சுதந்தரனல்லன் (பரதந்திரன்). அவன் இறைவனிடத்திலேயே இருப்புக்கொண்டு

வாழ்கிறான்; அசைகிறான். ஆகவே, இறைவன் சேஷி (அம்சத்துக்கு உடையவன், முழுமை யானவன்) என்றும், ஜீவன் சேஷன் (அம்சம், உடைமை) என்றும் வழங்கப் பெறுகிறார்கள்.

''ஜீவனுடைய முக்கியமான பண்பு, அவன் இறைவனை அறிவுடன் சார்ந்திருப்பது தான்; உடையவன் தன் உடைமையை முற்றிலும் தனக்காகப் பயன்படுத்திக்கொள்வது போல, இறைவன் தன் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளும் உடைமையே ஜீவன்.''

156. கேள்வி: சைவ சமயம் தமிழுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறது. அதுபோல் வைணவம் தமிழுக்கு முக்கியத்துவம் தராதது ஏன்?

□பதில்: வைணவமும் தமிழுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறது. இதற்குச் சான்றாக கம்ப ராமாயணம், நாலாயிரத் திவ்ய பிரபந்தம் போன்றவை விளங்குகின்றன.

''ஞானத் தமிழ், ஒண் தமிழ் (ஒப்பற்ற தமிழ்), தூய தமிழ், சங்கத் தமிழ், நல்லிசைத் தமிழ், இன்தமிழ், சீரார்ந்த தமிழ், சீர்மலி செந்தமிழ், வேதம் அனைத்திற்கும் வித்தாகும் கோதை தமிழ்'' போன்ற சொற்கள் திவ்யப் பிரபந்தத்தில் இடம் பெற்றிருப்பது, வைணவம் தமிழுக்கு அளித்த முக்கியத்துவத்தை உணர்த்து கிறது.

30.ஸ்ரீ கிருஷ்ணன்

157. கேள்வி:'கிருஷ்ணன்' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

☐பதில்:'க்ருஷி' என்ற சொல் பூமியைக் குறிக்கும் சொல். 'ண' என்ற சொல் ஆனந்தத்தைக் குறிக்கிறது. எனவே ஆன்மிக ஆனந்தத்திற்கு விளைநிலமாக இருக்கும் தன்மை உடையவர் என்பதால் விஷ்ணுவானவர் 'கிருஷ்ணன்' என்று சொல்லப்படுகிறார் - இது வைணவச் சான்றோர்களின் கருத்தாகும்.

''பக்தர்கள் உள்ளத்தில் ஞானத்தை (பகவத் விஷயத்தை) விதைத்து, பக்தியை வளர்த்து, உலகியல் விஷயங்களில் விரக்தியை உண்டாக்கி அவர்களை இறைவன் (ஆகர்ஷணம் செய்து) தன்னிடம் சேர்த்துக்கொள்கிறான்'' என்று, நம்மாழ்வார் கூறியிருக்கும் கருத்தும் இங்கு நினைவு கூரத்தக்கது.

158. கேள்வி: நாரதரின் பக்தி சூத்திரத்தில் 'கர்கர்' என்பவரின் பெயர் வருகிறது. அவர் யார்?

☐பதில்: ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா குழந்தையாக இருந்தபோது அவருக்கு, 'கிருஷ்ணன்' என்று பெயர் வைத்தவர் கர்காச்சாரியார்.

159. கேள்வி:'கோவிந்தன்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

☐பதில்:'கோ' என்பதற்கு 'பகவான்' என்றும், 'விந்தன்' என்பதற்கு 'அடைபவன்' என்றும் பொருள்.

நாம் கோவிந்தன் என்ற நாமத்தைத் தோணியாகப் பற்றினால், பிறவிப் பெருங் கடலைக் கடக்கலாம்.

'கோ' என்பதற்குப் 'பசு' என்று பொருள். இங்கு 'பசு' என்பது ஜீவாத்மாக்களைக் குறிக்

கிறது. எனவே 'பசு' என்ற சொல் மனிதர்களை மட்டுமின்றி அனைத்து உயிர்களையும் குறிக்கும். 'விந்தன்' என்றால் 'காப்பவன்' என்று பொருள்.

'கோவிந்தன்' என்ற சொல் அனைத்து உயிர்களையும் காப்பவன், அனைத்து உயிர்களாலும் அடையப்படும் பரம்பொருள் என்பதை உணர்த்துகிறது.

160. கேள்வி:அக்ரூரர் ஸ்ரீகிருஷ்ணனின் உறவினரா?

□பதில்: ஸ்ரீகிருஷ்ணனின் ஒன்றுவிட்ட சித்தப்பா முறையில் அக்ரூரர் உறவினர்.

161. கேள்வி: தமிழ்நாட்டில் தோன்றிய அருளாளர்களில் ஸ்ரீகிருஷ்ண பக்தியில் அதிகமாக ஈடுபட்டவர் யார்?

□பதில்:நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியவர்கள் வரும் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் லயித்தவர்கள்; ழ்கிக் களித்தவர்கள்.

162. கேள்வி: ஸ்ரீகிருஷ்ணப் பக்திப் பாடல்களைப் பாடிய சூர்தாசரின் குரு யார்?

□பதில்: சூர்தாசரின் குருவின் பெயர் வல்லபாச்சாரியார். அருளாளர்கள் சிலர் தாங்கள் இயற்றிய பாடல்களில், ஸ்தோத்திரங்களில், நூல்களில் தங்களின் குருவின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால் சுமார் 25 ஆயிரம் ஸ்ரீ கிருஷ்ண பக்தி பாடல்களைப் பாடிய சூர்தாசர், தமது பாடல்களில் வல்லபாச்சாரியாரின் பெயரைக் குறிப்பிடவில்லை.

ஒரு சமயம் அன்பர் ஒருவர், ''நீங்கள் உங்கள் குரு வல்லபாச்சாரியாரின் பெயரை,

நீங்கள் இயற்றிய பாடல்களில் ஏன் குறிப்பிட வில்லை?'' என்று சூர்தாசரிடம் வினவினார்.

அதற்கு சூர்தாசர், ''நான் என் குருவையும் ஸ்ரீகிருஷ்ணனையும் வேறானவர்கள் என்று நினைக்கவில்லை'' என்று பதிலளித்ததாக, ஒரு செவிவழிச் செய்தி கூறுகிறது.

163. கேள்வி:வல்லபாச்சாரியார் காட்டிய நெறி, 'புஷ்டி மார்க்கம்' எனப்படுகிறது.

இதில் 'புஷ்டி' என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம்?

☐பதில்:ஸ்ரீ கிருஷ்ண பக்தியை வட இந்தியாவில் பரப்பியவர் வல்லபாச்சாரியார். ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரின் சம காலத்தில் வாழ்ந்த அவரைப் பற்றி, தமிழ்நாட்டில் பெரும்பாலும் இந்தியத் தத்துவம் கற்பவர்கள் மட்டுமே அறிந்திருக்கிறார்கள்.

'புஷ்டி மார்க்கம்' என்பதில் உள்ள 'புஷ்டி' என்ற சொல், 'கிருஷ்ணனின் அருள்' என்ற பொருளில் அமைந்துள்ளது.

31.அவதாரம்

164. கேள்வி: வாமன அவதாரத்தின் சிறப்பு என்ன?

☐பதில்: விண்ணையும் மண்ணையும் அளந்த இரண்டு திருவடிகளை உடையவன் வாமனன்.

அன்னை ஆண்டாள் வாமனாவதாரத்தில் ஈடுபாடு கொண்டவர். அதனால் அவர் திருப்பாவையில், 'ஓங்கி உலகளந்த உத்தமன்

பேர்பாடி' என்றும், ''அன்றிவ் வுலகம் அளந்தாய்'' என்றும், இரண்டு முறை வாமனனைக் குறிப்பிடுகிறார்.

165: கேள்வி: **சிலர் தங்களை இறைவனின் அவதாரம் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அவர்கள் கூறுவது உண்மையா, பொய்யா என்று எப்படித் தெரிந்துகொள்வது?**

□*பதில்:* புத்தர், இயேசு ஆகியவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்களை, 'இறைவனின் அவதாரம்' என்று போற்றியவர்களும் இருந்தார்கள்; அந்தக் கருத்தை மறுத்து அவர்களைத் தூற்றியவர்களும் இருந்தார்கள்.

பல நூறு ஆண்டுகளாக புத்தர், இயேசு ஆகியவர்களின் வாழ்வும் வாக்கும் மனிதகுலத் திற்கு வழிகாட்டி வந்திருக்கின்றன. அதன் லம் காலம், 'அவர்கள் இறைவனின் அவதாரம்தான்' என்று தீர்ப்பளித்திருக்கிறது.

எனவே ஒருவர் இறைவனின் அவதாரமா, இல்லையா என்பதற்குக் காலமே இறுதி விமர்சகர்.

32.ஆழ்வார்கள்

166. கேள்வி: **ஸ்ரீ ராமானுஜர் உயர்ந்தவரா, நம்மாழ் வார் உயர்ந்தவரா?**

□*பதில்:* ஆழ்வார்களில் தலைமைச் சிறப்பு வாய்ந்தவர் நம்மாழ்வார். எனவே வைணவத் தைப் பெற்ற தாயாக நம்மாழ்வாரையும், வளர்த்த தாயாக ராமானுஜரையும் நாம் போற்ற வேண்டும்.

167. கேள்வி:வைணவ மரபில் பன்னிரு ஆழ்வார் களைத் தவிரவும் வேறு ஆழ்வார்கள் உண்டா?

□பதில்: விஷ்ணு பக்தியில் - விஷ்ணு தத்துவ ஞானத்தில் ஆழ்ந்தவர் என்ற பொருளில் 'ஆழ்வார்' என்ற சொல், வைணவ மரபில் வழங்கி வருகிறது.

பன்னிரு ஆழ்வார்களைத் தவிரவும் ராமா யணத்தில் இடம் பெற்றிருக்கும் பரதன், சத்ருக்னன், விபீஷணன் ஆகியவர்களையும் பரதாழ்வார், சத்ருக்னாழ்வார், விபீஷணாழ்வார் என்று குறிப்பிடுவது வைணவ மரபு.

இவர்களைத் தவிர கருடனையும் பிரக லாதனையும் கருடாழ்வார், பிரகலாதாழ்வார் என்பர்.

168. கேள்வி:''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டனே'' என்ற நம்மாழ்வாரின் பாடலுக்கு (4.4.8) விளக்கம் தருக.

□பதில்:இறைவனுக்கு அடுத்தபடியாக மக்கள் மதிக்கும் வகையில், பண்டை நாளில் மன்னர் கள் மக்கள் நலனில் முழு அக்கறையும் ஆர்வ மும் கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அதனால்தான் - நம்மாழ்வார், ''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே'' என்று பாடினார். (இந்தப் பாடல் அகத்துறையில் அமைந்தது.)

இது மன்னர்களுக்கு இருந்த - இருக்க வேண்டிய - ஒழுக்க உயர்வையும் பொதுத் தொண்டு மனப்பான்மையையும் காட்டுகிறது.

நாட்டுக்குழைக்கும் நல்லவர்களாகவும், ஊருக் குழைக்கும் உத்தமர்களாகவும் ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும்.

நாட்டில் உள்ள கடைக்கோடி மனிதனும், நல்வாழ்வு பெறும் வகையில் செய்யப்படும் ஆட்சியே நல்லாட்சியாகும்.

மன்னன் என்பவன் மக்களுக்கு உயிர் போல் இருக்க வேண்டும்.

''அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'' என்று புறநானூறு கூறுகிறது.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறைஎன்று வைக்கப்படும்.'' *(குறள்-388)*

பொருள்: நீதியுடன் ஆட்சி செய்து மக்களைக் காப்பாற்றும் அரசன் மக்களுக்குத் தெய்வமாவான்.

33.ஆண்டாள்

169. கேள்வி: ஆண்டாளின் சிறப்பைச் சுருக்கமாகக் கூறுங்கள்?

□பதில்: சிறுமியான ஆண்டாள், தந்தை பெரியாழ்வாரிடம் கிருஷ்ணன் கதைகளைக் கேட்டுக் கேட்டு வளர்ந்தாள்.

பகவத் கதைகளைக் கேட்பது என்பது வெறும் கதை கேட்பது என்று இல்லாமல், சுவானுபவம் பெறுவதாக இருக்க வேண்டும் என்பதை ஆண்டாளின் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

பாமாலையாலும் பூமாலையாலும் எம் பெருமானை ஆராதித்த ஆண்டாளின் பக்தி, பிரேம பக்தியாகும்.

170. கேள்வி: "மாலே மணிவண்ணா" என்று திருப் பாவையில் ஆண்டாள் குறிப்பிடுகிறாள். 'மணி வண்ணன்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்: 'மணிவண்ணன்' என்ற சொல்லுக்கு 'கிடைப்பதற்கு அரிய ரத்தினம், ரத்தினம் போல் ஒளி வீசுபவன்' என்பது பொருள். ரத்தினம் கிடைப்பதற்கு அரியது, கிடைத்தால் இழக்க முடியாதது. அத்தகையவன் கிருஷ்ணன்.

171. கேள்வி: திருப்பாவையில், ஆண்டாள், "நாராய ணனே நமக்கே பறை தருவான்" என்று கூறியுள்ளார். இதில் 'பறை' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்:இறைவனுக்குத் தொண்டு செய்வதுதான் மனித வாழ்க்கையின் நோக்கம் - பயன் என்பதைப் 'பறை' என்ற சொல்லால் திருப்பாவை குறிப்பிடுகிறது.

172. கேள்வி: ஆண்டாள் தம் திருப்பாவையில் வாமனனை, "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று கூறியதற்கு விளக்கம் தருக.

□பதில்: தங்களுக்குத் துன்பம் நேர்ந்தாலும், கேடு விளைந்தாலும் - அதைப் பொருட்படுத் தாமல் மற்றவர்களுக்கு நன்மை செய்வது உத்தமர்களின் செயலாகும்.

திருமால் வாமனனாகத் தன்னை குறுக்கிக் கொண்டு - அதாவது, தன்னை அத்தகைய கேட்டிற்கு, துன்பத்திற்கு ஆளாக்கிக்கொண்டு - தேவர்களுக்கு நலன் செய்தான்.

எனவேதான் வாமனனை 'உத்தமன்' என்ற சொல்லால் அன்னை ஆண்டாள் குறிப்பிடு கிறாள்.

உத்தமர்கள் தங்கள் தியாகத்தினால் உலகிற்கு நலன் விளைவிக்கிறார்கள்.

''வானத்தில் இருக்கும் சந்திரன் தன்னிடமுள்ள இருளைப் போக்கிக்கொள்ள நினைக்காமல், உலகத்தின் இருளைப் போக்கவே கருணையோடு ஒளியை வழங்குகிறது. அது போல், அருளாளர்கள் தங்களுக்குத் துயரம் இருந்தாலும், அதை மறந்து மற்ற உயிர்களின் துயரத்தைப் போக்கவே முற்படுவார்கள்'' என்று, சிவப்பிரகாசர் தமது ஒரு பாடலில் கூறியதையும் இங்கு நாம் நினைவில் கொள்ளலாம்.

34.மகான்கள்

173. *கேள்வி: அரியவற்றுள் அரிது எது?*

□பதில்: அரியவற்றில் எல்லாம் அரிது தன்னை (பிரம்மம் என்று கூறப்படும் பரம்பொருளை, இறைவனை) அறிதல் ஆகும் - இது முதல் பதில்.

அரியவற்றுள் அரிது உத்தமர்களான மகான்களின் - பெரியோர்களின் துணையே ஆகும் - இது இரண்டாவது பதில்.

'' த்தோர் சொல் வார்த்தை அமிர் தம்'' என்பது, ஔவையின் அமுத வாக்கு.

தசரதனுக்கு வசிஷ்டரும், ஜனகருக்கு சதானந்தரும், ஸ்ரீ ராமருக்கு வசிஷ்டரும் விசுவாமித்திரரும், ஸ்ரீ கிருஷ்ணனுக்கு சாந்திபனி முனிவரும் குருவாக இருந்து வழிகாட்டினார்கள்.

ன்று தலைமுறைகள் கண்ட த்தவர் பீஷ்ம பிதாமகர். அவர் பேச்சையும் விதுரர், ஸ்ரீ கிருஷ்ணன் உட்பட த்தோர் சொல்லையும் துரியோதனன் கேட்கவில்லை. அதனால் அவன், தான் அழிந்ததுடன், தன்னைச் சேர்ந்தவர்களும் அழிந்து போவதற்குக் காரணமானான்.

174. கேள்வி: 'சிவயோகிகள்' என்பவர்கள் யார்?

□பதில்: தங்கள் உள்ளத்தில் சிவலோகத்தைக் காண்பவர்கள், 'சுத்த அறிவே சிவம்' என்பதை அனுபூதியில் உணர்ந்தவர்கள் சிவயோகிகள்.

175. கேள்வி: ஞானிகளால் எல்லா உயிர்களையும் எப்படி சமமாகப் பார்க்க முடிகிறது.

□பதில்: உலக உயிர்கள் அனைத்தையும் ஒன்றாகவும், இறைவனாகவும் காண்பதால், ஞானிகள் சமபாவத்துடன் இருக்கிறார்கள்.

176. கேள்வி: பிரகலாதனின் வாழ்க்கை உலகிற்கு வழங்கிய செய்தி யாது?

□பதில்: பாலைவனத்தில் சந்தனமரம் தோன்றியதுபோல், அசுரர் கூட்டத்தில் பிரகலாதன் தோன்றினான். இறைத்தத்துவம் அண்ட சராசரத்திலுள்ள ஒவ்வோர் அணுவிலும் நிறைந்திருக்கிறது; இறைவன் தூணிலும் துரும்பிலும் இருப்பதை பிரகலாதனின் வரலாறு நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

'வைணவ பக்தர்களில் முதலாமவர்' என்று, வைணவம் பிரகலாதனைக் குறிப்பிடுகிறது.

177. கேள்வி:நரசிம்ம ர்த்தி என்றதும் உங்களுக்கு என்ன நினைவுக்கு வருகிறது?

□பதில்: தாய் என்றால் குழந்தையின் நினைவு வரும், பசு என்றால் கன்றின் நினைவு வரும், நரசிம்ம ர்த்தி என்றால் பிரகலாதனின் நினைவு வரும்.

178. கேள்வி: மாணிக்கவாசகர், சேக்கிழார், வடலூர் வள்ளலார் - ஒப்பிடுக.

□பதில்:ஆண்டவனை அதிகம் பாடியவர் மாணிக்கவாசகர். அடியார்களை அதிகம் பாடி யவர் சேக்கிழார். இவர்கள் இருவரையும் பாடியவர் வள்ளலார்.

சேக்கிழாருக்கும் வள்ளலாருக்கும் முன் னோடியாக விளங்கியவர் மாணிக்கவாசகர்.

இன்றும் மாணிக்கவாசகரும் சேக்கிழாரும் வள்ளல் பெருமானும், தாங்கள் அருளிய அருள் நூல்களின் லம் நம்மோடு பேசிக்கொண்டு தான் இருக்கிறார்கள். அந்தச் சான்றோர்களின் சிந்தனைகளை இன்றும் நமக்கு எடுத்து வழங்கு பவர்களும், நினைவுபடுத்துபவர்களும் நம்மி டையே வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

179. கேள்வி: தாயுமானவர் இயற்றிய பாடல்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பாடல் எது?

□பதில்: தாயுமானவர் இயற்றிய பாடல்களில் ‘அங்கிங்கெனாதபடி’ என்ற பாடல், அவர் பாடிய 1452 பாடல்களிலேயே தலையாய முக்கியத்துவம் உடைய பாடல் எனலாம்.

35.பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

180. கேள்வி: ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிறப்பு என்ன?

□பதில்: ஒரு நடமாடும் ஆன்மிகக் கலைக் களஞ்சியமாக, ஆன்மிக அகராதியாக ஸ்ரீ ராம கிருஷ்ணர் வாழ்ந்தார். ஆன்மிகம் அவரது தெய்விக வாழ்க்கையில் அழுத்தம் திருத்தமாக வெளிப்பட்டது.

181. கேள்வி: ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களின் சிறப்பு என்ன?

□பதில்:அவை தவ வாழ்க்கையின் உச்சத்தி லிருந்து வந்தவை. அதனால் அவை மந்திர சக்தியுடன் திகழ்கின்றன.

182. கேள்வி: ஸ்ரீராமகிருஷ்ணர் உலகிற்கு வழங்கிய செய்தி என்ன?

□பதில்: ஆன்மிக உண்மைகளுக்கு ஓர் எல்லை யாகவும் இலக்கணமாகவும் ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்ந்தார். மாந்தரின் மனத்தைக் காந்தம்போல், தமது ஆன்மிக அனுபவங்களால் கவர்பவராக அவர் விளங்கி வருகிறார்.

அவரது வாழ்க்கையைப் பற்றி நாம் சரியாக ஒரு சிறிது புரிந்துகொண்டாலும், அது நம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திவிடும்.

பிறவித் துன்பங்களிலிருந்து உயிர்கள் விடுபட்டு இறைவன் திருவடியை அடைய வேண்டும் என்பது, அவர் உலகிற்குக் காட்டும் நெறியாகும்.

183. கேள்வி: ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சீடர்கள் பலர் இருந்தார்கள். அவர்களில் முதன்மைச் சீடர் சுவாமி விவேகானந்தர்.

இது போன்று ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள் என்று பல உபதேசங்கள்

இருக்கின்றன. அவற்றில் முதன்மையான உபதேசம் எது?

□பதில்: ''உன் மனம் எப்போதும் இறைவனையே நாடியிருக்க வேண்டும்; உன் மனம் எப்போதும் இறைவனிடம் ஒடுங்கியிருக்க வேண்டும் என்பது ஸ்ரீராமகிருஷ்ணரின் முதல் போதனை, முதன்மையான உபதேசம்'' என்று கருதுகிறேன்.

184. கேள்வி: ''சொல்லும் செயலும் ஒன்றுபோல் இருக்கட்டும்'' என்கிறார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். இதற்கு விளக்கம் தருக.

□பதில்: புளியம்பழமும் அதன் ஓடும் ஒட்டாது. தேங்காய் ஓடும் அதன் கொப்பறையும் ஒட்டாது. காந்தமும் இரும்பும் ஒட்டும். காந்தமும் இரும்பும் போல, மனிதனின் சொல்லும் செயலும் ஒன்றுபட்டிருக்க வேண்டும்; இரண்டிற்கும் இடைவெளி இல்லாமல் ஒற்றுமை இருக்க வேண்டும். பாலும் நீரும் போல, பாலும் சர்க்கரையும் போல, சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றுமை இருக்க வேண்டும்.

185. கேள்வி:''கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்'' என்பதற்கு என்ன பொருள்?

□பதில்: இறைவனைப் பற்றி அதிகம் பேசுபவர்கள் இறைவனை உணர்ந்தவர்கள் இல்லை; இறைவனை உணர்ந்தவர்கள் இறைவனைப் பற்றிப் பேசுவதில்லை என்பது பொருள்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''பிரம்மம் என்றால் என்ன என்பதைச் சொற்களால் விளக்க இயலாது. எல்லாப்

பொருள்களும் எச்சிலாக்கப்பட்டுவிட்டன. வேதம், புராணம், தந்திரம், ஆறு தரிசனங்கள் எல்லாம் எச்சிலாகிவிட்டன; நாக்கால் தீண்டப் பட்டுவிட்டன; வாயால் சொல்லப்பட்டு விட்டன; அதனால் எச்சிலாகிவிட்டன. ஆனால் ஒன்று மட்டும் எச்சிலாகவில்லை. அதுதான் பிரம்மம். பிரம்மம் என்பது எது என்று இன்று வரை யாராலும் சொல்லப்படவில்லை.

''ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் இருவரையும் தந்தை, பிரம்ம வித்யை பயில்வதற்காக ஆசிரியரிடம் அனுப்பினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு பிள்ளைகள் இருவரும் திரும்பி வந்தார்கள், வந்து தந்தையை வணங்கினார்கள். அவர் களுக்கு எந்த அளவிற்கு பிரம்ம ஞானம் இருக்கிறது என்பதை அறிய விரும்பினார் தந்தை. த்தவனைப் பார்த்து, 'மகனே! நீ எல்லாவற்றையும் படித்திருக்கிறாய் அல்லவா, பிரம்மத்தைப் பற்றி சொல்?' என்றார். அவன் வேதத்திலிருந்து பல்வேறு சுலோகங்களை ஒப்பித்துப் பிரம்மத்தை விளக்க முயன்றான். தந்தை மௌனமாக அமர்ந்திருந்தார். இளைய மகனிடமும் அதே கேள்வியைக் கேட்டார் தந்தை. அவனோ தலை குனிந்து அமைதியாக நின்றான். அவனது வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. இதைக் கண்ட தந்தை மகிழ்ச்சியுடன் இளைய மகனிடம், 'மகனே! நீதான் பிரம்மத்தைப் பற்றி ஏதோ சிறிது தெரிந்துகொண்டிருக்கிறாய். பிரம்மம் எது என்பதை வார்த்தைகளால் விளக்க முடியாது' '' என்றார்.

36.சுவாமி விவேகானந்தர்

186. கேள்வி: ''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்று, ஐயன் திருவள்ளுவர் (குறள்-26) குறிப்பிட்டிருக்கிறார்.

வள்ளுவரின் இந்த வாக்கிற்கிணங்க வாழ்ந்தவர்களில், உங்களுக்குப் பிடித்த ஒருவரின் பெயரைச் சொல்லுங்கள்.

□பதில்: சுவாமி விவேகானந்தர்.

187. கேள்வி: இந்தியாவைப் பற்றியும், இந்திய மக்களைப் பற்றியும் சுவாமி விவேகானந்தரின் மதிப்பீடு என்ன?

□பதில்: இந்திய நாடே அவரது திருக்கோயில், இந்திய மக்களே அவரது தெய்வங்கள்.

188. கேள்வி:'உலகம் முழுவதும் ஒரே குடும்பம்' என்ற கருத்தை, சுவாமி விவேகானந்தர் எங்காவது குறிப்பிட்டிருக்கிறாரா?

□பதில்:சுவாமி விவேகானந்தர் தமது புகழ் பெற்ற சிகாகோ சொற்பொழிவின் ஆரம்பத்திலேயே, ''சகோதரிகளே,சகோதரர்களே!'' என்று கூறியதன் லம், 'உலகம் முழுவதும் ஒரே குடும்பம்' என்ற இந்தியச் சிந்தனையை வெளிப்படுத்தினார்.

189. கேள்வி:'சுவாமி விவேகானந்தர் செய்த செயல்களில், தலையாய முக்கியத்துவம் வாய்ந்த பணி' என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

□பதில்: சுவாமி விவேகானந்தர், உயர்ந்த மனிதர்களை உருவாக்குவதையே தலையாய பணியாகக் கருதினார். அதை அவர் தமது

குறுகிய வாழ்நாளில் இயன்ற வரையில் செய்யவும் செய்தார்.

190. கேள்வி: சுவாமி விவேகானந்தர் உலகிற்கு வழங்கிய முக்கிய செய்தி என்ன?

☐பதில்: ''மனிதன் தெய்வாம்சம் பொருந்தியவன்'' என்பதே, சுவாமி விவேகானந்தர் உலகிற்கு வழங்கிய முக்கிய செய்தி என்று நான் கருதுகிறேன்.

191. கேள்வி: சுவாமி விவேகானந்தர் உலகிற்கு வழங்கிய கருத்துகளின் சாரம் என்ன?

☐பதில்: சுவாமி விவேகானந்தர் இவ்விதம் கூறியுள்ளார்:

''என்னுடைய இலட்சியத்தை, உண்மையில் ஒரு சில சொற்களில் சொல்லி முடித்து விடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்விகத் தன்மையை எடுத்து போதிப்பதும், வாழ்க்கையின் ஒவ்வோர் இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதை எடுத்துச் சொல்வதும்தான் அது.''

192. கேள்வி: ''மனிதன் தெய்விகம் வாய்ந்தவன்'' என்று, சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். அவர் கூறும் தெய்விகத்தை நாம் உணர்ந்து கொள்வது எப்படி?

☐பதில்: மனிதனுக்குள் மிருக இயல்புகளுக்கும், தெய்வ இயல்புகளுக்கும் எப்போதும் ஒரு போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. இவற்றில் தெய்வ இயல்பு வெல்ல வேண்டுமானால், நீண்ட காலம் பொறுமையுடன் ஆன்மிக சாதனைகளை மேற்கொள்ள வேண்டும். அதனால்

உரிய நேரம் வரும்போது, நாம் நமது தெய்விக இயல்பை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

''மனிதன் தெய்விகம் வாய்ந்தவன்'' என்பதை உணர்ந்துகொள்வது இறையனுபூதி நிலையாகும். இத்தகைய இறையனுபூதியைப் பெறுவதற்குரிய பக்குவம் ஆன்மாவுக்கு விரைவில் வந்துவிடுவதில்லை. நீண்ட காலம் (பலருக்குப் பல பிறவிகள் கூட ஆகும்) ஆன்மிக சாதனைகளை மேற்கொண்ட பிறகுதான், ஆன்மா அந்தப் பக்குவ நிலையை அடைகிறது.

193. கேள்வி: ''துணிவோடு இரு'' என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஆனால் துணிவு பல சமயங்களில் துன்பத்தை அல்லவா கொண்டு வந்து சேர்க்கிறது?

□பதில்:முரட்டுத்தனமான துணிவினால் ஆக்கபூர்வமான நன்மை விளையாது. மாறாக, அறிவுடன் கூடிய துணிவுதான் நமக்கு நன்மையைத் தரும்.

அறிவுடன் கூடிய, விவேகத்துடன் கூடிய, துணிவையே நாம் பெற்றிருக்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கருதினார்.

இத்தகைய அறிவுடன் கூடிய துணிவு ஒவ்வொருவருக்கும் தேவை; தனிமனிதனுக்கும் தேவை; ஒரு நிறுவனத்தை நடத்தும் தலைவருக்கும் தேவை; நாடாளும் அரசியல் தலைவருக்கும் தேவை.

194. கேள்வி: 'வந்தே மாதரம்' பாடலைப் பற்றி, சுவாமி விவேகானந்தரின் கருத்து என்ன?

□பதில்: சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த காலத்தில் 'வந்தே மாதரம்' பாடல் பிரபலமாகவில்லை. எனவே அது பற்றிய சுவாமிஜியின் கருத்தை, நாம் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பில்லை.

1905-ஆம் ஆண்டு, ''வந்தே மாதரம் பாடலைப் பாடக் கூடாது'' என்று ஆங்கிலேய அரசு தடை செய்தது. அதை மீறி சகோதரி நிவேதிதை, தனது பள்ளியில் மாணவிகள் அனைவரையும் வந்தே மாதரம் பாடலைப் பாடச் செய்தார்.

195. கேள்வி: விவேகானந்தரின் சிந்தனைகளுக்கும், காந்திஜியின் சிந்தனைகளுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

□பதில்: காந்தியடிகள் கிராம முன்னேற்றம் - நாட்டு முன்னேற்றம் - பெண்களுக்குச் சம முக்கியத்துவம் ஆகிய கொள்கைகளை ஏற்று அவற்றின் பொருட்டுத் திட்டங்கள் வகுத்ததும், அவற்றைச் செயல்படுத்தியதும், விவேகானந்தரின் சிந்தனைகளுக்குக் கிடைத்த செயல் வடிவம் என்று நாம் உறுதியாகச் சொல்லலாம்.

196. கேள்வி:மேலைநாடுகளில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய தொண்டு, எதிர்கால இந்தியாவில் சுவாமி விவேகானந்தரின் பங்கு ஆகியவை குறித்துச் சுருக்கமாகக் கூறுங்கள்?

□பதில்: இந்தியாவிலிருந்து 'இந்தியக் கலாச்சார குழுவினர்' என்ற பெயரால், அவ்வப்போது ஆண்டுதோறும் பல குழுவினர் வெளிநாடுகளுக்குச் சென்றார்கள்; இப்போதும் சென்று கொண்டும் இருக்கிறார்கள்.

இந்தியாவின் மீது மற்ற நாடுகளுக்கு நல்லெண்ணம் ஏற்படவேண்டும்; மற்ற நாடுகளில் இந்தியாவின் மதிப்பை உயர்த்த வேண்டும் என்பதற்காகவே, இந்திய அரசு இந்தக் கலாச்சார குழுவினரை வெளிநாடுகளுக்கு அவ்வப்போது அனுப்பி வைக்கிறது.

இவ்விதம் செல்லும் இந்தியக் கலாச்சார குழுவில் இசைக் கலைஞர்கள், நாட்டியக் கலைஞர்கள் போன்றவர்கள் இடம் பெறுகிறார்கள்.

'இந்தியக் கலாச்சார குழு' என்று வெளிநாடுகளுக்குச் செல்லும் சினிமா பாடகர்களும், சினிமா நடிகர் - நடிகைகளும் வெளிநாடுகளில் கூத்தும் கும்மாளமும் நடத்துவதைத்தான் பெரும்பாலும் செய்கிறார்கள்.

வெளிநாடுகளுக்குச் சென்ற இந்திய கலாச்சார குழுவினர் சிலர், இந்தியாவின் மதிப்பை ஓரளவு வெளிநாடுகளில் உயர்த்தினார்கள் என்பதையும் நாம் மறுக்க முடியாது.

ஆனால், இது வரையில் வெளிநாடுகளுக்குச் சென்று இந்தியாவின் மதிப்பை உயர்த்திய இந்தியக் கலாச்சார குழுவினர் எவருமே செய்யாத ஒரு பணியை ஒருவர் செய்திருக்கிறார்.

அவர்தான் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தர் வெளிநாடுகளில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியது போன்ற ஒரு பணியை - இது வரையில் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற எந்த ஒரு

இந்தியக் கலாச்சார குழுவுமே செய்யவில்லை என்று நாம் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

சுவாமி விவேகானந்தர் 100 ஆண்டு களுக்கு முன்னால் உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியது இன்று வரையில் தொடர்ந்துகொண்டிருக்கிறது; இனியும் தொடரத் தான் போகிறது.

இந்தியாவில் ஆக்கபூர்வமான முன் னேற்றம் ஏற்பட வேண்டும், இந்தியா மறு மலர்ச்சி பெற வேண்டும், புதிய இந்தியாவைப் படைக்க வேண்டும் என்று பரவலாக இந்தியா விலுள்ள இந்தியர்களாகிய நாம் எல்லோருமே இப்போது நினைக்கிறோம்.

ஆனால் இது விஷயமாக நான் ஒரு கருத்தை உறுதியாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதாவது, இந்தியாவை மகத்தான நாடாக் குவதில், உயர்ந்த நாடாக விளங்கச் செய்வது என்பதில் சுவாமி விவேகானந்தர் என்ற ஓர் அம்சமும் கட்டாயம் சேர்ந்திருக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தரை நீக்கிவிட்டு இந்தியாவை மகத்தான நாடாக உருவாக்குவது என்பது குறைவுடையதாகவே இருக்கும். அதாவது Incomplete–ஆக இருக்கும் என்று நான் உறுதியாக நினைக்கிறேன்.

37. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் - சுவாமி விவேகானந்தர்

197. கேள்வி: ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவே கானந்தர் ஆகியவர்களின் சிந்தனைகளுக் கிடையில் உள்ள வேற்றுமை என்ன?

□பதில்: நமது இரண்டு கண்களும் சேர்ந்து ஒரு காட்சியையே காண்கின்றன. அதுபோல் சரித்திர மகா புருஷர்களான ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியவர்கள் இருவரின் சிந்தனைகளும் ஒன்றாகச் சேர்ந்து கைகோர்த்து உலவுகின்றன; இருவரின் சிந்தனைகளும் இணைந்து ஒரு வாழ்க்கை முறையை நம்முன் வைத்திருக்கின்றன.

198. கேள்வி: மேற்கோள் காட்டுவதற்கு மிகவும் சிறந்தவை, பெரிதும் உதவுபவை ஸ்ரீராமகிருஷ்ணர் நூல்களா, சுவாமி விவேகானந்தர் நூல்களா?

□பதில்:ஸ்ரீராமகிருஷ்ணர் நூல்கள், சுவாமி விவேகானந்தர் நூல்கள் ஆகியவை மேற்கோள் காட்டுவதற்குரிய நூல்கள் அல்ல. மாறாக, அவை வாழ்க்கையில் மேற்கொள்வதற்குரிய (கடைப்பிடிப்பதற்குரிய) நூல்கள்.

பகுதி - 3

38.பக்தி

199. கேள்வி: 'பக்தி' என்றால் என்ன?

□பதில்:இறைவனுக்காக, இறைவன் பொருட்டுத் தன்னை இழந்து நிற்கும் நிலையே பக்தியாகும்.

200. கேள்வி: பக்தியின் முதல்படி அல்லது ஆரம்பம் எது?

□பதில்:மனத்தை இறைவனிடம் நிலை நிறுத்துவதுதான் பக்தியின் திறவுகோல்.

201. கேள்வி: பக்தியைப் பெறுவது எப்படி?

□பதில்: பக்தியினால் பக்தியைப் பெற முடியும்.

202. கேள்வி: இறைவன் மீது எனக்குள்ள பக்தி அதிகமாவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

□பதில்: நம்மிடமுள்ள தேவையில்லாத ஆசைகளை நாம் விட்டுவிட்டால், இறைவன் மீது நமக்குள்ள பக்தி அதிகரிக்கும்.

203. கேள்வி: இறைவன் தந்தை - நான் அவருடைய குழந்தை, இறைவன் தலைவன் - நான் அவருடைய பக்தன் அல்லது அடிமை ஆகிய இவற்றில் எந்த முறையில் இறைவனை அணுகுவது சிறந்தது?

□பதில்: இறைவனை நாம் நமது மனநிலைக் கேற்ப எப்படி வேண்டுமானாலும் வழிபடலாம், அணுகலாம். பக்தி மனநிலையே முக்கியம்.

204. கேள்வி:இறைவனிடம் பக்தி செலுத்த வேண்டும் என்ற கருத்து உலகில் எப்போது தோன்றியது?

□பதில்: மிகப் பழைய காலமாகிய சிந்துவெளி நாகரிகக் காலத்திலேயே, இறைவனிடம் பக்தி செலுத்துவது என்பது இருந்திருக்கிறது.

''கன்னியாகுமரிக்குத் தெற்கில் 'லெமோரியாக் கண்டம்' என்ற ஒரு பெரும் நிலப்பரப்பு இருந்தது. அதில் பஃறுளி என்ற ஓர் ஆறும் இருந்திருக்கிறது. அந்த நிலப்பரப்பைக் கடல் கொள்வதற்கும் முன்பே அங்கு சிவ வழிபாடு இருந்திருக்கிறது'' என்று, தொல்லியல் ஆய்வுகள் கூறுகின்றன.

205. கேள்வி: நான் பக்தியோகத்தைக் கடைப்பிடிக்க விரும்புகிறேன். ஆனால் நவவித பக்தியை என்னால் பின்பற்ற முடியவில்லை.

இந்த நிலையில் நீங்கள் எனக்குக் கூறும் அறிவுரை என்ன?

□பதில்:1. சிரவணம், 2. கீர்த்தனம், 3.ஸ்மரணம், 4. பாதசேவனம், 5. அர்ச்சனம், 6. வந்தனம், 7.தாஸ்யம், 8. சக்யம், 9. ஆத்ம நிவேதனம் ஆகியவை நவவித பக்தியில் அடங்கும்.

நவவித பக்தியில் எது நமக்கு இயலுமோ, எது நமக்குப் பிடித்திருக்கிறதோ, அல்லது எத்தனை நமக்குப் பிடித்திருக்கிறதோ அவைகளை, அல்லது அத்தனையையும் நாம் பின்பற்றலாம்.

206. கேள்வி:'பக்தி' என்றால் என்ன? 'பக்தர்' என்பவர் யார்?

□பதில்: உலகப் பொருள்கள் மீது மக்கள் பற்று வைத்திருப்பது போல், தங்கள் உறவினர்கள் மீது மக்கள் பற்று வைத்திருப்பதுபோல் - இறைவனிடம் நாம் கொள்ளும் எல்லையற்ற ஈடுபாடு - பற்று 'பக்தி' என்று சொல்லப்படுகிறது.

தூய பக்தி என்பது வியாபார ஒப்பந்தம் போன்றோ, உடன்படிக்கை போன்றோ இல்லாமல் கைம்மாறு-பிரதிபலன் எதிர்பாராத தாகவே இருக்கும்.

உலகில் இறைவனுக்குக் கைங்கரியம் செய்வதையே வாழ்க்கையின் தலையாய நோக்க மாகக் கொண்டவர்கள் பக்தர்கள்.

இறைவனை மனம், மொழி, மெய்களால் வழிபடுபவர்கள் இந்த உலகில் மட்டும்தான் கொண்டாடப்பெறுகிறார்கள் என்பதில்லை; விண்ணிலும் கொண்டாடப்படுகிறார்கள்.

'வீட்டுலகமாகிய வைகுண்டம் அடைந்து, இறைவனுக்குத் தொண்டு செய்வதே உயிர்கள் (பக்தர்கள்) கடன்' என்பது வைணவக் கருத்தாகும்.

207. கேள்வி: எது உண்மையான பக்தி? எது உண்மையான தியானம்?

□பதில்: தன்னை மறந்து இறைவனை வழிபடுவது உண்மையான பக்தி. தன்னை மறந்து இறைவனைத் தியானம் செய்வது உண்மையான தியானம்.

ஆழ்ந்த பக்தியுடன் செய்யப்படும் தியானம்தான் உயர்ந்த பயனைத் தரும்.

மனத்தூய்மை இல்லாமல் உண்மையான பக்தி, உண்மையான தியானம் ஆகிய எதுவுமே கைகூடாது.

208. கேள்வி: மிகவும் உயர்ந்த பக்தி எது?

□பதில்: இறைவனிடம் வேறு பயன் எதையும் வேண்டாமல் பக்தி செலுத்துவதும், பிரதி பலனை எதிர்பாராமல் இறைவனுக்குத் தொண்டு செய்வதும் மிகவும் உயர்ந்த பக்தியாகும்.

காணும் பொருள்களிலெல்லாம் இறைவனைக் காண்பது மிகவும் உயர்ந்த பக்தியாகும்.

கொம்பை நாடியிருக்கும் கொடியைப் போல, நமது வாழ்க்கை இறைவனையே

சார்ந்திருப்பது மிகவும் உயர்ந்த பக்தியாகும். அதுவே ஏற்ற மிக்க வாழ்க்கை, போற்றிப் புகழ்வதற்குரிய வாழ்க்கை.

209. கேள்வி: 'சுத்தபக்தி' என்றால் என்ன?

☐பதில்: இறைவனைப் பலர் உலகியல் நன்மைகளுக்காக வழக்கறிஞரை நாடுவதுபோல், மருத்துவரை நாடுவதுபோல் நாடுகிறார்கள். இறைவனை இறைவனுக்காகவே, இறைவனைப் பக்திக்காகவே பக்தியுடன் அணுகுவதற்கு ஒரு பெரிய மனப்பக்குவம் தேவைப்படுகிறது. அந்த மனப்பக்குவம்தான் சுத்தபக்தி.

அசையாத தூயபக்திக்கு இறைவன் அசைந்து கொடுக்கிறான். சுத்தபக்தி பெறுவதற்குத் துறவு மனப்பான்மை வேண்டும். சுத்தபக்தி கொண்டவர்கள் பிரதிபலன் வேண்டாமல், இடைவிடாமல் இறைவனை நினைப்பார்கள்.

சுத்தபக்தியின் ஆழத்தையும் அகலத்தையும் தன்மையையும், சுத்தபக்தி கொண்ட பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் போன்றவர்களே அறிவார்கள்.

சுத்தபக்தி ஒரு பிறவியிலேயே ஒருவருக்கு வந்துவிடுவதில்லை. அது முற்பிறவிகளில் செய்த முயற்சியால், நல்வினையால் வருகிறது.

210. கேள்வி: உறுதியான தெய்வ பக்தியைப் பெறும் வழி என்ன?

☐பதில்: எவ்வளவுக்கு எவ்வளவு ஆன்மிக சாதனைகளை மேற்கொள்கிறோமோ, அருள் நூல்களையும் - மகான்களின் வரலாறுகளையும்

படிக்கிறோமோ, கோயில் வழிபாடு - திருத்தலப் பயணம் செய்கிறோமோ, சத்சங்கம் - பூஜை - தொண்டு - விரதம் போன்றவற்றில் ஈடுபடுகிறோமோ அவ்வளவுக்கு நமது பக்தி உறுதிப் படும்.

எந்த அளவுக்கு உலகப்பற்று குறைவாக இருக்கிறதோ - தேவையற்ற வீண் உலகியல் விவகாரங்களில் ஈடுபடாமல் இருக்கிறோமோ - அந்த அளவுக்கு நம்மிடம் கடவுள் பற்று அதிகமாக இருக்கும்.

211. *கேள்வி: பக்தி உயர்ந்ததா? ஞானம் உயர்ந்ததா?*

□பதில்: 'ஞானம் கனிந்து பக்தியாக ஆகிறது' என்று, வைணவ ஆச்சாரியர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'பக்தி கனிந்து ஞானமாக ஆகிறது' என்று, வேதாந்திகள் கருதுகிறார்கள்.

''தூய பக்தியும் தூய ஞானமும் ஒன்றே யாகும்'' என்பது, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருத்தாகும்.

ஞானமோ, பக்தியோ - எப்படியோ நம் அஞ்ஞானம் விலகினால் சரி.

212. *கேள்வி: மனிதன் தெய்வபக்தியுடன் ஏன் வாழ வேண்டும்?*

□பதில்: மனிதன் அடைய வேண்டிய பெரும் பயன் மெய்ஞ்ஞானம்.

இறைவனை வணங்குவதற்குத்தான் இந்தப் பிறவியே நமக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே தெய்வபக்தி இல்லாத வாழ்க்கை நிச்சயமாகப் பயனற்ற வாழ்க்கைதான்.

''தெய்வபக்தி இல்லாதவன் இரண்டு கால் மிருகம்'' என்று, பிரகலாதன் கூறிய ஒரு சம்ஸ்கிருத சுலோகம் என் நினைவுக்கு வருகிறது.

இறைவனிடம் பக்தி செலுத்துவது-மனிதன் பின்பற்ற வேண்டிய அறங்களிலேயே தலையாய அறமாகும்; முதல் முக்கியத்துவமுடைய அறமாகும்.

மனப்பக்குவம் வளர வளர, இறைவனை அடைய முயற்சி செய்வது ஒன்றே ஒன்றுதான் விவேகமான செயல் என்பதை மக்கள் உணர்ந்து கொள்கிறார்கள். ஆனால் இது போன்ற உண்மைகளைப் பெரும்பாலும் மக்கள் காலம் கடந்து பிறகுதான் உணர்கிறார்கள்.

மனித வாழ்க்கைக்கு உணவு, உடை, உறைவிடம், கல்வி ஆகியவை இன்றியமையாதவை என்பது போல் இறைவழிபாடு என்பதும் இன்றியமையாததாகும்.

தறிகெட்டுத் திரியும் மனத்தை நெறிப்படுத்துவது தெய்வச்சிந்தனையே ஆகும். தெய்வபக்தி, மனிதன் கீழான செயல்களைச் செய்விலிருந்து பாதுகாக்கிறது.

தெய்வபக்தியில் உறுதியாக இருப்பவர்களிடம், நற்பண்புகள் மேன்மேலும் வளர்வதாக இருக்கும்.

தூய தெய்வபக்தியும் நல்லொழுக்கமும் சேர்ந்தே இருக்கும்.

தெய்வபக்தியும் ஒழுக்கமுமே ஒருவருக்கு, ஒரு சமுதாயத்திற்குச் சிறந்த அலங்காரமாகும்.

தெய்வபக்தி மனிதநேயத்தையும் கடந்து, ஆன்மநேயத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

மனித வாழ்க்கை இறைவனைப் பற்றிய சிந்தனைகளாலேயே நிறைவு பெறுகிறது.

213. கேள்வி:தன்னம்பிக்கைக்கும் பக்திக்கும் உள்ள தொடர்பு என்ன?

☐பதில்: ஒருவர் தன்மீது வைக்கும் நம்பிக்கை தன்னம்பிக்கை. இறைவன் மீது வைக்கும் நம்பிக்கை பக்தி.

நம்மீது நாம் நம்பிக்கைகொள்வது என்பது, நீண்ட பயிற்சிக்குப் பிறகே அமைகிறது. இது போலவே, நாம் இறைவன் மீது உறுதியான நம்பிக்கைகொள்வது என்பதும், நீண்ட பயிற்சிக்குப் பிறகுதான் அமைகிறது.

214. கேள்வி: நடமாடும் தெய்வங்கள் யார்? நடமாடும் பிணங்கள் யார்?

☐பதில்: சொல், செயல், சிந்தனை ஆகியவற்றால் தெய்வத்திடம் பக்தி செலுத்துபவர்கள் - பிறருக்கு உதவுபவர்கள் - நல்லொழுக்கம் கொண்டவர்கள் - அனைவரையும் நடமாடும் தெய்வங்கள் எனலாம்.

சொல், செயல், சிந்தனை ஆகியவற்றால் தெய்வத்தைத் தொழாதவர்கள் - பிறருக்கு உதவாதவர்கள் - தீயொழுக்கம் கொண்டவர்கள் அனைவரும் நடமாடும் பிணங்கள் ஆவர்.

39.பக்தர்கள்

215. கேள்வி: 'மெய்யடியார்' என்பவர் யார்?

☐பதில்: இறைவன் பெயரைச் சொன்னவுடனேயே, கேட்டவுடனேயே உள்ளம் உருகுவது மெய்யடியார் இயல்பாகும்.

216. கேள்வி: உண்மையான பக்தன் யார்?

மகான் தியாகராஜருக்கு முன்னோடியாக இருந்தவர் யார்?

☐பதில்: எப்போதும், எந்தச் சூழ்நிலையிலும், எக்காலமும், இறைவனின் பாதகமலங்களை மறவாமல் வாழ்பவனே உண்மையான பக்தன்.

அனுமன் ஸ்ரீராமபிரானிடம் கொண்டிருந்த நிகரற்ற பக்தியை முன்னோடியாக வைத்து, அதற்கு நிகரான பக்தியைத் தாமும் அடைய தியாகராஜர் விரும்பினார் என்று தெரிகிறது.

217. கேள்வி: இறைவனின் அடியார்கள் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள் யாவை?

☐பதில்: இறைவனின் திருவடிக்கே உரியவர்கள் என்பதுதான், இறைவன் அடியார்கள் பெற்றிருக்க வேண்டிய தகுதி. இந்த ஒரு தகுதியில் மற்ற அனைத்துத் தகுதிகளும் அடக்கம்.

218. கேள்வி:இறைவன் எல்லோரையும் ஏன் தடுத்தாட்கொள்வதில்லை?

☐பதில்: ஆன்மாக்களுக்கு உரிய பக்குவம் வரும்போது, இறைவன் தானே வந்து ஆட்கொள்கிறான்.

219. கேள்வி: உலகில் ஒரு பக்தனின் வாழ்க்கை எவ்விதம் இருக்க வேண்டும்?

☐பதில்:இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன், இறைவனுக்கே தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

''அந்தராத்மாவாகிய இறைவனை வணங்கியும், எழுதியும், படித்தும், கேட்டும், தொழுதும், உபச்சாரங்களைச் செய்தும், பூசித்தும் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்க வேண்டும். இப்படித்தான் இறைவன் அடியார்கள் உலகில் வாழ வேண்டும். அதனால் அவர்கள் இறைவனுடன் ஐக்கியமாகி மீண்டும் பிறவாத முக்தி நிலையைப் பெறுவார்கள்'' - இதை திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 63-ஆவது பாடலில் பின்வருமாறு கூறுகிறார்:

''(திருமாலை) வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன்போது.''

இறைவன் படைத்த வாயால் நாம் இறைவனைப் பற்றிப் பேச வேண்டும்; இறைவன் படைத்த கையால் நாம் இறைவனுக்கு அர்ச்சனை செய்ய வேண்டும்; இறைவன் படைத்த காலால் நாம் இறைவன் திருக்கோயில் சென்று வழிபட வேண்டும்; இறைவன் படைத்த மனத்தால் நாம் இறைவனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இவற்றோடு மக்களை இறைவனாகக் கருதி அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

பாலுடன் தேன் சேர்ந்தால் சுவை மிகும். அதுபோல் பக்தர்களுடன் பக்தர்கள் சேர்ந்தால் அங்கு பக்திச்சுவை மிளிரும்.

எதையும் இறைவனின் அருட்பிரசாதமாக ஏற்கும் மனநிலையை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

40.இறைவன் திருவருள்

220. கேள்வி: 'அருள்தாகம்' என்றால் என்ன?

□பதில்:அப்பாலுக்கப்பாலாய் விளங்கும் ஆண்டவனை அடைவதற்காகக் கொள்ளும் பேராவலும், தீவிர எண்ணமும், தீவிர ஏக்கமும், தீவிர மனஉருக்கமும், தீவிர தாகமும் அருள் தாகம் எனப்படும்.

கொடி படர்வதற்குக் கொழுகொம்பை நாடி அலைபாய்வது போலவும், தாய்ப்பசுவைப் பிரிந்த கன்று தாய்ப்பசுவுக்காகக் கதறுவது போலவும், நீரில் ழ்கி இறக்கும் நிலையில் இருப்பவன் ச்சுக்காற்றுக்காகத் தவிப்பது போலவும் - ஆன்மிக சாதகனின் மனம் இறைவனையே நாடி அலைபாயும் உயர்ந்த, - தூய ஒரு நிலையே அருள்தாகம் எனப்படும்.

வயிற்றுப்பசியை நாம் அனைவரும் அறிவோம். அதுபோல் ஆன்மா கொள்ளும் மிகவும் கடுமையான ஆன்மபசியே அருள்தாகமாகும்.

221. கேள்வி: மௌனத்தின் சிறப்பு என்ன?

□பதில்: இறைவனின் அருள் பெறுவதற்கு மௌனமும் ஒரு வழி. மேலும் மௌனம் மனிதனுக்கு உயர்ந்த ஓர் அந்தஸ்தையும் அளிக்கும்.

222. கேள்வி: இறைவனின் கருணையைப் பெறுவதற்கு உரிய வழி என்ன?

□பதில்: நாம் மற்றவர்கள் மீது கருணை காட்டுவதுதான், நாம் இறைவனின் கருணை

யைப் பெறுவதற்குரிய வழியாகும். நாம் பிறரிடம் அன்புகாட்டுவதுதான், நாம் இறைவனின் அன்பைப் பெறுவதற்குரிய வழியாகும். நாம் பிறரிடம் கருணையுடன் நடந்து கொண்டால்தான் - இறைவன் நம்மீது கருணையுடன் நடந்துகொள்வான். நாம் உலகிலுள்ள ஜீவர்களுக்குத் தயை புரிவதுதான் - நாம் இறைவனின் தயையைப் பெறுவதற்குரிய வழியாகும்.

223. கேள்வி:இறைவனின் அருளைப் பெறுவதற்கு என்ன வழி?

□பதில்: இறைவன் திருவருள் நம் உள்ளத்தில் வந்து தங்குவதும் தங்காததும், நம் மனம் தூய்மையாக இருப்பதையும் இல்லாததையும் பொறுத்தே அமைகிறது.

ஆன்மிக வாழ்க்கை என்பது, சிறந்த முறையில் செய்யப்படும் ஒரு விவசாயம் போன்றது.

ஆன்மிக சாதனைகள் பழகுதல், ஆலய வழிபாடு, கூட்டு வழிபாடு, சாஸ்திரங்களைப் படித்தல், சத்சங்கம், திருத்தலப் பயணம், தொண்டு, பொறுமையைக் . கடைப்பிடித்தல், புலனடக்கம், புண்ணியச் செயல்கள் செய்தல், நற்செயல்கள் செய்தல், நல்லொழுக்கங்களை வளர்த்துக்கொள்ளுதல், சுயநலம் துறத்தல், மற்றவர்களின் உணர்வுகளை மதித்து நடந்துகொள்ளுதல் போன்றவை இறைவனின் அருளைப் பெறுவதற்கு உரிய வழிகளாக விளங்குகின்றன.

பள்ளத்தை நோக்கிச் செல்லும் நீர்போல, நற்பண்புகள் உடையவனை நாடி இறையருள் சென்று தங்குகிறது.

224. கேள்வி: இறையருளை எப்படி பெறுவது?

□பதில்:நன்னடத்தை, உலகப்பற்றற்ற வாழ்க்கை, ஆன்மிக சாதனைகள் ஆகியவற்றின் லம் நாம் இறையருளைப் பெற முடியும்.

மற்றவர்களுக்கு நாம் அன்பை வழங்கினால், நாம் இறைவனின் அன்பைப் பெற முடியும். மற்றவர்கள் மீது நாம் கருணை காட்டினால், நாம் இறைவனின் கருணையைப் பெற முடியும். பிறரை நாம் மன்னித்தால், இறைவனிடம் நமக்கு மன்னிப்புக் கிடைக்கும்.

பொய்யர்கள் இறைவனை அணுகமாட்டார்கள்; அவர்களுக்கு இறைவன் புலப்பட மாட்டான். மாறாக, மெய்யடியார்களுக்கு இறைவன் நிச்சயம் புலப்படுவான்.

கொடிய துன்பங்களால் வாடி வருந்தும் நிலை ஏற்பட்டாலும், இறைவனை நினைப்பதை நாம் மறந்துவிடக் கூடாது; விட்டுவிடக் கூடாது. அத்தகையவர்களுக்கு இறைவன் அருளால் வீடுபேறு கிடைக்கும்.

225. கேள்வி:'இறைவன் அருளைப் பெறுவது எப்படி?' என்று சுருக்கமாகக் கூறுங்கள்.

□பதில்: உடல் வாழ்க்கைக்கு இணையாக மன வாழ்க்கை என்ற ஒன்றும் நமக்கு இருக்கிறது. இந்த மன வாழ்க்கை 'நான்' என்ற உணர்வை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது.

'நான்' என்ற அகங்காரத்தை விட்டால் தான் இறைவனை நாம் புரிந்துகொள்ள முடியும்; இறைவனை அறிய மனம் அசையாமல்

அமைதி பெற வேண்டும். தூய உள்ளம் கொண்டவர்களால் மட்டுமே இறைவனை உணர முடியும்.

226. கேள்வி: இறைவன் கிருபை எனக்குக் கிடைப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

□பதில்: ''போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்'' என்பதன் லம், இறைவனின் அடியார்களைப் பின்பற்றி ஆண்டவனைப் பற்றும்படி திருநாவுக்கரசர் நமக்குக் கூறியுள்ளார்.

ஆன்மிக சாதனைகளில் முறையாக ஈடுபட்டால் - மனிதனிடம் அன்பு செலுத்தினால் - மக்களுக்குத் தொண்டு செய்தால் - நாம் இறைவனின் கிருபையைப் பெறலாம்.

தன்னம்பிக்கையும் தெய்வபக்தியும் உள்ளவனே இறையருளைப் பெறுகிறான்.

இறைவனை உணர்வதற்குக் குழந்தை உள்ளம் வேண்டும்.

செய்யும் எந்தத் தொழிலையும் 'இறைவன் கைங்கரியம்' என்ற எண்ணத்தில் செய்ய வேண்டும்.

227. கேள்வி: இறைவனின் அருள் எல்லோரிடமும் வெளிப்படுவதில்லை. அதற்கு என்ன காரணம்?

□பதில்: குறுகிய மனமும், ஆசாபாசங்களும் கொண்ட மனிதனிடம் இறைவனின் அருள் வெளிப்படுவதில்லை.

அவனிடம் இறைவனின் அருள் வெளிப் பட வேண்டுமானால், அவன் தன்னிடம் உள்ள குறுகிய மனப்பான்மையையும் ஆசாபாசங் களையும் உடைத்துக்கொண்டு வெளியே வர வேண்டும். அதற்கு தெய்வபக்தி, மனஉறுதி, முறையான பயிற்சி ஆகியவை தேவை.

228. கேள்வி: இறைவன் எல்லோருக்கும் ஒன்று போலவே அருள் புரிவதில்லை என்பதையே நாம் பார்த்து வருகிறோம். இதற்கு என்ன காரணம்?

□பதில்: மாணவர்களின் தகுதிக்கேற்பவே வெவ் வேறு வகுப்புகளில் சேர்க்கப்படுகிறார்கள். நோயின் தன்மைக்கேற்பவே மருத்துவமனையில் நோயாளிகள் வெவ்வேறு பிரிவில் அனுமதிக் கப்படுகிறார்கள். குழந்தைகளின் ஜீரண சக்திக்கு ஏற்பவே தாய் வெவ்வேறு உணவை வழங்கு கிறாள்.

நல்ல ஒரு பழ மரமாக இருந்தாலும், உரிய நேரம் வரும்போதுதான் பழங்களைத் தருகிறது.

அதுபோல், உயிர்களின் பரிபக்குவத்திற் கேற்ப இறைவன் உரிய நேரத்தில் அருள் புரிகிறான்.

எனவே இறைவன் அருளை நாம் பெற வேண்டுமானால், அதற்கு உரிய தகுதி (பரிபக் குவம்) பெற்றவர்களாக நாம் விளங்க வேண்டும்.

229. கேள்வி: முயற்சி, இறைவனின் திருவருள் ஆகிய இரண்டில் உயர்ந்தது எது?

□பதில்: ''கன்றை நோக்கித் தாய்ப்பசு ஓடி வருவதைப் போல, முயற்சி உடையவனை நோக்கியே ஆக்கம் ஓடி வருகிறது. அத்தகையவனை நோக்கி வெற்றித்திருமகள் ஓடி வருகிறாள்'' என்று பர்த்ருஹரி கூறியுள்ளார்.

''ஓடினால்தான் அது ஆறு. வீசினால் தான் அது காற்று. பாடினால்தான் அது குயில். பாடுபட்டால்தான் அவர் மனிதர்'' என்று, சிராக்பெல்லம் என்ற அறிஞர் கூறியிருக்கிறார்.

''முயற்சி ஒருவனுடைய செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சி இல்லாத நிலை அவனிடம் வறுமையைச் சேர்த்துவிடும்'' என்று திருக்குறள் (616) கூறுகிறது.

முயற்சி செய்யாத சோம்பேறியின் மீது வறுமை சவாரி செய்யும். முயற்சியற்றவர்கள் செத்தாருள் வைத்துக் கருதப்பட வேண்டியவர்கள்.

முயற்சியுடையவர்களுக்கே முன்னேற்றம் என்பது அமையும். முயற்சியின் முடிவு வெற்றியாகவும் இருக்கும்.

நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஆனால் இறைவனின் அருள் இல்லாமல் நம் முயற்சி வெற்றி பெறாது என்பதை நாம் உணர்ந்திருக்க வேண்டும்.

230. கேள்வி: மனிதனின் வாழ்க்கையில் இறையருளுக்கும், சுயமுயற்சிக்கும் உள்ள இடம் என்ன?

□பதில்: அண்ட சராசரங்கள் அனைத்தையும், பிரபஞ்சம் முழுவதையும் இறையருள்தான் இயக்கிக்கொண்டிருக்கிறது. சுயமுயற்சியால்

செயல்களில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்தையும், அதைச் செயல்படுத்தும் ஆற்றலையும் இறையருள்தான் தருகிறது. இதுவே பாரமார்த்திக உண்மை.

231. கேள்வி: தாழ்ந்த ஜாதியில் பிறந்த ஒருவர் இறைவன் அருளைப் பெற முடியுமா?

□பதில்: இறைவன் இதயத்தைப் பார்க்கிறானே தவிர பணம், பதவி, மதம், ஜாதியை ஒரு போதும் பார்ப்பதில்லை.

தாய் இயல்பாகவே குழந்தைகளிடம் அன்பு பாராட்டுவதுபோல், இறைவன் எப்போதும் உயிர்களிடம் பெரிதும் அன்பு கொண்டவன்.

சபரி, திருப்பாணாழ்வார், வேடன் கண்ணப்பன், நந்தனார் போன்றவர்களின் வரலாறுகள் இறைவன் ஜாதி வேற்றுமை பாராட்டுவதில்லை என்பதையும், தாழ்ந்த குலத்தில் பிறந்து இறைவன் மீது பக்தி செலுத்துவது இறையருளைப் பெறுவதற்குத் தடையாக அமைவதில்லை என்பதையும் உணர்த்துகின்றன.

பிறப்பினால் எவருக்கும் பெருமை வந்து விடுவதில்லை. மாறாக, நற்செயல்களால் மட்டுமே ஒருவர் பெருமை பெற முடியும்; இறைவன் அருளைப் பெற முடியும்.

''பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'' (குறள்-972)

பொருள்:'''பிறப்பு' என்பது எல்லா உயிர்களுக்கும் ஒரே தன்மையுடையது. ஆனால்

அவர்கள் செய்கின்ற தொழிலின் ஏற்ற தாழ்வுகள் காரணமாகச் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.''

நாம் இறைவனின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள். எல்லோரும் இறைவனின் குழந்தைகள். எல்லோரும் இறைவனின் அன்புக்குரியவர்கள். இறைவன் முன்பு எல்லோரும் சமம்; இறைவன் முன்பு ஆண், பெண் என்ற வேறுபாடுமில்லை.

232. கேள்வி:நான் ஆன்மிக நூல்களைப் படிக்கிறேன். ஆனால் அந்த நூல்களில் சொல்லப்படும் கருத்துகள் என் உள்ளத்தில் பதிவதில்லை. இதற்கு என்ன காரணம்?

☐பதில்: உன்னத கருத்துகள் மனத்தில் பதிவதற்கு இதயம் திறந்திருக்க வேண்டும். இதயம் திறப்பதற்கு இறையருள் சுரக்க வேண்டும்.

41.யோகம்

233. கேள்வி: 'யோகம்' என்றால் என்ன?

☐பதில்: 'யோகம்' என்ற சொல்லுக்கு 'இணைப்பது' என்பது பொருள்.

எல்லையற்ற இறைவனை நாம் எட்டிப் பிடிக்கச் செய்பவை அனைத்தும், இறைவனுடன் நமக்குள்ள உறவை வலிமைப்படுத்திக்கொள்வதற்கு உதவும் வழிமுறைகள் அனைத்தும், இறைவனை நாம் நெருங்குவதற்கு உதவுபவை அனைத்தும் யோகம்தான்.

234. கேள்வி: யோகம் என்றால் என்ன? கர்மயோகம் என்றால் என்ன?

☐பதில்: மனத்தை அலைபாயவிடாமல் இறைவன் நினைவில் இருப்பது யோகம்.

எதையும் நடுநிலையில், சமத்துவ நிலையில், நிதான நிலையில் இருந்து செய்வது யோகம்.

செயல்கள் அனைத்தையும் வழிபாடாகச் செய்வது கர்மயோகம். செய்யும் செயலை இறைவனுக்கு அர்ப்பணிக்கும்போது - அது புனிதம் பெறுகிறது.

235. கேள்வி:பக்தியோகத்திற்கும் கர்மயோகத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்: பக்தியோகமும் கர்மயோகமும் ஒன்றோடு ஒன்று முரண்படாதது மட்டுமின்றி, ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையது.

236. கேள்வி:'பிரபத்தியோகம்' என்பது நான்கு யோகங்களில் ஒன்றா?

□பதில்:பொதுவாக ஞானயோகம், பக்தியோகம், ராஜயோகம், கர்மயோகம் ஆகியவற்றையே 'நான்கு யோகங்கள்' என்று குறிப்பிடும் வழக்கம் இருந்து வருகிறது.

கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம் என்று வைஷ்ணவத்தில் நான்கு யோகங்களைக் குறிப்பிடுவார்கள்.

இறைவன் திருவடிகளில் சரணடைந்து வாழ்வதன் லம், எளிதில் இறைவன் திருவருளைப் பெற முடியும் - முக்தி பெற முடியும் என்பதைப் பிரபத்தியோகம் உணர்த்துகிறது.

''வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே'' என்று (திருவாய்மொழி 10-ஆம் பத்து 9-ஆம்

திருமொழி - 9-ஆவது பாசுரத்தில்) நம்மாழ்வார் குறிப்பிடுகிறார்.

எல்லா ஜீவாத்மாக்களும் முடிவில் இறைவனையே சென்றடைய வேண்டும். எனவே இறைவனிடம் பிரபத்தியோகம் என்ற ஆத்ம சமர்ப்பணம் சம்பூர்ணமாக இருந்தால், ஒருவன் வாழ்க்கையில் அடைய வேண்டியதை அடைந்து விட்டான் என்பது பொருள்.

42.ஞானம்

237. கேள்வி: 'ஞானநெறி' என்றால் என்ன?

□பதில்: சிரவணம், மனனம், நிதித்யாசனம், தியானம் ஆகிய கூறுபாடுகளைக் கொண்ட ஆன்மிக வாழ்க்கை 'ஞானநெறி' எனப்படும்.

238. கேள்வி:'மெய்ஞ்ஞானம்' என்றால் என்ன?

□பதில்: உள்ளதை உள்ளபடியே காண்பதை மெய்யறிவு அல்லது மெய்ஞ்ஞானம் என்று சொல்கிறோம்.

239. கேள்வி:ஒருவருக்கு ஞானம் தானாகவே வருமா?

□பதில்: முறையாக ஆன்மிக வாழ்க்கை வாழ்பவர்களுக்கு - முழுமையாக ஆன்மிக வாழ்க்கை வாழ்பவர்களுக்கு-ஞானம் தானாக வந்தடையும்.

240. கேள்வி:இறைவன் திருவடிகளின் சிறப்பு என்ன?

□பதில்: தத்துவ நோக்கில், 'பரஞானம், அபர ஞானம் ஆகிய இரண்டும் பகவானின் திருவடிகள்' என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

43.ஆத்மா

241. கேள்வி: 'ஆத்மா' என்றால் என்ன?

□பதில்: ஆத்மா என்ற சொல் இடத்திற்கேற்ப பரமாத்மாவையும் குறிக்கும்; ஜீவாத்மாவையும் குறிக்கும்

பரமாத்மா - சர்வக்ஞன் (அனைத்தும் அறிந்தவன்).

ஜீவாத்மா-அல்பக்ஞன் (சிறிதளவு அறிவுடையவன்). பிறப்பும் இறப்பும் ஜட உடலையே பாதிக்கின்றன; ஆத்மாவைப் பாதிப்பதில்லை.

242. கேள்வி:'ஆத்ம உணர்வு' என்றால் என்ன? அதைப் பெறுவது எப்படி?

□பதில்:'நான் உடல் அல்ல; நான் ஆத்மா' என்று உணர்வது ஆத்ம உணர்வு என்று சொல்லப்படுகிறது.

ஒருவர் தானே ஆத்மாவை உணர வேண்டுமே தவிர, அவருக்கு மற்றொருவர் ஆத்மாவை உணர்த்த முடியாது.

243. கேள்வி:ஆத்ம தத்துவத்தை உணர்ந்து கொள்வது எப்படி?

□பதில்: மனத்தை உள்நோக்கித் திருப்புவதன் லமாகத்தான் ஆத்ம தத்துவத்தை உணர முடியும்.

ஆத்ம தத்துவத்தை உணர்ந்துகொள்வதற்கு ஒரு தலைசிறந்த சாதனமாகத் தியானம் விளங்குகிறது.

244. கேள்வி:ஆத்ம சொரூபத்தை உணர்ந்துகொள்வது எப்படி?

□பதில்:'சம்சார பந்தம்' என்ற நீண்ட தூக்கத்தில் நாம் ஆழ்ந்திருக்கிறோம். இந்தத் தூக்கத்திலிருந்து நாம் விடுபடுவது அவ்வளவு சுலபமல்ல.

மனிதனின் உண்மையான இயல்பு ஆத்ம சொரூபம் என்றாலும் விருப்பு, வெறுப்பு, ஆசை, மயக்கம் போன்றவை மனிதனின் ஆத்ம சொரூபத்தைச் சூரியனை மேகம் மறைப்பது போல் மறைத்துள்ளன.

குற்றம் குறைகள் மனிதனிடம் நீங்க நீங்க, அவனிடம் ஆத்மசொரூபம் மேன்மேலும் வெளிப்படும். நடிகன் தன் வேடத்தைக் களைவது போல, ஆத்மாவைப் பற்றிய சிந்தனையால் நாம் நம் பொய் வேடத்தைக் களைந்தால் நமக்கு நமது ஆத்ம சொரூபம் விளங்கும்.

245. கேள்வி: துராத்மா யார்? மகாத்மா யார்?

□பதில்:பெண் - பொன்னுக்கு அடிமைப் பட்டவன் துராத்மா. பெண் - பொன்னுக்கு அடிமைப்படாதவன் மகாத்மா.

44.உலகப்பற்று

246. கேள்வி: இறைவனைப் பற்றுக்கோடாகக் கொள்வதால் ஏற்படும் பயன் என்ன?

□பதில்: சமையல் பாத்திரத்தை (பால் பாத்திரத்தின் அடியில் பற்றுப் பிடித்திருந்தால் அதைத்) தேய்த்துச் சுத்தப்படுத்த வேண்டும். அதுபோல்

நம்மைப் பற்றியிருக்கும் உலகப்பற்றுகளை நீக்க வேண்டுமானால், இறைவனையே நாம் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ வேண்டும்.

*''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'' (குறள்-350)*

பொருள்:''பற்று இல்லாதவனாகிய இறைவன் என்ற பற்றை மட்டுமே பற்றிக்கொள். உலகப்பற்றுக்களை விடுவதற்கு, இறைவன் மீது பற்று என்ற பற்றைப் பற்ற வேண்டும்.''

247. கேள்வி: மனிதன் உலகில் பற்று இல்லாமல் வாழ முடியுமா?

□பதில்: நிலையற்ற பொருள்கள் மீதும், நிலையற்ற உறவுகள் மீதும் நாம் பற்று வைக்கி றோம். இந்தப் பற்றுகள் நீங்குவதற்கு உரிய ஒரே வழி இறைவன் மீது பற்று வைப்பதுதான் - இது தற்காலத்திற்கு மட்டுமின்றி முக்காலத்திற்கும் பொருந்தும் உண்மையாகும்.

248. கேள்வி: உலகப்பற்று இல்லாமல் வாழ்வதற்கு என்ன வழி?

மனத்தில் தோன்றும் தேவையற்ற சிந்தனைகளைத் தவிர்ப்பது எப்படி?

□பதில்: தியானத்தில் ஆழ்ந்து ழ்க ழ்க உலகப்பற்றின்மை, தியாகம், தொண்டு, தூய சிந்தனைகள் போன்றவை இயல்பாகவே ஒருவரிடம் தோன்றுகின்றன.

மனித மனம் பல்வேறு சிந்தனைகளால் ஆட்டம் போடுகிறது. அதன் ஆட்டம் தியானப் பயிற்சியால் குறையும்.

249. கேள்வி: அகப்பற்று என்றால் என்ன? புறப்பற்று என்றால் என்ன?

□பதில்: 'நான்' என்ற அகந்தை 'அகப்பற்று' எனப்படும்.

'எனது' என்ற எண்ணம் 'புறப்பற்று' எனப்படும்.

நான், எனது என்ற எண்ணத்தை விட்டவர் களால்தான் ஆன்மிக வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்.

நான், எனது என்பவை ஒருவனிடம் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கின்றனவோ, அந்த அளவிற்கு உலகப்பற்றும் அவனிடம் அதிகமாக இருக்கும்.

நான், எனது என்பவை அறவே இல்லாத நிலை ஞானியின் நிலை. அகப்பற்றையும், புறப் பற்றையும் நீக்கிக்கொண்டால் மட்டுமே நாம் முக்தி பெற முடியும்.

45. அஞ்ஞானம்

250. கேள்வி: 'அஞ்ஞானம்' என்றால் என்ன?

□பதில்: மாயா பிரபஞ்ச காரியங்களில் மனம் உழல்வது, அதில் கிடைக்கும் இன்பங்களைப் பெரிதாக நினைப்பது, காலத்திற்குட்பட்ட நிலை யற்ற பொருள்கள் மீது நாம் பற்றுக் கொள்வது அஞ்ஞானம் ஆகும்.

251. கேள்வி: 'அஞ்ஞானம்' என்றால் என்ன?

□பதில்: ஒரு பொருளை உள்ளது உள்ளபடியே நாம் காண முடியாமல் மறைக்கும் சக்திக்கு, 'ஆவரண சக்தி' என்று பெயர்.

மறைக்கப்பட்டிருக்கும் ஒரு பொருளின் தன்மையை மாற்றி, வேறு ஒரு மாறுபட்ட பொருள்போல் காட்டும் சக்திக்கு 'விக்ஷேப சக்தி' என்று பெயர். இதற்கு உதாரணம் - இரவில் கயிற்றைப் பாம்பு போல் நினைக்கச் செய்தல்.

ஆவரண சக்தி, விக்ஷேப சக்தி ஆகிய இரண்டும் சேர்ந்த ஒரு சக்தியே அஞ்ஞானம் என்று வேதாந்தம் கூறுகிறது. அஞ்ஞானம் ஆன்மாவை மறைத்து, அழிகின்ற இந்த உடலையே 'தான்' என்று நினைக்க வைக்கிறது.

அஞ்ஞானம் என்ற பெருங்காட்டை, தவம் என்ற வாளினால் மட்டுமே வெட்டி வீழ்த்த முடியும்.

252. கேள்வி: 'அறியாமை' என்றால் என்ன?

□பதில்: ஒன்றை அறியாமல் இருப்பது அறியாமை என்று பொதுவாகப் பலரும் கருதுகிறார்கள். அது மட்டுமின்றி, ஒன்றைத் தவறாகப் புரிந்து கொள்வதும் அறியாமை (அஞ்ஞானம்) ஆகும்.

வள்ளுவர், ''மெய்ப்பொருள் காண் பதறிவு'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

253. கேள்வி: மனிதன் ஏன் பந்தத்திற்கு ஆளாகிறான்?

□பதில்: யானை தன் வலிமையை உணராததால் பாகனின் கைக்குச்சிக்கு பயப்படுகிறது. அது போல் மனிதன் தன்னை உணராததால், அஞ்ஞானம் காரணமாகப் பந்தத்திற்கு ஆளாகிறான்.

46.கர்மயோகம்

254. கேள்வி:'கர்மயோகம்' என்றால் என்ன?

□பதில்: அவரவருக்கு உரிய கடமைகளையும் நற்செயல்களையும் செய்ய வேண்டும். அந்த நற் செயல்களையும் கடமைகளையும் பற்றற்று, சமத்துவ மனநிலையிலிருந்து செய்வது கர்ம யோகம் எனப்படும்.

255. கேள்வி: 'கர்மயோகம்' என்றால் என்ன?

□பதில்: செயல்களாகிய மலர்களை இறைவ னுக்கு அர்ப்பணிப்பதே கர்மயோகமாகும்.

நமது செயல்கள் ஆன்மாவைப் பக்குவப் படுத்துவதாக இருக்க வேண்டும் என்பதை, கர்ம யோகம் நமக்கு உணர்த்துகிறது.

''கர்மம் செய்; அதன் பலனை எதிர்பாராதே'' என்பதைவிட, ''கர்மம் செய்; அதன் பலனை இறைவனுக்கு அர்ப்பணித்து விடு'' என்று சொல்வது பலருக்கும் புரியும்; பின்பற்றுவதற்கும் எளிது.

எனவே, எப்போதும் இறைவனை நினைத்தபடியே எந்தச் செயலையும் செய்து கொண்டிருப்பதற்கு நாம் பயிற்சி செய்ய வேண்டும்.

47.மாயை

256. கேள்வி: 'மாயை' என்றால் என்ன?

□பதில்: ''மனிதர்களின் அகங்காரம்தான் மாயை, பெண் - பொன் ஆசைகள்தான் மாயை'' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

257. கேள்வி: 'மாயை' என்றால் என்ன?

□பதில்: இல்லாததை இருப்பதுபோல் காட்டுவதும், ஆத்மாவை (இறைவனை) மறைப்பதும் எதுவோ அதுவே 'மாயை' எனப்படும்.

மாயையைப் புரிந்துகொள்வது சுலபமல்ல.

258. கேள்வி: மாயையை வெல்ல முடியுமா?

□பதில்: தூய பக்தியால் மாயையை வெல்ல முடியும்.

259. கேள்வி: மாயையிலிருந்து விடுபடுவதற்கு என்ன வழி?

□பதில்: தன்னிடம் உண்மையிலேயே முழு அளவில் சரண் புகுந்த பக்தனை, இறைவன் மாயையிலிருந்து விடுவிக்கிறான்.

தண்ணீரில் ழ்கியவன் ச்சுக்காற்றுக்குத் திணறுவதுபோல், 'எப்போது பிரபஞ்ச மாயையிலிருந்து விடுபட முடியும்?' என்ற தீவிர எண்ணத்துடன் இறைவனிடம் சரணடைந்தவர்கள், மாயையிலிருந்து விடுபடுகிறார்கள்.

48.ஆணவம்

260. கேள்வி: 'ஆணவம்' என்றால் என்ன?

□பதில்: கண்ணை மறைக்கும் இருள் போல, உயிரின் அறிவை மறைப்பது ஆணவம் எனப்படும்.

261. கேள்வி: 'செருக்கு' என்பதற்கு இலக்கணம் என்ன?

☐பதில்: செருக்கு என்பது எப்படிவேண்டு மானாலும் வரும்; எந்த வடிவத்தில் வேண்டு மானாலும் வரும். எனவே அதற்கு இலக்கணம் கூறுவது கடினம்.

'நான்' என்ற ஆணவம் பணத்தோடு சேரும்போது பணச்செருக்கு ஏற்படுகிறது. அது கல்வியோடு சேரும்போது கல்விச்செருக்கு, பதவியோடு சேரும்போது பதவிச்செருக்கு, குலத் தோடு சேரும்போது குலச்செருக்கு என்று செருக்கு எண்ணற்ற பல வடிவங்கள் எடுக்கும் சாமர்த்தியம் கொண்டது.

'நான் சிறந்த மேதை', 'நான் சிறந்த வீரன்', 'நான் சிறந்த கவிஞர்', 'நான் சிறந்த ஆசிரியர்', 'நான் சிறந்த பக்தன்', 'நான் சிறந்த சந்நியாசி', 'நான் சிறந்த அழகி' போன்ற பலவும் செருக்குக்கு உட்பட்டவையே ஆகும்.

'யான்', 'எனது' என்பதே 'செருக்கு' என்று வள்ளவர் கூறுகிறார்.

262. கேள்வி: ஆணவம் ஏன் தோன்றுகிறது? அதை நீக்கிக்கொள்வதற்கு என்ன வழி?

☐பதில்: ஆணவம் தோன்றுவதற்கு முன் வினைகள் ஒரு முக்கிய காரணம். பதவி, பணம், அதிகாரம் போன்றவை பெருகப் பெருக ஆணவமும் பெருகும். ஆணவம் வளர வளர அதற்கேற்ப இறைவனிடமிருந்து நாம் விலகி விடுகிறோம்.

ஒருவன் ஆன்மிக வாழ்க்கையில் முன் னேற விரும்பினால், 'தான்' என்ற அகந்தையை நீக்க வேண்டும்.

'இந்த உலகம் இறைவனால் இயங்குகிறது' என்பதை உணர்ந்தவனிடமிருந்து, ஆணவம் அகன்றுவிடுகிறது - இது ஒரு பதில்.

எண்ணங்கள் அழியும்போது மனம் அழிகிறது. மனம் அழியும்போது அகந்தை அழிகிறது - இது இன்னொரு பதில்.

263. கேள்வி:இறைவன் கையிலுள்ள எழுதுகோலாக நான் வாழ நினைக்கிறேன். அதற்கு என்ன வழி?

□பதில்: அகங்காரம் நீங்கும்போது இறைவனை நாம் உணர முடியும். அப்போதுதான் இறைவன் நம்மைக் கருவியாகக் கொண்டு செயல்படுவான்.

49.ஆசை

264. கேள்வி: ஆசை என்றால் என்ன?

□பதில்:''மனத்தின் பசியே ஆசை'' - இது காண்டேகர் தந்துள்ள விளக்கம்.

265. கேள்வி: 'அவா' என்றால் என்ன?

□பதில்:'அடங்காத ஆசை' அதாவது, 'பேராசை' என்று பொருள். திருக்குறளில் ஓர் அதிகாரம் 'அவா அறுத்தல்' என்று அமைந்துள்ளது.

266. கேள்வி: 'அபரிக்ரகம்' என்றால் என்ன?

□பதில்:வேண்டாத ஆசைகள்தான் ஒருவனுக்குக் கேடு விளைவிக்கின்றன. பேராசை இல்லாமல் இருப்பது, தன் வேலைகளையும் ஆசைகளையும் ஒரு வரையறைக்குள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது, 'அபரிக்ரகம்' எனப்படும்.

267. கேள்வி: பிறவிக்குக் காரணம் ஆசை. ஆசை தோன்றுவதற்கு என்ன காரணம்?

□பதில்: மனம் ஐம்புலன்களின் வழியில் அலைவதால் ஆசைகள் தோன்றுகின்றன.

ஆசைகளுக்கு ஆட்படும் மனிதன் தனக்குத் தானே புதைகுழியை நாடி ஓடுகிறான்.

ஆசைத் தீயில் விட்டில்பூச்சி மனிதர்கள் பலர் அழிந்து போயிருக்கிறார்கள்.

புதைகுழிக்குள் உள்ள நீரை அருந்தச் சென்ற யானை, அதிலேயே அழிந்து போகிறது. இதுவே புலன் வழி செல்லும் மனிதனின் நிலையாக உள்ளது.

இயல்பான ஆன்ம சுதந்தரத்தை உலக ஆசைகள் என்ற சங்கிலி பிணைத்துவிடுகிறது. ஆசையால் மனம் மயங்கி மாசடைகிறது. எனவே ஆண்டவன் அருளைப் பூரணமாகப் பெற விரும்புகிறவர்கள் ஆசைகளை, வேரறுக்க வேண்டும்.

மனத்தைக் கட்டுப்படுத்துவதுதான் எல்லா ஆற்றல்களுக்கும் அடிப்படையாக அமைகிறது. மனக்கட்டுப்பாடு இல்லாதவன் பாவச் செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டே போகிறான்.

''தறிகெட்ட மனம் நெறிகெட்டுப் போகும்'' என்று ஒரு பழமொழி கூறுகிறது.

268. கேள்வி: மனிதனிடம் ஆசை ஏன் தோன்றுகிறது?

□பதில்: ஆடம்பரம், அதிகாரம் ஆகியவற்றுக் கிடையில் ஒழுக்கசீலராக, உத்தம ஞானியாக ஜனகர் வாழ்ந்தார்.

அத்தகைய ஜனக மன்னன் மகளான சீதையிடம் அற்ப ஆசைகள் இருப்பதற்கே இட

மில்லை. எனினும் விதி விளையாடியதால், அவள் அற்ப மான் மீது ஆசைப்பட்டாள்.அதன் விளைவாக அல்லல்கள் தொடர்கதை ஆயின.

முனிவர்களையும் பழைய வாசனைகள் ஆசைகளாக அலைக்கழிக்கின்றன.

ஏழைகளை மட்டுமல்ல; பணக்காரர் களையும் ஆசை அலைக்கழிக்கிறது. ஆசை என்ற நோய் உள்ள மனத்தில் எப்படி அமைதி இருக்க முடியும்?

ஆசை வளர்ந்துகொண்டே போவது. அது முடிவில்லாதது. ஆனால் நாம் ஆசைகளைப் பற்றியுள்ள வரையில் ஆண்டவன் தரிசனம் கிட்டாது.

ஆசையை அறுப்பது கடினம். அதை அறுத்தவர் பெறுவது ஞானம்.

269. கேள்வி: மனிதன் பந்தத்தில், தளைகளில் இருப்பதற்கு என்ன காரணம்?

□பதில்: கரும்பு என்று நினைத்து இரும்பைக் கடிப்பதுபோல், இன்பம் என்று நினைத்துத் துன்பம் தருவதையே விஷயப் பற்றுள்ளவன் நாடுகிறான். இது அவனை மேன்மேலும் பந்தத்தில் ஆழ்த்துகிறது.

எந்த அளவுக்கு ஆசைகள் நம்மிடம் இருக் கின்றனவோ, அந்த அளவுக்கு நாம் பந்தங்களால் பிணைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆசைத் தீயில் மனிதர்களாகிய நாம் வெந்துகொண்டிருக்கிறோம். ஆதலால் உலகப் பொருள்களின் மீது அளவுக்கும் அதிகமாக ஆசை வைக்க வேண்டாம்.

கடினமான தவமுயற்சியின் லம், நம்மை நாமே பந்தங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும்.

270. கேள்வி: மனிதன் ஆசைகளை ஏன் விட வேண்டும்?

☐பதில்:ஆசைகளால் நாம் எல்லையற்ற துன்பங்களை அனுபவிக்கிறோம் என்பது, எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எனவேதான் பெரியவர்கள், ஆசைகளை விலக்குவதன் லம் துன்பங்களை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று நமக்கு அறிவுரை கூறினார்கள்.

ஆசையற்றவர்கள் இடைவெளி இல்லாத தொடர்ந்த இன்பம் (முக்தி) அனுபவிப்பார்கள்.

271. கேள்வி: ஆசைகளை ஏன் கட்டுப்படுத்த வேண்டும்?

☐பதில்:நம்மைச் சுற்றி நாமே ஆசை வலையைப் பின்னிக்கொண்டு அதனால் அவதிப்படுகிறோம். தேவைகளைப் பெருக்கிக்கொண்டே சென்றால் ஆசைகள் வளர்வதோடு, மன அடக்கமும் இல்லாமல் போய்விடும். எனவே ஆசைகளை நீக்காத வரையில் நாம் துன்பங்களை அனுபவித்தே தீர வேண்டும். ஆசைக் கடலில் ழ்கி ஏராளமானவர்கள் அழிந்தே போயிருக்கிறார்கள். ஆசைகள் அளவுக்குள் இருந்தால்தான் மனிதனே மனிதனாக இந்த உலகில் வாழ முடியும்.

சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, சில நியதிகளுக்குட்பட்டு வாழ்வதில்தான் மனித வாழ்க்கையின் சிறப்பே அடங்கியிருக்கிறது.

முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கு வெளியுலகம் பற்றித் தெரியாது. அது வெளியுலகம்

பற்றி அறிந்துகொள்ள வேண்டுமானால், முட்டையிலிருந்து வெளியே வர வேண்டும்.

அது போல் உலகியல் ஆசைகளில் ழ்கியிருப்பவர்களுக்கு ஆன்மிக இன்பம் பற்றி -வீட்டுலகம் பற்றி-தெரியாது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஆசைகளிலிருந்து வெளியே வர வேண்டும்.

ஆசைகளிலிருந்து வெளியே வருகிறவர்களுக்கு, 'இறைவனின் ராஜ்யத்தில் பிரவேசித்தல்' என்ற அனுபூதி நிலை கிடைக்கிறது.

272. கேள்வி:பெண், பொன் ஆசைகளிலிருந்து விடுபடுவதற்கு உண்மையிலேயே ஏதாவது ஒரு வழி இருக்கிறதா?

□பதில்: ''இடைவிடாமல் இறைவனைத் தியானம் செய்வதால் மனத்திற்கு ஒரு சக்தி பிறக்கிறது. இந்தச் சக்தியின் உதவியால் பெண், பொன் ஆசைகளை வெல்லுவதும் புலன்களை அடக்குவதும் சுலபமாகிவிடுகின்றன'' என்று, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

273. கேள்வி:'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்று புத்தபிரான் கூறியிருக்கிறார்.

அப்படியானால் சாதாரண நிலையில் உள்ள ஒருவன், தன் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நினைப்பது தவறா? நான் ஒரு கல்லூரி மாணவன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

□பதில்:தொழிலாளி முதலாளியாக வர ஆசைப் படலாம்; சிறிய கடை வைத்திருப்பவர் பெரிய

ஹோட்டல் வைக்க ஆசைப்படலாம்; ஆசிரியர் பேராசிரியராக வர ஆசைப்படலாம் - ஆனால் இவை போன்ற ஆசைகள் அனைத்தும், முறை தவறிய ஆசையாக இல்லாமல் அறத்திற்குட் பட்டவையாக இருக்க வேண்டும்.

கல்லூரி மாணவராகிய நீங்கள், சாதனைகள் படைக்கும் சிறந்த வல்லுநராக விளங்க வேண்டும்.

274. கேள்வி: *அற்ப மனிதன் யார்? சராசரி மனிதன் யார்? உயர்ந்த மனிதன் யார்?*

□பதில்: வெறும் உலக ஆசைகளில் உழல்பவன் கழிவுகளில் பிறந்து, அதிலேயே உழன்று மடியும் புழுவைப் போன்றவன் - இது அற்ப மனிதனின் நிலை.

சாதாரண ஆசைகளைக் கொண்டவன், சாதாரண எண்ணங்களில் வாழ்பவன், சாதாரணச் செயல்களைக் கொண்டவன், சாதாரணப் பேச்சுக் களைப் பேசுபவன் சராசரி மனிதனாகத்தான் இருப்பான்.

நாம் உயர்ந்தவர்களாக விரும்பினால் அற்ப சுகங்களை நாடாமல் உயர்தளச் சிந்தனைகள், உயர்ந்த செயல்கள், உயர்ந்த பேச்சுக்கள் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

நாம் நம்முடைய இன்றைய வளர்ச்சிக்கும், நாளைய வளர்ச்சிக்கும் பயன்படும் உயர்ந்த செயல்களையும் சிந்தனைகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

50. மரணம்

275. கேள்வி: *மனிதர்களிடம் பொதுவாக மரணபயம் இருக்கிறது. அதற்கு என்ன காரணம்?*

□பதில்: மனிதன் இதற்கு முன்பு பல பிறவி களில் மரணத்தைச் சந்தித்திருக்கிறான். அது அவனது ஆழ்மனத்தில் இருந்துகொண்டிருக் கிறது. அதனால் மனிதன் மரணத்திற்குப் பயப் படுகிறான் - இது ஒரு பதில்.

மற்றொரு பதில்: இயல்பாக நேரும் மரணம் நம்முடைய உண்மையான ஒரு நண்பன். எனினும் அஞ்ஞானம் காரணமாக நாம் அதைக் கண்டு பயப்படுகிறோம். அதை வெறுக் கிறோம்.

தெய்வ பக்தியும் புண்ணியச் செயல்களும் செய்து வாழும் ஒருவனுக்கு, மரணம் உண்மை யான ஒரு நண்பனாக விளங்கும்.

தீயவர்களும் தெய்வ பக்தி இல்லாதவர் களும்தான் மரணத்தை நினைத்து பயப்பட வேண்டும்.

276. கேள்வி: ஒரு சாதகர் அவ்வப்போது மரணத்தைப் பற்றி நினைப்பது நல்லதா?

□பதில்: நல்லதுதான். ஆனால் அந்தச் சிந்தனை விவேகத்தையும் வைராக்கியத்தையும் தரும் வகையில் முறையானதாக இருக்க வேண்டும்.

மரணத்தைப் பற்றிய முறையான சிந்தனை ஒரு சாதகருக்கு வாழ்நாள் குறுகியது என்பதை உணர்த்தி, இறைவனை அடைந்து பிறவா நிலையைப் பெறுவதற்குரிய முயற்சி களில் சிரத்தையுடன் ஈடுபட வைக்கும்.

மரணத்தை எப்போதும் நினைப்பவன் பாவம் செய்ய மாட்டான். அவனது வாழ்க்கை

தெய்வபக்தி கொண்டதாகவும், தூய்மையாகவும் விளங்கும்.

''பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய், துன்பம் ஆகியவற்றிலுள்ள தீமைகளை ஒரு சாதகன் சிந்திப்பது நல்லது'' என்று, பகவத்கீதையும் *(13.8)* அறிவுரை தருகிறது.

ஓரளவிற்காகிலும் மனம் தூய்மையுடன் இருந்தால்தான், பகவத்கீதை கூறுவது போன்று மரணம் பற்றிய சிந்தனையை முறையாகவும் ஓர் ஆத்மசாதனையாகவும் செய்ய முடியும்.

51. ஆவியுலகம்-இறந்தவர்களுடன் பேசுதல்

277. கேள்வி: ''இறந்த பிறகு மனிதர்கள் ஆவியுலகத்தில் இருக்கிறார்கள்; அவர்களுடன் நாம் பேச முடியும்'' என்று சிலர் கூறுகிறார்கள்.

அதை மறுத்து சிலர், ''ஆவியுலகம் என்று ஒன்று கிடையாது. ஆவியுலகம் என்று சொல்வதெல்லாம் பொய்'' என்று கூறுகிறார்கள்.

இதைப் பற்றி உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

பதில்: ஆவியுலகம் என்ற ஒன்று இருக்கிறது என்பது உண்மைதான். ஆவியுலகத்தில் இருப்பவர்களுடன் மீடியம் லம் தொடர்புகொண்டு சிலர் பேசவும் செய்கிறார்கள் என்பதும் உண்மைதான்.

ஆவியுலகத்தில் இருப்பவர்களுடன் தொடர்புகொண்டு பேச வேண்டும் என்பதில், சிலருக்கு விசித்திரமான ஓர் ஆர்வம் இருக்கிறது.

இதைப் பயன்படுத்தி, 'உங்களை மீடியம் லம் ஆவியுலகத்தில் பேசச் செய்கிறோம்' என்பதைச் சிலர் வியாபார ரீதியில் செய்கிறார்கள்.

வியாபாரம் என்று வந்துவிட்டால், எல்லாத் துறைகளிலும் ஏமாற்றுத்தனம் - கலப் படம் - போலிகள் - மோசடிகள் - இருப்பது போல், ஆவியுலகில் தொடர்புகொள்வது என்ப திலும் ஏமாற்றுத்தனம்- கலப்படம் - போலிகள் இருந்துகொண்டிருக்கின்றன.

ஆவியுலகம் பற்றிய உண்மைச் செய்தி களிலிருந்து, பாமர மக்களுக்குச் சில படிப் பினைகள் கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

அவை வருமாறு:

இந்த உலகில் வாழ்வதோடு மனிதனின் வாழ்க்கை முடிந்துவிடவில்லை. (முக்தி பெற்ற ஆன்மாக்களைத் தவிர) உடலை உகுத்த பிறகும் மனிதனுக்கு வேறு விதமான வாழ்க்கை தொடர்கிறது.

இந்த உலகில் வாழும் மனிதன் தெய்வ பக்தி, தானம், தவம், நேர்மை, சத்தியம், தர்மம், தியாகம், மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்தல் போன்ற தெய்விகக் குணங்களைக் கடைப் பிடித்து வாழ்வதால் மட்டுமே மறுஉலகில் நற்கதி பெற முடியும். இத்தகைய தெய்விகக் குணங்களைப் புறக்கணித்துத் தீய வழிகளில் செல்பவர்கள், உடலை உகுத்த பின்பு பெறும் மறுமை வாழ்க்கையில் முடிவில்லாத துன்பங் களையும் அவலங்களையும் அனுபவிக்கிறார்கள்

- இது போன்ற உண்மைகளையும், சில எச்சரிக்கைகளையும் ஆவியுலகம் பற்றிய உண்மைச் செய்திகள் மிகவும் தெளிவாகவே உணர்த்து கின்றன.

எனவே இவற்றின் லம் மனிதன் உலகில் புண்ணிய வாழ்க்கையே வாழ வேண்டும்; பாவ வாழ்க்கையைத் தவிர்க்க வேண்டும் என்ற ஒரு பெரிய படிப்பினையை ஆவியுலக ஆராய்ச்சியின் முடிவுகள் அறிவித்தி ருக்கின்றன.

ஆவியுலகில் இருப்பவர்கள் நம்மைக் காட்டிலும் நல்லவர்கள், உயர்ந்தவர்கள், உண்மையே பேசுவார்கள், பிறருக்கு உதவுபவர்களாக இருப்பார்கள் - என்று பொதுவாகப் பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல.

இந்த உலகில் வாழும்போது மக்கள் எத்தகைய மனநிலையிலும், ஆசாபாசங்களுடனும் வாழ்ந்தார்களோ, அப்படியேதான் அவர்கள் ஆவியுலகத்திலும் வாழ்கிறார்கள்; ஆவியுலகத்தில் இருப்பதால் அவர்களின் மன நிலையில் எந்த மாற்றமும் ஏற்படுவதில்லை.

'மீடியம்' லம் ஆவியுலத்தில் தொடர்பு கொண்டபோது அந்த ஆவிகள் பொய் சொல்கின்றன; நம்பத்தகாதவற்றைக் கூறுகின்றன; தவறான செய்திகளைக் கூறின என்பதற்கு ஆவியுலகம் பற்றிய நூல்களில் எத்தனையோ உதாரணங்கள் உள்ளன.

'மீடியம்' லம் ஆவிகளுடன் தொடர்பு கொண்டு அவை கூறுவது உண்மையாகவே

இருந்தாலும்கூட - ஆவியுலகம் பற்றிய செய்திகளில் ஆன்மிக சாதகர்கள் கவனம் செலுத்தக் கூடாது.

'மீடியம்' லம் ஆவியுலகில் தொடர்பு கொள்வது என்பதில் போலித்தனம், மோசடித் தனம் இல்லாமல் உண்மை இருந்தாலும்கூட ஆன்மிக சாதகர்கள் இவற்றில் கவனம் செலுத்துவது நல்லதல்ல.

★★★

தற்கொலை செய்துகொள்பவர்களும், விபத்தில் இறந்து போகிறவர்களும் இருள் மயமான உலகில் துன்பங்களில் உழல்கிறார்கள்.

இயற்கை மரணம் அடைபவர்கள் பித்ரு லோகம் என்ற உலகில் இருக்கிறார்கள்.

செயற்கை மரணம் அடைந்தவர்கள் இருக்கும் உலகம் வேறு; இயற்கை மரணம் அடைந்தவர்கள் இருக்கும் பித்ரு உலகம் வேறு. இரண்டும் ஒரே இடமல்ல; வெவ்வேறான இடங்கள்.

ஆனால் மேற்கூறிய இரண்டு இடங்களையும் சேர்த்து 'ஆவியுலகம்' என்ற சொல்லால் இப்போது சிலர் குறிப்பிடுகிறார்கள். இது சரியல்ல.

இந்த உலகில் புண்ணியச் செயல்களைச் செய்பவர்கள் - தங்களின் மரணத்திற்குப் பிறகு தங்களின் புண்ணியச் செயல்களுக்கு ஏற்ப - புண்ணிய உலகங்களை அடைந்து இன்பம் அனுபவிக்கிறார்கள். அங்கு அவர்களின்

புண்ணியப் பலன் தீர்ந்ததும் - தங்களின் ஆசைகளுக்கு ஏற்ப மீண்டும் மனிதர்களாகவோ, விலங்கு, பறவை, நீர் வாழ்வன, செடிகொடிகள் முதலான வேறு உயிரினங்களாகவோ பிறக்கிறார்கள்.

இதற்கு மாறாக, இந்த உலகில் பாவ காரியங்களைச் செய்து பாவங்களைச் சேர்த்தவர்கள், தங்கள் பாவவினைகளுக்கு ஏற்பத் தாழ்ந்த உலகங்களுக்குச் சென்று எல்லையற்ற துன்பங்களை அனுபவிக்கிறார்கள். அங்கு அவர்கள் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை அனுபவித்த பிறகு, தங்கள் ஆசைகளுக்கு ஏற்ப அவர்கள் மீண்டும் மனிதர்களாகவோ, வேறு உயிரினங்களாவோ பிறக்கிறார்கள்.

★★★

இறந்தவர்கள் ஆவியுலகத்தில் குறிப்பிட்ட காலம் மட்டுமே இருக்கிறார்கள். இது ரயில்வே ஸ்டேஷனில் ஒரு வண்டிக்காகப் பயணிகள் காத்திருப்பது போன்றது. தங்களுக்குரிய ரயில் வந்ததும் அதில் பயணிகள் ஏறிச் செல்கிறார்கள். அதுபோல் ஆவியுலகத்தில் இருக்க வேண்டிய கால வாழ்க்கை நிறைவு பெற்றதும், அங்குள்ள ஆவிகள் வேறு உலகங்களுக்குச் சென்றாக வேண்டும்.

இறந்தவர்களுடன் அவர்கள் ஆவியுலகில் இருக்கும் காலத்தில் மட்டும்தான் மீடியம் லம் தொடர்புகொள்ள முடியும் - என்பதை முக்கியமாக மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். மற்றபடி இறந்தவர்களுடன் மீடியம் லம் எவ்வளவு காலத்திற்கு வேண்டுமானாலும்

தொடர்புகொள்ள முடியாது - நீண்ட காலம் தொடர்புகொள்ள முடியாது.

'மனிதன் எதை நினைக்கிறானோ அதுவாகவே ஆகிறான்' என்பது பெரியோர்களின் வாக்கு.

எனவே இறைவனைப் பற்றியே சிந்திப்பவன் இறைவனின் குணங்களைப் பெற்று இறைவனோடு ஒன்று சேர்கிறான். இதற்கு மாறாக ஆவியுலகம், பேய், பிசாசு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் அவற்றின் மயமாகத்தான் ஆக வேண்டும்.

ஆன்மிக சாதகர்கள் ஆகிய நாம் ஜபம், தியானம், பிரார்த்தனை, பூஜை, சத்சங்கம், அருள் நூல்களைப் படித்தல், விரதம், புலனடக்கம், தியாகம், தொண்டு போன்றவற்றின் லம் இறைவனுடன் தொடர்புகொண்டு இறைவன் மயமாக விரும்புகிறோம்.

எனவே ஆவியுலகம் பற்றிய சிந்தனைகளில், ஆன்மிக சாதகர்கள் கருத்துச் செலுத்துவது விரும்பத்தக்கது அல்ல.

ஆவியுலகத் தொடர்புகொள்ளாமல் இருப்பது நமக்கும் நல்லது; ஆவிகளுக்கும் நல்லது.

ஆவியுலகம் பற்றிய சிந்தனைகளில் உயர்ந்த ஆத்ம சாதகர்கள் கவனம் செலுத்த மாட்டார்கள்.

மனிதர்கள் இறந்தவர்களுடன் தொடர்பு கொள்வது என்பதை இயற்கை மறுத்திருக்கிறது; அதனால்தான் மனிதர்கள் இறந்தவர்களுடன்

தொடர்புகொள்வதை இயற்கை மறைத்தும் வைத்திருக்கிறது. இந்த நிலையில் மனிதர்கள் இறந்தவர்களுடன் பேச முற்படுவது, இயற்கை வகுத்த விதியை மீறும் செயலாகவே ஆகும்.

52.மனம்

278. *கேள்வி: மனசாட்சி என்றால் என்ன?*

□பதில்:மனசாட்சி என்பது சத்தியத்தின் வடிவம். அது தெய்வத்தின் குரல்.

279. *கேள்வி:'ஞானக்கண்' என்றால் என்ன?*

□பதில்: மிகவும் தெளிந்த உள்ளமே 'ஞானக்கண்' என்று சொல்லப்படுகிறது.

280. *கேள்வி: மனவலிமையை வளர்த்துக்கொள்வது எப்படி?*

□பதில்: உண்மையைக் கடைப்பிடிப்பதால், நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதால், உள்ளத்தில் ஆக்கபூர்வமான நல்ல சிந்தனைகளைக் கொண்டிருப்பதால், பிரம்மச்சரியம் கடைப்பிடிப்பதால், தியானம் முதலான ஆன்மிக சாதனைகளைப் பழகுவதால் மனம் வலிமை பெறுகிறது.

281. *கேள்வி: மனத்தைப் பண்படுத்துவது எப்படி?*

□பதில்: உடற்பயிற்சியினால் உடல் வலிமை பெறுகிறது. அதுபோல் மனப்பயிற்சியினால் மனம் பண்படும்.

282. *கேள்வி: மனத்தில் நல்ல சிந்தனைகள் ஏன் இருக்க வேண்டும்?*

□பதில்: மானம் காக்க ஆடை உதவுகிறது. அது போல் மனத்தைக் காப்பதற்கு நல்ல சிந்தனைகள் உதவுகின்றன.

நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்ய முடியும். ''விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்காது. தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்று பழமொழிகள் கூறுகின்றன. இவை போன்ற பழமொழிகள் எதுவும் சும்மா உருவாகிவிடவில்லை. அவை நீண்ட நெடிய அனுபவத்தின் வெளிப்பாடுகள் என்பதை நாம் உணர வேண்டும்.

கோபம், பொறாமை, வெறுப்பு போன்றவற்றை உள்ளத்தில் விதைத்தால் - ஒரு நெல் மணியை விதைத்தால் அது பல நெல் மணிகளைத் தருவதைப்போல், ஒரு மாங்கொட்டையை நட்டால் அது பல மாங்கனிகளைத் தருவதைப்போல் - அது பல மடங்காக உள்ளத்தில் வளர்ந்தோங்கி அறுவடையாகும். அதனால் நம் வாழ்க்கை பாதிக்கப்படும். இது போலவே நல்ல எண்ணங்களை நாம் நம் உள்ளத்தில் விதைத்தால், அவை பல மடங்காக வளர்ந்தோங்கி நம் வாழ்க்கையை வளப்படுத்தும்.

பயிரை வயலில் வளரச் செய்வதால் பயன் உண்டு. களையை வயலில் வளரச் செய்வதால் பயனில்லை. நல்ல எண்ணங்கள்தான் பயிர். தீய எண்ணங்கள்தான் களை.

தீய சிந்தனைகள் காலப்போக்கில் மன அமைதியைக் குலைத்துவிடும்.

சிறந்த எண்ணங்கள் இறைவனின் கோயில்களே ஆகும்.

மனிதன் மனநிம்மதி இல்லாமல் இருப்பதற்கு 1.உலக ஆசைகள், 2.தவறான அணுகுமுறைகள் காரணமாக அமைகின்றன.

283. கேள்வி: மனத்தில் கவலை இருப்பது, மனத்தில் கவலை இல்லாமல் இருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: மனத்தில் கவலைக்கு இடம் தருவது பாவம். மனத்தில் மகிழ்ச்சிக்கு இடம் தருவது புண்ணியம். மனத்தில் இறைவனுக்கு இடம் தருவது மிகவும் பெரிய புண்ணியம்.

284. கேள்வி: மனத்தில் உள்ள கவலையைப் போக்கு வதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

□பதில்:குளிரை நீக்கிக்கொள்வதற்கு நாம் உஷ்ணத்தை நாடுகிறோம்; பசி நீங்க வேண்டு மானால் உணவு உட்கொள்கிறோம்; நோய் நீங்குவதற்கு மருத்து வரை நாடுகிறோம்; இருள் நீங்குவதற்கு விளக்கைப் போடுகிறோம்.

அதுபோல் மனக்கவலை நீங்குவதற்கு இறைவனை நாட வேண்டும். இதை ''தனக்கு வமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது'' என்று, தமிழ்த்தாயின் உயிர் நிலையாக விளங்கும் திருவள்ளுவம் (குறள்-7) கூறுகிறது.

285. கேள்வி:ஒருவன் மனத்தில் தீய ஆசைகள் தோன்றுவதற்கு என்ன காரணம்?

□பதில்:தன்னைத் தான் உணராததாலும், அஞ்ஞானத்தாலும்தான் ஒருவனிடம் தீய ஆசைகள் தோன்றுகின்றன.

286. கேள்வி: நல்ல மனம், கெட்ட மனம் ஆகிய வற்றுக்கு விளக்கம் கூறுக.

□பதில்: இறைவனை அனைவரிடமும், எங்கும் காணும் மனம்; சமத்துவ நிலையில் உள்ள

மனம்; நன்மைக்கு நம்மை அழைத்துச் செல்லும் மனம் நல்ல மனமாகும்.

காமம், கோபம், பொறாமை, களவு போன்றவை நிறைந்த மனம்; ஆசைகளில் உழலும் மனம்; தீமையை நோக்கி நம்மை இழுத்துச் செல்லும் மனம் தீய மனமாகும்.

மனம் கீழ்நோக்கிச் செல்லும்போது, பந்தத்தில் சென்று அகப்பட்டுக்கொள்கிறது. அதே மனம் மேல்நோக்கிச் செல்லும்போது, விடுதலை என்ற முக்தியை அடைகிறது. □

287. கேள்வி: என் மனத்தில் இறைவனைப் பற்றிய சிந்தனை இருப்பதால் எனக்கு என்ன லாபம்? என் மனத்தில் தீய சிந்தனை இருப்பதால் எனக்கு என்ன நஷ்டம்?

□பதில்: மனித மனம் ஒரு விந்தையான களஞ் சியம். உடல் வாழ்வதற்குச் சத்தான உணவு தேவைப்படுவது போல, மனம் வளமாக இருப்பதற்கு இறைவனைப் பற்றிய சிந்தனைகள் அவசியம்.

மனத்தில் தெய்வ சிந்தனைகளும், நற்சிந்த னைகளும் அதிகமாக, அதிகமாக அந்த அளவுக்கு மனம் தூய்மை அடைகிறது.

மனத்தில் தீயசிந்தனைகள் அதிகமாக அதிகமாக அந்த அளவுக்கு மனம் தூய்மையை இழக்கிறது.

மேலும் தீய எண்ணங்கள் மனிதனின் அறிவை மழுங்கச் செய்கின்றன.

288. கேள்வி:மனமகிழ்ச்சியுடன், மனநிம்மதியுடன் வாழ்வதற்கு ஏதாவது ஒரு வழி இருக்கிறதா?

□பதில்:இது வரையில் உலகில் எந்தத் தலை முறையும் பெறாத பல வாழ்க்கை வசதிகளை நாம் பெற்றிருந்தாலும், நாம் மகிழ்ச்சியில்லாமல் -மனஅமைதியில்லாமல் வாழ்கிறோம். அதற்குக் காரணம், நமது அறிவுதான் வளர்ந்திருக்கிறதே தவிர, நமது இதயம் வளரவில்லை; நமது மனம் போதிய அளவிற்குப் பண்படவில்லை.

''ஒரு நாள் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமானால், சலூனுக்குப் போய்த் தலை முடியை அலங்காரம் செய்துகொள். ஒரு வாரம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், குதிரை வாங்கு. ஒரு மாதம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், திருமணம் செய்துகொள். ஓராண்டுக் காலம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டு மானால், புதிதாக வீடு கட்டு. நிரந்தரமாக மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமானால் நேர் மையை மட்டுமே பின்பற்று'' என்று, ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகிறது.

இந்தப் பழமொழி, 'மனிதன் நிலையான மகிழ்ச்சியையும் நிலையான மனநிம்மதியையும் நேர்மையான வாழ்க்கையின் லம்தான் பெற முடியும்' என்பதை உணர்த்துகிறது.

இறைவனிடம் மனத்தைச் செலுத்தும் அளவிற்கேற்ப, நமக்கு மனநிம்மதி கிடைக்கும்.

289. கேள்வி:என் மனம் வீணாகச் சஞ்சலப்படுகிறது. இதிலிருந்து நான் விடுபடுவதற்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள்?

□பதில்: எல்லாம் இறைவன் நிச்சயித்தபடியே தான் நடக்கும். இதை உணர்ந்து நாம் நடந்து

கொள்ளும் அளவிற்கு மனத்தில் வீண் சஞ்சலம் இருக்காது.

'எது வாழ்க்கையில் நடந்தாலும் அது நமது நன்மைக்காகவே ஏற்படுகிறது' - என்று நினைப்பது உடன்பாட்டுச் சிந்தனையாகும். இதனால் மனஇறுக்கம் இல்லாமலும், மன அமைதியுடனும் வாழ முடியும்.

முறையான நீண்ட நெடிய பயிற்சிகளின் லம்தான் மனத்தில் தேவையற்ற எண்ண ஓட்டத்தை நிறுத்த முடியும்.

53.மனத்தூய்மை

290. கேள்வி: 'மண்ணில் நல்லவண்ணம்' வாழ்வது எப்படி?

□பதில்: நல்ல எண்ணங்களால், அவற்றைச் சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்தும் முறைகளால் - மனிதன் இறைவனின் பிரதி நிதியாக 'மண்ணில் நல்லவண்ணம்' வாழலாம்.

291. கேள்வி: மனம் தூய்மை பெறுவதற்கு ஒரு சுலபமான வழி சொல்லுங்கள்?

□பதில்: இறைவனின் திருநாமத்தை எவ்வளவு அதிகமாக இயலுமோ, அவ்வளவு அதிகமாக ஜபம் செய்யுங்கள்.

292. கேள்வி: மனத்தூய்மை பெறுவது எப்படி? மனம் தூய்மையை இழப்பதற்கு என்ன காரணம்?

□பதில்: உள்ளத்தில் உயர்ந்த சிந்தனைகள், தெய் விகச் சிந்தனைகள் அதிகமாக அதிகமாக அதற் கேற்ப மனம் தூய்மை அடைகிறது.

உள்ளத்தில் தீய சிந்தனைகள், அறத்திற்குப் புறம்பான சிந்தனைகள் அதிகமாக அதிகமாக அதற்கேற்ப மனம் தூய்மையை இழக்கிறது.

293. கேள்வி: "தூய எண்ணங்கள் மனிதனிடம் இருக்க வேண்டும்" - இதைப் பற்றி ஏதேனும் கூறுங்கள்?

☐பதில்: நாம் செய்யும் செயல்களுக்கும், பேசும் பேச்சுகளுக்கும் எண்ணமே அடிப்படையாக இருக்கிறது. எனவே தூய எண்ணம் மனித வாழ்க்கையில் முதல் முக்கியத்துவம் பெறுகிறது.

முதல் நிலையில், மிருகங்களால் தனக்கு ஆபத்து வரும் என்று மனிதன் நினைத்தான். பிறகு அதைவிட பிற மனிதர்களால் தனக்கு ஆபத்து வரும் என்று, இரண்டாவது நிலையில் மனிதன் நினைத்தான். ன்றாவது நிலையில், மற்ற மனிதர்களைவிட தனது தீய சிந்தனைகளால்தான் தனக்கு அதிக ஆபத்து என்று உணர்ந்து, மனிதன் தன் சிந்தனைகளை ஆன்மிகத்தின் துணையால் நெறிப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுகிறான்.

294. கேள்வி: மனம் அசுத்தமடைவதற்கு என்ன காரணம்?

☐பதில்: நிலையற்ற உலகப் பொருள்கள் மீது நாம் கொள்ளும் பற்றுக் காரணமாக, மனம் அசுத்தமடைகிறது.

295. கேள்வி: மனத்திலுள்ள மாசுகளை நீக்கிக்கொள்வதற்கு, அன்றாட வாழ்க்கையில் பின்பற்றுவதற்குரிய ஒரு வழியைச் சொல்லுங்கள்?

□பதில்: வீட்டில் குப்பை சேராமல் பெருக்கிச் சுத்தப்படுத்துவது போல ஜபம், தியானம், பிரார்த்தனை, பூஜை போன்ற ஆன்மிக சாதனைகளால் அன்றாடம் உள்ளத்தில் சேரும் மனமாசுகளை நீக்கிக்கொள்ள முடியும்.

மனம் ஒரு விதத்தில் நிலம் போன்றது. நிலத்தில் பயிரோடு சேர்ந்து களையும் வளர்கிறது. தோட்டக்காரன் இடைவிடாமல் களையை நீக்கிக்கொண்டே இருப்பதுபோல், நாம் நமது உள்ளத்தில் தீயவை தோன்றும் போதெல்லாம் அவற்றை, ''இறைவா! இது போன்ற தீய சிந்தனைகள் என் உள்ளத்தில் தோன்றாமல் இருப்பதற்கு அருள் புரியுங்கள்'' போன்ற பிரார்த்தனைகள் செய்து, தீய சிந்தனைகளை இடைவிடாமல் நீக்கியபடியே இருக்க வேண்டும்.

பயிற்சியும் முயற்சியும் இல்லாமல் மனத்தை மாசில்லாமல் வைத்துக்கொள்ள இயலாது.

மனமாசுகளும் ஆசைகளும் அகல ஆண்டவன் அருள் வேண்டும். ஆண்டவன் அருள் பெற்றால் மனம் ஒடுங்கும்.

பொதுவாகக் காலில் மண் ஒட்டாது. நீருடன் மண் கலந்த சேறாக இருந்தால் காலில் அது ஒட்டிக்கொள்ளும். அதை நீரால்தான் கழுவிப் போக்க முடியும். அதுபோல் மனத்தால் ஏற்படும் பாவங்களை மனமாற்றத்தால்தான் போக்கிக்கொள்ள முடியும்.

296. கேள்வி: மனத்தில் ஆயிரம் அசுத்தங்களை வைத்துக்கொண்டு - தீய பழக்க வழக்கங்களை

வைத்துக்கொண்டு - இறைவனை வழிபடுபவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

☐பதில்: நற்பண்புகள் கொண்டவர்கள் மட்டுமே ஆன்மிக வாழ்க்கையில் முன்னேற முடியும். மனத்தூய்மை இல்லாத இறைவழிபாடு, அசுத்தமான பாத்திரத்தில் சமையல் செய்வது போன்றது.

''வெள்ளமுள்ள விரிசடை நந்தியைக் கள்ளமுள்ள மனத்தவர் காண்கிலார்'' என்கிறார் திருநாவுக்கரசர்.

மனம் என்பது பெருங்காடு. இந்தக் காட்டை - நிலத்தைத் திருத்திப் பண்படுத்த வேண்டும். பண்பட்ட அந்த நிலத்தில்தான் ஆன்மிகப் பயிர் செழிக்கும்.

எனினும் தூய்மையற்ற மனமும், தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஆன்மிக சாதனைகளால் காலப்போக்கில் தூய்மை பெற்றுவிடும்.

இறைவனைத் துணையாகக் கொள்வதன் லம், வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியையும் தவமாக வாழவும் முடியும்; தீவினைகளையும், தீய பழக்கங்களையும் தவிர்த்துக் கொள்ளவும் முடியும்.

54.மனஅமைதி

297. கேள்வி:மனஅமைதி பெறுவது எப்படி?

☐பதில்: காம குரோதங்களை அடக்கியவன், இறைவனிடம் சரணடைந்தவன் மனஅமைதி பெறுகிறான்.

298. கேள்வி: மனஅமைதியுடன் வாழ்வது எப்படி?

□பதில்: நமது வாழ்க்கையைத் தூய ஆன்மிக வாழ்க்கையாக அமைத்துக்கொள்வது ஒன்றின் லமாகத்தான், நாம் மனஅமைதியுடன் வாழ முடியும்.

நமது எண்ணங்கள் எப்படியோ, அப்ப டியே நமது வாழ்க்கையும் அமையும்.

சராசரி மனிதனின் மனம் சாதாரண அற்ப விஷயங்களில் ஆனந்தம் கொள்ளும். நாம் உன்னத வாழ்க்கையில் இன்பம் காண்பவர்களாக வாழ வேண்டும். பொதுவாகக் கூறினால், நீண்ட கால அனுபவத்திற்குப் பிறகுதான் மனித மனம் உயர்ந்த விஷயங்களில் ஈடுபாடு கொண்டு நிலைத்து நிற்கிறது.

299. கேள்வி: மனஅமைதியுடன் வாழ்வதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

□பதில்: மனத்தில் ஆசைகள் அதிகமாக அதிக மாக, அந்த அளவுக்கு மனஅமைதி குறையும். மனத்தில் அமைதி அதிகமாக அதிகமாக, அந்த அளவுக்கு ஆசைகள் குறையும்.

ஒழுக்கநெறியும் தவமும் உடையவர்கள் மனஅமைதியுடன் வாழ்கிறார்கள். ''தியாகத்தால் மனஅமைதி கிடைக்கும்'' என்று பகவத்கீதை கூறுகிறது.

''தனக்குவமை இல்லாதவனாகிய இறை வன் திருவடியை அடைவதன் லமாகத்தான் மனஅமைதி பெற முடியும்'' என்று திருக்குறள் (எண்-7) கூறுகிறது.

''உனக்கு மனஅமைதி வேண்டுமானால் பிறர் குற்றத்தைப் பார்க்காதே'' என்று, நமது அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் கூறியுள்ளார்.

300. கேள்வி: மனஅமைதியுடன் வாழ்வதற்கு என்ன வழி?

☐பதில்: மனம் அமைதியாக இருந்தால், வாழ்க்கையும் அமைதியாக இருக்கும்.

மனத்தில் அமைதியில்லாமல் இருந்தால் - வாழ்க்கை கறை படிந்த வாழ்க்கையாக, களங்கம் உள்ள வாழ்க்கையாக இருக்கும்.

மனத்தில் அமைதி நிலவுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது மனம் அறநெறிகளையும், இறைவனையும் பற்றியிருக்க வேண்டும் என்பதுதான்.

இளமைப் பருவத்திலிருந்து தெய்வபக்தி, நற்பண்புகள், தொண்டு, தியாகம் போன்றவற்றைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள், வாழ்நாள் முழுவதும் மனஅமைதியுடன் வாழ்கிறார்கள்.

ஆடம்பரப் பொருள்களை நாம் 'அத்தியாவசியமானவைகள்' என்று கருதுவதால், தேவைகள் அதிகரிக்கின்றன. அதனால் நாம் நம் மனஅமைதியையும் இழந்து, அவதிப்படும் நிலை வருகிறது. தேவைகள் குறையும் அளவிற்கு நாம் மனநிம்மதியுடன் வாழலாம்.

எதன் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால், மனஅமைதி நம்மை விட்டுப் போய்விடும்.

தீயவை நம் நெஞ்சின் நிம்மதியைப் பறித்துவிடுகின்றன.

பிறரிடம் அன்பு செலுத்துவது நமக்கு மனஅமைதியைத் தரும்.

நமது உள்ளம் உயர உயர மனஅமைதியும் பெருகும்.

இறைவனின் திருவடிகளில் மட்டுமே, நமக்கு உண்மையான அமைதியும் ஆறுதலும் அடைக்கலமும் கிடைக்கும்.

'நான், எனது' என்பவை நம்மிடமிருந்து நீங்கினால் நமது ஆழ்மனத்தில், ஆத்மாவில் அமைதி நிலவுகிறது.

55.மனத்தை அடக்கும் வழி

301. **கேள்வி:மனஅடக்கத்தை வளர்த்துக்கொள்வதற்கு உரிய வழி என்ன? மனஅடக்கத்தால் விளையும் நன்மை என்ன?**

□பதில்: மனிதனுக்குக் கை, கால், கண், க்கு போன்ற புற உறுப்புகள் இருப்பது போன்று, மனம் என்ற ஓர் அக உறுப்பும் இருக்கிறது.

குரு உபதேசத்தைப் பின்பற்றுவதாலும், சத்சங்கத்தாலும், பயிற்சியாலும் (அப்யாசத் தாலும்), வைராக்கியத்தாலும், அருள் நூல்களைத் தவறாமல் படிப்பதாலும், ஆன்மிக சாதனை களாலும், மனஅடக்கத்தைப் படிப்படியாக வளர்த்துக்கொள்ள முடியும்.

யானை தன் துதிக்கையை எப்போதும் ஆட்டிக்கொண்டிருக்கும். அது அடங்குவதற்கு யானையின் துதிக்கையில் ஒரு தடியைக் கொடுப்பார்கள். யானை போன்று அலைவதால் மனம் பலவீனமாவதைத் தடுப்பதற்கும், மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கும் இறைநாம

ஜபம், ர்த்தி தியானம் ஆகியவை உதவு கின்றன.

தெய்விகக் குணங்களாகிய நற்பண்பு களைக் கடைப்பிடிப்பது, மன அடக்கத்தை வளர்த்துக்கொள்வதற்குப் பெரிதும் உதவுகிறது.

மனத்திற்கு நல்ல பயிற்சி அளித்து உயர்ந்த நிலையில் வைத்திருப்பவர்கள், வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள்.

மனஅடக்கத்தால் விளையும் சிறிய சிறிய பலன்கள் பல உண்டு. மனஅடக்கத்தால் விளை யும் பெரும் பயன் ஒன்று உண்டு. அதுவே இறைவனை வழிபடுதல், இறைவனை உணர் தல், இறைவன் மயமாதல், வீடுபேறு பெறுதல்.

மனம் அடங்குவதுதான் வாழ்க்கையின் பயன். காரணம், மன அடக்கம்தான் பிரம்மத்தை அடைவதற்கு உரிய சரியான வழியாகும். மன விகாரங்கள் மடிந்தால்தான் ஒருவர் முக்தி பெற இயலும்.

மனக்கட்டுப்பாடு இல்லாத நிலையில் நல்ல ஆன்மிக வாழ்க்கை அமையாது.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. (குறள்-422)

பொருள்: ''மனத்தை அது போன போக்கில் போகவிடாமல் தடுத்து, தீமைகளி லிருந்து விலக்கி, நன்மையில் செலுத்துவதே அறிவாகும்.''

மனத்தை அது போகும் போக்கில் செல்ல விடாமல் கட்டுப்படுத்தி, ஒரு நெறிக்குள்

கொண்டு வருவதன் லம் மனம் வலிமை பெறும்; அதனால் ஆன்மிக முன்னேற்றமும் ஏற்படும்.

மனத்தை ஒருமுகப்படுத்துதல் என்ற ஏணியால் எந்த இலக்கையும் எட்ட முடியும்.

பெருஞ்செல்வந்தராக இருந்த பட்டினத்தார், ''காதற்ற ஊசியும் வாராது காண் நின் கடைவழிக்கே!'' என்றும், ''பற்றித் தொடர்வன இருவினைப் புண்ணிய பாவங்களே'' என்றும் குறிப்பிடுகிறார். இது போன்ற உலகத்தின் நிலையற்ற தன்மையைச் சரியாக உணர்ந்து கொள்ளும்போதுதான் மன அடக்கம், ஆடம்பர மின்மை, ஆத்மசாதனை, தியாகம், தொண்டு, ஏழ்மையை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவை ஒருவனிடம் இயல்பாக அமைகின்றன.

56. வைராக்கியம்

302. கேள்வி:விவேகம், வைராக்கியம் என்றால் என்ன?

□பதில்:நித்தியம் எது - அநித்தியம் எது, ஆத்மா எது - அநாத்மா எது, பொய் எது - மெய் எது என்பதை உணர்வது விவேகம் எனப்படும். புலனின்பங்களில் பற்றுக்கொள்ளாமல் இருப்பது வைராக்கியம் எனப்படும்.

303. கேள்வி: 'வைராக்கியம்' என்ற சொல்லுக்கு விளக்கம் வேண்டும்?

□பதில்: உலக வாழ்க்கையில் சுகம் இருக்கிறது என்று, மனிதன் ஆரம்பத்தில் நினைக்கிறான்.

மனித மனம் பக்குவம் பெறும்போது - உலக வாழ்க்கையில் சுகமில்லை என்ற உண்

மையை உணர்ந்து அதில் - பற்றின்மை ஏற்படுகிறது. இந்தப் பற்றின்மையே வைராக்கியம் என்று சொல்லப்படுகிறது.

இந்தப் பற்றின்மையே உண்மையான ஆன்மிக வாழ்க்கையின் திறவுகோல்.

304. கேள்வி: 'வைராக்கியம்' என்ற சம்ஸ்கிருத சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்: 'உலகப் பற்று நீங்கிய நிலை' என்று பொருள். நம்மைப் படுகுழியில் ஆழ்த்தும் உலக ஆசைகளை விட்டு விடுவதுதான் வைராக்கியம் என்று சொல்லப்படுகிறது.

வைராக்கியத்தைப் பற்றிக்கொண்டவனுக்கு அமைதியும் ஆனந்தமும் தானாக வந்து சேருகின்றன.

உலகப் பொருள்களில் தீவிரப் பற்றின்மை என்பதோடு, இறைவன் மீது தீவிர பற்றும் கொண்டிருப்பதுதான் 'வைராக்கியம்' என்பதற்கு உரிய சரியான பொருளாகும்.

305. கேள்வி: ஒரு சிலரிடம் மட்டுமே தீவிர வைராக்கியம் காணப்படுகிறது. பலரிடம் அது இல்லை. இதற்கு என்ன காரணம்?

□பதில்: உலக ஆசைகள் நிறைந்திருப்பவர்களிடம் தீவிர வைராக்கியம் ஏற்படாது. உலக ஆசைகள் இல்லாத பாக்கியசாலிகளிடம் மட்டுமே தீவிர வைராக்கியம் இருக்கும்.

57.கோபம்

306. கேள்வி: ''சினம் காக்க'' என்பதற்கு விளக்கம் தரவும்.

□பதில்: கோபத்தில் மனிதனின் அறிவு மழுங்கி விடுகிறது. கோபம் மனிதனைச் சிறுமைபடுத்தும் என்பதால், ''சினம் காக்க'' என்றார் வள்ளுவர். சினம் நமது புண்ணியப் பலனையும் அழித்துவிடும்.

307. கேள்வி: கோபத்தை எப்படி கட்டுப்படுத்துவது?

□பதில்:வெள்ளத்தை அப்படியே விட்டுவிடுவது எளிது; கட்டுப்படுத்துவது அரிது. அது போன்று தான் கோபமும்.

கோபம் மனிதனின் அறிவையும் புனிதத் தையும் அழித்துவிடுகிறது.

மன்னிக்கும் தன்மையாலும், பொறுமை யாலும், சகிப்புத் தன்மையாலும் சான்றோர்கள் கோபத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

308. கேள்வி: கோபத்திற்கும் துன்பத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

□பதில்: கோபம் உள்ளத்திலிருந்து நீக்க வேண்டிய களை. கோபம் அதிகமாகும்போது, அது பகையாக வடிவம் கொள்கிறது. அதனால் கோடானுகோடிப் பேர் அழிந்து போயிருக்கி றார்கள். கோபம் முன்னால் செல்லும். அதைத் தொடர்ந்து பின்னால் துன்பம் செல்லும்.

கோபம் ஒருவனைத் தன் வாழ்க்கை இலட்சியத்திலிருந்தே நழுவும்படியும் செய்கிறது.

கட்டுப்படுத்தப்படாத கோபம், கோபம் கொள்பவனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தீமையை விளைவிக்கும்.

கோபத்தால் பொறுமையிழந்து விசுவாமித்திரர், தன் தவ வலிமையை இழந்தார் என்று நாம் படித்திருக்கிறோம். இதற்கு மாறாக, பொறுமையை இறுதிவரையில் கடைப்பிடித்து, அரிச்சந்திரன் தன் வாழ்க்கையில் வெற்றி பெற்றதையும் நாம் படித்திருக்கிறோம்.

309. கேள்வி: நான் கோபத்தில் கடுஞ்சொற்களைப் பேசும் இயல்புடையவன். அதைத் தவிர்ப்பதற்குரிய வழியை உதாரணம் லம் கூறுங்கள்?

□பதில்: பேச்சு இரண்டு முனை கொண்ட ஆயுதமாகும். அதைக் கொண்டு நல்லதையும் பேசலாம், கெட்டதையும் பேசலாம்; பிறர் மனம் மகிழ இனிமையாகவும் பேசலாம்; பிறர் மனம் புண்பட கடுமையாகவும் பேசலாம்.

ஸ்ரீகிருஷ்ணன் துரியோதனனின் ஆடம்பரமான வரவேற்பை ஏற்காமல், விதுரரின் அன்புக்குக் கட்டுப்பட்டு அவரது குடிசைக்குச் சென்றார். பின்னர் கண்ணனும் விதுரரும் துரியோதனனின் அவைக்குச் சென்றார்கள். ஸ்ரீகிருஷ்ணன் தனது வரவேற்பை ஏற்காததால் கோபம் கொண்டிருந்த துரியோதனன், அரசவையில் கோபத்தால் கடுஞ்சொற்களால் விதுரரை ஏசினான். இதனால், 'பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் ண்டால் அதில், தான் துரியோதனன் பக்கம் போரிடுவது' என்ற தன் முடிவை விதுரர் மாற்றிக்கொண்டு, அரசவையிலேயே தனது வில்லை முறித்தெறிந்து விட்டுச் சென்றுவிட்டார்.

இதைக் கண்ட பீஷ்மர், ''விதுரனின் இந்தச் சாபத்தால் பாண்டவர் வெற்றி உறுதியாகி விட்டது'' என்று மனம் வருந்திக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியின் லம், கொடுஞ் சொற்களைப் பேசுபவர்களுக்குப் பெருங்கேடு விளையும் என்பதை உணரலாம்.

எனவேதான், ''ஒருவர் எதைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும்'' என்று வள்ளுவர் மொழிந்தார்.

பயன்படாதவற்றைப் பேசாமல் இருப் பதும் ஓர் அறமாகும்.

தேவையானவற்றைப் பேசி, தேவையற்ற தைப் பேசாமல் இருப்பதே ஒரு கலையாகும் - இது மனிதன் கற்க வேண்டிய ஒரு தலையாய பாடமாகும்.

ங்கில் தன்னையே எரித்துவிடுவது போல் கோபம், கோபம் கொள்பவனையே எரித்துவிடுகிறது.

கோபம் காரணமாக நம்மை மறந்தும் இழந்தும் தகாத சொற்களைப் பேசுகிறோம்; தகாத செயல்களைச் செய்கிறோம். வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் ரயிலுக்கு பிரேக் இல்லாத நிலைதான் கோபக்காரனின் நிலையும். ''மாலுமி இல்லாத மரக்கலத்தை விடவும் மோசமானது கோபக்காரனின் நிலை'' என்று, நபிகள் நாயகம் கூறியிருக்கிறார்.

நாவடக்கம் இல்லாததால் சிசுபாலன் கண்ணனால் வதம் செய்யப்பட்டான்.

310. கேள்வி: நான் ஓர் இஸ்லாமியன். சமயசமரச உணர்வுடையவன்.எனக்கு நீங்கள் ஏதேனும் ஓர் அறிவுரை தாருங்கள்?

□பதில்: ஒரு சமயம் நபிகள் நாயகத்திடம் அன்பர் ஒருவர் ''எனக்கு ஏதாவது அறிவுரை தாருங்கள்'' என்று கேட்டுக்கொண்டார்.

அதற்கு நபிகள் நாயகம், ''கோபத்தை விட்டுவிடுங்கள்'' என்று கூறினார்.

அந்த அன்பர், ''எனக்கு இன்னும் ஓர் அறிவுரை தாருங்கள்'' என்றார்.

அதற்கும் நபிகள் பெருமானார், ''கோபத்தை விட்டுவிடுங்கள்'' என்று மீண்டும் பழைய பதிலையே தந்தார்.

திரும்பவும் அந்த அன்பர், ''எனக்கு ன்றாவதாக மேலும் ஓர் அறிவுரை தாருங்கள்'' என்றார்.

அதற்கும் நபிகள், ''கோபத்தை விட்டு விடுங்கள்'' என்று அதே பதிலைக் கூறினார்.

58.பொறாமை

311. கேள்வி: பொறாமை என்ற மன அழுக்கை நீக்குவது எப்படி?

□பதில்: மற்றவர்களை உறவினர்களாகவும், நண்பர்களாகவும், இறைவன் - இறைவியின் வடிவங்களாகவும் கருதிப் பழகுவதால் பொறாமை என்ற அழுக்கை நீக்கிக்கொள்ளலாம். ஆனால் இதற்கு இறைவன் திருவருளும், நீண்ட நெடிய முயற்சியும் தேவைப்படும்.

312 கேள்வி: பொறாமை ஏன் ஏற்படுகிறது?

□பதில்:சக்தியும் திறமையும் தன்னம்பிக்கையும் இல்லாதவர்கள் - பிறர் ஆக்கம் கண்டு பொறாமைப்படுவார்கள்.

போட்டி இருக்கலாம்.ஆனால் பொறாமை இருக்கக் கூடாது.

''ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது'' என்று கூறுவார்கள். ஆமை புகுவதால் வீட்டுக்கு ஒன்றும் ஆகிவிடாது; இங்கு 'ஆமை' என்பது பொறாமையைக் குறிப் பிடுகிறது.

''பாவங்களில் கொடியது பொறாமை'' என்று பகவான் புத்தர் கூறியுள்ளார்.

பொறாமை உயர்ந்த பண்பாடுகளைச் சிதைக்கிறது; அழிக்கிறது.

பொறாமையால் எப்போதும் நன்மை ஏற்பட்டதில்லை.

பொறாமை, வெறுப்பு ஆகியவை உள்ளத் தில் படிவதால் மனம் பலவீனமடைகிறது.

நெருப்பு விறகை எரிப்பது போன்று, பொறாமை ஒருவரிடம் உள்ள பல நல்ல குணங்களையும் அழித்துவிடுகிறது.

பொறாமையை மனத்தில் தோன்றும் ஒரு புற்றுநோய் என்றுதான் சொல்ல வேண்டும்.

பொறாமை உள்ளவன் தன் உள்ளத்தி லேயே தனக்கு ஒரு பகைவனை வைத்திருக் கிறான்.

குந்திக்கு பாண்டவர்கள் ஐந்து பேர் பிள்ளைகளாகப் பிறந்தார்கள். இதை அறிந்த காந்தாரி பொறாமை கொண்டாள். அதனால் அவள் தன் வயிற்றில் இருந்த கருவைக் குழவிக்

கல்லால் மோதிச் சிதைத்துக்கொண்டாள். இதை அறிந்து அங்கு வந்த வியாசர், ''காந்தாரி! பொறாமையால் என்ன காரியம் செய்துவிட்டாய்?'' என்று கூறி கோபத்தால் மனம் வருந்தினார்.

பிறகு வியாசர், சிதறிய கரு முழுவதையும் நூறு மண்பாண்டங்களில் சேகரித்துத் தைலத்தில் வைத்து ஆட்டினார். அதைப் பாதுகாக்கும்படி கூறிவிட்டுச் சென்றார். அந்த நூறு மண்பாண்டங்களிலும் துரியோதனன் முதலான நூறு குழந்தைகள் பிறந்தார்கள். காந்தாரியின் பொறாமையிலிருந்து பிறந்த கௌரவர்கள் நூறு பேரும், கடைசி வரையில் பொறாமை கொண்டவர்களாகவே வாழ்ந்து அழிந்தார்கள்.

மகாபாரதத்தில் இடம் பெற்றிருக்கும் இந்த நிகழ்ச்சி, பொறாமையைத் தவிர்க்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

59.புலனடக்கம்

313. கேள்வி: ஐம்புலன்களை ஏன் அடக்க வேண்டும்?

□பதில்: இறைவன் திருவடியை அடைய விரும்புபவர்களுக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி ஐம்புலனடக்கம். ''ஒருவரிடம் ஐம்புலனடக்கம், ஆமை தன் உறுப்புக்களைத் தேவைப் படும்போது உள்ளே இழுத்துக்கொள்வது போன்று அமைய வேண்டும்'' என்ற கருத்து பகவத்கீதை, திருக்குறள் ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.

மனிதனுக்கு இன்பமும் துன்பமும் ஐம்புலன்களால் ஏற்படுகின்றன. ஆசைகள் என்ற

புயல்காற்றால் ஐம்புலன்கள் அலைக்கழிக்கப் படுகின்றன. ஆதலால் அறிவு என்னும் அங்கு சத்தால், ஐம்புலன்களாகிய யானையை அடக்கி நெறியில் செலுத்த வேண்டும்.

வரம்பு மீறிய புலன்வழி வாழ்க்கையால், ஆக்கபூர்வமாகப் பயன்பட வேண்டிய மனத்தின் ஆற்றல்கள் சிதறி வீணாகிவிடுகின்றன.

ஐம்புலன் இன்பங்களில் அழுந்தியிருப்பவன், வாழ்க்கையைப் பாழ்படுத்திக்கொள்கிறான்.

வாழ்க்கையில் சுயக்கட்டுப்பாடு எந்த அளவிற்கு நம்மிடம் இருக்கிறதோ, அந்த அளவிற்கு நாம் உயர்வு பெறுவோம்.

மனத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு புனிதப் போரை எப்போதும் நாம் நடத்திக்கொண்டிருக்க வேண்டும்.

314. கேள்வி: மனிதன் ஐந்து புலன்களை உடையவன். இந்த நிலையில் நாம் ஐம்புலனின்பங்களில் ஈடுபடுவது என்ன தவறு?

□ பதில்: நியாயமான ஐம்புலனின்பங்களை மனிதன் அனுபவிப்பதை சாஸ்திரங்கள் அங்கீகரிக்கின்றன; அதை சாஸ்திரங்கள் ஒருபோதும் தடை செய்யவில்லை.

ஐம்புலன் இன்பம் வரையறையை மீறியும், தீயவைகளைச் சார்ந்தும் இருக்கும் போது - அது ஆன்மாவுக்கு நஞ்சு ஆகிறது.

ஐம்புலன் இன்பம் அறத்தையும், இறைவனையும் சார்ந்திருக்கும்போது - அது ஆன்மாவுக்கு அமுதம் ஆகிறது.

புலனடக்கம் இறைவனை அடைவதற்கு உரிய வழியாகும். புலனடக்கம் இல்லாமல் உயர்ந்த ஆன்மிக வாழ்க்கை இல்லை, இல்லை, இல்லை.

315. கேள்வி: புலன்களைக் கட்டுப்படுத்த இயலாதவர்களாகவே பலரும் இருக்கிறோம். இதற்கு என்ன காரணம்? இந்த நிலையை மாற்ற இயலுமா?

☐பதில்: புலன்களுக்கு அடிமையாகி வாழ்வதில் பயனில்லை. புலனடக்கம் நம் வாழ்க்கையைப் பயனுள்ளதாக்குகிறது, அர்த்தமுள்ளதாக்குகிறது.

ஐம்புலன்களை அடக்கி வாழும் அளவுக்கே நம்மிடம் ஆன்ம வலிமை ஓங்கும், தெய்வநிலை பெருகும்.

''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.'' (குறள் - 126)

பொருள்: ''ஒரு பிறவியில் ஒருவன், ஆமை தன் ஐந்து உறுப்புக்களையும் ஓட்டிற்குள் அடக்கிக்கொள்வதைப் போல பாவம் சேராமல் ஐம்பொறிகளையும் அடக்கி ஆளவல்லவனாக இருந்தால்-அது அவனுக்கு ஏழு பிறப்புகளுக்கும் காவலாய் உதவும்.''

புலன்களை ஒருவர் கட்டுப்படுத்தி வாழ்வதும், வாழாததும் அவரவர் மனவலிமைக்கு ஏற்பவே அமைகிறது. அதனால் மனத்தை வலிமைப்படுத்துவதற்குரிய வழிகளையே நாம் பின்பற்ற வேண்டும். மனத்தைப் பலவீனப் படுத்தக் கூடியவற்றை இயன்ற வரையில் தவிர்க்க வேண்டும்; முடிந்தால் அறவே தவிர்க்க வேண்டும்.

அப்பியாசம், வைராக்கியம், பிரம்மச்சரியம், தியானம் போன்றவற்றின் லம் மனம் வலிமை பெறுகிறது.

316. கேள்வி:நான் திருமணமானவன். எனக்கு இப்போது 35 வயதாகிறது. இதற்கு மேல் நான் பிரம்மச்சரிய விரதம் கடைப்பிடிக்கலாமா?

☐பதில்:தாராளமாக நீங்கள் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்கலாம். மகாத்மா காந்தியடிகள் தமது 39-ஆம் வயதிலிருந்து பிரம்மச்சரியம் காத்தார்.

60.தவம்

317. கேள்வி: நாம் செய்யும் எல்லாச் செயல்களையும் தவமாகச் செய்ய முடியுமா?

☐பதில்: சித்தம் சிவமானால் செய்யும் செயலனைத்தும் தவமாகும்.

318. கேள்வி:தவம் செய்வதற்குத் தேவையானது எது?

☐பதில்:தவம் செய்வதற்கு முதலில் தேவைப் படுவது, தவம் செய்வதற்கேற்ற நல்ல மனம் தான். அத்தகைய 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.'

மண்வளம் பயிரின் வளர்ச்சிக்குக் காரண மாவதுபோல், மனவளம் ஆன்மிக வளர்ச்சிக்குக் காரணமாகிறது.

319. கேள்வி: எது மேலான தவம்? நெஞ்சுக்கு எப்போது நிம்மதி கிடைக்கும்?

☐பதில்: ''உணவைத் தவிர்த்து நோன்பு நோற்பதை விடவும், பிறர் நமக்குச் செய்யும்

தீமையைப் பொறுத்துக்கொள்வது மேலான தவமாகும்'' - இது திருவள்ளுவரின் கருத்து. (குறள் எண் -160)

நல்ல எண்ணங்கள், நல்ல பேச்சு, நல்ல செயல்கள் மனத்திற்கு நிம்மதியைத் தரும்.

61.கர்மவிதி

320. கேள்வி:சமண சமய நூலாகிய 'சீவக சிந்தாமணி' உலகிற்கு வழங்கும் முக்கியச் செய்தி என்ன?

□பதில்: சிந்தாமணி முழுவதும், 'ஊழ்வினை காரணமாகவே பிறப்பும், இறப்பும் அமை கின்றன' என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

321. கேள்வி: 'கர்ம விதி' என்றால் என்ன?

□பதில்: நல்வினைகளுக்கு நல்ல விளைவுகளும், தீவினைகளுக்குத் தீய விளைவுகளும் ஏற்படுவது 'கர்ம விதி' எனப்படும்.

மனிதன் ஈட்டும் நல்வினைகளே அவனைக் காக்கும் கவசங்களாக விளங்கு கின்றன. மனிதன் செய்யும் தீவினைகளோ அவனை அதலபாதாளத்தில், கடுநரகத்தில், மீளாத்துயரத்தில் ஆழ்த்துகின்றன.

காரண காரிய விதியின்படி ஒரு செயலுக் குரிய விளைவு விரைவிலோ, காலம் தாழ்ந்தோ நிச்சயம் ஏற்படும்.

322. கேள்வி: மனிதர்களுக்குச் சொல்லப்படும் கர்ம விதி பற்றிய கருத்து மற்ற உயிர்களுக்கும் பொருந்துமா?

□பதில்:தெருநாய் தெருவில் அலைகிறது. பணக் காரன் வீட்டு நாய் பஞ்சணையில் படுக்கிறது.

இதனால் கர்மவிதி மற்ற உயிர்களுக்கும் பொருந்தும் என்பதை அறியலாம்.

323. கேள்வி: கர்மவிதி பற்றிய கருத்தை உதாரணத் துடன் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

□பதில்: நீங்கள் மலைமீது நின்று புகழ்மொழி அல்லது வாழ்த்துக் கூறினால், அதன் எதிரொ லியும் புகழ்மொழி அல்லது வாழ்த்தாகவே இருக்கும். மாறாக நீங்கள் மலைமீது நின்று பழிச்சொற்களைக் கூறினால், அதன் எதிரொ லியும் பழிச்சொற்களாகவே இருக்கும்.

அதுபோல் ஒருவர் செய்த நல்வினைக்கு ஏற்ப நற்பயனும், தீவினைக்கு ஏற்ப தீய விளைவும் கர்மவிதியையொட்டி அமையும்.

பால் அல்லது விஷம் என்று தெரிந்து சாப்பிட்டாலும், தெரியாமல் சாப்பிட்டாலும் அதற்கு உரிய பலன் உண்டு. அதுபோல் நல்வினை அல்லது தீவினை என்று தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் அதற்குரிய விளைவுகள் உண்டு.

நாம் செய்யும் நல்வினையோ தீவினை யோ அதோடு போகாமல், வங்கியில் பணம் போடுவது போல் அமைந்து பின்னர் இந்தப் பிறவியிலோ மறுபிறவிகளிலோ பயன் தருகிறது.

மனிதன் தனது தீய செயல்களாலேயே துன்பம் அனுபவிக்கிறான். மனிதன் தனது நற் செயல்களாலேயே இன்பம் அனுபவிக்கிறான்.

ஒருவனைத் தொடர்ந்து அவன் நிழல் செல்வது போல, ஒருவன் செய்யும் நல்வினை - தீவினைகள் அவனைத் தொடர்ந்து செல்கின்றன.

நம்முடைய தற்கால வாழ்க்கை என்பது, நம்முடைய கடந்த கால வாழ்க்கையுடனும் எதிர்கால வாழ்க்கையுடன் தொடர்புடையது என்பதைக் கர்மவிதி உணர்த்துகிறது. எனவே நாம் செய்யும் பாவ, புண்ணியங்களின் லம் நமது விதியை நாம்தான் நிர்ணயம் செய்கிறோம்.

62.காரண காரிய விதி

324. கேள்வி: காரணத்திற்கும், காரியத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

□பதில்:காரணத்திலிருந்தே காரியம் பிறக்கிறது. எந்த ஒரு செயலும் காரணமில்லாமல் திடீ ரென்று எற்பட்டுவிடுவதில்லை. எந்தச் செய லுக்கும் எதிர்விளைவு என்ற ஒன்று நிச்சயம் இருக்கும்.

விதைக்கும் அதன் விளைவுக்கும் உள்ள தொடர்புதான் - காரணத்திற்கும் காரியத்திற்கும் உள்ள தொடர்பாகும்.

325. கேள்வி: 'காரண காரிய விதி' என்பதற்கு விளக்கம் தேவை.

□பதில்: எந்த நிகழ்ச்சியும் காரணம் இல்லாமல் அமைவதில்லை; ஒவ்வொரு நிகழ்ச்சியின் பின்னணியிலும் ஏதாவது ஒரு காரணம், அல்லது சில காரணங்கள், அல்லது பல காரணங்கள் இருக்கும். இதைக் 'காரண காரிய விதி' என்று சொல்வது மரபு.

நாம் நிலத்தில் தூவும் அத்தனை விதை களுமே முளைப்பதில்லை. ஆனால் உள்ளத்தில்

தோன்றும் ஆசை என்ற விதைகள் அத்தனையுமே-காலப்போக்கில் ஒன்றுவிடாமல் தவறாமல் முளைக்கின்றன.

கற்றவனாக இருப்பதும் கல்லாதவனாக இருப்பதும், அரசனாக இருப்பதும் ஆண்டியாக இருப்பதும், இன்பத்தில் வாழ்வதும் துன்பத்தில் உழல்வதும், ஞானியாய் உயர்ந்து பேரின்பத்தில் திளைப்பதும் அஞ்ஞானியாய் இருந்து அவலத்தில் உழல்வதும், ஆரோக்கியத்துடன் வாழ்வதும் நோயால் துன்பப்படுவதும், சந்நியாசியாக வாழ்வதும் இல்லறத்தானாக வாழ்வதும் - இவை போன்ற வாழ்க்கையில் நிகழும் சிறிய, பெரிய நிகழ்ச்சிகள் அனைத்தும் காரண காரிய நியதியை ஒட்டியே அமைகின்றன.

அவரவர் செய்த வினையை அவரவர்தான் அனுபவிக்க வேண்டும் என்பதை, காரண காரிய விதி மிகவும் தெளிவாகவே உணர்த்துகிறது.

63.விதியை வெல்ல முடியுமா?

326. கேள்வி: விதியை மதியால் வெல்ல முடியுமா?

□பதில்:உண்மையைச் சொல்வதென்றால், நாம் பலவாறு முயற்சிகள் செய்தாலும் விதியே வெற்றி பெறுகிறது. இறைவனிடம் உண்மை யாகச் சரண் புகுவதன் லமாகத்தான் விதியை மாற்றிக்கொள்ள முடியும்.

327. கேள்வி: நான் முருகனை வழிபடுபவள். விதியை வெல்ல முடியுமா, முடியாதா என்பதற்கு உங்களிடம் பதிலை எதிர்பார்க்கிறேன்.

□பதில்: ''வந்தவினையும் வருகின்ற வல் வினையும் கந்தன் என்று சொன்னால் கலங்கும்''

என்பது சான்றோர் வாக்கு. இது 'திருமுருகன் திருநாமத்தை ஜபம் செய்தால் விதியை வெல்லலாம், வெல்ல முடியும்' என்று நமக்கு உணர்த்துகிறது.

''சஞ்சலம் தீர்க்கும் தந்திரம், சரவணபவ மந்திரம்'' என்றும் பெரியோர் கூறியுள்ளனர்.

''கந்தவேளை எந்த வேளையும் வணங்க வேண்டும்'' என்பது, முருகனருட் செல்வர்களின் கருத்தாகும்.

328. கேள்வி:கர்ம விதியை மாற்ற முடியுமா?

□பதில்:கடந்த ஆண்டு நாம் விதைத்த தானியங்கள், இந்த ஆண்டு நமக்கு உணவாகப் பயன்படுகின்றன. அது போன்று நாம் முற்பிறவி களில் செய்த நல்ல செயல்களை, அல்லது தீய செயல்களை இந்தப் பிறவியில் இன்பங்களாக அல்லது துன்பங்களாக அனுபவிக்கிறோம்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற கர்மவிதி முற்றிலும் உண்மை.

மனிதனாகப் பிறந்தவன் கர்மவிதிக்கு உட்பட்டுத்தான் வாழ முடியும். இதுவே பொது விதியாகும்.

இந்தப் பொதுவிதி குருவருளாலும், இறைவன் திருவருளாலும் அபூர்வமாகச் சில சமயங்களில் விதிவிலக்காக மாறுவதும் உண்டு.

ஞானிகளுக்குச் சஞ்சிதம், ஆகாமியம் ஆகிய கர்ம வினைகள் இல்லை என்பது உண்மைதான். என்றாலும் அவர்களுக்கும் பிராரப்த கர்மம் உண்டு.

329. கேள்வி: ''சிலப்பதிகாரத்தின் திரண்ட கருத்து ஊழ்வினை'' என்று, முன்பு நீங்கள் ஸ்ரீராம கிருஷ்ண விஜயத்தில் எழுதியிருக்கிறீர்கள். ஊழ் வினையை வெல்ல முடியாதா?

□பதில்:சிலப்பதிகாரம் முக்கியமாக ன்று கருத்துகளைத் தெரிவிக்கிறது. அவை வருமாறு: 1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், 2. உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல், 3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

1. ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'' - அரசியலில் தவறு (பிழை) செய்பவர்களை தர்மதேவதை (அறம்) தண்டிக்கும் என்பது இதன் கருத்து. இதையே 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்ற பழமொழியும் உணர்த்துகிறது.

2. ''உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்'' என்பதன் லம், பெண்ணின் கற்பு எனும் திண்மைக்கு உரிய உயர்ந்த இடத்தை இளங்கோவடிகள் சுட்டிக் காட்டுகிறார். ''தீதிலா வடமீனின் திறம் இவள் திறம்'' எனச் சிலப்பதிகார வரிகளில், கண்ணகியின் கற்பின் மாண்பு அருந்ததியின் கற்பினுக்கு இணையானது என்று எடுத்துக்காட்டப்படுகிறது. கண்ணகியின் கற்புக்கனல் மதுரை மாநகரையே எரித்தது. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மையுண்டாகப் பெறின்' என்கிறார் வள்ளுவர்.

3. ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' - விதிப்படித்தான் அனைத்தும் நடக்கும்.

வினையின் வலிமை மிகமிகக் கொடியது. நல்வினையும் தீவினையுமாகிய வினைகள் நம்மை வந்து தாக்குகின்றன. 'பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து ண்டதுவே!' என்று பட்டினத்தார் தமது ஒரு பாடலிலே தெரிவிக்கிறார்.

சுந்தர ர்த்தி நாயனார் மண்ணுலகில் வந்து பிறக்கவும், பரவையாரையும் சங்கிலி யாரையும் மணந்து கொள்ளவும் காரணமாக அமைந்தது அவரது முன்வினையே.

'கைகேயியின் செயல் ராமனை வனவாசம் மேற்கொள்ள வைத்து விட்டதே!' என்று லட்சுமணன் கோபத்தால் கொதிக்கிறான். அப்போது ராமன், 'இது விதியால் விளைந்தது' என்று, லட்சுமணனுக்கு எடுத்துக்காட்டுகிறான். இந்தக் கருத்தமைந்த கம்ப ராமாயணப் பாடல் வருமாறு:

''நதியின் பிழையன்று நறும்புனல்
இன்மை; அற்றே
பதியின் பிழையன்று;
பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று;
மகன் பிழையன்று;மைந்த!
விதியின் பிழை;நீ இதற்கு
என்னை வெகுண்டது என்றான்.''

(அயோத்தியா காண்டம், நகர்நீங்கு படலம் - பாடல் - 421)

பொருள்: ''இளையவனே! நல்ல நீர் இல்லாமல் வற்றிப் போவது, அந்த நதியின்

தவறு அல்ல. அது போலவே எனக்கு இப்போது நேர்ந்திருக்கும் நிலைக்குக் காரணம், தந்தையின் தவறு அல்ல; நம்மைப் பெற்றவள் போன்று பேணி வளர்த்த அன்னை கைகேயி பெற்றிருக்கும் அறிவின் தவறும் அல்ல; அவளுடைய மகனான பரதன் செய்த தவறும் அல்ல; பின்பு யாருடைய தவறு என்று கேட்டால், இது ஊழ்வினை செய்த தவறாகும். இதற்காக நீ கோபம் கொண்டது ஏன்?'' என்று ஸ்ரீ ராமர் கேட்டார்.''

ஊழை விட்டு நம்மால் விலகிச் செல்லவே முடியாது. ''விதி வழி மதி செல்லும்'' என்று ஒரு பழமொழி கூறுகிறது. முன்வினைப் பயனையொட்டியே நமது சிந்தனை செல்கிறது.

முன்வினைப் பயனை அனுபவித்தே தீர வேண்டும். ''முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்பது ஆன்றோர் வாக்கு.

வினை எப்போது, எந்தச் சமயத்தில் எந்த வடிவத்தில் வரும் என்பதை நம்மால் சொல்லவே முடியாது. சாட்டையில் பம்பர ஜாலம்போல் - அலைகடலில் சிக்கிய துரும்பு போல் - மனிதன் கர்மவினையால் அலைக்கழிக் கப்படுகிறான். சிலப்பதிகாரக் காப்பியத்தை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, 'ஊழ்வினை வலிமை வாய்ந்தது' என்ற கருத்துத் தெளிவாக விளக்கம் பெறுகிறது.

ஊழ்வினையை வெல்ல முடியுமா, முடியாதா? என்ற கேள்விக்கு ன்று விதமான

பதில்கள் சொல்லலாம். அவையாவன -1.ஊழ் வினையை அறவே வெல்ல முடியும், 2.ஊழ் வினையின் வேகத்தைக் குறைக்க முடியும், 3. ஊழ்வினையைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றல் வரும்.

இறைவனிடம் கொள்ளும் முழுஅளவி லான உயர்ந்த சரணாகதியால்தான் - மனிதன் எல்லாவிதமான பாவவினைகளிலிருந்தும் விடுபட முடியும்.

''ஒருவன் இறைவனிடம் சரண் புகுந்தால், தவிர்க்க முடியாத விதியின் கட்டளைகளும் அகற்றப்படுகின்றன. இத்தகைய மனிதனின் தலையெழுத்தை, விதி என்னும் தேவதை தன் கைகளால் தானே துடைத்துவிடுகிறது'' என்று, அன்னை ஸ்ரீசாரதாதேவியார் கூறியிருக்கிறார்.

''கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற் றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு'' (குறள் - 269) என்பது வள்ளுவர் வாய்மொழி.

பொருள்:''தவத்தின் மூலம் ஆன்மிக வலிமை பெற்றவர்களுக்கு யமனை வெல்லு வதும் கைகூடும்.''

ஒரு மனிதன் காட்டு வழியாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் வருவதை ஒரு சிங்கம் பார்த்துவிட்டது. அவன் மீது அது பாய இருந்த சமயத்திலே அந்தச் சிங்கத்தின்மீது ஒரு பறவை பாய்ந்து, அந்தச் சிங்கத்தையே தூக்கிக்கெண்டு போய்விட்டது. ''(இது என்ன புதுக்கதை!) சிங்கத்தையாவது, பறவையாவது தூக்கிக் கொண்டு போவதாவது?'' என்று நாம்

கேட்போம். ஆனால் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு 'சிம்புள்' என்ற ஒரு பறவை இருந்த தாகவும், அதற்குச் சிங்கத்தையே தூக்கிக் கொண்டுபோய்ச் சாப்பிடும் வலிமை இருந்த தாகவும் பண்டைய நூல்களிலிருந்து அறிகி றோம்.

தாயுமானவர், பாய இருந்த சிங்கத்தைக் கொடியவினையுடன் ஒப்பிட்டுச் சொல்கிறார். அவர், சிம்புள் பறவையை இறைவன் திருவரு ளுடன் ஒப்பிடுகிறார். ஒரே ஒரு விநாடி தாமதித்திருந்தால் சிங்கம் மனிதன்மீது பாய்ந்து அவனை அடித்துக் கொன்றிருக்கும். அதுபோல் தன்னைப் பற்ற வந்த கொடியவினையிலிருந்து, இறைவன் திருவருள் தன்னைக் காத்து ரட்சித்தது என்கிறார் தாயுமானவர். இந்தக் கருத்தமைந்த அவரது பாடல் இது -

''சிங்கத்தையொத்து எனைப் பாயவரும்
வினையினைச் சேதிக்க வரும் சிம்புளே.''

பல காலம் இருள் சூழ்ந்திருந்த அறையில் ஒரு தீபம் ஏற்றினால், இருள் உடனே விலகி விடும். அதுபோல் எண்ணற்ற பிறவிகளில் செய்த தீவினையே ஆயினும், தீபம்போல் விளங்கி ஒருவனை அனைத்துப் பாவங்களிலி ருந்தும் விடுவிக்கும் ஆற்றல் இறைவனின் இன்னருளுக்கு உண்டு.

இறைவன் திருவருளை விஞ்சி நிற்கும் ஆற்றல் வேழு உலகிலும் எதற்கும் இல்லை. எனவே இறைவன் திருவருள் நம்மை எத்தகைய தீவினையிலிருந்தும் காத்தருள் புரியும் என்ற உறுதி நமக்கு வேண்டும்.

''முக்குணங்களால் ஆகிய என்னுடைய தெய்விக மாயை உண்மையில் கடக்க இயலாதது. என்னிடம் சரண் புகுவதால் மட்டுமே அதைக் கடக்க முடியும்'' (கீதை 7-14) என்பது கீதாச்சாரியனின் வாக்கு.

இறைவனிடம் பக்தி கொள்வதால் - இறைவனைச் சரண் புகுவதால் - ஒருவன் தீவினைகளை விலக்கிக்கொள்ள இயலுமே தவிர, ஆணவம் கொள்வதால் தீவினையை விலக்க முடியாது.

துரியோதனன், ஹிரண்யகசிபு, ராவணன் ஆகியோரின் ஆணவம் அவர்களின் வீழ்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

'மார்க்கண்டேயன் பதினாறு வயதில் மரணமடைய வேண்டும்' என்ற விதி இருந்தது. அந்த விதி, மார்கண்டேயனின் சிவபக்தி காரணமாகப் பொய்த்துவிட்டது. இந்த நிகழ்ச் சியின் லம் விதியை விதிக்கும் இறைவன், தான் விதித்த விதியை மாற்றவும் வல்லவன்; விதிக்கும் விதியானவன் என்ற உண்மை உணர்த்தப்பட்டது.

இது வரை பக்தியினால் ஊழ்வினையை அறவே வெல்ல முடியும் என்று பார்த்தோம்.

தூய பக்தியினால் ஊழ்வினையின் வேகத்தைக் குறைக்கவும் முடியும்.

அன்னை ஸ்ரீ சாரதாதேவியார் இவ்விதம் கூறியிருக்கிறார்:

''வினைப்பயனை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். ஆனால் இறைவன் நாமத்தை ஜபம்

செய்தால், கலப்பைக் குத்திக் கிழிப்பதற்குப் பதிலாக ஊசி குத்தியது என்று வரலாம். ஜபம், தவம் செய்வதால் வினைப்பயன் பெரிய அளவிற்குக் குறைகிறது. இறைவன் நாமத்தை ஜபம் செய்தால் வினைப்பயனின் வேகம் குறைகிறது.''

பகுதி - 4

64. உபநிஷதங்கள்

330. **கேள்வி:வேதத்தில் 'ஓம்' என்ற ஓங்காரம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதா?**

□பதில்: கடோபநிஷதம், முண்டக உபநிஷதம், சாந்தோக்ய உபநிஷதம் போன்றவற்றில் 'ஓம்' பற்றிக் கூறப்பட்டுள்ளது.

331. **கேள்வி: உபநிஷதம் குறிப்பிடும், ''இதய முடிச்சு அவிழ்தல்'' என்றால் என்ன?**

□பதில்: இறைவனின் தரிசனம் ஒருவருக்குக் கிடைத்ததும், அவரது வினைகளெல்லாம் ஓடோடிப் பறந்துவிடுகின்றன. இதை முண்டக உபநிஷதம், ''இதய முடிச்சு அவிழ்தல்'' என்று கூறுகிறது.

332. **கேள்வி: கடஉபநிஷதம் குறிப்பிடும் சிரேயஸ், பிரேயஸ் ஆகிய கருத்துகளுக்கு விளக்கம் வேண்டும்?**

□பதில்: மிகவும் தலைசிறந்த (The Best) நன்மையை ஒருவனுக்குத் தருவது எதுவோ, அது 'சிரேயஸ்' எனப்படும்.

உலகியல் நன்மைகளை ஒருவனுக்கு வழங்குவது 'பிரேயஸ்' எனப்படும்.

பெரிய நன்மையைத் தருவது, நீடித்த நன்மையைத் தருவது, நிலையான நன்மையைத் தருவது, பெரும் சிறப்புத் தருவது சிரேயஸ் ஆகும்.

சிறிய நன்மையைத் தருவது, குறுகிய கால நன்மையைத் தருவது, தாற்காலிக நன்மையைத் தருவது, சிறிய அளவில் சிறப்புத் தருவது பிரேயஸ் ஆகும்.

''ஒரு மனிதனின் முன்னால் சிரேயஸ், பிரேயஸ் ஆகிய இரண்டும் வந்து நிற்கின்றன. இந்த இரண்டில் விவேகி சிரேயஸை ஏற்றுக் கொண்டு பிரேயஸ்ஸைப் புறக்கணிக்கிறான்'' என்று, கடஉபநிஷதம் கூறுகிறது.

நல்ல மனப்பக்குவம் பெற்றவர்கள் பிரேயஸை நாடாமல், சிரேயஸையே நாடுவார்கள். அந்த அளவுக்கு மனப்பக்குவம் பெறாதவர்கள், பிரேயஸை நாடி சிரேயஸை இழந்து விடுவார்கள்.

சுவாமி விவேகானந்தர் சிறுவனாக இருந்த போது, அடிக்கடி அவர் உள்ளத்தில் பின்வரும் இரண்டு கருத்துக்கள் தோன்றுவது வழக்கம்:

ஒன்று - நன்றாகப் படித்து பட்டதாரியாகிப் பட்டங்கள் பெற்று பெரிய உத்தியோகத்தில் இருப்பது, நிறையப் பணம் சம்பாதிப்பது, நிறையச் சொத்துகளுடன் - ஏராளமான பணியாள்களுடன் சுகபோகமாக வாழ்வது, சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பது,

மனைவி மக்கள் உற்றார் உறவினர் புடைசூழப் பெரும் புகழோடு வாழும் வாழ்க்கை. இவை போன்று நரேந்திரர் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்கள், 'பிரேயஸ்' என்ற பிரிவைச் சேர்ந்த வையாகும்.

நரேந்திரர் உள்ளத்தில் தோன்றிய மற்றொரு எண்ணம் - சந்நியாசியாக வாழும் வாழ்க்கையாகும்.

உடைமை எதுவுமில்லாமல், எந்தப் பற்றும் இல்லாமல், இறைவனையே பற்றுக் கோடாகக்கொண்டு, தியானத்தில் அமர்ந்திருக்கும் சந்நியாசியின் வாழ்க்கையும் நரேந்திரரின் மனத்திரையில் தோன்றுவது வழக்கம்.

ஆத்மஞானம் பெறுவதற்கு உதவும் வகையில் அமைந்த அனைத்துமே, 'சிரேயஸ்' என்ற பிரிவில் அடங்கும் .

நரேந்திரர் உள்ளத்தில் தோன்றிய உலகியல் சுகபோக வாழ்க்கை, பற்றற்ற துறவியின் வாழ்க்கை ஆகிய இரண்டில் பற்றற்ற துறவியின் வாழ்க்கையே அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

இவ்விதம் நரேந்திரர் தமது மனத்தில் தோன்றிய சிரேயஸ், பிரேயஸ் ஆகிய இரண்டில் பிரேயஸைப் புறக்கணித்து சிரேயஸைத் தேர்ந்தெடுத்தார்.

மனிதன் இயல்பாகவே ஐம்புலன்களைத் தொடர்ந்து செல்லும் புற உலக நாட்டம் உடையவன். அதனால் பொதுவாகப் பெரும்பாலான மக்களைப் பிரேயஸ்தான் கவர்ந்திழுப்பதாக இருக்கும்.

ஆனால் மனிதர்களில் விவேகிகளாக இருப்பவர்கள் ஐம்புலன்களில் வழிச் செல்லாமல், அமரத்துவ நிலையை அடையும் பொருட்டு தங்கள் புலன்களை உள்முகமாகத் திருப்புகிறார்கள்.

உண்மையான ஆனந்தம் ஆத்மானந்தம் தான். அழிவில்லாத, எல்லையற்ற அந்த ஆத்மானந்தத்தைப் பெற வேண்டுமானால் ஐம்புலன்களை அகவாழ்க்கையை நோக்கி உள்முகமாகத் திருப்ப வேண்டும். அவ்விதம் செய்ய வல்ல விவேகிகளே சிரேயஸை நாடுபவர்கள்.

ஏனையவர்கள் நாடுவது பிரேயஸ் ஆகும்.

''ஒரு வண்டு தாமரை மலரில் சென்று அமர்ந்து தேனை அருந்துகிறது. அந்தத் தேனைச் சுவைத்த வண்டுக்கு வேறு எதுவும் சுவைக்காது. அதுபோல் சிரேயஸை நாடுபவனுக்குப் பிரேயஸ் மீது கவர்ச்சி இருக்காது'' என்று, வைணவ ஆச்சாரியரான யமுனாச்சாரியார் தமது, 'ஸ்தோத்திர ரத்னம்' என்ற நூலில் கூறியுள்ளார்.

நித்தியமானது சிரேயஸ். அநித்தியமானது பிரேயஸ்.

உலக போகங்களை அடைவதற்காக மனிதர்கள் பிரேயஸை நாடுகிறார்கள். சிரேயஸை நாடுபவர்களின் உலக வாழ்க்கைக்கான பொறுப்பை, பகவான் தாமே ஏற்றுக்கொள்வதாக ஸ்ரீமத் பகவத்கீதையில் கூறியிருக்கிறார்.

65.ராமாயணம்

333. கேள்வி:வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு என்ன?

□பதில்:பல நதிகளில் மழைக் காலத்தில் மட்டுமே நீர் இருக்கும். இவை சாதாரண நதிகள். இதுபோல் உலகில் எண்ணற்ற இலக்கி யங்கள் சிறிது காலம் இருந்துவிட்டு மறைந்து போகின்றன.

கங்கை போன்ற சில நதிகள் காலம் முழுவதும் மனிதகுலத்திற்குப் பயன்படும் ஜீவ நதிகளாக விளங்குகின்றன. இதுபோல் ராமாய ணமும் மகாபாரதமும் காலம் முழுவதும் மனித குலத்திற்குப் பயன்படும் ஜீவ இலக்கியங்களாக, அமர காவியங்களாக விளங்கி வருகின்றன.

'ஓர் இலக்கியம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று, உலகிற்கு முதன் முதலில் எடுத்துக்காட்டிய நூல் வால்மீகி ராமாயணம்.

காலத்தாலும் உலகில் தோன்றிய முதல் காவியம் வால்மீகி ராமாயணமே ஆகும்.

''வேதமே வால்மீகி ராமாயணமாக வடி வெடுத்தது'' என்று, வைணவச் சான்றோர்கள் கூறியிருக்கிறார்கள்.

ஒரு மனிதன் எவ்வளவுதான் தாழ்ந்த வனாக இருந்தாலும் அவன் திருந்த முடியும், உயர முடியும், உயர வேண்டும் என்பதற்கு வால்மீகியின் வரலாறு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

வேடனாக இருந்த வால்மீகி, மகரிஷி என்ற நிலைக்கு உயர்ந்து ஸ்ரீராமரின் குழந்தை களையே வளர்க்கும் பேறு பெற்றார்.

334. கேள்வி:ஸ்ரீராமர்-சீதை ஆகியவர்கள் உணர்த்தும் தத்துவம் என்ன?

□பதில்: ஆண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை ராமனும், பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை சீதையும் வாழ்ந்து காட்டினார்கள்.

வேதாந்த ரீதியில் ஸ்ரீ ராமர் பரமாத்மாவையும், சீதை ஜீவாத்மாவையும் உணர்த்துகிறார்கள்.

335. கேள்வி: இப்போது ஸ்ரீராமநவமி சமயம். ஸ்ரீராமரைப் பற்றிச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தை சொல்லுங்கள்?

□பதில்: ஸ்ரீராமரின் ஒரு திருவடி தர்மம்; மற்றொரு திருவடி சத்தியம். ஆகவே அவர் நடந்து சென்ற ஒவ்வோர் அடியிலும் தர்மத்தின் அடிச்சுவடும், சத்தியத்தின் அடிச்சுவடும் பதிந்திருக்கின்றன.

336. கேள்வி:ஸ்ரீ ராமரை, ''நடையில் நின்றுயர் நாயகன்'' என்று சொல்வதன் பொருள் என்ன?

□பதில்:''நடையில் நின்றுயர் நாயகன்'' என்றால், 'நன்றாக நடப்பவன்' என்பதன்று பொருள்; நல்ல ஒழுக்கமுடையவன் என்பதே பொருள்.

''குணங்களால் நிறைந்த வள்ளல்'' என்று, ஸ்ரீராமனைப் பற்றி கம்பர் குறிப்பிட்டிருக்கிறார். ''நடையில் நின்றுயர் நாயகி'' என்று நான் சீதையைக் குறிப்பிட்டால், அதுவும் சரிதான்.

சீரிய பண்புகளுக்கெல்லாம் சொந்தக் காரனாக ஸ்ரீராமனும், சொந்தக்காரியாக சீதையும் இருந்ததை ராமாயணம் சித்தரிக்கிறது.

337. கேள்வி:ஸ்ரீராமரின் தம்பியின் பெயர் சத்ருக்னன். 'சத்ருக்னன்' என்ற சொல்லின் பொருள் என்ன?

□பதில்: சத்ருக்னன் என்ற சொல்லுக்கு, 'பகைவர்களை (சத்துருக்களை) வென்றவன்' என்பது பொருள். அதாவது காமம், கோபம் முதலிய உட்பகைவர்களையும், ஐம்புலன்களையும் வென்றவன் என்று பொருள்.

338. கேள்வி: சீதையின் சிறப்புக்கு முதல் காரணம் அல்லது, முக்கிய காரணம் என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

□பதில்: சீதையிடம் பல தெய்விகக் குணங்கள் இருந்தன. அவற்றில் முதலிடம் பெறுவது பொறுமையே ஆகும். இதனைச் சொல்லின் செல்வன் அனுமன், ''இரும்பொறை'' என்று கம்ப ராமாயணத்தில் கூறுகிறான்.

அசோகவனத்தில் இருந்த சீதை தன்னைத் துன்புறுத்திய அரக்கியர்களைத் துன்புறுத்தவுமில்லை; சபிக்கவுமில்லை. மாறாக அவள் அரக்கியர்களின் நன்மையையே விரும்பினாள்; அவர்களை ஆசீர்வதித்தாள்.

இன்று தனிமனித வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் பொறுமை என்பது குறைந்து வருகிறது. இது பிரச்சனைகள், குழப்பங்கள், பகை, வெறுப்பு, இடையூறுகள் போன்ற பல தீய விளைவுகளைத் தோற்றுவிக்கிறது. இந்த நிலையில் சீதையின் பொறுமையை நாம் நினைவில்கொண்டு பின்பற்றுவது, சமுதாய நன்மைக்கு வழி செய்யும்.

பொறுமை பெருமை தரும்.

339. கேள்வி: ஆஞ்சநேயரைச் 'சொல்லின் செல்வன்' என்று கூறுவது ஏன்?

□பதில்: ''கண்டனன் கற்பினுக்கணியை'' என்னும் அனுமனின் சொல், வெல்லும் சொல்லாக அமைந்தது. அதனால் அவர் 'சொல்லின் செல்வன்' என்று அழைக்கப்படுகிறார்.

340. கேள்வி: ஸ்ரீ ராமர் - சீதை திருமணத்தின்போது அவர்களின் வயது என்ன?

□பதில்: 12 வயது ஸ்ரீ ராமருக்கும், 7 வயது சீதைக்கும் திருமணம் நடந்தது என்று வால்மீகி ராமாயணத்தில் உள்ளது.

16 வயது ஸ்ரீ ராமருக்கும், 12 வயது சீதைக்கும் திருமணம் நடந்தது என்று கம்ப ராமாயணம் கூறுகிறது.

ஆணுக்கு 16 வயதிலும், பெண்ணுக்கு 12 வயதிலும் திருமணம் செய்வது என்பது பண்டைய தமிழ் மரபு.

திருஞானசம்பந்தர் மயிலாப்பூருக்கு வந்த போது அவருக்கு வயது 16. அவரிடம் 12 வயதுடைய தன் மகளைத் திருமணம் செய்து கொள்ளும்படி சிவநேசர் விண்ணப்பிக்கிறார்.

16 வயது கோவலனுக்கும், 12 வயது கண்ணகிக்கும் திருமணம் நடந்தது.

இவ்விதம் பண்டைய தமிழ் மரபையொட்டி கம்பர், தமது ராமாயணத்தில் திருமணத்தின்போது ஸ்ரீ ராமர் - சீதை வயதைக் குறிப்பிட்டிருக்கிறார் எனலாம்.

341. கேள்வி:கம்ப ராமாயணத்தில் வாலி வதம் பகுதி உள்ளது. இதில் ஸ்ரீராமனின் அம்பு வாலியின் உடலில் சென்று தைத்ததும் வாலி, ''கண்களில் தெரியக் கண்டான்'' என்று உள்ளது. இதற்கு விளக்கம் தருக.

□பதில்: கம்ப ராமாயணம், 'வரம்புஇல் ஆற்றலான்'' என்று வாலியைக் குறிப்பிடுகிறது.

வாலி முதலில் ராம நாமத்தைக் கண்டான். அதன் பயனாக அடுத்து, ஸ்ரீ ராமனைக் கண்டான்.

வாலி தன் புறக்கண்களால் ஸ்ரீராமன் தன் மீது அம்பு எய்த ஸ்தூலச் செயலையும், அகக் கண்களால் ஸ்ரீராமனின் பரத்துவத்தையும், ஸ்ரீராமன் அருளும் முறையையும் உணர்ந்தான்.

இதையே கம்பர் பெருமான், ''செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்'' என்று கூறுகிறார்.

மும்மை சால் உலகுக்கு எல்லாம்
மூல மந்திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப் பெரும்பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும்
மருந்தினை இராமன் என்னும்
செம்மை சேர் நாமம் தன்னைக்
கண்களின் தெரியக் கண்டான்.

-கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம்,305

பொருள்: ''மூன்று உலகங்களிலும் முக்கிய மந்திரமாக இருப்பதும், தன்னை வணங்கும் அடியார்களுக்குத் தன்னையே

முழுவதும் கொடுக்கும் ஒப்பல்லாத சொல்லாக விளங்குவதும், இந்தப் பிறவியிலேயே இனி வரும் ஏழு பிறவி என்ற நோய் வராமல், தான் தனியே தடுக்கவல்ல உயர்ந்த மருந்து போன்றது 'இராம' என்ற சிறப்புப் பொருந்திய பெயர்.

"அந்தப் பெயரைத் தன் கண்களால் அந்த அம்பில் வாலி கண்டான்."

342. கேள்வி:எனக்கு வேண்டியவர் ஒருவர் தவறு செய்கிறார். அதை நான் அவரிடம் எடுத்துச் சொல்லலாமா, சொல்லக் கூடாதா?

□பதில்:நாம் நமக்கு மிகவும் வேண்டியவர் தவறு செய்தாலும், அதை எடுத்துக்காட்டத் தயங்கக் கூடாது. ஆனால் அதை இதமான, பண்புடைய சொற்களால் வெளிப்படுத்த வேண்டும்; அதில் கோபமும் அகங்காரமும் இருத்தல் கூடாது.

இதை விபீஷணன், ராவணன் செய்த தவற்றைச் சுட்டிக் காட்டி, சீதையை மீண்டும் ராமனிடம் சேர்க்கும்படிக் கூறுவதிலிருந்து அறியலாம்.

343. கேள்வி: "ராமன் உள்ள இடத்தில் காமன் இல்லை, காமன் உள்ள இடத்தில் ராமன் இல்லை" என்ற துளசிதாசரின் கருத்தைப் படித்தேன். இதைக் கொஞ்சம் விளக்குங்கள்.

□பதில்: இது பூரணத்துவம் பெற்ற மகான் களுக்கே முழுஅளவில் பொருந்தும். அவர்கள் வாழும் உலக வாழ்க்கையும் எந்த நிலையிலும் ஆன்மிகமயமாக்கப்பட்டதாகவே இருக்கும்.

உண்மையான ஆன்மிகமும், பந்தப் படுத்தக்கூடிய உலகப்பற்றும் இணைந்து செல்ல முடியாது. ஒருவரிடம் ஆன்மபக்குவம் ஏற்பட ஏற்பட, உலகப்பற்றும் இயல்பாகக் குறைந்து கொண்டு வரும்.

344. கேள்வி: போஜராஜன் எழுதியது 'சம்பு ராமாயணம்' என்று படித்தேன். இதில் 'சம்பு' என்ற சொல் எதைக் குறிப்பிடுகிறது?

□பதில்: செய்யுளும் உரைநடையும் கலந்தது 'சம்பு' எனப்படும்.

66.மகாபாரதம்

345. கேள்வி: உங்கள் பார்வையில் மகாபாரதம் உணர்த்தும் நீதி என்ன?

□பதில்: 'தர்மத்திற்குத் தெய்வம் துணை நிற்கும்' என்பதையே, கண்ணன் லம் மகாபாரதம் நமக்கு உணர்த்தியுள்ளது எனலாம்.

பாண்டவர்கள் இறுதி வரையில் ஒற்றுமை யுடன் வாழ்ந்ததை மகாபாரதம் கூறுகிறது. இது நாம் கூடி வாழ வேண்டும்; ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதையே உணர்த்துகிறது.

346. கேள்வி: தீயோர் தொடர்பு துன்பம் தரும் என்பதை விளக்குக.

□பதில்: பீஷ்மர், துரோணர், கர்ணன், அசுவத் தாமன் ஆகியவர்கள் மாவீரர்கள்; பெரும் சிறப்புக்கு உரியவர்களும்கூட. என்றாலும் அவர்கள், துரியோதனுடன் கொண்ட தொடர்பு காரணமாக வீழ்ச்சி அடைந்ததோடு, பழிக்கும் ஆளானார்கள்.

நல்ல நண்பர்கள் இல்லாத வாழ்க்கை குறையுடைய வாழ்க்கையாகும். அது கரையில் லாத ஆறு போன்றது.

''நல்ல நட்பானால் ஆயிரம் பொன் கொடுத்தாவது வாங்கிக்கொள். தீய நட்பானால் ஆயிரம் பொன் கொடுத்தாவது விலக்கிவிடு'' என்பது ஆன்றோர் கருத்தாகும்.

பசுக்கள் பன்றியுடன் சேரக் கூடாது. அதுபோல் நல்லவர்கள் தீயவர்களுடன் சேரக் கூடாது.

67.பகவத்கீதை

347. கேள்வி:பகவத்கீதையை, 'கீதா மாதா' என்று அழைப்பது ஏன்?

☐பதில்: குழந்தையின் மீது எல்லோருக்கும் அன்பு இருந்தாலும், எல்லோரையும்விட தாயே குழந்தையின் மீது அதிக ஈடுபாடு கொண்டிருக் கிறாள். அதுபோல் நம்மீது அதிக அக்கறை கொண்ட பகவத்கீதையை 'கீதா மாதா' என்கி றோம்; வேதத்தை 'வேத மாதா' என்கிறோம்.

''பகவத்கீதை என் தாய்'' என்று காந்தி யடிகள் சொல்வது வழக்கம்.

348. கேள்வி: பகவத்கீதையின் கருத்துப்படி இந்த உலகம் உண்மையா, பொய்யா?

☐பதில்: ''இந்த உலகம் மாயை - பொய்த் தோற்றம் உடையது'' என்ற கருத்து பகவத் கீதையில் இடம் பெற்றுள்ளது. ஆனால் அந்தக் கருத்துக்கு கீதை அதிக முக்கியத்துவம் தர

வில்லை. மாறாக, ''இந்த உலகிலுள்ள அனைத்துமே இறைவனுடன் இணைந்திருக் கின்றன'' என்ற கருத்துக்கு கீதை அதிக முக்கி யத்துவம் அளித்திருக்கிறது.

கீதையின் இந்த வழியிலேயே ஸ்ரீராம கிருஷ்ணரின் உபதேசங்களும் அமைந்துள்ளன.

349. கேள்வி: கீதை சொன்ன கிருஷ்ணனுக்கும், மற்ற ஆச்சாரியர்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

☐பதில்: இந்த உலகில் தேரோட்டிகள் என்ற சாரதிகள் (ஓட்டுநர்கள்) பலர் இருந்தார்கள்; இருக்கிறார்கள்.

இந்த உலகில் ஆச்சாரியர்கள் என்று பலர் இருந்தார்கள்; இருக்கிறார்கள்.

இவர்கள் அத்தனை பேர்களிலும் Two in One என்ற வகையில் தேரோட்டியாகவும் (பார்த்தசாரதியாகவும்), ஆச்சாரியனாகவும் (கீதாச்சாரியனாகவும்) ஸ்ரீகிருஷ்ணன் ஒருவர் மட்டுமே விளங்குகிறார்.

350. கேள்வி: 'த்வந்தம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்? இந்தச் சொல் பகவத்கீதை (4-22) முதலான பல நூல்களில் இடம் பெற்றிருக்கிறது.

☐பதில்: ஆண்-பெண், இரவு - பகல், பாவம் - புண்ணியம், இல்லறம் - துறவறம், இருள் - ஒளி, உண்மை - பொய், தர்மம் - அதர்மம், நன்மை - தீமை, குளிர்- வெப்பம், வெற்றி- தோல்வி, லாபம்- நஷ்டம், உழைப்பவன் - உறிஞ்சுபவன், நீதி - அநீதி என்று உலகில் இரட்டைகள் உள்ளன.

இவ்விதம் இரண்டு இரண்டாக உள்ளவற்றை 'த்வந்தம்' என்ற சொல்லால் குறிப்பிடுவார்கள்.

351. கேள்வி:பகவத்கீதை கூறும் 'ஸ்வதர்மம்' என்றால் என்ன?

□பதில்:ஒவ்வொருவருக்கும் தனது குடும்பம், பதவி, நிலை ஆகியவற்றிற்கு ஏற்பச் செய்ய வேண்டிய கடமைகள் இயல்பாக அமைகின்றன. இவ்விதம் இயல்பாக அமையும் கடமையே ஸ்வதர்மம் எனப்படும்.

ஸ்வதர்மமாக அமையும் எந்தப் பெரிய வேலையாக இருந்தாலும் சரி-அல்லது எவ்வளவு சிறிய வேலையாக இருந்தாலும் சரி-அதை மதித்தும் முழுமனத்தோடும் ஆர்வத்தோடும் செய்பவனாகக் கர்மயோகி இருப்பான்.

நாம் செய்ய வேண்டிய கடமைகளை நாம் முறையாகச் செய்துவிட வேண்டும். அதனுடைய வெற்றியும் தோல்வியும் இறைவன் கையில் இருக்கிறது.

352. கேள்வி: பகவத்கீதைக்கு உரை எழுதியவர்கள் எத்தனை பேர்?

□பதில்: முந்நூற்றுக்கும் அதிகமான உரைகள் கீதைக்கு உண்டு.

68.வேதாந்தம்

353. கேள்வி: 'வேதாந்த ஆராய்ச்சி' என்றால் என்ன?

□பதில்:ஸ்தூல உலகிற்கு ஆதாரமாகவும், ஸ்தூல உலகிற்கு அப்பாலும் உள்ள சூட்சும வஸ்துவாகிய பிரம்மத்தைப் பற்றிய ஆராய்ச்சியை வேதாந்த ஆராய்ச்சி எனலாம்.

354. கேள்வி:'வேதாந்தம்' என்ற சொல்லின் பொருள் என்ன? அதன் நோக்கம் என்ன?

□பதில்: முதலில் வேதங்கள் தோன்றின. 1. காலத்தால் வேதங்களுக்கு அந்தத்தில் (இறுதியில்) உபநிஷதங்கள் தோன்றின. எனவே அவற்றை அறிஞர்கள் 'வேதாந்தம்' என்று குறிப்பிட்டார்கள், 2. வேதங்களின் முடிந்த முடிவுகளைத் தெரிவிப்பதாலும் உபநிஷதங்கள் 'வேதாந்தம்' என்று அழைக்கப்படுகின்றன.

சாதாரண வாழ்க்கையைப் பற்றிப் பேசாமல் மோட்சத்தைப் பற்றிப் பேசுவதையே, 'வேதாந்தம்' தன் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

355. கேள்வி: 'சச்சிதானந்தம்' என்றால் என்ன?

□பதில்: உண்மை, ஞானம், ஆனந்தம் ஆகிய ன்றும் இணைந்தவன் இறைவன் என்பதை, 'சச்சிதானந்தம்' என்ற சொல் உணர்த்துகிறது.

356. கேள்வி: 'நிர்விகல்ப சமாதி' என்றால் என்ன?

□பதில்: 'மனமற்ற நிலையில் பரம்பொருளுடன் ஒன்று சேர்தல்' என்பது பொருள்.

357. கேள்வி:பிரம்மத்திற்கும், இந்த உலகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

□பதில்:ஒரு மாலை, நூலால் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் மாலைதான் நம் கண்ணுக்குத் தெரிகிறதே தவிர, நூல் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதுபோல் உலகிலுள்ள அனைத்தும், அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்திருக்கும்

பிரம்மத்தையே லப்பொருளாகக் கொண்டுள்ளன.

ஒரு மரத்தில் உள்ள இலை, பூ, காய், பழம், கிளை ஆகியவற்றில் வேறுபாடுகள் இருக்கின்றன. எனினும் அவற்றை ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் லப்பொருள் ஒன்றே.

இப்படி பலவாகக் காணப்படும் அகில உலகங்களுக்கும், அண்ட சராசரங்களுக்கும் லப்பொருள் பிரம்மமே.

ஞான முதிர்ச்சியில் பிரம்மம், எல்லோரிடமும் எல்லாவற்றிலும் இருப்பதை பிரம்ம ஞானி உணர்கிறார்.

''பார்ப்பதெல்லாம், கேட்பதெல்லாம் பிரம்மமேயன்றி வேறல்ல. உண்மை அனுபவத்தை அடைந்தபிறகு ஒருவன் உலகை அத்விதீய (இரண்டற்ற) பிரம்மமாகவே காண்கிறான்'' என்பது ஆதிசங்கரரின் வாக்கு.

கண் திறந்திருந்தாலும் இரவில் இருட்டில் நம்முன் இருப்பவற்றை நம்மால் பார்க்க முடியவில்லை. அதுபோல் நானாவித நாமரூப உலகமாக பிரம்மம் இருந்துகொண்டிருந்தாலும், அதை அஞ்ஞானம் காரணமாக நாம் உணராமல் இருக்கிறோம்.

358. கேள்வி: *'நான் யார்?'* என்ற ஆராய்ச்சியினால் என்ன நன்மை ஏற்படும்?

□பதில்: *'நான் யார்?'* என்ற முறையான, நீண்ட நெடிய வேதாந்த ஆராய்ச்சியால் அகங்காரத்திற்கு நாசம் ஏற்பட்டு, முடிவில் ஆத்ம சொரூபம் விளங்கும்.

359. கேள்வி: "மனம் அழிய வேண்டும்" என்று வேதாந்தம் சொல்வது ஏன்?

□பதில்: மனம் தன்னையும் மறைக்கிறது, இறைவனையும் மறைக்கிறது. அதனால்தான் மனம் அழிய வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மனம் அழிந்த நிலையில் - மனம் கடந்த நிலையில் தூய ஆன்மா பிரகாசிக்கும். இதற்குச் சான்றாக அண்மையில் ஸ்ரீ ரமண மகரிஷி வாழ்ந்தார்.

360. கேள்வி:மனம் அடங்குவதற்கு வேதாந்தம் கூறும் வழி என்ன?

□பதில்: 'நான் யார்?' என்ற விசாரணையால் மனத்தை அதன் உற்பத்திஸ்தானத்திலேயே அழிப்பதால் - மனம் அடங்கும்.

361. கேள்வி: விஞ்ஞானம் பெரிதும் வளர்ந்து வரும் நிலையில் எதிர்காலத்தில் வேதாந்தம் எடுபடுமா?

□பதில்: மனிதர்களின் புற வாழ்க்கை மாறுவது இயல்பு. ஆனால் எக்காலத்திலும் மனித வாழ்க்கையின் அடிப்படை தர்மங்கள் மாறாமல்தான் இருக்கும்.

எனவே எத்தனை எத்தனை விஞ்ஞான வீச்சுகள் கண்களைக் கூச வைத்தாலும், ஆன்மாவைக் குறித்து வேதாந்தம் வழங்கிய சிந்தனைகள் என்றென்றும் தலை நிமிர்ந்து வீறுடனேயே விளங்கும்.

362. கேள்வி: 'வேதாந்த வாழ்க்கை' என்றால் என்ன?

□பதில்:'பிரம்மமும் தானும் ஒன்றே' என்ற அறிவு விழிப்பு பெற்ற பிறகு வாழும் வாழ்க்

கையை 'வேதாந்த வாழ்க்கை' என்று சொல்லலாம்.

பேராசை, காமம், கோபம், சுயநலம், விருப்பு-வெறுப்பு முதலான மனித அவலங்களிலிருந்து விடுபட்ட பிறகுதான் 'வேதாந்த வாழ்க்கை' வாழ முடியும்.

ஞானத்துடன் இணைந்த கர்மங்களால் மனித அவலங்களையும், உலக பந்தங்களையும் நீக்கிக்கொள்ள முடியும்.

69.விசிஷ்டாத்வைதம்

363. கேள்வி: 'தத்துவத்திரயம்' என்றால் என்ன?

□பதில்:1.சித் (உயிர்கள்), 2.அசித் (உயிரற்றவை), 3.ஈசுவரன் (பரப்பிரம்மம்) ஆகிய ன்றையும் சேர்த்து 'தத்துவத்திரயம்' என்று சொல்வார்கள்.

இந்த ன்றையும் ஏற்றுக்கொண்ட விசிஷ்டாத்வைதிகளை, 'தத்துவத்திரய வாதிகள்' என்பர்.

364. கேள்வி: 'சேஷபூதர்' என்றால் என்ன? 'ஆதிசேஷன்' என்றால் என்ன?

□பதில்: 'இறைவனின் உடைமை' என்ற பொருளில் 'சேஷபூதர்' என்ற சொல் விசிஷ்டாத்வைதத்தில் இடம் பெற்றுள்ளது.

''சுவாமி ஊர்வலம், கோயிலுக்குச் சென்று சுவாமி கும்பிடுதல்'' போன்றவற்றில், இறைவனையே நாம் 'சுவாமி' என்ற சொல்லால் குறிப்பிடுகிறோம். ஸ்யம் என்றால் 'உடைமை' என்பது பொருள். ஸ்வாமி என்றால், 'உடையவன்' என்பது பொருள்.

இந்த உலகமும், உலக உயிர்களும் இறைவனின் உடைமைகள் என்பது முக்கிய கருத்து.

இறைவனுக்குத் தொண்டு செய்வதில் முதன்மை இடம் வகிப்பவர் என்ற பொருளில், 'ஆதிசேஷன்' என்ற சொல் அமைந்துள்ளது.

70.சாஸ்திரங்கள்

365. கேள்வி: இந்தியாவின் பெருமைக்குரிய சிறந்த இலக்கியங்கள் யாவை?

□பதில்: ராமாயணம், மகாபாரதம்.

366. கேள்வி:சாஸ்திரங்கள் என்றால் என்ன? அவற்றை நாம் ஏன் படிக்க வேண்டும்?

□பதில்: பரம்பொருள் பற்றிய உண்மைகளைத் தொகுத்தும் வகுத்தும் மகான்கள் வழங்கிய நூல்களை, 'சாஸ்திரங்கள்' என்கிறோம்.

மனத்தின் கோணல்கள் சரியாகி அகஇருள் நீங்குவதற்கு, சாஸ்திரங்கள் எனப்படும் அருள் நூல்களை நாம் கற்க வேண்டும்.

அவை மனிதகுலத்திற்கு உயர்வழி காட்டும் திசைகாட்டிகள். சாஸ்திரங்களைக் கற்பது நற்சிந்தனைகளையும் நற்செயல்களையும் நம்மிடம் தோற்றுவிக்கும்.

367. கேள்வி: 'புண்ணிய சரித்திரம்' என்றால் என்ன?

□பதில்: எது மனத்தைத் தூய்மைப்படுத்துமோ, எது தர்ம வழியில் நம்மைச் செலுத்துமோ, எது நம்மை ஆன்மிக நெறியில் வாழ வைக்குமோ, எது நமது பிறவியைப் பயனுடையதாக்குமோ,

எது இறைவனை அடைய உதவுமோ - அத்தகைய அருள் நூல்தான் புண்ணிய சரித்திரமாகும்.

ஸ்ரீ கிருஷ்ணரின் வரலாற்றைக் கூறும் ஸ்ரீமத் பாகவதம், புண்ணிய சரித்திரம் என்பதற்கு மிகவும் சிறந்த ஓர் உதாரணமாகும்.

368. கேள்வி:சாஸ்திரங்கள் காமம், கோபம் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுவதற்கு என்ன காரணம்?

□பதில்: சிற்றின்பச் சிந்தனை மனிதனின் உடல் பற்றை வளர்க்கிறது; உடல்கூட்டில் (சிறையில்) சிக்க வைத்துவிடுகிறது.

தவம் செய்பவர்கள் காமத்துக்கு இடம் கொடுத்தால் அவர்கள் தவம் போய்விடும். இதற்கு உதாரணம் விசுவாமித்திரர்.

தவம் செய்பவர்கள் கோபத்துக்கு இடம் கொடுத்தால், அவர்கள் தவம் போய்விடும். இதற்கு உதாரணம் காந்தாரி கண்ணனுக்கு அளித்த சாபம்.

தீய எண்ணங்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டவர்கள்தான் ஆன்மஒளி பெற முடியும்.

369. கேள்வி: விதி - நிஷேதம் என்றால் என்ன?

□பதில்: இங்கு 'விதி' என்பது, 'செய்ய வேண்டியவை' என்ற பொருளிலும், 'நிஷேதம்' என்பது, 'செய்யக் கூடாதவை' என்ற பொருளிலும் அமைந்துள்ளன.

சாஸ்திரங்கள், 'செய்ய வேண்டும்' என்று கூறுபவைகளை நாம் ஈசுவரார்ப்பணமாகச் செய்ய வேண்டும்; சாஸ்திரங்கள், 'செய்யக்

கூடாதவை' என்று கூறுபவைகளை நாம் செய்யாமல் தவிர்க்க வேண்டும். (விதி - நிஷேதங்கள் ஆகியவை, மருந்து - பத்தியம் போன்றவை.) இந்த இரண்டும் சேர்ந்ததுதான் கர்மயோகம்.

வாழ்க்கையில் விட வேண்டியவற்றை விட வேண்டும்; பற்ற வேண்டியவற்றைப் பற்ற வேண்டும்; இதுவே விவேகமும் ஆகும்.

370. கேள்வி:மத்வரின் த்வைத சித்தாந்தம் கூறும் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறுங்கள்?

□பதில்: உலகம் மாயை அல்ல; ஞானம், பக்தி, வைராக்கியம், தர்மம் போன்ற நன்னெறிகளைக்கொண்ட வாழ்க்கையின் லம் ஹரியின் (இறைவனின்) திருவடிகளை அடைய முடியும். இறைவன் அருளால் மட்டுமே பிறப்பு - இறப்பிலிருந்து விடுபட்டு முக்தி பெற முடியும். ஜீவாத்மா தன் சொரூபத்தை அடைவதே மோட்சமாகும். இறைவனிடம் சரணடைவது தான் ஜீவாத்மாவின் கடைசி எல்லையாகும் - என்பது மத்வ சித்தாந்தத்தின் கருத்தாகும்.

371. கேள்வி:ஆன்மிக நூல்களை, அதாவது சாஸ்திரங்களை அவசியம் படிக்க வேண்டுமா?

□பதில்: மெய்ஞ்ஞானம் எய்திய ஜீவன்முக்தர்களான ஞானிகளுக்குச் சாஸ்திரங்களைப் படிப்பதால் அல்லது படிக்காமல் விடுவதால், லாபமோ நஷ்டமோ இல்லை. சாஸ்திரங்களைப் படிப்பதால், அவர்கள் புதிதாக அடையப் போகும் பயனும் ஒன்றுமில்லை என்றாலும், அநேகமாக எல்லா அருளாளர்களும் வாழ்நாள் முழுவதும் சாஸ்திரங்களுடன் ஏதேனும் ஒரு

விதத்தில் தொடர்புகொண்டவர்களாகவே இருந் திருக்கிறார்கள்.

ஞானியாகவும் இல்லாமல், அஞ்ஞானியா கவும் இல்லாமல் இரண்டாங்கெட்டான் ஞானி என்ற நிலையிலுள்ள நம்மைப் போன்றவர்கள் அனைவரும் அவசியம் சாஸ்திரங்களைப் படிக்கத்தான் வேண்டும்.

சாஸ்திரங்களைப் படிப்பதையும் பிறர் சொல்லக் கேட்பதையும் வாழ்நாள் முழுவதும் ஒருவன் செய்து வர வேண்டும். இதையே வேதம், ''ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் நப்ரமதி தவ்யம்'' என்று குறிப்பிடுகிறது. ''கற்றலினும் கேட்டல் நன்று'' என்பார்கள். நாமாகப் படிப் பதால் அகங்காரம் ஏற்படவும் வாய்ப்புண்டு. பிறர் சொல்லைக் கேட்டால் அகங்காரம் ஏற்படு வதற்கு வழியில்லை. அருளுரைகளைப் படிக் கவும் கேட்கவும் செய்யாதவன் உயிரோடிருந்தும் இறந்தவனைப் போன்றவனே ஆவான்.

''கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே'' என்ற பாடத்தை நாம் சிறு வயதில் வெற்றிவேற்கையில் படித்திருக்கி றோம். பிச்சை எடுப்பது இழிந்தது. 'ஏற்பது இகழ்ச்சி.' அந்த இழிந்த செயலைச் செய்தேனும் கல்வி கற்க வேண்டுமாம். இது உலக வாழ்க் கைக்குத் தேவையான உலகியல் அறிவைக் குறிப்பிடுகிறது. இனி இதனினும் மேலானது அல்லவா ஆத்மஞானம்?

சாஸ்திரங்கள் என்பவை அருளாளர்களான அனுபூதிமான்களின் அனுபவங்களின் தொகுப்பு.

இந்தச் சாஸ்திரங்கள் ஆத்மஞானத்திற்கு உரிய வழிமுறைகளைச் சொல்வதாலேயே தெய்வத் துக்கு ஒப்பாக விளங்குகின்றன.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் 'ரிஷி கடன்' என்ற ஒரு கடன் உண்டு. இந்தக் கடன், ரிஷிகள் இயற்றிய நூல்களைப் பயில் வதனால் நீங்கும் என்பார்கள்.

''பகவான், பக்தன், பாகவதம் (ஆன்மிக நூல்கள்) ஆகிய ன்றும் ஒன்றே'' என்று குறிப் பிட்டார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். மேலும் அவர், ''நான் எவ்வளவு காலம் வாழ்கிறேனோ, அவ்வளவு காலமும் கற்பேன்'' என்றும் கூறியிருக்கிறார்.

★★★

மேலே இது வரையில், 'நாம் சாஸ்திரங் களைப் படிக்க வேண்டும்' என்ற கருத்தைப் பார்த்தோம்.

இனி, 'ஆன்மிக சாதனை இல்லாத வெறும் நூலறிவு இறைவனை அடைய உதவாது' என்ற கருத்தை நாம் நம் உள்ளத்தில் நன்றாகப் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

கற்க வேண்டியதைத்தான் கற்க வேண்டும்; கற்றபின் அதற்குத்தக நிற்கவும் வேண்டும்.

''வேதங்களைக் கற்றதாலோ, நுண்ணறி வினாலோ, விரிந்த கேள்வியினாலோ இந்த ஆத்மா ஒரு சாதகனால் அடையப்படுவதன்று'' என்று, கடோபநிஷதம் தெரிவிக்கிறது.

செல்வத்தினாலோ, கல்வியினாலோ இறைவனை அடைய முடியாது - இதுதான் விஷ்ணுவும் பிரம்மாவும் இறைவனது அடிமுடி தேடிய திருவண்ணாமலை வரலாறு உணர்த்தும் தத்துவமாகும்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''பருந்தும் கழுகும் ஆகாயத்தில் மிகவும் உயரத்தில் பறப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். ஆயினும் அவற்றின் பார்வை, எந்தக் குழிகளில் அழுகிய பிணங்கள் கிடக்கின்றன என்று கீழ் நோக்கியே இருக்கும். அதுபோல், பண்டிதர்கள் எனப்படுபவர்கள், சாஸ்திரங்களைக் கற்றவர் களாக இருப்பினும் காமகாஞ்சனமாகிய உலகபற்றுகளால் பந்தப்பட்ட மனமுடையவராக இருக்கின்றனர். ஆதலால் அவர்கள் மெய்ஞ் ஞானத்தைப் பெறுவதில்லை.

''சாஸ்திர ஞானத்தால் மட்டும் என்ன பயன்? பண்டிதர்களுக்குச் சாஸ்திரங்களிலும் சுலோகங்களிலும் நல்ல பழக்கம் இருக்கலாம். ஆனால் அவற்றைத் திருப்பித் திருப்பிச் சொல்வதில் என்ன பிரயோஜனம்? திருமுறை களில் சொல்லியவற்றை எல்லாம் அனுபவத் துக்கு கொண்டுவர வேண்டும். ஒருவனுக்கு உலகப்பற்றுள்ள வரையில் அதாவது காமமும் காசாசையும் இருக்கும் வரையில், கேவலம் படிப்பு மட்டும் ஞானத்தையாவது மோட்சத் தையாவது தராது.

''சாஸ்திரங்களைப் படிப்பதனால் பகவத் பிரேமை உண்டாகுமா? நாட்டில் இன்ன இன்ன

தேதிகளில் இவ்வளவு மழை பெய்யும் என்பதைப் பற்றிய முன்னறிவிப்பு பஞ்சாங்கங்களில் இருக்கிறது. மழையைப் பற்றி இவ்விதம் தெரிவிக்கும் அந்தப் பஞ்சாங்கத்தைக் கசக்கிப் பிழிந்தால், ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வராது. அதைப் போல, அநேக நல்ல விஷயங்கள் சாஸ்திரங்களில் இருக்கின்றன. ஆனால் அவற்றைப் படித்தால் மட்டும் ஒருவன் தர்மவானாகி விடமாட்டான். ஈசுவரனுடைய பிரேமையைப் பெறவேண்டுமானால், அந்தச் சாஸ்திரங்களில் சொல்லிய நன்னெறிகளின்படி நடக்க வேண்டும்.

''சாஸ்திரங்களை மட்டும் படித்துவிட்டு இறைவனை விவரிக்க முற்படுவது, தேசப் படத்தில் மட்டும் காசியைப் பார்த்துவிட்டு அந்தப் புனிதத்தலத்தைப் பற்றி இன்னொருவனுக்கு விளக்க முற்படுவது போன்றது.''

★★★

அளவறிந்து சத்தான உணவைச் சரியாக உட்கொண்டால், அது உடல் ஆரோக்கியத்தை நன்றாக வைத்திருக்கும் என்று இயற்கை மருத்துவம் கூறுகிறது. அவ்விதம் உடல் நலனுக்கு உணவு உறுதுணை ஆவது போல, மனநலனுக்கு நற்சிந்தனைகள் தேவை.

பித்தளைப் பாத்திரத்தில் களிம்பு ஏறாமல் இருக்க வேண்டுமானால், நாள்தோறும் அதை நன்றாகத் தேய்த்துத் துலக்க வேண்டும். அன்றாடம் பசியிலிருந்து விடுபட அன்றாடம் உணவு உட்கொள்கிறோம். இவை போல ஆரோக்கியமான மனநிலை தொடர்ந்து நம்மிடம் நீடிக்கவும், மனத்தில் குற்றங்கள் கூடு கட்டாமல்

இருக்கவும் நற்சிந்தனைகளை நாம் நாள்தோறும் கொள்ள வேண்டும்.

ஜபம், தியானம் போன்ற ஆத்ம சாதனைகள், சான்றோர் தொடர்பு, நல்ல நூல்களைக் கற்றல், சுயபரிசோதனை ஆகிய வற்றின் லம் நற்சிந்தனைகள் நம் உள்ளத்தில் தங்குகின்றன.

71.தேவாரம்

372. கேள்வி: "கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்" என்று தேவாரத்தில் வருகிறது. இதற்கு என்ன பொருள்?

□பதில்: இதன் லம் திருநாவுக்கரசரின் தேவாரம், "பிறருக்குக் கொடுத்து வாழாதவர்கள் நரகம் செல்வார்கள்" என்று எச்சரிக்கை தருகிறது.

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து."(குறள்-221)

பொருள்: "வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும். பிறருக்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துத் தருவது ஆகும்."

"செல்வத்துப் பயனே ஈதல்" என்று புறநானூறு (பாடல் 189.7.8) கூறுகிறது.

ஊரின் நடுவிலுள்ள நல்ல பழமரம், ஊருணி, மருந்து மரம் ஆகியவை பலருக்கும் பயன்படுகின்றன. அதுபோல் செல்வர்களிடம் இருக்கும் செல்வம் பலருக்கும் பயன்படும் போதுதான் - அது பயனுடையதாகிறது.

பணம் நம்மிடம் இருப்பதனாலேயே, 'அது நமக்கே உரிமையானது' என்று நாம் நினைத்துவிடக் கூடாது. மாறாக, 'ஆண்டவன் அந்தப் பணத்தைப் பிறர் தொண்டிற்காக நம்மிடம் கொடுத்து வைத்திருக்கிறான்; அந்தப் பணத்திற்கு அறங்காவலனாக (டிரஸ்டியாக) இறைவன் நம்மை நியமித்திருக்கிறான்' என்று எண்ணி, அதைப் பிறர் நலனுக்கு நாம் பயன்படுத்த வேண்டும்.

பிறருக்கு உதவி வாழும்போதுதான் வாழ்க்கை பயனுடையதாகவும், மகிழ்ச்சிக்குரிய தாகவும் ஆகிறது.

கல்நெஞ்சம் கொண்டவர்கள் ஈகைக் குணம் இல்லாமல் இருப்பார்கள்.

ஏழை எளியவர்களுக்கு உதவாத பணக் காரனுக்கு வாழ்க்கையில் மனநிம்மதி இருக் காது. ஏழை எளியவர்களுக்கும், 'இல்லை' என்று வந்தவர்களுக்கும் கொடுத்து உதவுவது (ஈகை) என்பது ஓர் அறச் செயல் மட்டுமல்ல; அது ஒரு பெருந்தவமும் ஆகும்.

''பிறரால் கைவிடப்பட்டவர்களுக்கும், விருந்தினர்களுக்கும், வறியவர்களுக்கும், துணை யற்ற சிறுவர்களுக்கும், சான்றோர்களுக்கும் உணவு அளிப்பவன் மறுமையில் அரசனாகப் பிறப்பான்'' என்று ஏலாதி கூறுகிறது. (பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஏலாதியும் ஒன்று. 80 பாடல்களைக் கொண்ட இந்த நூலில் ஈகையின் சிறப்பு விரிவாக விளக்கப்படுகிறது. இந்த நூலின் ஆசிரியர் கணிமேதாவியார்.)

''ஈயா மனிதரை ஏன் படைத்தாய் கச்சியேகம்பனே?'' என்று வினவுகிறார் பட்டினத்தார்.

''ஈதல் அறம்'' என்று அவ்வையார், அறத்திற்கு ஒரு விளக்கம் தந்திருக்கிறார்.

''கடவுளுக்குச் செலவு செய்ய விரும்புகிறவர்கள், ஏழைகளுக்கு உணவிடுவதன் லம் அந்தப் பணத்தைச் செலவிடுங்கள்'' என்று, வடலூர் வள்ளலார் குறிப்பிட்டிருக்கிறார்.

''இன்று ஏழையாக இருப்பவர்கள் முற்பிறவியில் பிறருக்கு ஒன்றும் கொடுத்தறியாதவர்கள் என்பதை உணர்ந்து, சிறு அரிசி அளவாவது பிறருக்கு நாள்தோறும் கொடுத்துப் பின்னரே உண்ண வேண்டும்'' என்று நாலடியார் (பாடல் எண்-94) கூறுகிறது.

''நொய்யளவு அரிசியையாவது தானம் செய்யுங்கள்'' என்று அருணகிரிநாதர் கூறியிருக்கிறார்.

''தானம் செய்வதில் தீவிரமாக இருங்கள்'' என்று நபிகள் நாயகம் கூறியுள்ளார்.

எவரேனும் நம்மிடம் எதையேனும் கேட்டு வரும்போது - அவர்களுக்கு நாம் கொடுத்து உதவினால், நாம் பிறரிடம் சென்று எதையேனும் கேட்டு யாசிக்கும் நிலை நமக்கு வராது.

தானம் - தர்மம் செய்வதற்கு அளவுகோல் இல்லை. அதைச் சிறிது செய்தாலும் பெரும் நன்மைகளைத் தரும்.

'இறைக்கின்ற ஊற்றே சுரக்கும்' என்பதற்கேற்ப, ஈகைக் குணத்தால் செல்வம் வளரும்.

நிலையற்ற மனித உடல் உள்ளபோதே, நாம் இயன்ற வரையில் நிலையான அறச் செயல்களைச் செய்ய வேண்டும்.

''அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.''(குறள்-36)

பொருள்: ''பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று நினைக்காமல், அறத்தை நாள்தோறும் செய்ய வேண்டும். அதுவே உடம்பிலிருந்து உயிர் நீங்கும் காலத்திலும் அழியாத துணையாகும்.''

★★★

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.'' (குறள்-226)

பொருள்: ''ஏழைகளின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் தன் பொருளைச் சேமித்து வைக்கும் இடம் ஆகும்.''

373. கேள்வி: திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில், ''குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்று கூறியது ஏன்?

□பதில்: வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியம் கொண்டு வாழ்பவர்களே வாழ்பவர்கள். உயர்ந்த இலட்சியம் இல்லாத வாழ்க்கையை நடமாடும் பிணம், அல்லது செடிகொடிகள் வாழ்க்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

திருநாவுக்கரசர், சிவபெருமானையே தமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார் என்பதை நாம் நன்கு அறிவோம்.

''குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்று கூறியதன் லம், நாவுக்கரசர் மனிதன் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ வேண்டும் என்பதை நமக்கு உணர்த்தியுள்ளார்.

374. கேள்வி: திருநாவுக்கரசரின் சிறப்புக்கு முக்கியக் காரணம் என்ன?

☐*பதில்:* திருநாவுக்கரசர் அரசனால் பல துன்பங்கள் அனுபவித்தார். அந்தத் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கு அவர் படைபலத்தையோ, ஆள் பலத்தையோ, ஆயுதபலத்தையோ நாடவில்லை. மாறாக அவர், 'நமச்சிவாய' என்ற மந்திரத்தையே நாடினார். இவரைப் போலவே பிரகலாதன், பல துன்பங்களை அனுபவிக்க நேர்ந்த போதும் நாராயண மந்திரத்தைத் துணையாகக் கொண்டான்.

திருநாவுக்கரசரின் சிவபக்தியின் ஓர் அங்கமாக, உழவாரப்பணி என்ற தொண்டும் அமைந்திருந்தது. இது அவரது சிறப்புக்கு மேலும் ஒரு சிறப்புச் சேர்த்திருக்கிறது.

72.திருவாசகம்

375. கேள்வி: 'திருவாசகம்' என்ற சொல்லில் உள்ள 'திரு' என்பதற்கு என்ன பொருள்?

☐*பதில்:* 'திரு' என்பதற்கு 'திருமகள், செல்வம்' என்று பல பொருள்கள் உண்டு. எனினும் 'திருவாசகம்' என்பதில் உள்ள 'திரு' என்பதற்குத் 'தெய்வத்தன்மை' என்று பொருள் கொள்வதே பொருத்தமுடையது.

376. கேள்வி:திருவாசகத்தின் தொடக்கத்தில் இடம் பெற்றிருக்கும் 'சிவ புராணம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்:'சிவ புராணம்' என்பதற்கு 'சிவபெருமானின் பழமையான பெருமைகளைக் கூறும் பாடல்' என்பது பொருள்.

377. கேள்வி:'பக்தி வலையில் படுவோன் காண்க'' என்று, மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். இதற்கு உதாரணம் சொல்லுங்கள்?

□பதில்: சபரி கொடுத்த பழங்கள், விதுரர் கொடுத்த மிக எளிய உணவு (பழங்கள், சிலர் ஒரு கோப்பை கஞ்சி என்று கூறுவார்கள்), குசேலரின் அவல் ஆகிய அற்பப் பொருள் களுக்குப் பின்னணியில் அவர்கள் கொண்டிருந்த பக்திக்கே இறைவன் கட்டுப்பட்டான்.

ஸ்ரீராமபிரான் இலங்கைக்குச் செல்வதற்கு அணை கட்டினார். அந்தப் பணிக்கு அணிலும் தன்னால் இயன்ற சிறு உதவியைச் செய்தது. அதை ஸ்ரீராமபிரான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

இப்படி எத்தனையோ அருளாளர்களை உதாரணமாகச் சொல்லிக்கொண்டே போகலாம்.

''யார் எனக்கு இலை, மலர், கனி அல்லது நீரைப் பக்தியுடன் படைக்கிறானோ, அத்தகைய தூய பக்தனின் அன்பளிப்பை விருப்பத்துடன் நான் ஏற்றுக்கொள்கிறேன்.''- கீதை 9-26.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே

அன்பெனும் வலைக்குட் படும்பரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர்ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புரு வாம் பர சிவமே.

- திருவருட்பா

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்விதம் கூறியுள்ளார்:

''ஒரு யஜமானனுடைய வேலைக்காரன் ஒரு சமயம், யஜமானின் வீட்டுக்கு வந்து மிகுந்த பய பக்தியுடன் நின்றான். அவன் தன் கையில் எதையோ துணியால் டி வைத்திருந் தான்.

''யஜமானன் அவனைப் பார்த்து, 'என்ன விஷயம்? கையில் என்ன வைத்திருக்கிறாய்?' என்று கேட்டான்.

''வேலைக்காரன் துணி முடிப்பிலிருந்து ஒரு இலந்தைப் பழத்தை எடுத்து, 'இதை யஜமான் சாப்பிட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். வேலைக்காரனின் பக்தியைப் பார்த்து மகிழ்ந்த யஜமான் அந்த இலந்தைப் பழத்தை மிகவும் அன்புடன் ஏற்று, 'அடேய்! என்ன அழகான பழம்! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?' என்று வினவினான். இது போலவே இறைவனும் பக்தனுடைய இதயத்தைத்தான் பார்க்கிறான். இறைவனின் மகிமைகள் எல்லையற்றவை என்றாலும் அவன் பக்திக்கு அகப்படுகிறான்.''

378. கேள்வி: மாணிக்கவாசகர் திருவாசகத்தில், ''ஆராத இன்பம் அருளும் மலை'' என்று குறிப்பிடுகிறார்.

இதில், 'ஆராத இன்பம்' என்பதற்கு விளக்கம் தருக.

□பதில்: ஆராத இன்பம் என்பதற்குத் 'தெவிட் டாத இன்பம்' என்று பொருள். இது பேரின்பத் தைக் குறிக்கிறது.

இதுவே ஆன்ம லாபம், பேரின்பப் பெருவாழ்வு, மரணமிலாப் பெருவாழ்வு என்றும் கூறப்படும். ஆரா அமுதாக இருப்பவன் இறைவன். அந்த இறைவனுடனும் இறையனுப வத்துடனும் இறையின்பத்துடனும் வேறு எதையும் (எதனுடனும்) ஒப்பிட இயலாது.

பவ கரணங்களால் (ஐம்புலன்களால்) அனுபவிக்கப்படுவது சிற்றின்பம். சிவ கரணங் களால் (ஐம்புலன்களைக் கடந்த நிலையில்) அனுபவிக்கப்படுவது பேரின்பம்.

சிற்றின்பத்தை விட்டு நீங்கும் அளவிற்குத் தான், ஒருவன் பேரின்பத்தை நெருங்குகிறான்.

இந்தப் பேரின்பத்தை அருளும் மலையாக நமது சிவபெருமான் விளங்குகிறான்.

379. கேள்வி:திருவாசகம், சிவ புராணத்தில் 'கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க' என்று ஒரு வரி அமைந்துள்ளது. இதில் 'கோகழி' என்பதற்கு என்ன அர்த்தம்?

□பதில்: 'கோகழி' என்பதற்குத் திருவாசக விளக்கவுரை நூல்களில் 'திருவாவடுதுறை' என்று

பொருள் கூறியுள்ளனர். இந்தச் சொல்லுக்கு, 'மாசற்ற மனம்' என்றுகூடப் பொதுவாக ஒரு பொருள் கொள்ளலாம் என்று எனக்குத் தோன்றியது.

73.திருப்பாவை/திருவெம்பாவை

380. கேள்வி: திருப்பாவையில் இடம் பெற்றிருக்கும், ''தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய'' என்ற வரிக்கு என்ன பொருள்?

☐பதில்:'தூமணி மாடம்' என்பது மனித உடலைக் குறிக்கும். விளக்கிலிருந்து வெளிவரும் பிரகாசம் என்பது, மனிதனிடமிருந்து வெளிப்படும் ஞானப்பிரகாசத்தைக் குறிப்பிடுகிறது.

381. கேள்வி:'சிவனடியார்களே எங்களுக்குக் கணவன் மார்களாக வர வேண்டும்' என்று, திருவெம் பாவையில் கன்னிப் பெண்கள் கூறுவது ஏன்?

☐பதில்:திருவெம்பாவையில் நாம் காணும் பெண்கள் சிவபிரானுக்கு மெய்யன்பு பூண்டவர்கள். அவர்கள் தங்கள் சிவபக்தியும், சிவ வழிபாடும் எந்த இடையூறும் இல்லாமல் தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதற்காகவே, 'சிவனடியார்களே எங்களுக்குக் கணவன்மார்களாக வர வேண்டும்' என்று, இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறார்கள்.

382. கேள்வி: திருவெம்பாவையில், ''முத்தன்னவெண் நகையாய்'' என்ற பாடலில் வரும் 'அத்தன்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

☐பதில்:'அத்தன்' என்பது தந்தையைக் குறிக்கும் சொல்.

தந்தை சில சமயங்களில் கடுமையாகவும் நடந்துகொள்வார். ஆனால் இறைவன் அப்படிப் பட்டவன் அல்ல; அவன் ஆனந்தமே தருபவன்; சாகா நிலையான அமரத்துவம் வழங்குபவன். ஆதலால், ''அத்தன், ஆனந்தன், அமுதன்'' என்று இறைவனை மாணிக்கவாசகர் திருவெம் பாவையில் குறிப்பிடுகிறார்.

383. கேள்வி: திருவெம்பாவையில் வரும், 'தீர்த்தன்' என்ற சொல்லுக்கு விளக்கம் தருக.

□பதில்: ''சிவன் தூய்மையான தெளிந்த நீரைப் போன்றவன்'' என்ற கருத்தில், 'தீர்த்தன்' என்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

தீர்த்தங்கள் பாவத்தைத் தீர்ப்பதுபோல், சிவபெருமான் நம் பிறவிப்பிணி தீர்த்து அருள் புரிவார்.

கங்கை முதலான நதிகளையும், ஆலயங் களைச் சேர்ந்த திருக்குளங்களையும் புனிதமான வையாக இந்துக்களாகிய நாம் கருதுகிறோம்.

நீரின் புனிதத்தன்மையை இந்துமதம் மட்டுமின்றி கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், சீக்கியம் ஆகிய மதங்களும் போற்றிக் கூறுகின்றன.

74.ராமானுஜர்

384. கேள்வி:ஸ்ரீராமானுஜர் திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்தின் மீது நின்று மக்களை அழைத்து, ''ஓம் நமோ நாராயணாய'' என்று கூறினார். இது எதை உணர்த்துகிறது?

□பதில்:'தான் நரகம் சென்றாலும், தான் துன்பப் பட்டாலும், மற்றவர்கள் நன்றாக இருக்க வேண்டும்' என்ற ஸ்ரீராமானுஜரின் கருணை உள்ளத்தை - இந்த நிகழ்ச்சியின் லம் உணர்கி றோம்.

385. கேள்வி: விசிஷ்டாத்வைதம் விளக்கிய ஸ்ரீ ராமானுஜரின் உபதேசங்களில் உங்களை மிகவும் கவர்ந்த உபதேசம் எது?

□பதில்:''இறைவனிடம் சரண் புகுந்தவன் எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படக் கூடாது'' என்று, பகவத் ஸ்ரீ ராமானுஜர் கூறியிருக்கிறார்.

386. கேள்வி: 'கத்ய த்ரயம்' என்றால் என்ன?

□பதில்:பகவத் ஸ்ரீராமானுஜர் இயற்றிய 1.ஸ்ரீரங்க கத்யம், 2.சரணாகதி கத்யம், 3.வைகுண்ட கத்யம் ஆகிய ன்று நூல்களும் 'கத்ய த்ரயம்' எனப்படும்.

'கத்யம்' என்பதற்கு உரைநடை என்று பொருள். உபநிஷத விளக்கவுரைகள் (பாஷ்யம்) 'கத்யம்' எனப்படும் உரைநடையில் அமைந்தி ருக்கின்றன.

387. கேள்வி: ஸ்ரீராமானுஜர் இயற்றிய, 'சரணாகதி கத்யம்' நூல் உலகிற்கு வழங்கும் செய்தி என்ன?

□பதில்:''பரம்பொருளைச் சரணடைவதைத் தவிர முக்திக்கு வேறு வழியில்லை'' என்பதே சரணா கதி கத்யத்தின் சாரமான கருத்து.

வைணவ தர்மமாகப் 'பிரபத்திநெறி (சரணாகதி)' விளங்குகிறது.

இறைவனே வாழ்க்கைக்கு ஆதாரம் என்பதை உணர்ந்து இறைவனையே பற்றி வாழ்வது, இறைவனையே சார்ந்து வாழ்வது சரணாகதியாகும்.

இறைவனிடம் சரணடையாமல் முக்தி பெற விரும்புவது - விதையில்லாமல் விவசாயம் செய்ய முற்படுவது போன்றது; கலம் இல்லாமல் கடலைக் கடக்க முற்படுவது போன்றது.

இறைவனைப் பற்றிப் புரிந்துகொண்டவர்கள், தங்கள் முழுவாழ்க்கையையும் இறைவனுக்கே அர்ப்பணித்துவிடுகிறார்கள்.

75.வடலூர் வள்ளலார்

388. கேள்வி:ஜீவகாருண்யத்தின் சிறப்பு என்ன?

□பதில்:ஆன்மிக வாழ்க்கைக்குப் பல அங்கங்கள் உண்டு. எனினும் அவற்றுள் ஜீவகாருண்யத்தையே வள்ளலார் தலையாயதாகக் கருதினார். அவர் ஜீவகாருண்யத்தை அடிக்கல்லாக வைத்து அதன் மீது, 'சன்மார்க்க சங்கம்' என்ற கட்டிடம் எழுப்பினார்.

தன் உயிர் போனாலும், தனக்குத் துன்பம் நேர்ந்தாலும் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது ஜீவகாருண்யமாகும்.

389. கேள்வி: வடலூர் வள்ளலார் உலகிற்கு வழங்கிய முக்கிய உபதேசம் என்ன?

□பதில்:''ஜீவகாருண்யமே முக்திக்கு முதல் படி. மரணமிலாப் பெருவாழ்வு பெறுவதே மனித வாழ்க்கையின் நோக்கம்'' - இவை வள்ளலாரின் முக்கிய கருத்துகள்.

சிவானுபவத்திற்கும் ஜீவகாருண்யத் திற்கும் மட்டுமே தன் வாழ்க்கையில் முக்கியத் துவம் தந்தவர் வள்ளலார்.

390. கேள்வி: தாயுமானவர் - வள்ளலார் ஒப்பிடுக.

□பதில்:வள்ளலாரின் சன்மார்க்கக் கருத்துகளுக்கு தாயுமானவர் முன்னோடியாக இருந்தார் என்று சொல்லலாம். சன்மார்க்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் தாயுமானவர் பாடல்கள் விளங்கு கின்றன.

76.திருக்குறள்

391. கேள்வி: திருக்குறள் உலகிற்கு வழங்கும் செய்தி என்ன?

□பதில்: அறத்தை வலியுறுத்துவதற்காகவே வள்ளுவர் திருக்குறளை இயற்றினார். அதனா லேயே அவர் 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தை அமைத்திருக்கிறார்.

பண்டைய நாளில் தமிழறிஞர்கள் திருக் குறளை, 'அறநூல்' என்ற பெயரால் அழைத்த தையும் இங்கு நாம் நினைவு கொள்ளலாம்.

392. கேள்வி: செயற்கரிய செயல் எது?

□பதில்: தங்களுக்குத் துன்பம் விளைவித்த வர்களின் நலனுக்காகவும் பெரியோர்கள் பிரார்த் தனை செய்வது வழக்கம். இவ்விதம் தீமை செய்தவர்களையும் பொறுத்துக்கொள்வது பெரிய வர்களின் இயல்பு. தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்பவர்கள் செயற்கரிய செயலைச் செய்தவர்கள் ஆகிறார்கள்.

பெரியவர் என்பதற்குச் 'செயற்கரிய செய்பவர்' என்று வள்ளுவர் இலக்கணம் வகுத்திருக்கிறார்.

393. கேள்வி:திருவள்ளுவர் கூறும் அருளுடைமையைப் பெறும் வழி என்ன?

☐பதில்: திருவள்ளுவரின் பெருநூல் குறிப்பிடும் அறிவுடைமை, அன்புடைமை, அருளுடைமை போன்றவற்றைப் பெறுவதற்கு உரிய வழி - அந்தந்த நெறிகளில் உழைப்புடைமையை (உள்ளத்தைச்) செலுத்துவதே ஆகும்.

394. கேள்வி:'வாய்மை' என்பதற்கு வரையறை என்ன?

☐பதில்: ஒன்றன் விளைவாகிய நன்மை, தீமையைக் கருத்தில்கொண்டு வாய்மையை வரையறை செய்ய வேண்டும் - இது திருவள்ளுவர் வழிச்சிந்தனையாகும்.

395. கேள்வி:'சால்பு' என்றால் என்ன?

☐பதில்:பல நற்பண்புகளின் தொகுப்பை 'சால்பு' என்ற சொல்லால், திருவள்ளுவர் குறிப்பிட்டிருக் கிறார்.

396. கேள்வி: நான் அடக்கமாக வாழ நினைக்கிறேன். முடியவில்லையே....?

☐பதில்:நம்முடைய உண்மை நிலை பற்றிய சுயசிந்தனை - தன்னைத் தானே உற்று நோக்கும் தன்மை - இருந்தால் அடக்கம் தானாக வந்து விடும்; செயலில் உயர்வு தானாக வந்துவிடும்; பேச்சில் உயர்வு தானாக வந்துவிடும்.

''அடக்கம் அமரருள் உய்க்கும்'' என்று, திருவள்ளுவர் (குறள் -121) கூறியுள்ளார்.

397. கேள்வி: ''நா காக்க'' என்ற வள்ளுவரின் கருத்துக்கு விளக்கம் சொல்லுங்கள்?

☐பதில்: நாம் கால் தடுமாறினால் சமாளித்துக் கொண்டு ஒருவாறு நிற்கலாம். ஆனால் நாக்குத் தடுமாறினாலோ, விபரீத விளைவுகளை நாம் கட்டாயம் சந்திக்க வேண்டி வரும்.

நாம் ஒன்றைப் பற்றி பேசுவதற்கு முன்பு, அதைப் பற்றிய தெளிவான சிந்தனை நமக்கு இருக்க வேண்டும். அதனால்தான், ''நா காக்க'' என்று தமிழ்மறை கூறிற்று.

இன்சொல் பேசுவது ஒருவரின் உயர்ந்த மனப்பக்குவத்தைக் காட்டுகிறது.

நாவைக் காத்து இன்சொல் பேசுவது நமக்கும் நல்லது; மற்றவர்களுக்கும் நல்லது.

''நா காக்க'' என்று வள்ளுவர் கூறிய தற்கு, 'நாவின் சுவைக்கு அடிமைப்பட்டு அதிகமாகச் சாப்பிட்டுவிட்டு பிறகு துன்பப் படாதே! (வாயைக் கட்டு)' என்றுகூட ஒரு பொருள் கொள்ளலாம்.

398. கேள்வி: 'வெஃகாமை' என்றால் என்ன?

☐பதில்: பிறருக்கு உரிய பொருளை, நமது அல்லாததை நாம் விரும்பக் கூடாது என்பதை, ''வெஃகாமை'' என்று திருவள்ளுவர் குறிப்பிடு கிறார்.

399. கேள்வி: 'வினைத்திட்பம்' என்றால் என்ன?

☐பதில்: 'செயலாற்றல்' என்று நாம் கூறுவ தையே, ''வினைத்திட்பம்'' என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார்.

400. கேள்வி: ''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்'' என்ற திருக் குறளுக்கு விளக்கம் தருக.

□பதில்: தாங்கள் குறிப்பிட்டுள்ள குறளின்(341) உரைநடை 'வடிவம் இது: ''ஒருவன் எந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கி றானோ, அந்தப் பொருளால் அவன் துன்பம் அடைதல் இல்லை.''

மனம் மனிதனை ஆசை வலையில் வீழ்த்திவிடுகிறது. இந்த நிலையில், 'பிறவிகள் (பிறவிப்பிணி) தொடர்வதற்கு என்ன காரணம், பந்தத்தில் மனிதன் சிக்கிக்கொள்வதற்கு என்ன காரணம்?' என்று விவேகத்தினால் நன்கு ஆராய்ந்தறிந்து, மனிதன் அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதற்கு இடை விடாமல் முயற்சி செய்ய வேண்டும்.

401. கேள்வி: ''தோன்றின் புகழொடு தோன்றுக'' (குறள்-236) என்கிறார் வள்ளுவர். இதன்படி, தோன்றும்போதே அதாவது, பிறக்கும்போதே நாம் எப்படிப் புகழோடு பிறக்க முடியும்? அப்படி புகழோடு பிறப்பது நம் கையிலா இருக்கிறது?

□பதில்: இந்தக் குறளுக்குப் 'பிறக்கும்போதே புகழோடு தோன்றுதல்' என்று பொருள் கொள்ளாமல், 'நீ எந்தத் துறையில் தோன்றி னாலும் (ஈடுபட்டாலும்), அதில் புகழுடன் விளங்கும் வகையில் நீ செயல் புரிய வேண்டும்' என்றும் பொருள் கொள்ளலாம்.

'நீ இப்போது வாழும் உயர்ந்த வாழ்க்கை உனக்குப் பிறவா நிலையாகிய வீடுபேற்றைத்

தருவதாக இருக்க வேண்டும். ஒரு வேளை போதிய தவம் இல்லாத நிலையில் நீ இந்தப் பிறவியிலேயே வீடுபேறு பெறாமல் மீண்டும் பிறக்க நேர்ந்தாலும் கூட, அந்த மறுபிறவி புகழ் வாழ்வாக அமையும் விதத்தில் நீ இப்போது வாழ வேண்டும்' என்று, இந்தக் குறளுக்கு இன்னொரு பொருளும் கொள்ளலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

402. கேள்வி: "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" என்று திருவள்ளுவர் (குறள்-140) கூறுகிறார். அப்படியானால் உலகில் பெரும்பாலானவர்கள் செய்யும் தவறான செயல்களுக்கு நாமும் உடந்தையாக இருக்க வேண்டுமா?

□ பதில்: தமிழ் இலக்கியங்கள் பலவற்றில் 'உலகம்' என்ற சொல் 'உயர்ந்தவர்கள்' என்ற கருத்தில்தான் கையாளப்பட்டிருக்கிறது.

வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட்டு ஆக லான்.

(தொல்காப்பியம் - 647)

பொருள்: "வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தவர் வழங்கிய வழக்கே. உலகத்து நிகழ்ச்சியெல்லாம் அவரையே நோக்கினையின் என்றவாறு."

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்று கூறுவர். இதற்கு, "உலகம் என்ற சொல் உயர்ந்தவர்களையே குறிப்பிடுகிறது" என்று பொருள்.

எனவே உயர்ந்தோர், சான்றோர் வழியையே நாம் பின்பற்ற வேண்டும் என்பது

தான் குறள் கூறும் கருத்து. பெரியோர்களின் தொடர்பு, அவர்களின் குணநலன்களை நம்மையும் பெறச் செய்யும்.

403. கேள்வி: திருவள்ளுவர் கூறும், ''தென் புலத்தார்'' என்ற சொல்லுக்கு விளக்கம் தருக?

□பதில்:வடதிசைக்குத் செல்லும் வழியில் தேவர் உலகம் அமைந்துள்ளது. தென்திசைக்குச் செல்லும் வழியில் பித்ரு லோகம் இருக்கிறது.

எனவே திருவள்ளுவர் பித்ருலோகத்தில் இருப்பவர்களை, ''தென்புலத்தார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

404. கேள்வி: திருவள்ளுவர் திருக்குறளில் இல்லறத் திற்குப் பிறகு துறவறம் அமைத்தது ஏன்?

□பதில்: சிறந்த இல்லற வாழ்க்கை வாழ்பவனே சிறந்த துறவு வாழ்க்கைக்கு உரியவன். அதனாலேயே வள்ளுவப் பேராசான் இல்லறத் திற்குப் பிறகு துறவறத்தை அமைத்திருக்கிறார்.

405. கேள்வி: திருக்குறள் மக்களிடையே பரவுவதற்கு நாம் என்ன செய்யலாம்? என்ன செய்ய வேண்டும்?

□பதில்:பள்ளிகளில் குறைந்தது 300 குறள்களைக் கட்டாயம் பாடமாக வைக்க வேண்டும். இது மாணவர்கள் 6-ஆம் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்பை முடிப்பதற்குள் அமைந்துவிட வேண்டும்.

77.ஔவையார்

406. கேள்வி: அதியமான் என்ற மன்னன், தனக்கு நீண்ட ஆயுளைத் தரக் கூடிய நெல்லிக்கனியை ஔவை தாட்டிக்குத் தந்தான். இது சரியா?

☐பதில்: நாட்டு நலனுக்காக வாழ்பவர்கள் நீண்ட காலம் வாழ வேண்டும். இதைத்தான் அதியமான், ஔவைக்கு நெல்லிக்கனி தந்த நிகழ்ச்சி உணர்த்துகிறது.

407. கேள்வி:''அரிதரிது மானிடராதல் அரிது'' என்பது ஔவையின் வாக்கு. இது பற்றித் தங்கள் கருத்தை அறிய ஆவல்.

☐பதில்: எளிது எளிது மானிடராய்ப் பிறத்தல் எளிது. அரிது அரிது மானிடராய் வாழ்தல் அரிது.

408. கேள்வி:''உடையது விளம்பேல்'' என்று ஔவையார் கூறியிருக்கிறார்.

அதன் பொருளைச் சிறிது விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்?

☐பதில்:''ஒருவர் தன் பலத்தையோ, பலவீனத்தையோ மற்றவர்களிடம் வெளிப்படுத்தக் கூடாது'' என்கிறார் ஔவையார்.

உன் பலவீனத்தை மற்றவர்கள் அறிந்தால் உன்னைத் தாழ்வாக மதிப்பார்கள். உன் பலத்தை அறிந்தால் அவர்கள் உன் மீது பொறாமைப் படுவார்கள்.

409. கேள்வி: ''சித்திரம் பேசேல்'' என்கிறார் ஔவையார். இதற்கு விளக்கம் தருக.

☐பதில்: இங்கு 'சித்திரம் பேசேல்' என்பது, ''கற்பனைகள் கலந்து பொய்யை உண்மை போலப் பேசும் போலி வாழ்க்கை வாழக் கூடாது (அது நிலைக்காது)'' என்ற பொருளில் அமைந்துள்ளது.

பொய்யை உண்மைபோல் பேசுவதையே தொழிலாகவும், பொழுதுபோக்காகவும் வைத்தி

ருப்பவர்கள் உண்டு. அவர்களுக்கு ஔவை கூறிய அறிவுரை இது.

410. கேள்வி:''பொருள்தனைப் போற்றிவாழ்'' என்ப தற்கு விளக்கம் தருக?

□பதில்:அவ்விதம் ஔவையார் தமது ஆத்தி சூடியில் கூறியிருப்பதற்குப் பொருள், 'மக்கள் கருமியாக வாழ வேண்டும்' என்பதல்ல.

சிக்கனம் வறுமை வருவதைத் தடுக்கும். சிக்கனம் என்பது வேறு, கருமித்தனம் என்பது வேறு.

நாம் இந்த உலகில் வாழ்வதற்குக் கட்டாயம் பொருள் தேவை. ஆனால் பொரு ளாசை வரைமுறை கடந்து பேராசையாக இருக்கத் தேவையில்லை. பேராசைக்கு இடம் கொடுத்தால் வாழ்க்கையே பொருளற்றதாகி விடும்.

மனித வாழ்க்கைக்குப் பணம் இன்றிய மையாதது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால் நமக்காகப் பணம் இருக்க வேண்டுமே தவிர, பணத்திற்காக நாம் வாழக் கூடாது. பணத்திற்காகவே நாம் நமது வாழ்க்கையைப் பலியிட்டுவிடக் கூடாது.

அளவு கடந்த பொருளாசையை வளர்த்துக் கொள்பவர்கள் முடிவில் வாழ்க்கையில் ஏமாற்றமடைவார்கள்.

பகுதி - 5

78. மனிதப்பிறவி

411. கேள்வி: 'த்விஜன்' என்றால் என்ன?

□பதில்: தாயிடமிருந்து பெறுவது முதல் பிறப்பு. உபநயனத்தின் லம், பிரம்மோபதேசத்தின் லம் பெறுவது இரண்டாவது பிறப்பு என்ற பொருளில் 'த்விஜன்' என்ற சொல் வழங்குகிறது.

ஒரே பிறவியில் அமையும் 'மீண்டும் பிறத்தல்' என்ற கருத்து த்விஜன் என்பதில் அடங்கியுள்ளது.

இதையே 'நவஜீவன்' என்று காந்திஜி குறிப்பிட்டார். மனிதன், அறத்தாலும் ஆன்மிகத் தாலும் ஒழுக்கத்தாலும் பொலிவு பெற்ற புது வாழ்வு வாழ வேண்டும் என்பதையே 'த்விஜன்' என்ற சொல் உணர்த்துகிறது.

412. கேள்வி: மனிதன் இந்த உலகில் பிறந்ததற்கான நோக்கம், குறிக்கோள் என்ன?

□பதில்: இறைவனின் கட்டளைகளை நிறை வேற்ற வேண்டும் என்ற பொறுப்புடன் நாம் ஒவ்வொருவரும் பிறந்திருக்கிறோம்.

மனிதப்பிறவி எடுத்ததன் பெரும் பயனே இறைவன் திருவடியைச் சேர்வதுதான் என்பதை வள்ளுவனார், ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்'' என்ற குறள் (எண்-10) லம் நமக்கு உணர்த்தியுள்ளார்.

(கடக்க முடியாதது என்பதனால் சமுத்திரத் திற்குக் கடல் என்ற பெயர் அமைந்தது. ஆழமானது என்பதால் ஆழி என்றும் கடலுக்கு ஒரு பெயர் ஏற்பட்டது.)

413. கேள்வி: மனிதன் உலகில் பிறந்ததற்கு என்ன காரணம்?

☐பதில்: மனிதன் தன்னுடைய நன்மைக்காகவும், மற்றவர்களின் நன்மைக்காகவும் உலகில் பிறந்திருக்கிறான்.

தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகிய நான்கும் புருஷார்த்தங்கள் ஆகும். இவை நான்குக்கும் அடிப்படையாக தர்மம் விளங்குகிறது. இந்த நான்கு புருஷார்த்தங்களிலும் முக்கிய புருஷார்த்தமாக இருப்பது மோட்சம்.

தனக்குத் தானே மிகப் பெரிய நன்மையைத் தேடிக்கொள்வது மோட்சமாகும்.

மனிதனின் முடிந்த முடிவு இறைவனின் திருவடியைச் சேர்வதேயாகும். இதுவே மனிதனின் ஜீவ லட்சியம் - முக்தி எனப்படும் மீண்டும் பிறவாமையாகும்.

414. கேள்வி:பிறவிகளிலிருந்து விடுபடுவதற்கு என்ன வழி?

☐பதில்: கருணையும் வாய்மையும் தெய்வ பக்தியும் கொண்டவர்கள் தெய்வத்தின் நிலைக்கு உயர்ந்து பிறவிகளிலிருந்து விடுபடுகிறார்கள்.

ஆற்றின் சுழலில் சிக்கியவன் மரணத்தைச் சந்திக்கிறான். ஆசைகளில் சிக்கியவன் பிறவிச் சுழலில் அகப்பட்டு அதோ கதியை, அவல நிலையை அடைகிறான்.

ஒருவர் ஆசைகளிலிருந்து விடுபடும் போது, பிறவியும் அவரிடமிருந்து விடுபட்டு விடுகிறது.

415. கேள்வி: பிறவிப்பெருங்கடலைக் கடப்பதற்குத் தேவையானவை எவை?

□பதில்: பிறவிப்பெருங்கடலிலிருந்து விடுபடுவதற்கு ஆன்மிக சாதனை, மனஅடக்கம், புலனடக்கம், தொண்டு, குருவருள், இறையருள் ஆகியவை தேவை - இவை தவிர மனிதனுக்கு வாழ்வுமில்லை, வேறு வழியுமில்லை.

இத்துடன் வேறொன்றையும் நான் சொல்லத்தான் வேண்டும்: வெறும் பேச்சு பிறவிப்பெருங்கடலைக் கடப்பதற்கு உதவி செய்யாது - முக்தியைத் தராது.

மனத்தைக் கோணலாக வைத்துக் கொண்டிருப்பவர்களால் பிறவிப்பெருங்கடலைக் கடக்க முடியாது.

416. கேள்வி: "பலனை எதிர்பார்த்துச் செயல் புரியக் கூடாது" என்று சொல்வது ஏன்?

□பதில்: பலனை எதிர்பார்த்துச் செய்யும் செயல் - அது நல்லதாக இருந்தாலும், கெட்டதாக இருந்தாலும் - உரிய காலத்தில் நிச்சயம் பலன் தந்தே தீரும். இந்த வினைகளை அனுபவிப்பதற்காக ஜீவாத்மா மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தீவினை இரும்பு விலங்கு போன்றும், நல்வினை பொன் விலங்கு போன்றும் இருந்து, ஜீவாத்மாவைப் பிறப்பு - இறப்புச் சுழலில் ஆழ்த்துகின்றன.

417. கேள்வி: நான் உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்று எப்படி நானே தெரிந்துகொள்வது?

□பதில்: நாம் தனித்திருக்கும்போது, ஓய்வாக இருக்கும்போது நம் உள்ளத்தில் தோன்றும் சிந்தனைகள் உயர்ந்தவைகளாக இருந்தால் நாம் உயர்ந்தவர்கள் என்று பொருள்.

இதற்கு மாறாக இருந்தால் நாம் தாழ்ந் தவர்கள் என்று பொருள்.

418. கேள்வி: உலகில் ஆச்சரியமானது என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

□பதில்: உலகப் படைப்பிலேயே மனிதன்தான் முதன்மையான அதிசயமாக விளங்குகிறான்.

உலகில் பிறப்பும் ஆச்சரியமானது, இறப்பும் ஆச்சரியமானது, வாழ்வதும் ஆச்சரிய மானது. இவை அனைத்துமே நினைக்க நினைக்க ஆச்சரியமானவை.

★★★★

இந்த மனித உடலில் உயிர் தங்கியிருப்ப துதான் ஆச்சரியமே தவிர, உடலை விட்டு உயிர் போவது ஓர் ஆச்சரியமான விஷயம் அல்ல. ஒன்பது ஓட்டைகள் கொண்ட ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றினால், அந்த நீர் ஒழுகிப் போவதில் வியப்பு ஒன்றுமில்லை; ஒழுகாமல் இருந்தால் - அதுதான் வியப்புக்குரிய விஷயம்.

அதுபோல் நவத்வாரங்களை (ஒன்பது ஓட்டைகளை) உடைய இந்த மனித உடலில் உயிர் போகாமல் தங்கியிருப்பதுதான் வியப்புக் குரியதே அன்றி, உயிர் நீங்குவது வியப்புக் குரியது அன்று - இது 'யோக வாசிட்டம்' கூறும் கருத்து. இந்தக் கருத்தை ஆதிசங்கரரும் கூறியிருக்கிறார்.

79.சமுதாயம்

419. கேள்வி: இன்று மனித குலத்திற்குப் பல தேவைகள் இருக்கின்றன. இவற்றில் உடனடி யாகத் தேவைப்படுவது எது?

□பதில்:நல்ல எண்ணங்கள், மிகவும் நல்ல எண்ணங்கள்.

420. கேள்வி: ஒரு சமுதாயம் என்றால் அதற்குப் பல தேவைகள் - பல கடமைகள் இருப்பது இயல்பு. இவற்றில் முதல் தேவை எது என்று சொல்ல முடியுமா?

□பதில்:சமுதாயத்திற்கு உயிர்நாடியாக இருப்பது அறம். எனவேதான் வள்ளுவர் தமது குறளில் அறத்துப்பாலை முதலில் வைத்தார்.

ஒழுக்கம், அறம் சார்ந்த தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிப்பது என்பது - அரசாங்கத்தின் ஒரு முக்கியக் கடமை, முதல் கடமை, தலையாய கடமை என்று நான் கருதுகிறேன்.

421. கேள்வி: ஆன்மிகத்தால் சமுதாயத்திற்கு என்ன நன்மை?

□பதில்: பக்திநெறி, ஞானநெறி, ஆன்மிகநெறி என்பது நடைமுறை வாழ்க்கையிலிருந்து விலகி யிருப்பதல்ல.

மனஅமைதி, ஆத்ம திருப்தி, நல்லொ ழுக்கம், தியாகம், தொண்டு, அனைவரும் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணம், சக ஒற்றுமை போன்றவற்றை ஆன்மிகம் வளர்க் கிறது. இவை ஆன்மிகத்தால் சமுதாயம் பெறும் சில பயன்கள். அதன் முடிவான பயன் ஞானம் - முக்தி ஆகும்.

422. கேள்வி: மனிதன் உலகம் முழுவதையும் நேசிக்க முடியுமா?

□பதில்: ஆரம்பத்தில் தன் இனத்தையும் நாட்டையும் நேசிக்கும் மனிதன், மனமுதிர்ச்சி (மனப்பக்குவம்) பெறும்போது, உலகம் முழுவதையும் நேசிக்கக் கற்றுக்கொள்கிறான்.

சான்றோர் அனைவரும் பரந்த உள்ளம் கொண்டவர்கள். அவர்கள் உலகம் முழுவதையும் நேசிப்பவர்களாகவே இருக்கிறார்கள்.

423. கேள்வி: இன்றைய சமுதாயத்தில் பல சங்கடங்களையும் நாம் சந்தித்துக்கொண்டிருக்கிறோம். இதற்கு என்ன காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

□பதில்:சத்தியம் நம்மிடம் குறைந்ததால்தான், அன்றாடம் நாம் சமுதாயத்தில் பல சங்கடங்களையும் சந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

424. கேள்வி:இன்று சமுதாயத்தில் ஒழுக்கம் வளர்ந்திருக்கிறதா, பக்தி வளர்ந்திருக்கிறதா?

□பதில்: இன்று மக்களிடம் பக்தி வளர்ந்திருக்கிறது என்று சொன்னாலும், ஒழுக்கம் குறைந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

ஒழுக்கம் இல்லாதவர்கள் மனவலிமையும், ஆன்மிக வலிமையும் இல்லாதவர்களாக இருப்பார்கள்.

425. கேள்வி: மக்களில் மேல்ஜாதி மக்கள், கீழ்ஜாதி மக்கள் என்று இரண்டு பிரிவினர் உண்டு என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

□பதில்:சமுதாய நலனுக்கு உழைப்பவர்கள் அனைவரும் மேல்ஜாதி மக்கள்; சமுதாய நலனுக்குத் தீமை செய்பவர்கள் அனைவரும் கீழ்ஜாதி மக்கள்.

426. கேள்வி:சமுதாயத்தில் தீமைகள் ஏற்படுவதற்கு என்ன காரணம்?

□பதில்: ஒழுக்கத்தை மலினப்படுத்துவதால்தான் சமுதாயத்தில் தீமைகள் ஏற்படுகின்றன.

427. கேள்வி:சமுதாயத்தில் தீமைகள் தோன்றுவதற்குக் காரணம் என்ன?

□பதில்: வாழ்க்கை என்பது ஓர் இனிய இசை - சங்கீதம் போன்றது. அது சில விதிமுறைகளுக்கு உட்படும்போது இனிமையாக இருக்கும். சிலர் அல்லது பலர் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்படாமல், தங்கள் மனம் போனபடி அந்த இசையை வாசிக்க அல்லது பாட விரும்புகிறார்கள்; அதனால் அது இனிமை தருவதற்குப் பதிலாகத் துன்பம் தருவதாக ஆகிவிடுகிறது.

தேவையான அன்பும் அரவணைப்பும் வழிகாட்டுதலும் இல்லாமல் வளரும் குழந்தைகள் மனவளம் குன்றி, எதிர்காலத்தில் தீயவர்களாகவும் கொடியவர்களாகவும் வன்முறையாளர்களாகவும் மாறிவிடுகிறார்கள்.

தீமைகள் தோன்றுவதற்கு நிலைக்களனாக இருப்பது தீய மனம்.

அறமும் ஆன்மிகமும் புறக்கணிக்கப்படும் சமுதாயத்தில், தீமைகள் - சீரழிவுகள் ஏற்படுகின்றன.

சகோதரத்துவம் இல்லாத சமுதாயத்தில் தீமைகள் இருக்கவே செய்யும்.

ஒரு நாட்டு மக்களின் நல்வினை - தீயவினைகளுக்கு ஏற்பவே, அந்த நாட்டில்

நல்ல அல்லது தீய செயல்கள் நடைபெறுகின்றன.

428. கேள்வி:சமுதாயத்திலுள்ள குற்றங்களை நீக்குவதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?

□பதில்: உலகில் இன்று பல காரணங்களால் மனிதநேயம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. அதனாலேயே போட்டி, வன்முறை, கலவரம், சண்டைச் சச்சரவுகள், ஜாதிவெறி, மதவெறி, கொலை, கொள்ளை, பூசல்கள், மோதல்கள் போன்றவை ஏற்படுகின்றன. ''உலகில் 80 சதவிகிதக் குற்றங்கள் குடிப்பழக்கத்தினால் ஏற்படுகின்றன'' என்று கூறுகிறார்கள்.

கள்ளுண்ணுதல் மனிதனின் அறிவையும் செயலையும் அழிக்கிறது.

கள் உண்பதனால் மனிதன் தன்னைத் தானே அழித்துக்கொள்கிறான்.

திருக்குறளில் 'கள்ளுண்ணாமை' என்ற தலைப்பில் ஓர் அதிகாரமே அமைந்திருக்கிறது.

கள் உண்பவர்களை 'நஞ்சு உண்பவர்கள்' என்கிறார் திருவள்ளுவர்.

''குடிப் பழக்கம் ஆண்டவனை அணுக விடாது'' என்பது அருள் நூல்களின் கருத்தாகும்.

காந்தியடிகள் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

''நான் ஒரு மணி நேரம் இந்த நாட்டின் சர்வாதிகாரியானால், எனது முதல் வேலையாக இந்த நாட்டிலுள்ள அனைத்து மதுக்கடைக

ளையும் எந்தவித நஷ்டஈடும் தராமல் உடனே மூடிவிடுவேன்.

''மதுவிற்கு அடிமையான ஒரு சமுதாயத்திற்கு விமோசனம் என்பதே கிடையாது.''

429. கேள்வி: லஞ்சம் வாங்கும் அரசியல்வாதியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

☐பதில்:லஞ்சம் வாங்குபவன் - அவன் அரசியல் வாதியாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி - இறைவனின் சாபத்துக்கு உரியவன். அப்படிப்பட்டவனை 'வாழ்கிறான்' என்று எப்படிச் சொல்ல முடியும்? 'வாழ்கிறது' என்றுதான் சொல்ல வேண்டும்.

430. கேள்வி:பொதுவாக, சமுதாயத்தில் எங்கும், எதிலும் ஊழல் ஆட்சி செலுத்துகிறது. இதற்கு என்ன காரணம்?

☐பதில்: ஊழல் இன்று பிரசவ ஆஸ்பத்திரியிலிருந்து, பிணம் சுடும் சுடுகாடு வரையிலும் ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கிறது.

சமுதாயத்திலுள்ள லஞ்சம், உணவில் கலப்படம் போன்ற அனைத்துத் தீமைகளுக்கும் அடிப்படைக் காரணம் சுயநலம்தான்.

பொதுநல உணர்வு ஒன்றுதான் சமுதாய உயர்வுக்கு வழி வகுக்கும். தூய தேசபக்திதான் இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு இன்று தேவைப்படுகிறது.

மக்கள் பிறக்கிறார்கள்; ஆனால் நல்ல குடிமக்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

பொதுநல உணர்வு, தியாகம், தொண்டு, நல்லொழுக்கம் போன்ற கருத்துகள் நமது கல்வி

முறையில் போதிய அளவு இடம் பெறாததும் சமுதாயத்திலுள்ள தீமைகளுக்கு ஒரு முக்கியக் காரணமாகும்.

''நம்முடைய கல்வியின் முதல் இலட்சியம் - 1.எதிர்கால இந்திய மக்களாகிய இளைஞர்களின் மனத்தில், அவர்களை இந்தியாவின் உயர்ந்த குடிமக்களாக உருவாக்கக் கூடியதாக இருக்க வேண்டும், 2.இந்தியாவின் ஆன்மிகத்தை அவர்கள் மனதில் பதிய வைப்பதாக இருக்க வேண்டும்'' என்று, சுவாமி வீரேஸ்வரானந்தர் கூறியுள்ளார்.

431. கேள்வி:பண்டைக் காலத்தில் நம் முன்னோர்களுக்கு இருந்ததைப் போன்ற சிந்தனைகள் இன்று நம்மிடையே இல்லை. இதற்கு என்ன காரணம்?

□பதில்:அரசியல் சிந்தனை, சமுதாயச் சிந்தனை, சினிமா சிந்தனை பொருளாதாரச் சிந்தனை, கல்விச் சிந்தனை, விஞ்ஞானச் சிந்தனை, ஆன்மிகச் சிந்தனை போன்ற பல சிந்தனைகளின் தாக்கத்தால் ஒரு நாட்டு மக்களின் சிந்தனை உருவாகிறது.

உலக வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டில் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1.அதுவரையில் அடிமைப்பட்டிருந்த பல நாடுகள் அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபட்டு 'சுதந்தர நாடுகள்' என்ற அந்தஸ்தைப் பெற்றன.

அதைத் தொடர்ந்து 'ஜனநாயகம்' என்ற அரசியல் அமைப்பில் பல நாடுகள் செயல்பட ஆரம்பித்தன.

2. விஞ்ஞான வளர்ச்சியால் தொழில் நுட்பம் போன்ற பல துறைகளில் அதிரடி மாற்றங்கள் ஏற்பட்டன.

இந்த இரண்டும் சேர்ந்து, இன்றைய மனிதனின் சிந்தனையிலும், நடைமுறை வாழ்க்கையிலும், ஏராளமான மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளன.

அதனால் மனிதனின் தேவைகளும் எதிர் பார்ப்புகளும், இன்று நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

432. கேள்வி:நான் சமுதாயத்திற்குச் சிறந்த கருத்து களை வழங்கும் எழுத்தாளனாக விரும்புகிறேன். அதற்குத் தங்கள் யோசனை தேவை.

□பதில்: நேர்மை இருக்கும் இடத்தில்தான் - கட்டுப்பாடு இருக்கும் இடத்தில்தான் - தூய உள்ளம் இருக்கும் இடத்தில்தான் - முறையான உழைப்பு இருக்கும் இடத்தில்தான் - சிறந்த எழுத்தோவியங்களும் கலைகளும் ஆன்மிகமும் உருவாகும்.

80.இல்லறம்

433. கேள்வி: ''இல்லறமல்லது நல்லறமன்று'' என்று கூறப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்:இல்லற ஒழுக்கங்கள் முறையாகக் கடைப்பிடிக்கும்போதுதான் இல்லறம் நல்லற மாகப் பொலியும்.

இறைவனை 'அறவாழி அந்தணன்' என்று கூறியதன் லம், 'இறைவன் அறக்கடலாக' விளங்குகிறான் என்று வள்ளுவர் சுட்டிக் காட்டினார்.

'அறத்தின் நாயகன்' என்று ஸ்ரீராமனும், 'அறம் வளர்த்த நாயகி' என்று அம்பிகையும் போற்றப்படுகிறார்கள்.

அறவாழ்க்கை வாழ்பவனைத் தேடி இறைவனே செல்கிறான். இதை கர்ணனின் இறுதிக் காலத்தில், அவனைத் தேடி கண்ணனே சென்றதன் லம் நாம் நன்கு உணரலம்.

இல்லறம், துறவறம் ஆகிய இரண்டுமே உயர்ந்த அறங்கள் என்பதை, சுவாமி விவேகானந்தர் தமது 'கர்மயோகம்' என்ற நூலில் விளக்கியிருப்பது காண்க.

434. கேள்வி:உறவினர், சுற்றத்தார் ஆகிய இரண்டிற்கும் பொருள் ஒன்றுதானா?

□பதில்: உறவினர் என்பது தாய்வழி, தந்தைவழி உறவினர்கள் போன்றவர்களைக் குறிக்கும்.

சுற்றத்தார் என்ற சொல், நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் - நம்மிடம் சம்பளம் பெற்றுப் பணி புரிபவர்கள் போன்றவர்களையும் குறிக்கும்.

435. கேள்வி:இல்லறம் எது? துறவறம் எது?

□பதில்: ஒரு மனிதனுக்கு இரண்டு கால்கள் போல, சமுதாயத்திற்கு இல்லறமும் துறவறமும் விளங்குகின்றன. அன்பின் அடித்தளத்தில் அமைவது இல்லறம். அருளின் அடித்தளத்தில் அமைவது துறவறம்.

அன்பும் அறமும் கொண்டது இல்லறம். அருளும் அறமும் கொண்டது துறவறம்.

நல்ல இல்லற வாழ்க்கை, படிப்படியாகத் துறவு மனப்பான்மையை வளர்த்துக்கொள்வதற்கு உதவுகிறது.

81.பெண்கள்

436. கேள்வி:''வெற்றி பெற்ற ஒவ்வொரு மனிதனின் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்'' என்று, ஓர் ஆங்கிலப் பழமொழி கூறுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: நமது ஒவ்வொரு வெற்றியின் பின்னாலும் இறைவன் இருக்கிறான் என்றும் சொல்லலாம்.

437. கேள்வி: இன்றையப் பெண்களைக் குறித்து உங்கள் கருத்து என்ன?

□பதில்: படிதாண்டியும் பத்தினிகளாகவும், வீராங்கனைகளாகவும் இன்றையப் பெண்கள் பிரகாசிக்கிறார்கள்.

82.இன்பம்-துன்பம்

438. கேள்வி: இன்பம் என்றால் என்ன? துன்பம் என்றால் என்ன?

□பதில்: ஒருவருக்கு இன்பமாக இருப்பது, மற்றொருவருக்குத் துன்பமாக இருக்கக்கூடும். ஒருவருக்குத் துன்பமாக இருப்பது, மற்றொருவருக்கு இன்பமாக இருக்கக்கூடும். எலியைப் பிடிக்கும்போது பூனைக்கு இன்பம். அதுவே எலிக்குத் துன்பம்.

எனவே இன்பமும் துன்பமும் அவரவர் மனமுதிர்ச்சிக்கு ஏற்பவே அமைகிறது.

வாழ்க்கையில் துன்பங்களையே நினைத்துக்கொண்டிருக்காமல் தெய்வபக்தியுடனும், மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

439. கேள்வி:இன்பம் என்றால் என்ன? ஆனந்தம் என்றால் என்ன?

□பதில்:இன்பம் என்பது வேறு, ஆனந்தம் என்பது வேறு. இன்பம் என்பது ஐம்புலன்களுக்குட்பட்டது. ஆனந்தம் என்பது ஆன்மா சம்பந்தப்பட்டது, இறைவனுடன் தொடர்புடையது. இதுவே தெய்விக ஆனந்தம், பேரின்பம் எனப்படுகிறது.

440. கேள்வி: இன்பம், பேரின்பம் ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்:ஐம்புலன்களால் அனுபவிக்கப்படும் இன்பம், ஐம்புலன்களால் அறியப்படும் இன்பம் ஸ்தூல இன்பம். புலன்களைக் கடந்து ஆன்மாவில் இருக்கும் சூட்சும இன்பம் பேரின்பம்.

441. கேள்வி:இன்பம் என்பது தவிர்க்க வேண்டிய ஒன்றா?

□பதில்:அறத்தால் வரும் இன்பம் வரவேற்கத் தக்கது.

442. கேள்வி:துன்பங்கள் என்பவை...? உலகம் என்பது...?

□பதில்:துன்பங்கள் படிப்பினை தரும் பள்ளிக்கூடங்கள். இன்பம் இல்லாத ஒரு நிலையைத் துன்பம் என்று சொல்கிறோம். துன்பங்கள்தான்

மனிதனின் மனநிலையில் மகத்தான நல்ல மாற்றங்கள் ஏற்படுத்தித் தூய்மைப்படுத்து கின்றன.

துன்பங்களை அதிகப்படுத்துவது அது சம்பந்தமான கவலைகள்தான். மனத்தில் தெளிவு இருந்தால் அங்கு துன்பம் இருக்காது.

உலகிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் அருகிலுள்ள மற்றவர்களின் துயரத்தைக் கொஞ்சமாவது குறைப்பது என்று வைத்துக் கொண்டால், உலகிலுள்ள துயரங்களில் பாதி துயரம் இல்லாமலே போய்விடும்.

உலகம் மாயையின் விளையாட்டுக் கூடம்.

443. கேள்வி: மனிதன் அவதிப்படுவதற்கு என்ன காரணம்?

□பதில்: பெரும்பாலும் தேவையற்ற ஆசைகளை வளர்த்துக்கொள்வதுதான், மனிதன் படும் அல்லல்களுக்குக் காரணமாக அமைகிறது.

வேண்டாத பல விஷயங்களைப் பற்றி நினைத்து, நாம் மனத்தைப் புண்ணாக்கிக் கொள்கிறோம். இந்த வீண் சிந்தனைகளில் பல உண்மையில் நமக்குச் சம்பந்தம் இல்லாதவை. ‘இப்படி நடக்குமோ, அப்படி நடக்குமோ!’ என்று வீணாகக் கற்பனைகள் செய்வதில் ஈடுபடுவது தேவையற்றது.

மனத்தை நாம் நம்மிடம் வைத்துக் கொண்டால், அது நம்மைத் துன்பங்களுக்கு ஆளாக்கும். மாறாக, நம் மனத்தை நாம் இறைவனிடம் வைத்துவிட்டால், அது நமக்கு ஏராளமான நன்மைகளையே தரும்.

444. கேள்வி:நாம் துன்பப்படுவதற்கு என்ன காரணம்?

□பதில்: அஞ்ஞானம்தான் காரணம். ஆசைகள் தான் மனிதனின் அழிவிற்குக் காரணம். ஆசைகளை வரையறை இல்லாமல் வளர்த்துக் கொள்பவர்கள், துன்பத்தையும் வளர்த்துக் கொள்கிறார்கள்.

முன் செய்த பாவங்கள் துன்பத்தை அனுபவிப்பதன் லம் நீங்குகின்றன.

நமக்கு ஏற்படும் துன்பங்களும் சோதனை களும்தான், வாழ்க்கையை நாம் சரியாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன.

இறைவனின் அடியார்களாக நாம் வாழ வேண்டும் என்பது இயற்கை வகுத்த வழி. இந்த விதியை மீறி நாம் உலகிற்கு அடியார் களாக வாழ்வதால்தான் நமக்குத் துன்பம் ஏற்படு கிறது. இந்தக் கசப்பான உண்மையைக் காலம் கடந்தே நாம் உணர்கிறோம்.

445. கேள்வி:உலகில் நல்லவர்கள் துன்பப்படுவது ஏன்?

□பதில்: வியாபாரம் என்றால் லாபமும் இருக்கும், நஷ்டமும் இருக்கும்; விளையாட்டு என்றால் வெற்றியும் இருக்கும், தோல்வியும் இருக்கும். அதுபோல் வாழ்க்கை என்றால், இன்பமும் துன்பமும் இருக்கத்தான் செய்யும்.

மனித வாழ்க்கையை ஒரு ரயில் பிரயாணம் போன்று கருத வேண்டும். இதில் சில அசௌகரியங்கள் இருந்தாலும், அவற்றைச் சகித்துக்கொண்டு உடன் இருப்பவர்களோடு நாம் சேர்ந்து பிரயாணம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

துன்பங்களின் லமாகத்தான் மனிதன் மேன்மை அடைய முடியும்.

துன்பம் என்ற மாளிகையின் நுழை வாயிலைக் கடக்காமல், இன்பம் என்ற மாளிகைக்குள் செல்ல முடியாது.

நல்லவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் ஏணிப்படிகள் போன்று அமைந்து, முடிவில் அவர்களை உயர்த்துவதாகவே இருக்கும்.

நிலவு என்றைக்காவது சுட்டிருக்கிறதா? சூரியன் என்றைக்காவது குளிர்ந்திருந்ததுண்டா? அவை தங்கள் இயல்பில், இயற்கையில் மாறாததுபோல் - நல்லவர்கள் துன்பம் சூழ்ந்த காலத்திலும் தங்கள் கடமையிலிருந்து மாறாமல் இருப்பார்கள்.

446. கேள்வி: மற்றவர்கள் துன்பப்படுவதைப் பார்த்து சந்தோஷப்படுபவர்களும் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கி றீர்கள்?

□பதில்: மற்றவர் துன்பத்தில் மகிழ்ச்சிகொள்வது ஒரு வினோதமான நோய். இதில் சிக்கிய யாரும் வாழ்ந்ததில்லை. அத்தகையவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே இருளுக்கு இழுத்துச் செல்கிறார்கள்.

அன்பும் அறமும் கொண்டதாக மனித வாழ்க்கை அமைய வேண்டும்.

துன்பப்படுபவர்களுக்கு உதவும் நல்ல உள்ளங்களை இறைவன் நேசிக்கவும், ஏற்றுக் கொள்ளவும் செய்கிறான்.

447. கேள்வி: வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைத் தாங்கிக்கொள்வதற்கு ஆன்மிகம் உதவி செய்யுமா?

□பதில்: துன்பம் கண்டு துவண்டு போகாமல் இருப்பதற்கு உரிய மறைமுகமான பயிற்சியை, இறைவழிபாடு தருகிறது.

புற வாழ்க்கையில் எத்தனைதான் சவால் களையும், போராட்டங்களையும், பிரச்னை களையும் ஒருவன் சந்தித்தாலும் - ஆன்ம பலம் பெற்றிருந்தால் அவற்றை அவனால் துணிவுடன் எதிர்கொள்ள முடியும்.

இந்த உண்மைக்கு ஹரிச்சந்திரன், பிரக லாதன், பாண்டவர்கள், திருநாவுக்கரசர், சுவாமி விவேகானந்தர், மகாகவி பாரதியார், மகாத்மா காந்தியடிகள் போன்ற பலரது வாழ்க்கை உதாரணமாக அமைந்துள்ளது.

448. கேள்வி: ஒருவர் அறம் செய்ய விரும்பினால், அல்லது பொது நன்மைக்காக உழைத்தால், அவருக்குத் துன்பம்தான் ஏற்படுகிறது.

இந்த நிலையில் வலிய நாமாகச் சென்று இத்தகைய துன்பங்களை விலைக்கு வாங்க வேண்டுமா?

□பதில்: வாழ்க்கைக்கு உயிராக விளங்குவது அறம். ''அறவழியில் வாழ்பவர்களுக்கு இந்த உலகத்திலும் இன்பம் கிடைக்கும்; மறு உலகத் திலும் இன்பம் கிடைக்கும்'' என்று, புத்தர் கூறியிருக்கிறார்.

அற வாழ்க்கையைப் பின்பற்றுவதால் துன்பம் வந்தாலும் அதைப் பின்பற்றுவதும் இன்பமே - அந்தத் துன்பமும் பேரறம்தான் - என்று பெரியோர்கள் கருதுவார்கள்.

இதற்கு ஸ்ரீராமர் மேற்கொண்ட வனவாசம், அரிச்சந்திரன் பட்ட துன்பம் போன்ற பல சான்றுகள் உண்டு.

449. கேள்வி: மனிதன் கவலை இல்லாமல் வாழ்வ தற்கு ஏதாவது வழி இருக்கிறதா?

□பதில்: மனிதர்களின் கவலைகளுக்குப் பல காரணங்கள் இருக்கும். அவை தீர்வதற்கான வழிமுறைகளும் பல வகையாக இருக்கும்.

மனக்கவலைக்கு வள்ளுவர் ஒரு மாமருந்து கண்டார். அதுதான், 'தனக்குவமை இல்லாத இறைவன் திருவடிகளைச் சரண டைதல்.' (குறள் -7).

இறைவனைச் சிந்திக்கும் அளவுக்கு மனத்திலிருந்து துன்பம் தொலையும்; மனத்தில் சாந்தி நிலவும்.

இறைவனின் அருள் நமக்கு ஏற்படும் துன்பங்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கி விடும்.

வெளிப் பொருள்களை மனம் பற்றியுள்ள வரையில் மனிதனுக்கு அமைதி கிடைக்காது. உண்மையான (ஆத்மானந்தம்) ஆனந்தம் நமக்குள்ளேயே இருக்கிறது.

'இறைவன் நம்முடன் இருக்கிறார்' என்ற எண்ணம் உறுதியாக இருப்பவர்களிடம் கவலை கள் இருக்காது. இறைவனிடம் சரணடைந்தவர் களுக்கு நிரந்தரமான இன்பம் கிடைக்கும்.

இன்பத்தைத் தொடர்ந்து துன்பமும், துன்பத்தைத் தொடர்ந்து இன்பமும் வருவது உலக இயல்பு. எனவே இன்பம் மட்டுமே கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் ஏமாற்றம்தான் ஏற்படும். எனவே துன்பம் நேர்ந்தபோது, 'இதைவிட பெரிய துன்பம்

வராமல் சிறிய துன்பம்தானே வந்தது! தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று!' என்று நினைத்து மன ஆறுதல் பெற வேண்டும்.

83.நல்லொழுக்கம்

450. கேள்வி: பகுத்தறிவு உடையவன் யார்?

□பதில்:'பகுத்தறிவு உடையவன்' என்பதற்கு அடையாளம் ஒழுக்கமான வாழ்க்கை.

451. கேள்வி: 'ஒழுக்கம்' என்றால் என்ன?

□பதில்: உள்ளத்தின் தூய்மையை, எண்ணத் தூய்மையையே பெரும்பாலும் 'ஒழுக்கம்' என்று, அறநூல்கள் போற்றிக் கூறுகின்றன.

452. கேள்வி: 'ஒழுக்கம்' என்றால் என்ன?

□பதில்: சொல், செயல், சிந்தனைகளால் தூய்மை யுடன் இருப்பதே ஒழுக்கம் எனப்படும்.

453. கேள்வி: 'ஒழுக்கம்' என்றால் என்ன?

□பதில்: சீராக அமைத்துக்கொண்ட சிறந்த பழக்க வழக்கங்களை ஒழுக்கம் என்கிறோம்.

454. கேள்வி:'ஆச்சார வாழ்க்கை' என்றால் என்ன?

□பதில்: புறத்தூய்மை, அகத்தூய்மை இரண்டும் சேர்ந்ததுதான் முழு வாழ்க்கை. அதுவே 'ஆச்சார வாழ்க்கை' எனப்படுகிறது.

455. கேள்வி: 'சீலமான வாழ்க்கை' என்றால் என்ன?

□பதில்:உள்ளத்தில் நல்ல எண்ணங்களே நிறைந் திருந்தால் அதையே 'சீலமான வாழ்க்கை' என்று சொல்ல வேண்டும். எல்லா நன்மைகளுக்கும் நல்லொழுக்கமே அடிப்படையாக விளங்குகிறது.

பல நற்பண்புகள் ஒன்று சேரும்போது ஒருவன் உயர்ந்தவன், சீலமான வாழ்க்கை வாழ்பவன் ஆகிறான்.

456. கேள்வி: 'ஜீவ ஒழுக்கம்' என்றால் என்ன?

□பதில்: எல்லா உயிர்களிடமும் சமமாக அன்பு செலுத்துவது 'ஜீவ ஒழுக்கம்' எனப்படும்.

457. கேள்வி:'ஒழுக்கம்' என்றால் என்ன? 'சன் மார்க்கம்' என்றால் என்ன?

□பதில்:ஒழுக்கம் என்பது நமக்கு நாமே வகுத்துக்கொள்ளும் கட்டுப்பாடு - அது வேலியாக இருந்து நம்மைப் பாதுகாக்கும். வாழ்க்கையில் ஒழுங்கு முறை இருக்க வேண்டும் என்பதை, 'ஒழுக்கம்' என்று நமது பெரியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதன் அடிப்படையில் அமைந்த சத்தியம், தர்மம், அகிம்சை, தியாகம், தொண்டு போன்ற நிலையான ஒழுக்கங்களை 'சன்மார்க்கம்' என்கிறோம்.

ஒழுங்கும் கட்டுப்பாடுமே ஒருவரது வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கையாக ஆக்குகிறது. ஒழுங்கற்ற வாழ்க்கை வாழ்வது முடிவில் துன்பத்தையே தரும்.

ஒழுக்கமற்ற சூழ்நிலையில் வாழ்வது, பாம்புடன் ஒரே வீட்டில் வாழ்வது போன்று பயத்திற்குரியது.

458. கேள்வி: 'ஒழுங்கு ஊர் ஆளும்' என்ற பழமொழிக்கு விளக்கம் தருக.

□பதில்: இந்தப் பழமொழி, 'ஒழுக்கமாக வாழ்பவன் ஊரை ஆட்சி செய்யும் அளவுக்கு

வாழ்க்கையில் உயர்ந்து நிற்பான். உலகைச் சீர்திருத்த விரும்புவன் முதலில் தன்னைத் தானே சீர்திருத்திக்கொள்ள வேண்டும்' என்பதை உணர்த்துகிறது.

459. கேள்வி: ஒழுக்கத்திற்கும் அறத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

☐பதில்: ஒழுக்கங்கள் பல. அவை அனைத்தையும் குறிக்கும் ஒரு சொல்லாக அறம் விளங்குகிறது.

அறம்தான் ஒருவனுக்கு உற்றதுணையும் உறுதுணையும் ஆகும். 'உற்றுழி உதவுவது' அறம்.

அறநெறியில் வாழ்பவனுக்கு நிலையான சுகம் கிடைக்கும். எனவே நாம் இன்பமாக வாழ விரும்பினால் அறத்தைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

460. கேள்வி:தெய்வபக்திக்கும் நல்லொழுக்கத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

☐பதில்: தெய்வபக்தி உயர்ந்த எண்ணங்களை, தூய எண்ணங்களை நம் உள்ளத்தில் தோற்றுவிக்கிறது. பள்ளத்தில் தண்ணீர் தங்குவது போல், நல்லொழுக்கங்கள் இருப்பவர்களிடம் தான் இறைவனின் அருள் சென்று தங்குகிறது.

461. கேள்வி: பக்தியுடன் இருந்தால் போதாதா? நல்லொழுக்கங்களை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்?

☐பதில்: பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான், குங்கிலியக் கலய நாயனாரைப்

பற்றிக் குறிப்பிடுகிறார். அதில் அவர், 'குங்கிலியக் கலய நாயனார் சிவன் தாள்மலர்களில் அன்பு பூண்டவர்' என்று மட்டும் சொல்லாமல், ''உருகிய அன்புகூர்ந்த சிந்தையார், ஒழுக்கம் மிக்கார்'' என்று குறிப்பிட்டுள்ளார். இதன் லம் இங்கு தனிமனித ஒழுக்கம் வலியுறுத்தப்படுகிறது.

தெய்வபக்தியுடன் நல்லொழுக்கங்களையும் பின்பற்றி வாழ்பவர்கள் இருக்கும் இடம் தேடி, இறையருள் தானாக வந்து சேர்கிறது.

நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிப்பதும் ஓர் ஆன்மிக சாதனையாகும். தீயவனாக வாழ்ந்தும், தீய செயல்களைச் செய்துகொண்டும் இருக்கும் ஒருவன், 'எனக்கு இறைவனின் அருள் கிடைக்கும், எனக்குப் பூரண ஞானத்தை இறைவன் வழங்குவார், எனக்கு முக்தி கிடைத்துவிடும்' என்று நினைப்பது ஒரு மாயை - பகல் கனவு - அது நடைபெறாது.

பயிர் நன்கு செழித்து வளர வேண்டுமானால், களைகளை நீக்கியே ஆக வேண்டும். அதுபோல் நம்மிடம் தெய்வபக்தி என்ற பயிர் நன்கு செழித்து வளர்ந்து, உரிய நற்பயனைத் தர வேண்டுமானால் தீய பழக்கங்களை நீக்கியே ஆக வேண்டும்.

மனிதன் தெய்விக நிலையை அடைவதற்கு - தன்னிடம் உள்ள தெய்விகத்தை வெளிப்படுத்துவதற்கு - நல்லொழுக்கங்கள் துணை புரிகின்றன.

'ஏதோ பிறந்தோம், இருந்தோம், இறந்தோம்' என்று இல்லாமல் தெய்வபக்தி,

தொண்டு, நல்லொழுக்கங்களைக் கொண்ட வாழ்க்கை நாம் வாழ வேண்டும்.

ஒழுக்கம் உள்ளவர்களுக்கு இறைவன் அருள் புரிகிறான்.

462. கேள்வி: 'கண்ணியம்' என்றால் என்ன?

□பதில்: பேச்சிலும், செயலிலும் அடக்கத்துடன் இருப்பது 'கண்ணியம்' எனப்படும்.

463. கேள்வி:'நல்லவர்கள்' என்பவர்கள் யார்?

□பதில்: சொல், செயல், சிந்தனையில் தூய்மை உள்ளவர்களே நல்லவர்கள்.

பிறரிடமும், பிற உயிர்களிடமும் இரக்கம் - கருணைகொள்வது நல்லவர்களின் இயல்பு.

பழி பாவங்களுக்கு நல்லவர்கள் பயப்படு வார்கள்.

நல்லவர்கள் தங்கள் காலத்திற்குப் பிறகும் நிற்கும் வகையில் - தங்கள் காலத்திற்குப் பிறகும் தொடரும் வகையில் - நல்ல சாதனை களையும், நல்ல சந்ததிகளையும் விட்டுச் செல்வார்கள்.

464. கேள்வி: 'அகிம்சை' என்றால் என்ன?

□பதில்: சொல் செயல் சிந்தனைகளால் பிறரை யும், பிற உயிர்களையும் துன்புறுத்தாமல் இருப்பது அகிம்சையாகும்.

இந்த அகிம்சை நெறிதான் மனித வாழ்க் கைக்கு அடிப்படையாக இருக்க வேண்டும்.

465. கேள்வி: உண்மை - வாய்மை ஆகிய இரண்டு சொற்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்: உள்ளத்தில் உண்மையைக் கடைப் பிடித்தல் உண்மை எனப்படும். வாக்கால் உண்மையைக் கடைப்பிடித்தல் வாய்மை எனப் படும். மெய் என்ற உடலால் உண்மையைக் கடைப்பிடித்தல் (செயலால் பொய்யைத் தவிர்த்தல்) மெய்ம்மை எனப்படும்.

மற்றவர்களுக்குத் தீமை தராத சொற்களை (இனிய சொற்களை), நாம் பேசுவதை 'வாய்மை' என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

466. கேள்வி: 'பண்பு' என்றால் என்ன?

□பதில்: நற்குணம், நல்ல கலாச்சாரம், நல்லொ ழுக்கம், நல்லியல்பு, நல்லதரம், நல்லவிதம் போன்றவற்றைப் பண்பு என்ற சொல் உணர்த்து கிறது.

467. கேள்வி: "பொறுமை கடலினும் பெரிது" என்று கூறுகிறார்கள்.

கடல் பொறுமையுடையதா? கடலில் இரைச்சல் அல்லவா எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது?

□பதில்: காற்று காரணமாகக் கடலில் அலை எழுந்து இரைச்சல் ஏற்படுகிறது. 'பொறுமை கடலினும் பெரிது' என்ற சொல்லாட்சி, கடல் நடுவிலுள்ள ஆழம் காரணமாக வந்தது.

ஆழ்கடல் அமைதி உடையது. அதில் முத்துகள் உள்ளன. அதுபோல், பொறுமையு டையவர்கள் நற்பண்புகள் என்ற நல்முத்துகள் உடையவர்களாக இருப்பார்கள்.

468. கேள்வி: நல்ல பண்பாளர் ஆவது எப்படி?

□பதில்: பணிவுடைமை, எளிய வாழ்க்கை ஆகியவை ஒருவரை நல்ல பண்பாளர் ஆக்கு கின்றன.

அறிவு வளர வளர மனம் பண்படுகிறது; உணர்ச்சிகள் பண்படுகின்றன.

நாம் பண்பாளராக விளங்குவதற்கு, பண்பாளர்களுடன் நட்புக் கொண்டு வாழ வேண்டும்.

எளிமையாக வாழப் பழகுவோம். அதில் தான் உண்மையான பெருமை இருக்கிறது.

469. கேள்வி: 'மேலோர்' என்பவர் யார்?

□பதில்: ஒழுக்கம் தவறாமல் பிறர் நன்மை யையே கருதி வாழ்பவர்கள் அனைவரும் 'மேலோர்' ஆவர்.

கோயிலில் உள்ள சிறிய விளக்கிலுள்ள நெருப்பை நாம் வணங்குகிறோம். விறகிலுள்ள பெரிய நெருப்பை நாம் வணங்குவதில்லை. அதுபோல் ஒரே குடியில் பிறந்த மேலோனை மக்கள் வணங்குவார்கள்; கீழோனை மக்கள் தூற்றுவார்கள்.

ஒழுக்கமற்ற வாழ்க்கையால் வரும் இழிந்த நிலையை அறிந்து, மேலோர் அத்தகைய ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்வதைத் தவிர்த்து விடுகிறார்கள்.

உலக வாழ்க்கையின் இயல்பைச் சரியாகத் தேர்ந்து தெளிந்து புரிந்துகொண்டு, அதை மற்ற வர்களுக்கும் உணர்த்துபவர்களாக மேலோர் இருப்பார்கள்.

470. கேள்வி: நாவடக்கம் வேண்டும் என்பதற்கு உதாரணம் கூறுங்கள்.

□பதில்: சிலப்பதிகாரத்தில் ஆராயாமல் பாண்டியன் நெடுஞ்செழியன் பொற்கொல்லனிடம் கூறிய சொல், 1.கோவலனின் உயிரை வாங்கியது, 2.கண்ணகியைப் புலம்ப வைத்தது, 3. பாண்டியனை உயிர்விடச் செய்தது, 4. பாண்டியன் மனைவியின் உயிரையும் வாங்கியது, 5.மதுரையையும் எரித்தது. இதனால் நாநலம் காக்கப்பட வேண்டும் என்பதை நன்கு உணரலாம்.

471. கேள்வி: நாட்டு நலனுக்குக் கேடு விளைவிக்கும் தொழில் செய்பவர்களும்கூட, சில சமயங்களில் அறச் செயல்களைச் செய்கிறார்கள். இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: நல்ல காரியங்களை யார் செய்தாலும், அவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

உடலில் உயிர் இருந்தால்தான் உடலிலுள்ள உறுப்புகளைக் கொண்டு நாம் செயல்பட முடியும். அதுபோல் சமுதாயத்தில் அறம் இருந்தால்தான் சமுதாயம் சீராக இயங்கும்.

சிலர் விளம்பரத்திற்காக அறச் செயல்களைச் செய்வதும் உண்டு. சிலர் வேறு சுயலாபத்திற்காக அறச் செயல்களைச் செய்வதும் உண்டு. இத்தகையவர்களும்கூட, காலப் போக்கில் நல்லவர்கள் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஒரு சமயத்தில் தீயவராக இருப்பவர், காலம் முழுவதும் தீயவராகவே இருப்பார் என்று

நாம் நினைத்துவிடக்கூடாது. காரணம், காலம் பலரை நல்லவர்களாக மாற்றியிருக்கிறது. மனத்தூய்மையே மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய தலையாய அறமாகும்.

பொதுவான ஓர் உண்மை இது: மனத்தில் அசுத்தங்களை வைத்துக்கொண்டு அறச் செயல்களைச் செய்தாலும், அவை அறச் செயல்கள் என்ற சொல்லுக்குரிய அருகதையை, தகுதியை இழந்துவிடுகின்றன.

தூயநோக்கம் இல்லாமல் ஒருவன் செய்யும் செயல்களை இறைவன் ஏற்றுக் கொள்வதில்லை.

472. கேள்வி: எப்படியும் ஒரு நாள் நாம் செத்துத்தான் போகப் போகிறோம்.

அப்படி இருக்கும்போது, இந்த உலகில் நாம் ஒழுக்கத்துடன் வாழ்ந்தால்தான் என்ன? வாழாவிட்டால்தான் என்ன?

□பதில்: ஒழுக்கம் என்ற தேவதை என்றும் நம்மோடு இருந்து, தன் ஆயிரம் கைகளால் எப்போதும் நம்மை அரவணைத்துப் பாது காக்கும்.

ஒழுக்கமின்மை என்ற அரக்கன் தன் ஆயிரம் கைகளால் நாள்தோறும், நாழிகை தோறும் ஒழுக்கமற்றவர்களை நெறித்து அணு அணுவாகச் சித்திரவதை செய்வான்.

ஒழுக்கமுள்ளவன் நிம்மதியாக வாழ்வான் - பயமில்லாமல் வாழ்வான். ஒழுக்கமற்றவன் நாள்தோறும் செத்துப் பிழைப்பான். நிம்மதியாக வாழ்வதற்கு ஒழுக்கம் தேவை.

அறம், ஒழுக்கம், தெய்வபக்தி ஆகியவற்றுக்கு அழிவு என்பதே இல்லை.

நல்லொழுக்கம் கொண்டவர்கள்தான் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க முடியும். அத்தகையவர்களையே மக்களும் தங்கள் வழிகாட்டியாக ஏற்பார்கள்; மதிப்பார்கள்.

ஒழுக்கத்துடன் வாழும் வாழ்க்கை ஆண்டவனுக்குப் பிரியமானது.

ஒழுக்கம் என்பது ஓர் உயர்ந்த செல்வமாகும்.

''ஒழுக்கம்தான் மனிதனுக்கு உயர்வு தருகிறது. அதனால் அதை வருந்தியேனும் காக்க வேண்டும்'' *(குறள்-132)* என்று, திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

மனிதன் எந்தச் சூழ்நிலையில் வாழ்பவனாக இருந்தாலும், அவன் கடைப்பிடிக்கும் ஒழுக்கம்தான் அவனுக்குத் துணையாகவும், அரணாகவும் இருக்கும்.

ஒழுக்கம் இல்லாத மனிதன் கயவன் ஆகிவிடுகிறான்.

எப்படியும் நாம் ஒரு நாள் செத்துத்தான் போகப் போகிறோம். அப்படி இருக்கும்போது இந்த உலகில் நாம் (ஏன் ஒழுக்கத்துடன் வாழக் கூடாது?) ஒழுக்கத்துடன் வாழ்ந்தால்தான் என்ன?

எவ்வளவுதான் ஒருவனிடம் செல்வம் இருந்தாலும் - பட்டம், பதவி, அந்தஸ்து இருந்தாலும் - அவனிடம் ஒழுக்கம் இல்லாவிட்டால் அவனது வாழ்க்கை பழிக்குரியது;

உலகம் அவனைத் தூற்றும்; அவனுக்குச் சிறப் பில்லை.

ஒழுக்கமற்றவர்கள் இறுதியில் செல்லாக் காசாகிச் சீரழிந்து போவார்கள்.

ஒழுக்கம் தனிமனிதனைப் பாதுகாக்கும், குடும்பத்தைப் பாதுகாக்கும், சமுதாயத்தைப் பாதுகாக்கும், நாட்டைப் பாதுகாக்கும், உலகைக் காப்பாற்றும்.

473. கேள்வி: இசை, நடனம், ஓவியம் போன்ற கலைகளில் உயர்ந்த கலை எது?

□பதில்:நல்லவற்றை உள்ளத்தில் தங்க வைத்துக் கொள்வதும், தீயவற்றை உள்ளத்திலிருந்து வெளி யேற்றுவதும்தான் கலைகளிலேயே மிகவும் பெரிய கலையாகும்.

84.நாகரிகம்-அநாகரிகம்

474. கேள்வி:'பண்பு', 'நாகரிகம்' ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்: அக வாழ்க்கையின் உயர்வு 'பண்பு' என்றும், புற வாழ்க்கையின் சிறப்பு 'நாகரிகம்' என்றும் கூறப்படுகிறது. இவை இரண்டுமே ஒரு சமுதாயத்திற்கு நிச்சயம் தேவைப்படுகின்றன. இவற்றிலும் அகவளர்ச்சியே முதல் முக்கியத் துவம் உடையது.

475. கேள்வி: நாகரிகம் எது, அநாகரிகம் எது?

□பதில்:அறிவு வழியில் நம் வாழ்க்கை செலுத் தப்படுவது நாகரிகம் (மனித நாகரிகம்). மனம் போனபடி தீய வழியில் செல்வது அநாகரிகம் (சைத்தான் நாகரிகம்).

தெய்விகக் குணங்கள் கொண்ட வாழ்க்கை நாகரிகம். அசுர குணங்கள் கொண்ட வாழ்க்கை அநாகரிகம்.

சிக்கனமாக இருப்பது நாகரிகம். கருமித் தனமாக இருப்பது அநாகரிகம்.

தற்காலத்தில் நாகரிகத்தின் பெயரால், நாம் பல அநாகரிகங்களையும் சேர்த்து வளர்த்து வருகிறோம்.

★★★

திருக்குறளில் (குறள்-580) இடம் பெற்றிருக்கும் 'நாகரிகம்' என்ற சொல், 'பண்பாடு' என்ற பொருளில்தான் அமைந்துள்ளது. இதிலிருந்து அந்நாளில் நாகரிகம் என்ற சொல், பண்பாடு என்ற பொருளில் இருந்துள்ளது என்பதை அறியலாம்.

இப்போது பெரும்பாலும் நாகரிகம் என்பது புறவாழ்க்கையையும், பண்பாடு என்பது அகவாழ்க்கையையும் குறிப்பதாக வழக்கில் உள்ளது.

இப்போது ஒருவரைப் பற்றி, ''அவர் நாகரிகமாக வாழ்கிறார்'' என்று சொன்னால் அது, 'அவரது உணவு, உடை, உறைவிடம் சிறப்பாகச் செல்வச் செழிப்புடன் அமைந்துள்ளது' என்று பொருள்.

இப்போது ஒருவரைப் பற்றி, ''அவர் பண்பாடுடையவர்'' என்று சொன்னால் அது, 'அவர் பணக்காரர், நல்ல வீடு வாகனம், சொத்து உடையவர்' என்று பொருள் அல்ல.

எனினும் ஒருவரைப் பற்றி, ''அவர் நாகரிகமாக நடந்துகொண்டார்'' என்று கூறும்போது,

''அவர் பண்புடன் நடந்துகொண்டார்'' என்ற பொருளும் வழக்கில் உள்ளது.

85.வாழ்க்கை

476. கேள்வி: வாழ்பவர்கள் யார்? உண்மையில் வாழ்பவர்கள் யார்?

□பதில்: ஞானிகளும் சான்றோர்களுமே உண்மையில் வாழ்பவர்கள். மற்றவர்கள் சொல்லளவில் (பெயரளவில்) மட்டும் வாழ்கிறார்கள்.

477. கேள்வி: 'இம்மை' என்றால் என்ன? 'மறுமை' என்றால் என்ன?

□பதில்: இப்போது நாம் வாழும் இந்த உலக வாழ்க்கையை 'இம்மை' என்றும், மரணத்திற்குப் பிறகு அமைய இருக்கும் வாழ்க்கையை 'மறுமை' என்றும் கூறுவது மரபு.

478. கேள்வி: மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வது என்றால் என்ன?

□பதில்: வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறும் வகையில், பிறவிப் பயனைப் பெறும் வகையில் அமைந்த வாழ்க்கை எதுவோ, அதுவே மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வாழ்க்கை யாகும்.

479. கேள்வி: 'தாளாண்மை' என்ற சொல்லின் பொருள் என்ன?

□பதில்: 'முயற்சி உடைமை' என்பது பொருள்.

எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலில், அர்ப்பணிப்பு, பணியார்வம், சத்தியம், தர்மம், இறைவன் தொண்டு என்ற எண்ணம் ஆகியவை இருக்க வேண்டும்.

480. கேள்வி: மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு என்ன வழி?

□பதில்: மனக்குரங்கு மனிதனைப் பல விதங்களில் ஆட்டிப்படைக்கிறது. அதனால் மனத்தில் மகிழ்ச்சியில்லாத நிலை ஏற்படுகிறது. தெய்வ பக்தியோடும், ஒழுக்கங்களோடும் வாழும் போதுதான் மனிதன் மகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

இதுதான் முறையான வாழ்க்கையின் லம் நிறைவான இன்பத்தை, மாறாத இன்பத்தைப் பெறுவதற்குச் சரியான வழியாகும்.

481. கேள்வி: புத்துணர்ச்சியுடன் வாழ்வது எப்படி?

□பதில்:நாம் புத்துணர்ச்சியுடன் வாழ வேண்டுமானால், இறைவனின் அருட்பார்வை நம் மீதுபட வேண்டும்.

நாம் புத்துணர்ச்சியுடன் வாழ்வதற்கு உரிய வழி, புத்துணர்ச்சி தரத்தக்க கருத்துகளை நாம் நமது உள்ளத்தில் நிரப்புவதாகும்.

உயர்ந்த பணிகளை மேற்கொண்டு செய்து வருபவர்களிடம் புத்துணர்ச்சி எப்போதும் இருக்கும். உயர்ந்த நோக்கம் இல்லாமல் ஊக்கம் இல்லை.

இன்றைய சமுதாயம் போட்டிகள் நிறைந்த சமுதாயம். வலிமை பெற்றவனே இதில் வாழ முடியும். எனவே மனிதனுக்கு வாழ்க்கையில் நேரும் போராட்டங்களைச் சந்திப்பதற்கு இன்று புத்துணர்ச்சி, தன்னம்பிக்கை பெரிதும் தேவைப்படுகிறது.

482. கேள்வி: வாழ்க்கையில் உயர்வு பெறுவதற்கு என்ன வழி?

□பதில்: கல்விச் சிறப்பும், ஒழுக்க உயர்வும், தவமும், உழைப்பும், தொண்டும் நம்மை நிச்சயம் உயர்த்தும்.

483. கேள்வி:வாழ்க்கையின் முக்கியக் கூறுகள் யாவை?

□பதில்: கிராமங்களில் திட்டும்போது ''கூறு கெட்டவன்'' என்று சொல்கிறார்கள். இதில் 'கூறு' என்பது 'அறிவுக்கூறு' என்றும், 'ஒரு செயலைத் திறமையாக வெற்றிகரமாகச் செய்து முடிப்பது' என்றும் பொருள்படும்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் வாழ்க்கையின் முக்கியக் கூறுகள் என்று இந்து மதம் வகுத்திருக்கிறது.

484. கேள்வி: மனிதன் எதைப் பின்பற்ற வேண்டும்? மனிதன் எதைப் பின்பற்றக் கூடாது?

□பதில்: இன்சொல், தானம் , தவம், சத்தியம், புலனடக்கம் போன்றவற்றை மனிதன் பின்பற்ற வேண்டும்.

பொறாமை, பேராசை, கோபம், இன்னாச் சொல் போன்றவற்றை மனிதன் தவிர்க்க வேண்டும்.

485. கேள்வி: ஒருவன் தனக்காக வாழ்வது தவறா?

□பதில்: ஒருவன் தனக்காக வாழ்வதில் தவறில்லை. ஆனால் தனக்காக மட்டுமே வாழ்வது தான் தவறு.

ஆலமரம் போல் இருந்து பிறருக்கு நிழல் தர வேண்டுமே தவிர, பனைமரம் போல் இருக்கக் கூடாது.

பிறர் மகிழ்ச்சிக்காக நம்மால் இயன்றதை நாம் கட்டாயம் செய்ய வேண்டும்.

நாம் தியாக மனப்பான்மையுடனும், மிகுந்த கடமையுணர்வுடனும் வாழ வேண்டும். வெறும் சுயலாபத்திற்காக மட்டும் வாழ்வது கூடாது.

சமயநெறி - சமுதாயநெறி ஆகிய இரண்டுமே, மனிதன் பிறர் நலம் நாடுபவனாகவும் வாழ வேண்டும் என்று வலியுறுத்துகின்றன.

486. கேள்வி: எனக்கு இந்த உலகில் வாழத் தெரியவில்லை. நான் என்ன செய்வது?

□பதில்:எனக்கு வாழத் தெரியவில்லை என்றால், வாழத் தெரிந்தவர்களைப் பின்பற்றி நான் நடப்பதுதான் எனக்கு நன்மை தரும்.

487. கேள்வி: வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களை எதிர்கொள்வதற்கு எனக்கு ஒரு வழி சொல்லுங்கள்?

□பதில்:வாழ்க்கையில் போராட்டங்கள் பலவிதமாக இருக்கும். அவற்றை எதிர்கொள்ள வேண்டிய முறைகளும் வெவ்வேறு விதமாக இருக்கும்.

என்னுடைய பொதுவான பதில் இது:

இறைவனிடம் ஆழ்ந்த பக்தி கொள்வதே வாழ்க்கையில் போராட்டங்களை எதிர்கொள்

வதற்குரிய சரியான வழியாகும். இது பன்னெடுங் காலமாக இருந்து வரும் அனுபவ உண்மை.

488. கேள்வி: எல்லோருக்கும் உயர்ந்த வாழ்க்கை அமைவதில்லை. இது ஏன்?

□பதில்: முற்பிறவியில் தவம் குறைந்தவர்களுக்குத் தகாத வாழ்க்கையும், தவம் நிறைந்தவர்களுக்குத் தக்க உயர் வாழ்வும் அமைகின்றன.

உலகில் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குப் பல வழிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது - அறிவிலும், ஒழுக்கத்திலும், தவத்திலும் சிறந்த பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல்.

கங்கை தன் இலக்கை நோக்கி எப்போதும் சென்றுகொண்டே இருப்பதுபோல், நமது வாழ்க்கையும் உயர்ந்த ஓர் இலக்கை நோக்கிச் சென்றுகொண்டே இருக்க வேண்டும்.

489. கேள்வி:நான் ஏன் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்? மற்றவர்களை நான் ஏன் துன்புறுத்தக் கூடாது?

□பதில்:புண்ணியத்தைச் சேர்க்க வேண்டுமானால் பிறருக்கு உதவ வேண்டும்.

பாவத்தைச் சேர்க்க வேண்டுமானால் மற்றவர்களைத் துன்புறுத்த வேண்டும்.

''ஒரு நாளில் முற்பகலில் ஒருவருக்குத் தீங்கு செய்தால், செய்தவருக்கு தீங்குகள் அன்று பிற்பகலுக்குள் தாமாகவே வந்து சேரும்'' என்று திருவள்ளுவர் (குறள்-319) கூறுகிறார்.

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்
நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.
(குறள்-320)

பொருள்: ''பிற உயிர்களுக்குத் துன்பம் செய்பவரையே துன்பம் வந்தடையும். ஆதலால் துன்பம் இல்லாமல் வாழ விரும்புபவர்கள், எந்த உயிருக்கும் துன்பம் செய்தல் கூடாது.''

இயன்ற வரையில் பிறருக்கு உதவுதல், எல்லோரிடமும் அன்புடன் பழகுதல், பழி பாவங்களுக்குப் பயப்படுதல் போன்றவற்றை நீங்கள் கடைப்பிடிப்பது, உங்களுக்கு நீங்களே செய்துகொள்ளும் நன்மையாகும். நல்லொழுக் கங்கள் மட்டுமே நம்மை உண்மையில் உயர்வு பெறச் செய்யும்.

மற்றவர்களுக்கு நன்மை செய்வதும், மற்றவர்களுக்குத் தீமை செய்யாமல் வாழ்வதும் தான் மாட்சிமை பொருந்திய வாழ்க்கையாகும்.

நாம் எதையெல்லாம் மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோமோ, அவற்றையெல்லாம் நாம் மற்றவர்களுக்கு வழங்க வேண்டும்.

உயர்ந்த பண்புகளுடன் வாழும்போது தான் மனித வாழ்க்கை சிறப்புப் பெறுகிறது. புனிதமான எண்ணங்களில் வாழ்வதில்தான் வாழ்க்கையின் வெற்றியே அடங்கியிருக்கிறது. பண்பு இல்லாத வாழ்க்கை - அறம் சாராத வாழ்க்கை - வாழ்ந்தும் பயனில்லை.

490. கேள்வி: மற்றவர்கள் சொல்வது போல் நான் நடந்துகொள்வது நல்லதா? அல்லது என் அறிவு கூறுவதுபோல் நான் நடந்துகொள்வது நல்லதா?

□பதில்:பொதுவாகப் புறவாழ்க்கையிலும் அக வாழ்க்கையிலும், மற்றவர்களைப் பின்பற்றுவது மனித இயல்பு.

உங்கள் நன்மையில் நாட்டம் கொண்ட நாலு பேர் சொல்வதைக் கேட்டு நீங்கள் நடப்பது நல்லதுதான். ஆனால் இதன் பொருள், உங்களுக்கு சுயசிந்தனையே இருக்கக் கூடாது என்பது அல்ல.

உயர்ந்த சுயசிந்தனை என்பது மனிதனுக் குத் தனித்தன்மையையும் உயர்வையும் தருகிறது. நமது செயல்கள் அறிவுபூர்வமாகவும், அறிவியல் பூர்வமாகவும் இருக்க வேண்டும்.

491. *கேள்வி: மனிதர்களில் மிருகம் யார்? அசுரர்கள் யார்? தேவர்கள் யார்? தெய்வசாதியினர் யார்?*

□பதில்: 'நான் மட்டும் வாழ வேண்டும்; மற்றவர்கள் கஷ்டப்படட்டும்; நான் சுகமாக வாழ்வதற்காக மற்றவர்கள் கஷ்டப்பட்டாலும் அதை நான் பொருட்படுத்தமாட்டேன்' என்று நினைப்பது மிருக இயல்பு.

தங்கள் ஆற்றலை சுயநலனுக்கு மட்டும் பயன்படுத்தும் இவர்களை 'அசுரர்கள்' என்றும் சொல்லலாம்.

தாங்களும் வாழ்ந்து மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் மனிதர்கள்.

தன் பொருட்டு வாழாமல் மற்றவர்களுக் கர்க வாழ்பவர்கள் - தங்கள் ஆற்றலை சமுதாய நலனுக்குப் பயன்படுத்துபவர்கள் தேவர்கள். இவர்கள், ஒரு தேவை என்று வரும்போது

தாங்கள் துன்பப்பட்டாலும் மற்றவர்கள் வாழ வேண்டும் என்று நினைத்துச் செயல்படுவார்கள்.

'ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள்' என்று கருதுபவர்கள் தெய்வஜாதியினர்.

492. கேள்வி: *சராசரி மனிதன் யார்? உயர்ந்த மனிதன் யார்?*

□பதில்: சூழ்நிலைக்கேற்ப வாழ்பவன் சராசரி மனிதன். சூழ்நிலையை மாற்றி உயர் வாழ்வு வாழ்பவர்களே உயர்ந்தவராவர்.

86.வாழ்க்கையில் வெற்றி

493. கேள்வி: *வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி?*

□பதில்: எவரிடமும் இனிமையாகப் பேசுவது தான், வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு முதல் படியாகும்.

காலம் விரைந்துகொண்டிருக்கிறது. காலத்தின் அருமையை உணர்ந்து அதைப் பயன்படுத்துபவர்கள், செயல்படுபவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுகிறார்கள்.

அரிய செயல்களைச் செய்ய வேண்டுமானால், மனம் ஒருமுகப்பட்டிருக்க வேண்டும். மன இறுக்கம் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாகும்.

ஒரு செயலை ஆரம்பிப்பதற்கு முன்பு அதனால் ஏற்படும் நல்லனவற்றையும், அல்லனவற்றையும் ஆராய்ந்து தீர்மானித்து, உரிய காலம் அறிந்து செயல்பட வேண்டும்.

பிறரை அனுசரித்து வாழ்பவர்கள் - விட்டுக் கொடுத்து வாழ்பவர்கள், சரியாகவும் ஆழமாகவும் சிந்திக்கத் தெரிந்தவர்கள், உழைப்பும் முயற்சியும் உள்ளவர்கள் மட்டுமே வாழ்க்கையில் வெற்றிகளைக் குவிக்கிறார்கள்.

'வெற்றி பெறுவோம்!' என்று நாம் உறுதியாகவும் பூரணமாகவும் நம்பினால், வெற்றி நம் வாசலை வந்து தட்டும்.

494. கேள்வி: நாம் சாதனையாளர்கள் ஆவது எப்படி?

□பதில்: பேனாவில் எந்த நிறத்தில் நாம் இங்க் ஊற்றுகிறோமோ, அந்த நிறத்தில்தான் அந்தப் பேனாவினால் நாம் எழுதும் எழுத்தும் அமையும். அதுபோல் எந்த அளவுக்கு உயர்வான சிந்தனைகள் நம்மிடம் இருக்கின்றனவோ, அந்த அளவுக்கே நாம் சாதனைகளைப் படைக்க முடியும்.

உள்ளத்தின் ஊக்கத்திற்கு ஏற்பவே ஒருவன் மேற்கொள்ளும் முயற்சிகள் அமைகின்றன. ஒருவன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஏற்பவே அவன் பெறும் வெற்றிகள் அமைகின்றன. எனவே ஊக்கம்தான் வெற்றிகள் அனைத்திற்கும் லமாக விளங்குகிறது.

495. கேள்வி: வாழ்க்கையில் நான் உயர்ந்தவராவதற்கு என்ன செய்ய வேண்டும்?

□பதில்: நீங்கள் உயர்ந்தவராக விரும்பினால் உயர்ந்தவற்றையே சிந்தியுங்கள், உயர்ந்தவற்றையே பேசுங்கள், உயர்ந்தவற்றையே செயல்படுத்துங்கள்.

வியாபாரம் செய்வதற்கு முதல் (பணம்) தேவை, குழந்தைக்குத் தாயன்பு தேவை,

மனிதன் உயர்ந்த மனிதனாக வாழ்வதற்குப் பெரியோர் தொடர்பு - சத்சங்கம் கட்டாயம் தேவை.

சிறிய சிறிய சிந்தனைகளில் மனம் உழன்றுகொண்டிருப்பதைத் தவிர்த்து, உயர்ந்த சிந்தனைகளில் மனத்தை வைத்திருப்பதற்கு நீங்கள் முயற்சியும் பயிற்சியும் செய்ய வேண்டும்.

சிறிய சிறிய விஷயங்களிலும், அற்ப விஷயங்களிலும் கவனம் செலுத்துபவர்கள் - பெரிய சாதனைகளைப் படைக்க இயலாத வர்களாக இருப்பார்கள்.

கண்ணாடியில் தூசி படிந்திருந்தால், அதில் நம் உருவம் சரியாகத் தெரியாது. அது போல் எதிர்மறையான சொல் செயல் சிந்த னைகள், தீய எண்ணங்கள், தீய இயல்புகள் நம்மிடம் இருந்தால் நமது ஆற்றல்கள் வெளிப் படாது.

தீட்டத் தீட்டத்தான் வைரம் ஜ்வலிக்கும், சுடச் சுடத்தான் பொன் ஒளிரும், அரைக்க அரைக்கத்தான் சந்தனம் மணக்கும். அதுபோல் முறையாக உழைக்க உழைக்கத்தான் மனிதன் உயர்வு பெறுகிறான்.

496. கேள்வி: வாழ்க்கையில் சிலர் மகத்தான வெற்றி யாளர்களாகத் திகழ்கிறார்கள். அத்தகைய வாழ்க்கை பலருக்கும் அமையாததற்கு என்ன காரணம்?

□பதில்: தோல்வி என்பது ஒரு பாடம். பல அறிவியல் கண்டுபிடிப்புகள், பல பரிசோதனை களின் தோல்விகளிலிருந்து கிடைத்த வெற்றிகள் தான்.

துன்பப்படாமல், உழைக்காமல், சிரமப் படாமல் உலகில் அரிய சாதனைகளைப் படைக்க முடியாது.

திண்ணிய நெஞ்சம் உடையவர்கள், வைரமுடைய நெஞ்சம் உடையவர்கள் மகத்தான வெற்றியாளர்களாகத் திகழ்வார்கள்.

அலைபாயும் மனம் உள்ளவர்கள் தோல்வியைத் தழுவுபவர்களாக இருப்பார்கள்.

குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசுவதும், குடத்திலிட்ட விளக்காக ஒளி மங்கிப் போவதும் அவரவர் கையில்தான் இருக்கிறது.

ஊக்கம் இல்லாதவனிடம் முயற்சி இருப்பதில்லை. முயற்சி இல்லாதவனிடம் ஆக்கமும் இல்லை, செழிப்பும் இல்லை.

497. கேள்வி: இன்றைய இளைஞர்களின் சிந்தனை யோட்டம் எத்தகையதாக இருக்க வேண்டும்?

□பதில்: ‘‘நீங்கள் இறைவனின் பிள்ளைகள். வாருங்கள், வந்து ஏதாவது வீரச் செயலைச் செய்யுங்கள். நீங்கள் இறைவனால் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள். நீங்கள் அனைவரும் மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்காகப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள்’’ என்று, சுவாமி விவே கானந்தர் குறிப்பிட்டிருக்கிறார்.

‘சிரமங்களைத் தொடர்ந்து சென்று சிகரங்களை அடைவேன், வாழ்க்கையில் நான் நிச்சயம் வெற்றி பெற்றே தீருவேன், என்னால் எதையும் சாதிக்க முடியும், அரிய சாதனை களைப் படைக்கும் வாழ்க்கையாக என் வாழ்க் கையை நான் அமைத்துக்கொள்வேன், முயற்சி

யின்றி லையில் முடங்கியிருக்கக் கூடாது, தேடாமல் கிடைக்காது - தட்டாமல் திறக்காது' போன்ற ரீதியில் நமது இளைஞர்களின் சிந்தனைகள் இருக்க வேண்டும்.

இவை போன்ற சிந்தனைகள் இருந் தாலும், அவை செயல் வடிவம் பெறாவிட்டால் பயனில்லை. எனவேதான், ''கருமமே கட்ட ளைக்கல்'' என்று வள்ளுவனார் (குறள்-505) குறிப்பிட்டார்.

'நாம் தன்னம்பிக்கையுடன் உழைக்க வேண்டும், திட்டமிட்டு உழைக்க வேண்டும், தொடர்ந்து உழைக்க வேண்டும், தளராத முயற்சியுடன் உழைக்க வேண்டும்' - இவை போன்ற ரீதியில் நமது இளைஞர்களின் சிந்தனைகள் அமைய வேண்டும்.

498. கேள்வி: வாழ்க்கையில் தோல்வியைச் சந்தித்தி ருக்கும் ஒருவருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

☐பதில்:'நான் உயர்ந்தவன்' என்ற எண்ணத் துடன், முழு ஊக்கத்துடன் செயல் புரிய வேண்டும். அப்படிச் செய்தால் தோல்வியின் நிழலும் நம் மீது படியாது.

ஓர் அரசன் மற்றோர் அரசனைத் தோற் கடித்து சிறை பிடித்தான். வெற்றி பெற்ற அரசன் தோற்ற அரசனிடம், ''உன் கோட்டை எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

அதற்கு தோற்ற அரசன், ''இதோ இங்கே இருக்கிறது!'' என்று தன் நெஞ்சைக் காட்டி னான். அவன் தோல்வியால் நிலைகுலைந்து

போயிருந்தால் அப்படிச் செய்திருக்க முடியாது. தோல்வியிலும் அவன் பெற்றிருந்த துணிவைப் பார்த்த அரசன் நிலைகுலைந்து போனான்.

இதுபோல், தோல்வியின்போதும் தளராத நெஞ்சுரம் நமக்கு இருக்க வேண்டும்.

87.பழக்க வழக்கங்கள்

499. கேள்வி: "இது இந்தக் கோயிலிலுள்ள வழக்கம், இது இந்தக் கோயிலில் உள்ள சம்பிரதாயம்" என்று கேள்விப்படுகிறோம்.

வழக்கம் என்பதற்கும், சம்பிரதாயம் என்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்: ஒரு செயலின் ஆரம்ப நிலை பழக்கம். (இது தனிமனிதனுக்கும் பொருந்தும். சமுதாயத் திற்கும் பொருந்தும்.) அது முதிர்ச்சி பெறும் போது வழக்கம் என்று அழைக்கப்படுகிறது. வழக்கம் முதிர்ச்சிபெறும் போது அது மரபு, சம்பிரதாயம், ஐதீகம் என்று அழைக்கப்படு கிறது.

தொன்றுதொட்டு வரும் நம்பிக்கைகள், மரபுகள் ஆகியவற்றிற்குப் பக்தியில் முக்கிய இடம் உண்டு.

500. கேள்வி: "பெரியோர்களின் காலடிகளைத் தொட்டு வணங்கலாம்" என்று சிலர் கூறுகிறார் கள்.

வேறு சிலர், "பெரியோர்களின் காலடி களைத் தொட்டு வணங்கக் கூடாது" என்று கூறுகிறார்கள்.

இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: பெரியோர்களின் திருவடிகள் இறைவனின் திருவடிகளுக்குச் சமமானவை.

501. கேள்வி: பித்ரு காரியங்களை எல்லோரும் செய்ய வேண்டுமா? செய்யாவிட்டால் என்ன?

□பதில்: இறந்த முன்னோர்களை உரிய நாளில் பக்தியுடனும் சிரத்தையுடனும் வழிபட வேண்டும். இந்தக் காரியங்களைச் சிரத்தையுடன் செய்ய வேண்டும் என்ற பொருளில்தான், 'சிரார்த்தம்' என்ற சொல்லும் அமைந்துள்ளது.

சந்நியாசிகள் சந்நியாசம் பெறுவதற்கு முன்பு, பித்ரு காரியங்களையும் செய்துவிடுகிறோம். அதனால் சந்நியாசம் பெற்ற பிறகு சந்நியாசிகள் பித்ரு காரியங்களைச் செய்ய வேண்டியதில்லை. சந்நியாசிகளைத் தவிர மற்றவர்கள் அனைவரும் உரிய நாளில் பித்ரு காரியங்களைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போதே பித்ரு கடனுடன்தான் பிறக்கிறான்.

பித்ரு கடனைச் செலுத்தாவிட்டால் பித்ரு சாபம் ஏற்படும். அத்தகைய வீட்டில் கூன், குருடு, செவிடுகள் என்று குழந்தைகள் பிறக்கும்.

பித்ரு சாபம் உள்ளவர்கள் மறுமையிலும் துன்பப்படும் வகையில் பிறவிகள் எடுப்பார்கள்.

502. கேள்வி: கருடனைத் தரிசிப்பதற்குரிய விசேஷமான நாள் எது?

□பதில்: வியாழக்கிழமை மாலையில் ஆகாயத்தில் கருடனைத் தரிசிப்பது விசேஷம். அதுவும்

ஆறு, குளம் போன்ற நீர் நிலைக்கு மேலே பறக்கும் கருடனைத் தரிசிப்பது மிகவும் விசேஷம் - இது முதல் கருத்து.

சனிக்கிழமை பெருமாளுக்கு உகந்த நாள். எனவே சனிக்கிழமை மாலையில் கருடனைத் தரிசிப்பதும் விசேஷம் - இது இரண்டாவது கருத்து.

503. கேள்வி: சில கோயில்களில் ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிடுகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: ''வேள்வியில் மாவால் செய்த பசு மாட்டையே பலியிட வேண்டும்; உயிருள்ள பசு மாட்டைப் பலியிடக் கூடாது'' என்று மத்வாச்சாரியார் கூறியிருக்கிறார். இந்தக் கருத்து ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிடுவதற்கும் பொருந்தும்.

88. திரைப்படங்கள்

504. கேள்வி: இன்றைய திரைப்படங்கள் பற்றித் தங்கள் கருத்து என்ன?

□பதில்: வாழ்க்கையில் பாதை மாறிப் போனவர்களில் பலர், தங்களின் தவறான வாழ்க்கைக்கு நியாயம் கற்பிப்பதுபோல் - இன்று திரைப் படங்களும், பத்திரிகைகளில் கதைகளும் வெளி வருவது சமுதாய நலனுக்கு உகந்தது அல்ல.

505. கேள்வி: திரைப்படங்களில் காதல் காட்சிகள் போன்றவை கோயில்களில் எடுக்கப்படுகின்றன. அவற்றில் பலர் சேர்ந்து பாடும் -ஆடும் மசாலாப் பாடல்களும் இடம் பெறுகின்றன. இதற்குப் புராதனமான திருத்தலங்களும் விதிவிலக்கல்ல.

இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: புராதனமான திருத்தலங்கள் மகான்கள் பலரோடு தொடர்பு கொண்டவையாகவும், அவர் களால் பாடல் பெற்ற தலங்களாகவும், தல புராணங்களைக் கொண்டவையாகவும் விளங்கி வருகின்றன.

எனவே அந்தத் தலங்களின் பெயரைக் கேட்டதுமே நமக்கு, அந்தத் தலங்களுடன் தொடர்புடைய தல வரலாறுகள், இறைவனின் லீலைகள், அங்கு வாழ்ந்த மகான்கள், அவர் களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவர்கள் பாடிய பாடல்கள், அவர்களின் உபதேசங்கள் என்று எல்லாமே நம் நினைவுக்கு வருகின்றன. அத்த கைய உயர்ந்த சிந்தனைகளை நம் மனத்தில் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காகவே நம் முன்னோர்கள் திருக்கோயில்களை நமக்கு உருவாக்கித் தந்தார்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் திரைப்படங்களில் கோயில் தொடர்பான காட்சிகள் அமையு மானால் - அது மகிழ்ச்சியுடன் அனுமதிக்கத் தக்கது; மிகவும் வரவேற்கத்தக்கது; பாராட்டத் தக்கது. மேலும் திரைக்கதையையொட்டிக் கோயில் காட்சிகள் திரைப்படங்களில் அமை வதும் சரிதான். அதைத் தவறு என்று சொல்வ தற்கில்லை.

அப்படியில்லாமல் கீழ்த்தரமான சிந்தனை களை உள்ளத்தில் தோற்றுவிப்பதற்குக் கோயில் கள் பயன்படுத்தப்படுமானால், அது நிச்சயம் தவறுதான். அது வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக் கதும் ஆகும்.

கோயில்களின் புனிதத்தைக் களங்கப் படுத்தும் வகையில் கீழ்த்தரமான திரைப்படக் காட்சிகளைக் கோயில்களில் எடுப்பதே தவறு. அதிலும் பழம் பெருமை வாய்ந்த புராதனக் கோயில்களில் அத்தகைய காட்சிகளை எடுப்பது மன்னிக்க முடியாத குற்றம்; பெரும் பாவம்; தெய்வ குற்றம்; தெய்வ அபராதம்; நியாய மற்றது; அருளாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்று நான் கருதுகிறேன்.

இதைச் செய்பவர்கள் 1. இறைவனுக்கும் துரோகம் செய்கிறார்கள், 2. அந்தத் திருக் கோயில்களைத் தெய்விக நோக்கங்களுக்காகக் கட்டிய நம் முன்னோர்களுக்கும் துரோகம் செய் கிறார்கள், 3. அந்தக் கோயில்களில் இப்போது வழிபாடு செய்பவர்களுக்கும் துரோகம் செய்கி றார்கள், 4. அந்தத் திரைப் படங்களைப் பார்ப் பவர்களுக்கும் துரோகம் செய்கிறார்கள், 5. எல்லாவற்றுக்கும் மேலாகத் தங்களுக்குத் தாங் களே துரோகம் செய்து தங்களைப் பாவப் பெருங்குழியில் ஆழ்த்திக்கொள்கிறார்கள். ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்ற இயேசு பிரானின் வாக்கு, இங்கே என் நினைவுக்கு வருகிறது.

கோயில் நிர்வாகிகள் அனுமதி கொடுத் தால்தான் கோயில்களில் திரைப்படக் காட்சி களைப் படமாக்க முடியும். எனவே கோயில் களின் புனிதத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய காட்சிகளைத் தங்கள் கோயில்களில் எடுக்கப் போகிறார்கள் என்று தெரிந்தால் - அதற்குக் கோயில் நிர்வாகிகள் அனுமதி தரக் கூடாது; உடந்தையாக இருக்கக் கூடாது.

அரசாங்கமே, ''திருக்கோயில்களில் கீழ்த் தரமான எண்ணங்களை மக்கள் மனத்தில் தோற்றுவிக்கக் கூடிய காட்சிகளைப் படமாக்கக் கூடாது'' என்று, ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும்.

திரைப்பட இயக்குநர்கள் சிலர் ராம கிருஷ்ண மிஷனைச் சேர்ந்த கிளைகளில் - மாணவர்கள் தொடர்புடைய நியாயமான - சில காட்சிகளைப் படமெடுக்க அணுகியது என் நினைவுக்கு வருகிறது. அதற்கே ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் சந்நியாசிகளாகிய நாங்கள் அனுமதி தந்ததில்லை.

பகுதி - 6

89.மகாத்மா காந்தி

506. கேள்வி: காந்திஜிக்கு 'தேசப்பிதா' என்ற பெயர் எப்படி வந்தது?

☐பதில்: 'தேசப்பிதா (நாட்டின் தந்தை)' என்று காந்திஜியை அழைத்த முதல் மனிதர் நேதாஜி.

தன் குழந்தைகளைக் காக்கும் தந்தையை 'பிதா' என்கிறோம்.

'பிதா' என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்குக் 'காப்பவர்' என்று பொருள்.

507. கேள்வி: 'காந்தியம்' என்றால் என்ன?

☐பதில்: தர்மம், சத்தியம், அகிம்சை ஆகிய ன்றும் சேர்ந்த ஒரு சொல்தான் 'காந்தியம்' என்று கூறப்படுகிறது.

508. கேள்வி:'சத்யாக்கிரக வழி' என்பதற்கு விளக்கம் வேண்டும்?

□பதில்: நமது நன்னடத்தையால் குற்றம் செய்த வர்களை மனமாற்றம் பெறச் செய்வதே சத்யாக்கிரக வழியாகும்.

509. கேள்வி:காந்திஜியின் அரசியல் வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுங்கள்?

□பதில்: இன்று அரசியல்வாதிகள் சிலர் பதவி சுகத்தில், பதவி மோகத்தில், பதவி மயக்கத்தில் பகல் கொள்ளைக்காரர்கள் போன்று நடந்து கொள்கிறார்கள்.

ஆனால் காந்திஜி பதவி அரசியலை நாடாமல், தொண்டு அரசியலை நாடினார். அவரது அரசியலில் தார்மிகமும், ஆன்மிகமும் முக்கியப் பங்கு வகித்தன.

510. கேள்வி:காந்திஜியின் வாழ்க்கை நமக்கு வழங்கும் செய்தி என்ன?

□பதில்: நாட்டுக்குத் தொண்டு செய்பவர்கள் தெய்வபக்தி உள்ளவர்களாகவும், சுயநலம் இல்லாதவர்களாகவும், பணிவுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை, புடம் இட்ட தேசியவாதியான காந்திஜியின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது.

அரசர்களாக இருந்து ஜனகர், அசோகர் போன்றவர்கள் அரச பதவிக்கே பெருமை தேடிக் கொடுத்தார்கள். அதுபோல், அரசியலில் இருந்து அரசியலுக்குப் பெருமை சேர்த்தவர் காந்தி யடிகள்.

ஒரு நாடு சிறப்பு பெறுவதில், அந்த நாட்டை ஆள்பவர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

பொய்களை அள்ளி அள்ளி வீசி, பொய்களைப் பக்கத் துணையாகக் கொண்டு, போலி வாழ்க்கை வாழும், முறையற்ற வாழ்க்கை வாழும், வாக்குறுதிகளை அள்ளிவிடும் வாக்குறுதிச் சக்கரவர்த்திகளான அரசியல்வாதிகளுக்கு காந்திஜியின் வாழ்க்கையில் நிறையப் படிப்பினைகள் இருக்கின்றன.

511. கேள்வி: மகாத்மா காந்தியின் சிறப்புக்கு என்ன காரணம்? காந்தியம் என்றால் என்ன?

□பதில்: மகாத்மா காந்திஜி வழிபாடு, உண்ணா விரதம், பொறுமை ஆகியவற்றைத் தன் தாயிடமிருந்து கற்றார். அதனால் அவரது வாழ்க்கை, இந்திய தார்மிகத்தை வேராகக்கொண்டிருந்தது என்பதே அவரது சிறப்புக்குக் காரணம். ஆதலால் அவர் தமது ஆன்மிகப் பயணத்தின் ஓர் அங்கமாகவே சமுதாயப் பணியையும் கருதினார். எனவே அவர், ஆங்கிலேயருக்கு எதிராக வன்முறையற்ற அகிம்சை வழியில் போராட்டம் நடத்தினார்; சத்தியத்திற்கும் அகிம்சைக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்.

'ஒரு சர்க்காவைச் சுழற்றி ஒரு சர்க்காரையே சுழற்றியவர் காந்திஜி' என்பது உண்மைதான்.

அவரது தலையாய போர்க்கருவிகளாக, சத்தியமும் அகிம்சையும் விளங்கின. எனவே இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில், காந்தி

ஜியின் எழுத்துகள்தான் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதமாகச் செயல்பட்டன.

காந்திஜியிடமிருந்த நேர்மை, எளிய தன்மை, மக்களோடு ஒருவராகப் பழகும் தன்மை ஆகியவைதான் அவரை ஒரு மக்கள் தலைவராக ஆக்கின. இந்த அவரது குணங் களால்தான், அவரால் இந்திய விடுதலை இயக் கத்தை ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாகவும் மாற்ற முடிந்தது.

காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய நெறியே 'காந்தியம்' என்று வழங்கப் பெறுகிறது.

512. கேள்வி: மகாத்மா காந்திஜி கூறிய அரசியல் கருத்துகளை மக்கள் மதித்து ஏற்றுக் கொண்டார்கள்.

தமிழ்நாட்டிலும் நாத்திகம் பேசும் ஓர் அரசியல் தலைவர் இருக்கிறார். ஆனால் அவர், கூறும் கருத்துகளை ஒருவருமே மதிப்பதில்லை. இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்?

□பதில்: காந்திஜி ஓர் அரசியல் ஞானி. போலித் தனம் இல்லாத அரசியல்வாதியான அவர், எல்லாவற்றையும் ஆன்மிகக் கண் கொண்டு பார்த்தார்.

"1. உழைப்பற்ற செல்வம், 2. நேர்மை யற்ற வியாபாரம், 3. ஒழுக்கமற்ற கல்வி, 4. ஈடுபாடற்ற வழிபாடு, 5. மனிதத்தன்மையற்ற அறிவியல், 6. மனச்சாட்சியற்ற இன்பம், 7. கொள்கையற்ற அரசியல் ஆகியவை பாவங்கள்" என்று, மகாத்மா காந்திஜி கூறியுள்ளார்.

இன்றைய அரசியல்வாதிகள் நாத்திகம் பேசுவது, சுயநலத்துடன் வாழ்வது, லஞ்சம் வாங்குவது, ஊழல் செய்வது, கொள்கை இல்லாமல் அரசியல் நடத்துவது ஆகியவைதான் அரசியல் வாழ்க்கை என்று நினைக்கிறார்கள்.

பெரும்பாலும் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும், தங்கள் தங்கள் பங்குக்குக் தேசிய ஒற்றுமையைக் குலைத்து வருவதையே நாம் இன்று பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

''எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே, இன்றைய அரசியல்வாதிகள் ஊர் மக்கள் சொத்தை அபகரிக்கிறார்கள்.

இன்று நாட்டின் நலனுக்கு உலை வைப்ப வர்களாகவே அரசியல்வாதிகள் பலரும் செயல் படுகிறார்கள்.

'அறியாச(ஜ)னங்கள் இருக்கும் வரை அரியாசனம் எங்களுக்குத்தான்' என்பது, இன்றைய போலி அரசியல்வாதிகளின் கருத்தாக உள்ளது.

அரசியல்வாதிகளில் பலரது வாழ்க்கை, மறைமுகமாக சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாகவே இருக்கிறது.

சுயநலமின்றி தன் உயிர்போல் மக்க ளைக் கருதுவது, பால் நினைந்தூட்டும் தாய் போல் இருந்து மக்கள் நலனைப் பாதுகாப்பது தான் உண்மையான அரசியல் ஆகும்.

''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்ற சங்கப் பாடல், ''மன்னன் மக்களுக்கு உயிர் போன்றவன்'' என்று கூறுகிறது.

''அயோத்தி மக்கள் உயிராகவும், அந்த மக்களின் உடலாகவும் இருந்து தசரத மன்னன் ஆட்சி செய்தான்'' என்று, கம்ப ராமாயணம் (பால காண்டம், பாடல் எண் -177) கூறுகிறது.

நல்லொழுக்கங்கள், நற்பண்புகள் கொண்ட தலைவர்களால் மட்டுமே சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

நல்ல மனிதர் ஒருவரால் சமுதாயமே நன்மை பெறும் என்பதற்கு, மகாத்மா காந்திஜியின் வாழ்க்கை ஓர் எடுத்துக்காட்டு.

இதற்கு மாறாக, சுயநலம் கொண்ட ஓர் அரசியல் தலைவரால் சமுதாயத்தில் எல்லா விதமான சீரழிவுகளையும் ஏற்படுத்த முடியும் என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம்.

யார் தங்களுடைய பேச்சை ஆண்டவனுடைய பேச்சுடன் இணைத்துக்கொள்கிறார்களோ, அவர்களுடைய பேச்சு ஒளி பொருந்தியதாகவும், பிறரால் தலைமீது வைத்து மதிக்கத் தக்கதாகவும் விளங்கும். எனவேதான், ''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்று பாரதியார் குறிப்பிட்டார்.

நல்ல கருத்துகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதுடன், அதைத் தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுபவர்களே இன்றைக்குச் சமுதாயத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

இந்த உண்மை அரசியலுக்கு மட்டுமின்றி, அனைத்துத் துறையினருக்கும்கூடப் பொருந்தும்.

90.பாரதியார்

513. கேள்வி: ''தில்லுமுல்லுகள் செய்யும் உலுத்தர்கள் கூட்டம் குறுக்கு வழியில் வாழ்க்கை வசதிகளைப் பெற்றுவிடுகிறது'' என்று நான் சொல்கிறேன். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

☐பதில்: (மகாகவி சுப்பிரமணிய பாரதியின் தந்தையின் பெயர் சின்னசாமி.) சின்னசாமி பெற்றெடுத்த பெரியசாமியின் பெயரை (பாரதி என்ற பெயரை) இந்தக் கேள்வியைக் கேட்கும் நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அப்படியிருக்கும்போது உங்கள் கருத்தை நான் மறுப்பேனா?

514. கேள்வி: ''தனியொருவனுக் குணவிலை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று மகாகவி பாரதியார் பாடியிருக்கிறார். இது சரியா?

☐பதில்: ஜகத்தை (உலகத்தை) அழிப்பது பாரதியின் நோக்கமல்ல. 'எல்லோருக்கும் உணவு கிடைக்க வேண்டும்' என்ற தமது நோக்கத்தை, அவர் அவ்விதம் தெரிவித்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர் இவ்விதம் கூறுகிறார்:

''எனது நாட்டில் ஒரே ஒரு நாய் உணவில்லாமல் பட்டினி இருந்தாலும், அதற்கு உணவு கிடைக்க வழி காண்பதுதான் என் மதமாகும்.

''நமது நாட்டு ஏழைகள் உணவில்லாமல் பட்டினி கிடப்பதைப் பார்க்கும்போது - பூஜை

முதலியவற்றையும், கல்வியையும் தூர எறிந்து விட்டு, தவத்தாலும் புலனடக்கத்தாலும் வந்த ஆற்றலால் பணக்காரர்களின் மனத்தைத் திருப்பி, பணம் திரட்டி - ஊர் ஊராகச் சென்று ஏழைகளுக்குத் தொண்டு செய்வதில் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாகிறது.

''நான் ஒரு சோஷலிஸ்டு. சோஷலிஸத் திட்டம் பரிபூரணமானது என்ற கருத்தில் அதை நான் ஆதரிக்கவில்லை. உணவே இல்லாமல் இருப்பதைவிட, அரைவயிறு உணவு சிறந்தது என்பது என் கருத்தாகும்.''

515. கேள்வி: ''ரௌத்திரம் பழகு'' என்று மகாகவி பாரதியார் கூறியது சரியா?

□பதில்: வெள்ளையர் ஆட்சிக்கு வெண்சாமரம் வீசிய கோழைகளைப் பார்த்து பாரதி, ''ரௌத்திரம் பழகு'' என்றார். இதில், அநீதியை எதிர்க்க வேண்டும் என்ற எக்காலத்திற்கும் பொருந்தும் உண்மை இருக்கிறது.

பாரதியின் உலக அனுபவங்களின் பிரதிபலிப்பாகவும், அவரது எதிர்பார்ப்புகளின் எதிரொலியாகவும், அவரது எழுத்துகள் விளங்குகின்றன.

516. கேள்வி: மகாகவி பாரதியாரின் கருத்துகளில் உங்களுக்கு மிகவும் பிடித்த கருத்து எது?

□பதில்: நமது மனநிலைக்கு ஏற்ப, ஒவ்வொரு சமயத்தில் சான்றோர்களின் ஒவ்வொரு கருத்து நமக்குப் பிடித்திருக்கும்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே'' என்று, பாரதியாரின் பாடலில் இடம் பெற்றுள்ளது. இந்த வரிகளை பாரதியார் பிள்ளையார் சுழி போல் முதலில் எழுதிவிட்டுத்தான், பின்னர் பாடல்கள் எழுதுவதைத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார். இது பாரதிக்குத் தாய்மீதும், தாய்நாட்டின்மீதும் இருந்த பக்தியைக் காட்டு கிறது.

517. கேள்வி: ''இன்று புதிதாய்ப் பிறந்தோம்'' என்று மகாகவி பாரதியார் குறிப்பிட்டார். இதை உதாரணத்துடன் விளக்குங்கள்.

□பதில்: தீய குணங்களுடனும், தீய பழக்கங் களுடனும், ஒழுக்கக்கேடுகளுடனும் வாழும் ஒருவன், மனமாற்றம் பெற்றுத் திருந்தி வாழ ஆரம்பிப்பதையே - புதிய வாழ்க்கையை நம்பிக் கையுடன் துவக்குவதையே நாம், ''இன்று புதிதாய்ப் பிறந்தோம்'' என்று சொல்கிறோம். அப்படிப்பட்டவனை, ''மறுபிறவி எடுத்தான்'' என்றும் கூறுகிறோம். இது ''த்விஜன்'' எனப் படும் ''இரு பிறப்பாளன்'' என்ற நிலையாகும்.

பெரிய புராணத்தில் இடம் பெற்றிருக்கும் திருநீலகண்ட நாயனாரிடம், ''தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்'' என்று, அவர் மனைவி கூறினார்.

அப்படி மனைவி கூறியதும் திருநீலகண்ட ரிடம் ஏற்பட்ட மனமாற்றம், அவரைப் புதிதாய்ப் பிறந்தவர்போல் ஆக்கியது.

வேடன் ரத்தினாகரன், 'இன்று நாம் புதிதாய்ப் பிறந்தோம்' என்ற மனமாற்றம் பெற்ற

தால், வால்மீகி மகரிஷியாக உயர்ந்து ராமாயணம் படைத்தார்.

வில்வமங்கள், 'இன்று நாம் புதிதாய்ப் பிறந்தோம்' என்ற மனமாற்றம் பெற்றதால், மகாகிருஷ்ண பக்தராக மாறி 'ஸ்ரீகிருஷ்ண கர்ணாமிருதம்' என்ற நூலை உலகிற்கு வழங்கினார்.

மனம் திருந்துபவர்களுக்கு விண்ணரசு கிட்டும். ''மனம் திரும்புங்கள், விண்ணரசு பெறுவீர்கள்'' என்று கிறிஸ்துவம் கூறுகிறது.

518. கேள்வி: மகாகவி பாரதியாருக்கும், இப்போதிருக்கும் கவிஞர்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

☐பதில்: இன்றையப் பல கவிஞர்களைப்போல் இல்லாமல், மகாகவி பாரதியார் ஆன்மபலம் கொண்டிருந்தார். அதனால் அவரது படைப்புகள் காலத்தால் கரைந்து போகாமலு மந்திரசக்தியுடனும், உயிரோட்டத்துடனும் விளங்குகின்றன.

காசுக்காகப் பாடிய கவிஞன் அல்ல பாரதி. அவர் இந்தக் காசினி (உலகம்) நலமுறப் பாடியவர்.

இப்போதிருக்கும் கவிஞர்களில் பலரும் சிறிது காலத்திற்கு மட்டும், சிலரை மட்டும் மகிழ்விக்கக் கூடிய கவிதைகளை எழுதுகிறார்கள்.

91.அரசியல்

519. கேள்வி: அரசியலுக்கும் ஆன்மிகத்திற்கும் தொடர்பு உண்டா, இல்லையா?

□பதில்:ஆன்மிகத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை. ஆனால் அரசியலுக்கும் ஆன்மிகத்திற்கும் தொடர்புண்டு. இங்கு, 'அரசியல்வாதிக்கு ஆன்மிகச் சிந்தனை அவசியம்' என்று மகாத்மா காந்திஜி கருதியது என் நினைவுக்கு வருகிறது.

520. கேள்வி: ஜனநாயக ஆட்சி நல்லதா, கெட்டதா?

□பதில்: முடியாட்சி (மன்னர் ஆட்சி), பிரபுக்கள் ஆட்சி, ராணுவ ஆட்சி, குடியாட்சி (ஜனநாயகம்) ஆகியவற்றை உலகம் இதுவரையில் கண்டிருக்கிறது. இவற்றில் குடியாட்சியே சிறந்தது.

''ஜனநாயக ஆட்சி ஒரு கழுதை'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இருக்கிற கழுதைகளில் இதுதான் நல்ல கழுதை.

521. கேள்வி:அரசியல்வாதிகளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் யாவை?

□பதில்: நாட்டை ஆள்பவர்களுக்குத் துறவு மனப்பான்மை கட்டாயம் இருக்க வேண்டும். இதில் மற்ற எல்லாத் தகுதிகளும் அடக்கம்.

522. கேள்வி: இன்றைய அரசியலுக்கும், காந்திஜியின் அரசியலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்:அடக்கம் கொண்டவர்களின் எண்ணிக்கை இன்று நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதற்கு ஒரு முக்கிய காரணம், இன்றைய அரசியல்வாதிகள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளும் ஆடம்பர, ஆரவார விளம்பரங்கள்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

காந்திஜி அரசியலில் இருந்தாலும், அடக்கமாகவே இருந்தார். அவர் தலைமைப் பதவிக்குப் போட்டி போட்டதில்லை. சுதந்தரப் போராட்டத்தில், நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட எளிய ஒரு தொண்டனாகவே அவர் தன்னைக் கருதிக்கொண்டார்.

523. கேள்வி:தனிமனிதனுக்கு ஒழுக்கம் தேவை என்கிறீர்கள். அரசியலுக்கு ஒழுக்கம் தேவையா, இல்லையா?

□பதில்: அரசியலில் ஒழுக்கத்தை இணைத்துக் கூறியவர் அரிஸ்டாட்டில். காந்திஜியின் அரசியலில் ஒழுக்கமும் இருந்ததை நாடறியும்.

''மனித உடலில் மிகவும் உயர்ந்ததாக இருப்பது உயிர்தான். ஆனால் அதைவிடவும் உயர்ந்தது ஒழுக்கம்தான்'' என்று, திருவள்ளுவர் (குறள்-131) கூறியிருக்கிறார்.

அரசியலுக்கு ஒழுக்கம் தேவையில்லை என்ற கருத்தை நிலைநாட்டிய 'பெருமை'யை இன்று அரசியல் 'தலைவர்கள்' சிலர் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கருத்து காலவெள்ளத்தில் கரைந்து போகும்; நிலைத்து நிற்காது.

524. கேள்வி: 'சர்வோதயம்' என்றால் என்ன?

□பதில்:'அனைவரின் (முன்னேற்றம்) நலன்' என்று பொருள்.

சர்வோதயம் என்பதில் ரகசியம் எதுவுமில்லை. இதில் எல்லாம் வெளிப்படையானது.

அறத்தையும் அகிம்சையையும் நல்லொழுக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டது

என்ற பொருளில், 'சர்வோதய அரசியல்' என்ற சொல் வழங்கப்பட்டது.

525. கேள்வி: சர்வோதயம் - சோஷியலிஸம் ஆகிய இரண்டும் குறிப்பிடும் கருத்து ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன். என் கருத்துச் சரியா?

☐பதில்: சோஷியலிஸம் என்பது மேற்கு நாடுகளின் கருத்து. இது பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு மிகவும் பிடித்த கருத்து. அதனால் அவர் அதை இந்திய அரசியல் அமைப்பில் இடம் பெறச் செய்தார்.

''நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்களுக்குப் பெரும் பான்மை நன்மைகளைக் கிடைக்கச் செய்வது சோஷியலிஸம்'' என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இதில், ''நாட்டில் உள்ள எல்லோருக்குமே எல்லா நன்மைகளையும் கிடைக்கச் செய்ய வேண்டும்'' என்று கருத்து இடம் பெறவில்லை.

அருளும் பொருளும் சேர்ந்தது சர்வோதயம். அகிம்சை வழியில் அமைந்தது சர்வோதயம். சோஷியலிசத்தில் பொருளுக்குத்தான் இடமுண்டு. அருள், அகிம்சை ஆகியவற்றுக்கு சோஷியலிசம் முக்கியத்துவம் தரவில்லை.

சர்வோதயம் என்பது இயற்கையாக இந்தியாவிற்கு அமைந்திருக்கும் கருத்து; இந்தியாவின் இயல்பில் உள்ள கருத்து. இது மேற்கு நாடு களிலிருந்து காப்பியடிக்கப்பட்ட கருத்து அல்ல. இந்தக் கருத்து மகாத்மா காந்திஜிக்கு மிகவும் பிடித்த கருத்து. நாட்டில்

உள்ள எல்லோருக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்பதுதான் சர்வோதயம்.

சர்வோதயம் என்பதில் பின்வரும் ன்று முக்கியக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன:

1.தனிப்பட்டவரின் நலன் சமுதாய நலனில் அடங்கியிருக்கிறது.

2.தங்கள் உழைப்பினால் வாழ்வதற்குரிய வழியைத் தேடிக்கொள்வதற்கு எல்லோருக்குமே ஒரே மாதிரியான உரிமை இருப்பதால், முடி திருத்தும் நாவிதர் தொழிலாளியின் வேலைக்கு இருக்கும் அதே மதிப்புத்தான் வக்கீலின் வேலைக்கும் உண்டு. அதாவது, சம மதிப்பு உண்டு.

3.உடல் உழைப்புப் புரியும் பாட்டாளியின் வாழ்க்கையும், நிலத்தில் உழுது பாடு படும் குடியானவரின் வாழ்க்கையும், கைத் தொழில் செய்பவரின் வாழ்க்கையும்தான் வாழ்வதற்கு உகந்த மேன்மையான வாழ்க்கையாகும்.

92. கல்வி

526. கேள்வி: எது கல்வி?

□பதில்: உள்ளத்தைப் பண்படுத்தும் எதுவும் கல்வி என்ற சிறப்புக்கு உரியது. உள்ளத்தைப் பண்படுத்தாத எதுவும் கல்வியாகாது.

527. கேள்வி: 'உண்மையான கல்வி' என்பதற்கு இலக்கணம் என்ன?

□பதில்:உடல், உள்ளம், ஆன்மா ஆகிய ன்றையும் உரிய வகையில் வளர்ச்சி பெறச் செய்வதே உண்மையான கல்வியாகும்.

528. கேள்வி:'கற்றவர்' என்பதற்கு இலக்கணம் யாது?

□பதில்: கற்க வேண்டிய நூல்களைக் கற்க வேண்டிய முறையில் கற்றவர்களையே 'கற்றவர்' என்ற சொல் உணர்த்துகிறது.

கற்றவர்கள் கற்றபடி நடக்காவிட்டால், அது உட்கொண்ட உணவு ஜீரணம் ஆகாதது போன்றது.

529. கேள்வி: கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

□பதில்: கல்விதான் அறிவுக்கு ஆதாரமாக இருக் கிறது. நாம் புத்தகங்கள் பலவற்றைப் படிக்கக் கற்றுக்கொண்டால் மட்டும் போதாது; முக்கிய மாக மனிதர்களையும் மனித உள்ளங்களையும் படிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

கல்வி வயிற்றுப்பாட்டை ஒட்டியதாக மட்டுமின்றி, ஒழுக்கத்தையும் ஆன்மிகத்தையும் ஒட்டியதாகவும் இருக்க வேண்டும்.

கல்வியின் பயன் மனிதனை முழு மனிதனாக ஆக்குவதாகும்.

முத்து இல்லாத சிப்பி சிறப்புக்கு உரிய தல்ல. அதுபோல் ஒழுக்கத்தைத் தராத கல்வியும் சிறப்புக்கு உரியதல்ல.

சிப்பியில் முத்தும் இருக்க வேண்டும். கல்வியுடன் ஒழுக்கமும் இருக்க வேண்டும்.

ஆன்மிகத்தின் ஓர் அங்கம்தான் ஒழுக்கம். ஆன்மிக அடிப்படையில் கல்வி அமையா விட்டால், அது மனித மிருகங்களையே உருவாக்கும்.

எனவே நமக்குக் கல்விச்செல்வத்துடன் பண்பாட்டுச் செல்வமும் வேண்டும்.

கல்வி என்பது மனிதனுக்கு உரிய அடிப் படைத் தேவைகளில் ஒன்று. அது பள்ளிக் கூடத்துடன் முடிந்து போவதில்லை. அது வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டும்.

530. கேள்வி: இன்றையக் கல்வி முறையில் எத்தகைய மாற்றங்கள் தேவை என்று நீங்கள் நினைக்கி றீர்கள்?

□ பதில்: இப்போது இருக்கும் கல்வியுடன் தன்னம்பிக்கை, ஒழுக்கம், சமுதாய நலன், தேசபக்தி, தெய்வ பக்தி, தொண்டு, தியாகம் ஆகிய அம்சங்களும் நமது கல்வி திட்டங்களில் இடம் பெற வேண்டும்.

531. கேள்வி: உலகில் அமைதி நிலவுவதற்கு என்ன வழி?

□ பதில்: உலகில் இன்றைய மாணவ- மாணவி களுக்குத் தரப்படும் கல்வியைப் பொறுத்துத் தான், எதிர்கால உலகில் போர் அல்லது சமாதானம் (சாந்தி) நிலவப் போகிறது.

எனவே உலகில் அமைதி நிலவ வேண்டு மானால், அதற்கு உதவும் அம்சங்கள் கல்வியில் இடம் பெற வேண்டும்.

532. கேள்வி: இன்றைய இளைஞர்களின் கல்வி நிலை பற்றி உங்கள் கருத்து என்ன?

□ பதில்: கல்விச்சூழலும் சமுதாயச்சூழலும் இளைஞர்களை உருவாக்குகின்றன; அல்லது உருக்குலைக்கின்றன.

நற்பண்புகளுடன் வாழச் செய்வதுதான் கல்வியின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும். சுயமாக சிந்திக்கச் செய்வதாகவும், செயல் திறமையை வளர்ப்பதாகவும், வாழ்வதற்குத் தேவையான பொருள் தருவதாகவும், தேச நலனை உயர்த்துவதாகவும் கல்வி இருக்க வேண்டும்.

ஆனால் இன்று கல்வி என்பது, வயிறு வளர்ப்பதற்கு வருமானம் தருவதற்கான ஒரு லதனமாகவே பெரும்பாலும் கருதப்படுகிறது.

ஒரு தாய்க்கு ஒரே ஒரு செல்வமகன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குழந்தை வழி தவறி எங்கோ தொலைந்து போய்விட்டால், அந்தத் தாய் தன் குழந்தையை அங்கும் இங்கும் தேடி எப்படி அலைந்து கண்டுபிடிப்பாளோ - தேடி அலைவாளோ, அதைப்போல் உயர்ந்த கல்வியைத் தேடி இளைஞர்கள் அலைய வேண்டும்; அடைய வேண்டும்.

93. அறிவு

533. கேள்வி: 'அறிவு' என்றால் என்ன?

□பதில்: நம்மிடம் நல்ல சிந்தனைகளைத் தோற்றுவிப்பது எதுவோ, நல்ல பேச்சுகளைப் பேசும்படி செய்வது எதுவோ, நல்ல செயல்களைச் செய்யும்படி தூண்டுவது எதுவோ, நம்மை மனம் போன போக்கில் போகாமல் இருக்கச் செய்வது எதுவோ, நம்மைப் பாதுகாப்பது எதுவோ, நம்மை நன்மைக்கு அழைத்துச் செல்வது எதுவோ, தீய செயல்களிலிருந்து

நம்மை விடுவிப்பது எதுவோ அதுவே அறிவு என்று கூறுவதற்குரியது - இது வள்ளுவர் வழிச் சிந்தனையாகும்.

அனுபூதியில் பிரம்மஞானம் பெறுவது தான் மிகவும் உயர்ந்த அறிவு. அதைத் தவிர மற்ற எல்லா அறிவும் தாழ்ந்த அறிவே ஆகும்.

534. கேள்வி: 'அறிவு' என்பதற்கு உரிய இலக்கணம் என்ன?

□பதில்: அறிவு என்பதற்கு அடையாளம், அது நம்மைத் தீயவற்றிலிருந்து காப்பாற்றுவதாக இருக்க வேண்டும்; நல்லவற்றில் நம்மைச் செலுத்துவதாகவும் இருக்க வேண்டும். இதை, ''அறிவு அற்றம் காக்கும் கருவி'' என்றும், ''நன்றின்பால் உய்ப்பது அறிவு'' என்றும் திருவள்ளுவனார் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

''அறிவு ஒன்றே வேதங்கள் கூறும் தெய்வம்'' என்று, மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார்.

அறிவு எது என்பதற்கு, ''மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்று ஐயன் திருவள்ளுவர் விளக்கம் தந்திருக்கிறார். மேலும் அவர், ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்று கூறி, அறிவை வளர்த்துக்கொள்ளும் வழியை நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

அறிவு வளர வளர அறியாமையின் தோல் உரியும். அறிவுடையவன் எல்லா நலன்களுக்கும் அதிபதியாகிவிடுகிறான்; உரிமையாளனாகி விடுகிறான். புத்திமான் உண்மையில் பலவான் ஆவான்.

நம் அறிவு வெறும் அறிவாக இல்லாமல், இறைவனை உணர்த்தும் மெய்யறிவாக இருக்க வேண்டும்.

535. கேள்வி: 'அறிவுடைமை' என்பதற்கு இலக்கணம் என்ன?

☐பதில்: ''மனம் நன்மையை நாடுவதே அறிவு டைமை எனப்படும். பிறர் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதுவது அறிவுடைமை'' என்கிறார் திருவள்ளுவர் (குறள்-315).

536. கேள்வி: 'அறிவுடைமை' எது?

☐பதில்: 'உடைமை' என்ற சொல்லுக்குச் 'சொத்து', 'கொண்டிருத்தல்' ஆகிய இரண்டு பொருள்கள் உண்டு.

அறிவுடைமை என்பதற்கு 'அறிவுச் செல்வம்', 'அறிவு கொண்டிருத்தல்' ஆகிய பொருள்கள் உண்டு.

நமக்கு என்ன என்ன தெரியும் என்றும், நமக்கு என்ன என்ன தெரியாது என்றும் தெரிந்து வைத்திருப்பதும் அறிவுடைமையாகும்.

537. கேள்வி: அறிவை வளர்த்துக்கொள்வது எப்படி?

☐பதில்: ''ஆற்றுமணலைத் தோண்ட தோண்ட நீர் ஊறுவதுபோல், கற்கக் கற்க அறிவு பெருகும்'' என்று, ஆசிரியர் வள்ளுவர் கூறுகிறார். (குறள்-396)

ஒருவர் தாமாகக் கற்பதன் லமாகவும், பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்பதன் லமாகவும், கற்றதையும் கேட்டதையும்

முறையாகச் சிந்திப்பதன் லமாகவும் அறிவை வளர்த்துக்கொள்ள முடியும்.

சான்றோர், உயர்ந்தோர், பெரியோர், அறிஞர் அனைவரும் வாழ்நாள் முழுவதும் அறிவை வளர்த்துக்கொள்ள விரும்பும் மாணவர் நிலையிலேயே தங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

538. கேள்வி: 'அறிஞர்' என்பவர் யார்?

□பதில்: ஒருவர் அறிஞர் என்பதை நிறுத்தல் அளவைக் கொண்டு (தராசில்) எடைபோட்டு நாம் அறிந்துகொள்ள முடியாது. மாறாக, ஒருவர் செய்யும் உயர்ந்த செயல்களே அவர் அறிஞர் என்பதை அறிவிக்கும்.

விசால மனம் படைத்த அறிஞர்களின் உள்ளத்தில், தெய்வபக்தியும் விவேகமும் தெளிவும் உறுதியும் தூய்மையும் இருக்கும்.

539. கேள்வி: 'பட்டறிவு' என்றால் என்ன?

□பதில்: நூல்களைப் படிப்பதனால் வருவது நூல் அறிவு. சுய அனுபவத்தின் லம் பெறுவது பட்டறிவு.

வாழ்க்கையில் பிரச்னைகள் நேரும்போது, நூலறிவைக் காட்டிலும் பட்டறிவே நமக்குக் கை கொடுத்து உதவுவதாக இருக்கும்.

540. கேள்வி: அறிவு, ஞானம் ஆகிய இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்: ஐம்புலன்களுக்குட்பட்ட உலகப் பொருள்கள், அவற்றின் இயக்கங்கள் பற்றியது அறிவு.

உலகப் பொருள்கள், அவற்றின் இயக்கங்கள், ஐம்புலன்கள் ஆகியவற்றுக்கும் அப்பாற்பட்ட பிரம்மத்தைப் பற்றியது ஞானம் - இது வேதாந்தம் கூறும் கருத்து.

சாதாரண அறிவைக் கொண்டு பிரம்மத்தை அறிய இயலாது. பிரம்மத்தை அறிவதற்குத் தூய அறிவு தேவை. தூய அறிவை நீண்ட நெடிய தவத்தால்தான் பெற முடியும். தூய அறிவும் தூய ஆத்மாவும் ஒன்றே ஆகும்.

541. கேள்வி: அறிவுக்கும் அறியாமைக்கும் உள்ள தொடர்பு என்ன?

□பதில்: ''அறியாமை ஆண்டவனின் சாபம். அறிவு நம்மை இறைவனின் தேவலோகத்திற்கு அழைத்துச் செல்லும் சிறகு போன்றது'' என்று ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார்.

94.அன்பு

542. கேள்வி:அன்புக்கும் அருளுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

□பதில்: அன்பு ஒரு கோயிலின் அஸ்திவாரம் என்றால், அதன் கோபுரமாக இருப்பது அருள்.

543. கேள்வி: பொதுநலவாதி யார்? சுயநலவாதி யார்?

□பதில்: மனிதகுலத்தின் மீது அன்புடையவர்கள் பொதுநலவாதிகளாக இருப்பார்கள்.

மனிதகுலத்தின் மீது அன்பில்லாதவர்கள் சுயநலவாதிகளாக இருப்பார்கள்.

544. கேள்வி: "அன்பே சிவம்" என்பதற்கு விளக்கம் தருக.

☐பதில்: உலக வாழ்க்கைக்கு சுவை கூட்டுவது அன்பு. பிறரிடம் நாம் சுயநலம் இல்லாமல் அன்பு செலுத்த வேண்டும். அதனால் ஏற்படுவது நன்மையா, தீமையா என்று நாம் ஆராய வேண்டியதில்லை. இத்தகைய அன்புதான், 'சிவம்' என்ற சொல்லுக்கு உரியது. இத்தகைய தூய அன்பும் நிஷ்காம கர்மம்தான்.

சுயநலமில்லாமல் பிறரிடம் அன்பு செலுத்தும்போது, அது அதிக ஆற்றல் பெறுகிறது.

''பாகுபாடின்றி அனைவருக்கும் நன்மை செய்வதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்'' என்று, சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' என்ற திரு லரின் வாக்கும், சுயநலமற்ற அன்பைத்தான் குறிப்பிடுகிறது.

பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்:

''உயிர்களிடத்தில் அன்பு வேணும்;- தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்; - இது
வாழும் முறைமையடி பாப்பா.''

அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பால் சாதிக்க முடியும். அதிகாரத்தால் துரும்பைக்கூட அசைக்க முடியாமல் போனவர்கள் உண்டு. அன்பால் மலையையே அசைத்தவர்களும் உண்டு.

அன்பு என்பது அகண்டமான சக்தி, அற்புதமான மாயசக்தி உடையது.

எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துவதுதான் மிகவும் சிறந்த தர்மம். எனவே எல்லா உயிர்களிடமும் இறைவனைக் காணும்படி நமது ரிஷிகள் கூறியுள்ளனர்.

545. கேள்வி:நாம் ஏன் மற்றவர்களை நேசிக்க வேண்டும்? இந்தக் கேள்விக்கு ஆன்மிக ரீதியில் பதில் தேவை.

☐பதில்: உலகில் எங்கும் இறைவன் நிறைந்திருக்கிறான். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான். பார்க்கும் அனைத்தும் பரம் பொருளின் வெளிப்பாடுகளேயாகும். அதனால் அருளாளர்கள், அனைத்தையும் - மனிதர்கள் உட்பட அனைத்து உயிர்களையும் - நேசிக்கிறார்கள்.

நாம் அனைவரும் இறைவன் திருவடியை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறோம். அதனால் உடன் வருபவர்கள் - உடன் வாழ்பவர்கள் - நம் சக் திருவடி யாத்திரைக்காரர்கள் என்பதை உணர்ந்து, அவர்களோடு இனிமையாகப் பேசிப் பழகி, நட்புடன் இனிய வாழ்க்கை வாழ வேண்டும்.

நம் உயிர் பணத்திலும், பதவியிலும், நம் உடலில் ஓடும் இரத்தத்திலும், நாம் விடும் ச்சுக்காற்றிலும் இல்லை; அது பிறருடன் நாம் சுயநலமற்ற அன்புடன் வாழ்வதில்தான் இருக்கிறது. இதை, ''அன்பின் வழியது உயிர்நிலை'' என்று, பெருநாவலர் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

சுயநலமுடைய அன்பு மாயைக்குட்பட்டது. சுயநலமற்ற அன்புதான் இறைவன்.

இதையே, 'அன்பே சிவம்' என்று திரு லர் கூறினார்.

வாழ்க்கைக்கு அன்பு இன்றியமையாதது. அன்பு என்பது ஒரு வழிப்பாதை போன்று சிலர் நினைத்து நடந்துகொள்கிறார்கள். ஆனால் அன்பு இரு வழிப்பாதை என்பதுதான் உண்மை. ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் பரஸ்பர அன்புதான் சுமுகமாகவும் இயல்பாகவும் இனிமை தருவ தாகவும் அமைகிறது. நாம் பிறரிடமிருந்து (பிறர்) அன்பைப் பெறுவதற்கு உரிமை உடையவர் என்று நினைக்கும் சிலர், ''நாம் பிறருக்கு அன்பை வழங்கவும் கடமைப்பட்டி ருக்கிறோம்'' என்பதை ஏனோ மறந்துவிடுகி றார்கள்.

மனிதநேயம் இல்லாதவர்கள் இறைவன் அருளைப் பெறுவதில்லை.

95. அறம்

546. கேள்வி: அறங்களில் முதல் முக்கியத்துவம் வாய்ந்த அறம் எது?

□பதில்: எல்லா அறங்களிலும் தலையாய அறம் அகிம்சையே ஆகும். மற்ற அனைத்து அறங் களும் அகிம்சையில் அடங்கும்.

547. கேள்வி: 'அறம்' என்றால் என்ன?

□பதில்: 'உண்மை பேசு' போன்ற நல்லொழுக் கங்களைப் பின்பற்றியும், 'திருடாதே!' போன்ற தீயவற்றைத் தவிர்த்தும் வாழ்வது அறமாகும்.

இறைவனுக்குச் சமமாக அறத்தை 'தர்மம் சரணம் கச்சாமி' என்று பௌத்தம் கூறுகிறது.

548. கேள்வி: 'அறம்' என்றால் என்ன?

□பதில்: தூய உள்ளத்திலிருந்து எழுவதெல்லாம் அறம் என்று கொள்ள வேண்டும். சாஸ்திரங்கள், மகான்களின் வாழ்க்கை, மனசாட்சி ஆகியவற்றின் துணைகொண்டு அறம் இன்னது என்று தெரிந்துகொள்ளலாம்.

549. கேள்வி: 'அறம்' என்றால் என்ன?

□பதில்: தர்மம், ஞானம், சீலம், புண்ணியம், நல்வழி, நியாயம், அறச்சாலை, சான்றோர் போற்றும் தூய நெறி, நடுநிலைமை, தர்ம தேவதை, ஒழுக்கம், சமயம், தகுதி பெற்றது, நேர்மை, பிறருக்கு உதவுவது போன்ற பல பொருள்களில் 'அறம்' என்ற சொல் வழங்குகிறது. எனினும் சுருக்கமாகச் சொல்வதானால் உள்ளத்தூய்மையே அறமாகும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களையும் மனிதன் வாழ்க்கையில் பெற வேண்டிய பெரும் பேறுகளாக ஆன்றோர் வகுத்துள்ளனர். இவற்றுள் முதலிடம் அறத்திற்கே உரியது.

நம் உயிருக்கு ஆக்கம் தருவது அறம். அறம் உள்ள இதயத்தில்தான் ஆண்டவன் எழுந்தருளுவான். அறம் உள்ள இதயத்தில் ஆணவமும் தீமையும் இருக்காது; மாறாக அங்கே அன்பும் அருளும் பூத்துக் குலுங்கும்.

தர்மத்தை யார் ஒருவன் காப்பாற்றுகிறானோ, அவனை தர்மம் நிச்சயமாகக் காப்பாற்றும்; தர்மத்தை யார் ஒருவன் கைவிடுகிறானோ அவனைத் தர்மமும் கைவிட்டுவிடும்.

எனவே நாம் அறத்தை விடாமல் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். அப்போது தான் அறமும் நம்மை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும். அவ்விதம் இந்த உலகில் நாம் வாழ்ந்தால்தான் - அறம் சார்ந்த வாழ்க்கையில் வெற்றி பெறுவதோடு-வீடுபேற்றையும் அடைய முடியும்.

''ஒருவன் தன் உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதுதான் அறமாகும்; பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களையும் தவிர்த்து வாழ்வதுதான் அறமாகும்'' என்று, திருவள்ளுவர் (குறள்-35) குறிப்பிட்டிருக்கிறார்.

''அமைதியும் மகிழ்ச்சியும் ஆக்கமும் தந்து, மறுமையில் முக்தியாகிய வீடுபேற்றைத் தருவதே அறம்'' என்று, வைசேஷிக சித்தாந்தம் கூறுகிறது.

''தீவினைகளால் அழிந்து மடிந்து, துன்பத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் உயிருக்கு நல்வழி காட்டி அதை உய்யச் செய்யும் நன்னெறிகளே அறமாகும்'' என்று, சமண சமயத்தைச் சேர்ந்த ஆச்சாரிய அபேதேவ சூரியர் குறிப்பிட்டுள்ளார்.

''அறிமின் அறநெறி, அஞ்சுமின் கூற்றம், பொறுமின் பிறர் கடுஞ்சொல், போற்றுமின் வஞ்சம், வெறுமின் வினைதீயார் கேண்மை, எஞ்ஞான்றும் பெறுமின் பெரியார் வாய்ச் சொல்'' என்று, நாலடியார் (பாடல் எண் - 172) குறிப்பிடுகிறது.

பொருள்: ''அறநெறிகளை அறிந்து பின்பற்றுங்கள்; யமன் வருவதற்கு அஞ்சி அருள்வழி நடந்துகொள்ளுங்கள்; பிறர் கூறும் கடுஞ்சொற்களைப் பொறுத்துக்கொள்ளுங்கள்; வஞ்சித்து நடப்பதிலிருந்து உங்களைப் பாது காத்துக்கொள்ளுங்கள்; தீயசெயல் செய்பவர் களின் நட்பை வெறுத்து நீக்குங்கள்; பெரியோர் களின் வாய்மொழிகளை எப்போதும் கேட்டு நடந்துகொள்ளுங்கள்.''

550. கேள்வி: இன்பம் என்பது தவிர்க்க வேண்டிய ஒன்றா?

□பதில்: அறத்தால் வரும் இன்பம் வரவேற்கத் தக்கது.

551. கேள்வி: 'பொறுமை' என்பதற்கு இலக்கணம் என்ன?

□பதில்: ஏதாவது ஒரு காரணத்தினால் அல்லது பல காரணங்களால், பிறர் செய்யும் தவறுகளைப் பொறுத்துக்கொள்வது பொறுமையாகும்.

பொறுமை என்பது அறவாழ்க்கையின், ஆன்மிக வாழ்க்கையின் ஒரு முக்கியக் கூறாகவும் விளங்கி வருகிறது.

552. கேள்வி:இறைவனுக்குப் பிரியமான செயல் எது?

□பதில்: தீய குணங்கள் உள்ளவர்கள் எளிதில் இறைவனை அடைய முடியாது. அறச்செயல்கள் அனைத்தும் ஆண்டவனுக்கு உகந்தவைதான்.

மக்களிடையே வேற்றுமை பாராட்டுப வர்கள், பேதம் விளைவிப்பவர்கள் இறை வனைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்களை இறைவன் விரும்பமாட்டான்

553. கேள்வி: மனிதன் அறச் செயல்களை ஏன் செய்ய வேண்டும்?

☐பதில்: அறச் செயல்கள் ஆன்மிக விடுதலைக்கு வழி வகுக்கும். இல்லார் - இருப்பார் எவரா யினும் அறச்செயல்கள் செய்தால், அவருக்கு இறைவனிடம் பல மடங்கு வெகுமதி உண்டு.

554. கேள்வி: எல்லோருக்கும் பொருந்தக்கூடிய ஓர் அறத்தைக் கூறுங்கள்? பெரிய அறம் எது?

☐பதில்: பூவில் தேன் இருப்பதுபோல், நாவில் இன்சொல் இருக்க வேண்டும்.

'இனிய சொல் பேசுதல்' என்பது, எல்லோருக்கும் பொருந்தக்கூடிய ஓர் அறமாகும்.

பிற உயிர்களிடம் அன்பு செலுத்துவது தான் மிகவும் பெரிய அறம் என்பதை, அருளா ளர்களின் வாழ்க்கையிலிருந்து நாம் அறிய முடிகிறது.

555. கேள்வி: நாம் ஏன் அறம் செய்ய விரும்ப வேண்டும்?

☐பதில்: அறம் செய்பவன் இறைவனுக்கு மிகவும் நெருங்கியவனாகவும், நரகத்திற்குத் தூரத்தில் இருப்பவனாகவும் ஆகிவிடுகிறான்.

அறம் செய்பவனை அறமே அரணாக விளங்கிப் பாதுகாக்கும்.

ஒருவர் செய்யும் தான தர்மங்கள்தான், அவர் உலகில் விட்டுச் செல்லும் அவருடைய நிலையான நினைவுச் சின்னங்கள்.

தர்மம் நம் தலையை மட்டுமல்ல; நம் தலைமுறையையும் காக்கும் இயல்புடையது.

எனவே கொடுக்கும் இயல்புடையவர்கள் பாக்கியசாலிகள்.

கடமை, தூய்மை, உதவி ஆகிய ன்றையும் உள்ளடக்கியதாக 'அறம்' என்ற சொல் விளங்குகிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

556. கேள்வி: 'அறம்' என்றால் என்ன?

□பதில்: அறம் என்பது பல்பொருள் உணர்த்தும் ஒரு சொல்லாட்சி. அதற்கு ஒழுக்கம், தர்மம், நேர்மை, நீதி, ஞானம், புண்ணியம், இன்சொல், அன்பு, மனிதநேயம், பொறுமை போன்ற பல பொருள்கள் உண்டு.

தனக்குரிய கடமையைச் செய்வதை அறம் என்றும், தனக்குரிய கடமையைச் செய்யாமல் விடுவதைப் பாவம் என்றும் கொள்ளலாம்.

எளிமையாக வாழ்வதைப் புண்ணியம் (அறம்) என்றும், ஆடம்பரமாக வாழ்வதைப் பாவம் என்றும் சொல்லலாம்.

மற்றவர்களின் நன்மைக்காகத் தன்னைத் தியாகம் செய்வது அறமாகும். தன் நன்மைக்காக, சுயநலத்திற்காக மற்றவர்களைத் துன்புறுத்துவது பாவமாகும்.

இம்மை நலம், மறுமை நலம், வீடுபேறு ஆகிய ன்றையும் தர வல்லது அறம். உயிருக்கு நீங்காத துணையாக இருப்பது அறம் தான். திருக்குறளில் 38 அதிகாரங்கள் அறத்தைப் பல கோணங்களில் விளக்குகின்றன.

பணம், பட்டம், பதவிகளில் மேம்பட்டு இருப்பவர்களை உயர்ந்தவர்கள் என்று கருதுவது

உலகின் இயல்பு. ஆனால், ஒருவர் எந்த அளவுக்கு அறத்தைக் கடைப்பிடிக்கிறாரோ அந்த அளவுக்கே அவர் உயர்ந்தவர் என்பது சான்றோர்களின் கருத்தாகும்.

''குளத்திற்கு அணிகலன் தாமரை, பெண்ணுக்கு அணிகலன் நாணம், மனிதனுக்கு அணிகலன் அறம்'' என்று, நான்மணிக்கடிகை கூறுகிறது.

''அறமே சிவன்'' என்று காஞ்சிப்புராணம் கூறுகிறது.

நமக்கு அறம் சார்ந்த அறிவு வேண்டும், அறம் சார்ந்த மனம் வேண்டும், அறம் சார்ந்த ஒழுக்கம் வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால் மனத்தூய்மையே அறமாகும். நாம் இன்பமாக வாழ வேண்டுமானால் அறத்தையே நாம் பின்பற்ற வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் இவ்விதம் கூறுகிறார்:

''மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் தர்மமாகும். மற்றவர்களுக்குத் தீமை செய்வது பாவமாகும். வலிமையும் ஆண்மையுமே தர்மம். பலவீனமும் கோழைத்தனமும் தீமை. சுதந்திரமான வாழ்க்கை புண்ணியமாக அமைகிறது. மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதுதான் புண்ணியச் செயலாகும். மற்றவர்களை வெறுத்து ஒதுக்குவதுதான் பாவச் செயலாகும். கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் கொண்டிருப்பது தர்மம். சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பதே பாவம். ஒருமைப்பாடு காண்கிற ஞானமே

தர்மமாகும். வேற்றுமையைக் காண்பதுதான் பாவச் செயலாக அமைந்திருக்கிறது.''

557. கேள்வி: பிறர் தவறு செய்தால் என்ன செய்வது?

□பதில்: நாம் செய்யும் தவறுகளைப் பிறர் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கிறோம். அது போன்று - பிறர் செய்யும் தவறுகளை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும், அல்லது அவர்களைத் திருத்த முயற்சி செய்ய வேண்டும், அல்லது இரண்டையுமே செய்ய வேண்டும்.

பெரியவர்கள் சற்று நெகிழ்ந்து கொடுப் பதன் லம், மற்றவர்களை உருவாக்க வேண்டும்.

நல்ல செயல்களாலும், விட்டுக் கொடுப்ப தாலும், சிறிய சிறிய தியாகங்களைச் செய்வ தாலும் நல்ல நண்பர்கள் உருவாவார்கள்.

''விட்டுக் கொடுப்பவன் கெட்டுப் போக மாட்டான். கெட்டுப் போகிறவன் விட்டுக் கொடுக்கமாட்டான்'' என்பது ஓர் அனுபவ மொழி.

நமது நன்மைக்காகவாகிலும் பிறரை மன்னிக்கும் குணத்தை, நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

96.பாவம்

558. கேள்வி:உலகில் மனிதன் பாவம் செய்யாமல் வாழ முடியுமா?

□பதில்: மனத்தை இறைவனிடம் நிலைநிறுத்தி, பற்றில்லாமல், செயல் அனைத்தையும் இறைவ

னுக்கு அர்ப்பணம் செய்து வாழ்பவர்களைப் பாவம் தீண்டுவதில்லை.

559. கேள்வி:மனிதன் பாவத்திலிருந்து விடுபடுவதற்கு என்ன வழி?

☐பதில்:''தவத்தின் முன் நில்லாதாம் பாவம்'' என்று, சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார் கூறுகிறது.

மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உதவி செய்வதாகவும், பாவங்களிலிருந்து காப்பாற்றும் கேடயமாகவும் விரதங்கள் விளங்குகின்றன. இந்த விரத காலங்களில் அதிகமாக தெய்வச் சிந்தனைகளில் ஈடுபடவும், இயன்ற வரையில் தான தர்மங்கள் செய்யவும் வேண்டும்.

560. கேள்வி: பாவச் செயல்களிலிருந்து விலகியிருப்பதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?

☐பதில்: பாவம் செய்யாமல் இருப்பதற்கு ஒரே வழி ஆசையை அழிப்பதுதான். உலக ஆசைகளிலிருந்து விடுபடுவதற்கு இறைவன் அருள் தேவை.

கடல் அலைகள் மோதினாலும் கற்பாறை அசையாமல் இருக்கும். அதுபோல், மனஉறுதி கொண்டவர்கள் ஆசைகளால் அலைக்கழிக்கப் படுவதில்லை.

கடலில் துரும்புகள் அடித்துச் செல்லப்படுகின்றன. அதுபோல் மனஉறுதி இல்லாதவர்களை ஆசைகள் அலைக்கழிக்கும்.

மனஉறுதியே மனிதன் பலம். மனத் திண்மை இருந்தால், எண்ணியதை எண்ணிய படியே செய்து சாதிக்க முடியும்.

561. கேள்வி: என் உள்ளத்தில் தீய எண்ணங்கள், பாவ எண்ணங்கள் அடிக்கடி தோன்றுகின்றன. இவற்றிலிருந்து விடுபடுவதற்கு எனக்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள்?

□பதில்:உங்களுக்குப் பிடித்த இறைவன் திருநாமத்தை, அதிக அளவில் நாள் முழுவதும் ஜபம் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

பணம் சேர்ப்பவர்கள் பணத்தைச் சேர்ப் பதில் கண்ணும் கருத்துமாக இருப்பது போன்று, நீங்கள் உங்கள் நேரத்தை வீணாக்காமல் சேமித்து - கிடைக்கும் நேரம் முழுவதையும் - இறைவன் திருநாமத்தை ஜபம் செய்வதற்குப் பயன்படுத் துங்கள். இவ்விதம் தொடர்ந்து பல காலம் செய்து வந்தால் தீய எண்ணங்களின், பாவ எண்ணங்களின் வலிமை படிப்படியாகக் குறையும்.

''தொடர்ந்து புனிதமான எண்ணங் களையே சிந்தித்தபடி நன்மையைச் செய்து கொண்டிரு. தீய சம்ஸ்காரங்களைத் தலை காட்டாதபடி அழுத்தி வைப்பதற்கு, அது ஒன்றே ஒன்றுதான் வழி'' என்று, சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார்.

562. கேள்வி: பிறர் உழைப்பில் வாழ்பவர்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்:உழைப்பு உயர்ந்தது.உழைக்க வேண்டும், உழைத்துச் சாப்பிட வேண்டும். உழைக்காத வனுக்கு உண்பதற்கு உரிமை கிடையாது.

உழைக்காமலே உண்பவன் ஒரு விதத்தில் திருடன்தான். சோம்பேறிகள், பிறருடைய

உழைப்பில் வாழ்பவர்கள் வாழும் வாழ்க்கை மிகவும் இழிவானது. அது அவர்களுக்கும் சிறப்பைத் தராது; அவர்களின் சந்ததியினருக்கும் சிறப்பைத் தராது.

'உழைக்காமலேயே பிழைக்க வேண்டும்' என்ற ஆரோக்கியமற்ற எண்ணம், சமுதாயத்தில் பரவி வருகிறது. இது ஒருபோதும் நன்மையைத் தராது.

உழைக்காமல் இருப்பதை ஒரு பாவச் செயல் என்று நான் கருதுகிறேன்.

563. கேள்வி: மனிதன் செய்யும் தவறுகள் யாவை?

□ பதில்: சொல்லாலும், செயலாலும், சிந்தனையாலும் மனிதன் தவறு செய்கிறான். இது பற்றி மணிமேகலையில் சீத்தலைச் சாத்தனார் கூறும் கருத்துகள் இவை:

''கொலை, களவு, மிகுந்த காமம், பேராசை ஆகியவை உடலால் செய்யும் தவறுகள்.

''பிறர் பொருளை விரும்புதல், கோபம், பொல்லாத காட்சி (மயக்கம் அதாவது, உண்மையை அறியாத நிலை) ஆகியவை உள்ளத்தினால் செய்யும் தவறுகள். பிறர் நலம் கண்டு கோபம் கொள்ளுதல், பிறர் நலம் கண்டு பொறாமைப்படுதல், பிறர் நலம் கண்டு அழுதல் ஆகியவை மனத்தின் குற்றம்.

''பொய் பேசுதல், புறம் பேசுதல், கடுஞ் சொல், பயனற்ற சொற்களைப் பேசுதல் ஆகியவை வாக்கினால் செய்யும் பாவமாகும்.''

97. தானம்-தொண்டு

564. கேள்வி: தானத்தின் சிறப்பைச் சுருக்கமாகக் கூறுங்கள்?

☐பதில்: ''தானம் மனிதனைப் பரிசுத்தப்படுத்து கிறது'' என்கிறது பகவத்கீதை.

''தொழுகை, நோன்பு, ஈகை ஆகிய ன்றும் இறைவனை அடையும் பாதை'' என்கிறது இஸ்லாம்.

ஈபவர்களே வாழ்பவர்கள்; ஈயாதவர்கள் மாய்ந்தவர்கள்.

''தர்மம் தலை காக்கும்'' என்பது பழமொழி.

565. கேள்வி: 'தான தர்மங்கள் செய்வதால், நமது பாவங்களை நீக்கிக்கொள்ளலாம்' என்பது உண்மையா?

☐பதில்: தான தர்மங்கள், நற்செயல்கள், நல்லொழுக்கம், தவம் போன்றவற்றால் ஒருவன் பாவங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும் என்பது உண்மைதான்.

566 கேள்வி: தொண்டுக்கும் ஆன்மிகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

☐பதில்: தொண்டுதான் ஆன்மிகம்; ஆன்மிகம் தான் தொண்டு.

இறைவனுக்குத் தொண்டு செய்வது என்பது முக்தியை விடவும் மேலானது; அது வாழ்க்கையின் தலையாய லட்சியம், இறுதி லட்சியம் - என்று வைணவச் சான்றோர்கள் கருதுகிறார்கள்.

தூய மனநிலையில் மக்களுக்குத் தொண்டு செய்பவர்கள், கடவுளின் நிலைக்கு உயர்ந்துவிடு கிறார்கள்.

மனமுவந்து பிறருக்கு உதவுவது கடவு ளுக்கே செய்ததாகும்.

''பக்தர்களும், ஏழை எளியவர்களும் நடமாடும் கோயில்கள். அவர்களுக்குச் செய்யும் உதவி, கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைச் சென்றடையும்'' என்பது திருமூலரின் கருத்து. (திருமந்திரம் -1857).

'முக்திக்கு வழி - நாட்டுக்குத் தொண்டு செய்வதுதான்' என்று காந்திஜி கருதினார்.

ஊருக்கு உழைக்கும் உத்தமர்கள் மக்கள் இதயங்களில் வாழ்வார்கள்; சரித்திரத்தில் இடம் பெறுவார்கள்.

567. கேள்வி:உழைப்புக்கும் தொண்டுக்கும் உள்ள ஒற்றுமை அல்லது வேற்றுமை என்ன?

☐பதில்:உழைப்பும் தன்னம்பிக்கையும் முயற் சியும் உடையவர்கள் உலகில் எங்கும் எப்போதும் வெற்றி பெறுகிறார்கள். உழைப்பின் அருமையும் கடினமும், உழைக்காமல் உல்லாச மாக வாழ்பவர்களுக்குத் தெரியாது.

உழைப்பு என்பது சமுதாயம் முழுவ தற்கும் உரியது. இது தாழ்ந்த நிலையில் சுயநலம் என்றும், உயர்ந்த நிலையில் தொண்டு என்றும் அழைக்கப்படுகிறது.

தொண்டு என்பது கடல் போன்று பரந்த விரிந்த காலத்திற்குத் தொடர வேண்டும்.

568. கேள்வி: சுயநலம் நீங்குவதற்கு என்ன வழி?

□பதில்: மற்றவர்களுக்கு வழங்கும் அளவிற்கு, மற்றவர்களுக்கு உதவும் அளவிற்கு - ஒருவரிடம் சுயநலமற்ற தன்மையும் வளர்கிறது.

சீரிய ஆன்மிக வாழ்க்கையின் ஒரு கூறாக, சுயநலமின்றி மக்களுக்குத் தொண்டு செய்வதை சுவாமி விவேகானந்தர் பெரிதும் வலியுறுத்தினார்.

569. கேள்வி: ''சுயநலமின்றி பொதுநலனுக்காகத்தான் நான் உழைத்துக் கொண்டிருக்கிறேன்'' - இதை நான் சத்தியம் செய்து சொல்கிறேன்.

எனினும் பொதுநலப் பணிகளில் நான் போராட்டங்களையும் பிரச்னைகளையும் சந்தித்துக்கொண்டிருக்கிறேன். இந்த நிலையில் உள்ள எனக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

□பதில்: ''கொள்கைகளுக்காகப் போராடுபவர்கள் - இலட்சியத்திற்காகப் போராடுபவர்கள் - வாழ்க்கையில் பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இது இயல்பு.

''மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவன் ஆகிறானோ அந்த அளவுக்குத் தக்கபடி, அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.....

''ஒரு கொள்கையை எடுத்துக்கொள். அதற்காகவே உன்னை அர்ப்பணித்துப் பொறுமையுடன் போராடிக் கொண்டிரு. உனக்கு ஆதரவான ஒரு காலம் வரும்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

ஓயாமல் அலைகள் மோதிக்கொண்டிருப்பதில்தான், கடலின் அடையாளமே இருக்கிறது.

அதுபோல் உயர்ந்த இலட்சியங்களுக்காக வாழ்வதில்தான், போராடுவதில்தான், பயிற்சி செய்வதில்தான் மனிதன் வாழ்கிறான் என்பதற்கு அர்த்தமே இருக்கிறது.

நாலாபுறமும் வாழ்க்கையில் நம்மைச் சூழ்ந்துகொள்ளும் பிரச்னைகளே - முடிவில் நம் வாழ்க்கைக்கு ஒரு நல்ல வடிவம் கொடுக்கின்றன.

நல்லது செய்வதற்கு உரிய சந்தர்ப்பங்களுக்காக மேன்மக்கள் காத்திருப்பார்கள்.

தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கையே உயர்ந்தது. கடவுளை நோக்கிச் செய்வது மட்டுமே தவம் அல்ல. பிறருக்காக, சமுதாய நலனுக்காகச் செய்யப்படும் நல்ல உழைப்பும் கூட தவமே ஆகும்.

98. மனிதநேயம்

570. கேள்வி: 'மனிதநேயம்' என்று சொல்கிறோம். இதில் 'நேயம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்: 'அன்பு' என்று பொருள்.

உலக மக்கள் மீதும், உலக உயிர்கள் மீதும் ஒருவன் கொள்ளும் அன்பு, அவனைப் பண்பாளனாகவும் சுயநலமற்றவனாகவும் ஆக்குகிறது.

571. கேள்வி:'மனிதநேயம்' என்பதற்கு உங்களிடம் விளக்கம் எதிர்பார்க்கிறேன்?

□பதில்: மனிதர்கள் சக மனிதர்கள் மீது கொள்ளும் அன்பை, 'மனிதநேயம்' என்று சொல்கிறோம்.

அருளாளர்களிடம் மனிதநேயம் மிகுதியாக இருக்கும்.

கடவுளிடம் தூய அன்பு கொண்டவன், உலகத்தின் மீதும் தூய அன்பு செலுத்துபவனாகவே இருப்பான். அவ்விதம் உலகத்தை நேசிக்க அறியாத மனிதன், இன்னும் பக்குவப் படாதவன் என்பதையே காட்டுகிறது.

சக மனிதனை அலட்சியப்படுத்துபவனின் உள்ளத்தில், உயர்ந்த சிந்தனைகள் தோன்றாது. அவன் இறைவனின் அருட்கொடைகளைப் பெறுவதற்குரிய தகுதிகளை இழந்துவிடுகிறான்.

ஜாதி, மொழி, வட்டாரம் போன்ற எல்லைகளைக் கடந்த மனிதநேயத்தை நாம் நம்மிடம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

572. கேள்வி: 'மனிதநேயம்' என்றால் என்ன?

□பதில்: மனிதனின் எல்லையற்ற அன்பு 'மனிதநேயம்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

மக்களை இணைக்கும் ஒரு மகாமந்திரம், ஒரு மகாசக்தி, ஒரு தெய்விக நிலையே மனிதநேயம்.

மனிதநேயம் இல்லாதவர்கள் சுயநலம் கொண்டவர்களாகவும், சமுதாயத்தைச் சுரண்டுபவர்களாகவும் இருப்பார்கள்.

மனிதநேயம் உள்ள உள்ளத்தில் பண்பு, அடக்கம், பணிவு, அருள் போன்றவை குடியிருக்கும்.

இனம், மொழி என்பதெல்லாம் ஒருவருக்கு ஒருவர் அறிமுகப்படுத்த உதவும் சாதனங்கள் மட்டும்தான். அவற்றையும் கடந்து மனிதநேயம், ஆன்மநேயம் மலர வேண்டும்.

மனித நேயம் இல்லாத சமுதாயம் சீர்குலைந்து போகும்.

சான்றோர் அனைவரும், மனிதநேயத்தை மக்கள் உள்ளத்தில் நிலைபெறச் செய்பவர்களாகவே இருப்பார்கள்.

573. கேள்வி:'மனிதாபிமானம்' என்ற கருத்தை விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

☐பதில்: நாடு, மொழி, இனம், மதம், கல்வி, பொருளாதாரம் போன்றவை காரணமாக மனிதர்களுக்கிடையில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. இவை போன்ற எந்த வேறுபாடுமின்றி மனிதர்கள் ஒருவர் மற்றொருவர் மீது காட்டும் அன்பு 'மனிதாபிமானம்' எனப்படும்.

இவ்விதம் மனித குலம் அன்புடன் வாழ வேண்டும் என்பதுதான் இறைவனின் விருப்பமாகும். அறிவியல் வளர்ச்சி காரணமாக ஏற்பட்ட சோகமான விளைவுகளில், தற்காலத்தில் மனிதநேயம் குறைந்து வருகிறது என்பதும் ஒன்றாகும்.

574. கேள்வி: 'மனிதாபிமானம்' என்றால் என்ன?

☐பதில்: ஒரு மலர் மலர்ந்து மணம் வீசுவது போன்று, மனிதனின் இதயத்தில் உள்ள அன்பு வெளிப்படும் நிலையே 'மனிதாபிமானம்' எனப்படுகிறது.

மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் மனைவி, மக்கள் உட்பட எல்லோருடனும் பழக வேண்டும்.

அன்புதான் வாழ்க்கையை அர்த்தமுள்ள தாக்குகிறது. முதல் நிலையில், உரிமை உடைய வர்கள் மீது அன்பு தோன்றுகிறது. பிறகு இரண்டாம் நிலையில், உரிமை இல்லாத வர்களிடமும் அன்பு தோன்றுகிறது. முடிவில் ன்றாம் நிலையில், எல்லா உயிர்கள் மீதும் நமது அன்பு பரவிப் பரிணாம வளர்ச்சி பெறுகிறது.

இந்த அன்புதான் ஆயிரமாயிரம் ஆண்டு களாக அருமருந்துபோல் இருந்து, மனித குலத்தை வாழ வைத்திருக்கிறது; இப்போதும் வாழ வைத்துக்கொண்டிருக்கிறது; இனியும் வாழ வைக்கப் போகிறது. ''வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை. அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு'' என்று, மகாகவி பாரதியார் குறிப்பிட்டார்.

''அன்பே சிவம்'' என்பது ஆன்றோர் வாக்கு.

''அன்பும் சிவமும் வேறு வேறு என்பவர்கள் அறிவுத் தெளிவற்ற மூடர்கள்'' என்கிறார் திருமூலர். (திருமந்திரம்-270).

எனவே சுயநலம் கலவாத தூய அன்பு என்ற பண்பை, ஆன்றோர் இறைவனுடன் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். இந்த உலகில் மனிதாபிமானம் மட்டுமே விலை மதிப்பற்றது.

இறைநெறியை உரிய முறையில் பேணி வளர்த்தால் மனிதாபிமானம், மனிதநேயம் வளர்ந்தோங்கும்.

575. கேள்வி: சன்மார்க்கம், ஆன்மநேயம் ஆகிய இரண்டும் ஒன்றா? அல்லது வெவ்வேறான வையா?

□பதில்: 1.பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருத்தல், 2.பிற உயிர்களின் துன்பம் போக்குதல் (ஆகிய இந்த இரண்டும் சேர்ந்தது ஜீவகாருண்யமாகும்.), 3.அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்தும் ஆன்மநேயம் ஆகிய ன்றும் சேர்ந்தது சன்மார்க்கமாகும்.

ஆன்மநேயம் இல்லாவிட்டாலும்,குறைந்த பட்சம் மனிதநேயமாவது உலகில் நிலவ வேண்டும்.

99.ஆன்மநேய ஒருமைப்பாடு

576. **கேள்வி: 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்பதற்கு விளக்கம் தருக.**

□பதில்: 'நாம் அனைவரும் ஒன்று' என்ற ஆத்ம தத்துவத்தை வடலூர் வள்ளலார், 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்று குறிப்பிட்டார். அவரது திருவருட்பா பாடல்களில் ஆன்மநேயச் சிந்தனைகள் இழையோடுகின்றன.

என்னுடைய ஆன்மாவும், உன்னுடைய ஆன்மாவும், அவனுடைய ஆன்மாவும், மக்கள் அனைவருடைய ஆன்மாவும் ஒன்றே ஆகும். இந்த வகையில் ம்க்களாகிய நாம் அனைவரும் ஒன்றுதான்.

நாம் அனைவரும் ஆன்மா என்ற வகையில், நாம் அனைவரும் சகோதரர்கள் ஆவோம். ஆன்மாவிற்கு ஆண், பெண் என்ற வேறுபாடில்லை.

நாம் அனைவரும் ஆன்மா என்பது மக்களுக்கு மட்டுமின்றி மரம், செடி, கொடி,

பறவைகள், விலங்குகள், நீர் வாழ்வன போன்ற எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும்.

சுருக்கமாகச் சொன்னால் எல்லோரையும், எல்லா உயிர்களையும் நேசிப்பது ஆன்மநேய ஒருமைப்பாடாகும்.

சமுதாயத்தில் நல்ல ஆன்மநேயம் உருவாக வேண்டும் என்று நாம் பிரார்த்தனை செய்வோமாக.

சுகப்பிரம்மம் (வீட்டை விட்டு வெளி யேறி) வனத்தில் சென்றுகொண்டிருந்தார். அவரது தந்தை வியாசர், ''மகனே, மகனே!'' என்று அழைத்தபடியே சுகதேவரின் பின்னால் சென்றார்.

அப்போது வியாசருக்கு வனத்திலிருந்த மரங்களெல்லாம், ''ஏன்? ஏன்?'' என்று கேட்டு பதிலுக்குக் குரல் கொடுத்தன.

இந்த நிகழ்ச்சியில், 'அனைவரும் ஆன்மா, எல்லா உயிர்களும் ஆன்மா' என்ற கருத்து இடம் பெற்றுள்ளது.

100.விஞ்ஞானம்

577. கேள்வி: விஞ்ஞானத்திற்கும் ஆன்மிகத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

☐பதில்: நம்முள் உள்ள இறைவனை நாம் உணர்ந்துகொள்வதுதான் ஆன்மிக விஞ்ஞானம் என்று நான் கருதுகிறேன். இதுவே விஞ்ஞானத் திலும் பெரிய விஞ்ஞானமாகும்.

நவீன விஞ்ஞானத்திற்கு ஆன்மிகத்தின் துணை அவசியம் தேவை.

578. கேள்வி: மனிதன் பண்புடையவன் ஆவதற்கு அறிவியல் எந்த அளவிற்கு உதவி செய்யும்?

☐பதில்: மனிதனின் இதயத்தைப் பக்குவப்படுத்துவதற்கு அறிவியலைவிட ஆன்மிகச் சிந்தனைகளே பெரிதும் உதவும்.

579. கேள்வி:மனிதனுக்குத் தேவையானது விஞ்ஞானமா, மெய்ஞ்ஞானமா?

☐பதில்: இரண்டும் தேவைதான். புற வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு விஞ்ஞானம் தேவை. அகவாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு மெய்ஞ் ஞானம் தேவை.

பண்டைக் காலத்தில் மனிதநேயம் மிகுந்திருந்ததால், அது பொற்காலமாக விளங்கியது. தற்காலத்தில் மனிதநேயம் மங்கி வருவதால், நாம் கற்காலம் அல்லது முள் நிறைந்த காலம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம்.

இத்தகைய சூழ்நிலையில் மனிதநேயம் முதலான நற்பண்புகள் மலருவதற்கு, மனித குலத்திற்கு மெய்ஞ்ஞானம் அவசியம் தேவைப் படுகிறது.

101.இந்தியா

580. கேள்வி:இந்தியா உயர்வு பெறுவதற்கு உரிய வழி என்ன?

☐பதில்: 1. ஒரு நாட்டில் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை - அவர்களின் தரம், 2. அந்த நாட்டில் பெண்கள் எவ்விதம் நடத்தப்படுகிறார்கள் ஆகிய இரண்டு காரணங்களாலும் ஒரு நாட்டின் உயர்வு அல்லது தாழ்வு அமையும்.

தேசபக்தி இருந்தால் மட்டுமே இந்தியா முன்னேறும். எனவே கல்விப் பாடத்திட்டங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள், பத்திரிகைகள் போன்ற எல்லாவற்றின் லமாகவும் மக்கள் உள்ளத்தில் தேசபக்தியைக் கோயில் கொள்ளச் செய்ய வேண்டும் - இதுவே இந்தியாவை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும்.

நாட்டுப்பற்று வளர்ந்தால், நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் நிலவும்.

581. கேள்வி:இந்தியா உயர்வு பெறுவதற்கு என்ன வழி?

□பதில்: 1. இன்று அரசியல்வாதிகள் பொது நலம் மறந்து, சுயநல ஊஞ்சல் கட்டி ஆடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமாறி சுயநல மில்லாத அரசியல் தலைமை வேண்டும், 2. நேர்மையான அரசு அதிகாரிகள் வேண்டும், 3. பொறுப்புள்ள குடிமக்கள் வேண்டும் - இந்த ன்றும் ஒன்றுசேரும்போதுதான் நாடு உயர்வு பெறும்.

ஒன்றுபட்ட முயற்சியே நாட்டின் முன் னேற்றத்திற்கு உரிய ஒரே வழியாகும். 'இந்தியர் அனைவரும் ஓர் இனம், இந்தியா முழுவதும் ஒன்றே, பாரதம் ஒரே நாடு' என்ற எண்ணம் தலைதூக்கி நின்று நம் அனைவரையும் ஒருங் கிணைத்ததால், தேசம் அன்று விடுதலை பெற்றது.

அது போலவே, 'இந்தியராகிய நாம் அனைவரும் ஒன்றே' என்ற எண்ணம் இன்று வலுப்பெற்று நம்மை ஒன்றுபடுத்தினால்தான் நம் நாடு உயர முடியும்.

''ஒரு மனிதனோ ஒரு நாடோ தலை நிமிர்ந்து கம்பீரமாக நடக்க வேண்டுமானால், அது கடின உழைப்பால்தான் முடியும்'' என்று, மகாத்மா காந்திஜி கூறியதையும் இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

'தியாகம் உள்ள ஒரு சமுதாயமே சிறந்த ஒரு சமுதாயமாக விளங்கும்' என்று, சுவாமி விவேகானந்தர் நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

582. கேள்வி: இந்தியாவின் வளர்ச்சிக்கு இடையூறாக இருப்பது எது?

□பதில்: வளமான சிந்தனைகளாலும், வளமான செயல்களாலும்தான் வளமான இந்திய சமுதாயம் உருவாகும்.

இன்று நாடு போதிய முன்னேற்றம் பெறாததற்கு ஒரு முக்கிய காரணம், கடமையைச் செய்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவும், கடமை தவறுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருப்பதுதான்.

கடமையை மறந்தால் விளைவது கொடுமையாகத்தானே இருக்கும்?

ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும், அந்த நாட்டிலுள்ள உயர்ந்தவர்கள் அல்லது தாழ்ந்தவர்களைப் பொறுத்தே அமைகிறது.

தியாக மனப்பான்மையும் செயல்திறமையும், இன்று நாடு முழுமைக்கும் தேவைப்படுகிறது.

இன்றைய இளைஞர்களின் ஒழுக்கமான வாழ்க்கைதான் எதிர்காலத்தை நிர்ணயம் செய்யும்.

நம் உள்ளங்கள் யாவும் ஒன்றாகவே சிந்திக்குமானால் - நம் சிந்தனைகள் யாவும் ஒரே பாதையில் செல்லுமானால் - இந்தியா உயர்வு பெறுவது நிச்சயம்.

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கரமும் உழைக்க முன்வந்தால், இந்தியா உன்னதமாக உயரும் என்பதில் என்ன சந்தேகம்?

583. கேள்வி: இந்தியாவில் தீண்டாமை இருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் தீண்டாமை என்பது, ஏதோ ஒரு விதத்தில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. தீண்டாமை என்ற சேற்றில் கால் வைத்து, மனிதகுலம் வெளியே வர முடியாமல் தவித்துத் திண்டாடிக் கொண்டிருக்கிறது. இந்தத் தீண்டாமை என்னும் பேய் இந்துமதத்தைப் பாழ்படுத்தும் சக்தியாக இருக்கிறது.

மற்றவர்களுக்காக உழைப்பவர்களைத் தீண்டத்தகாதவர்கள் என்று கருதுவது அறிவுடைமையல்ல.

தீண்டாமை, ஜாதிவெறி ஆகியவை நமது தலையில் சாபமாகவும் பாரமாகவும் இருந்து அழுத்திக்கொண்டிருக்கின்றன.

தீண்டாமை என்பது சமுதாயக் கொடுமை. இது இந்த நாட்டிற்கே அவமானம்.

உலகில் சூரியன் ஒன்றுதான், நிலவும் ஒன்றுதான். அதுபோல் மனிதகுலம் என்பதும் ஒன்றுதான்.

102.எதிர்கால இந்தியா

584. கேள்வி:எதிர்காலத்தில் மகிமை வாய்ந்த இந்தியா உருவாவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் யாவை?

□பதில்:ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு தேசியப் பாரம்பரியம் உண்டு. அதை மாணவர்கள் அறிந்துகொள்வதால் அவர்களிடம் தேச ஒற்று மையும் தேசபக்தியும் ஏற்படும்.

நமது கல்வித் திட்டத்தில் நமது தேசியப் பாரம்பரியக் கருத்துகள் போதிய அளவு இடம் பெறவில்லை என்பது, நமது கல்வித் திட்டத்தில் உள்ள ஒரு பெரிய குறைபாடாகும். இந்தக் குறை நீக்கப்பட வேண்டும்.

''அடிமைக்கு விடுதலை கல்வியால் வர வேண்டும். ஏழையின் ஏழ்மை கல்வியால் தீர வேண்டும். பெண்கள் தங்கள் பெருமையைக் கல்வியால் அடைய வேண்டும்'' - பாரதியார்.

அச்சத்தையும் பேடித்தனத்தையும் அடிமைத் தனத்தையும் அகற்றுவதாகவும், ஆண்மையையும் தன்னம்பிக்கையையும் ஆன்ம சக்தியையும் தருவ தாகவும் அமைந்த கல்வியை நாம் நமது மாணவர்களுக்குத் தர வேண்டும்.

ஒருவரிடம் ஆளுமையை வளர்ப்பதற்கும் உருவாக்குவதற்கும் கல்வி பெரிதும் உதவுகிறது.

ஒரு சமுதாயத்தில் இருப்பவர்கள் பெற்றி ருக்கும் கல்வியைப் பொறுத்தே அந்தச் சமுதா யத்தின் தரம் அமைகிறது. எனவே நல்ல

இளைஞர்களை உருவாக்கும் முயற்சிகள், நல்ல நாட்டை உருவாக்கும் முயற்சிகளாகும்.

மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் கடுமையாக உழைக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

தனிமனித உழைப்பும், சமுதாயக் கூட்டு முயற்சியும் இணையும்போதுதான் இந்தியா ஒரு சிறந்த சமுதாயமாக உருவாக முடியும்; ஒன்றுபட்ட சமுதாயம் சாதனைகளைப் படைக்கும். இந்தக் கருத்து நமது உள்ளங்களிலும் இல்லங்களிலும் நிறைந்திருக்கட்டும், நிலைத்திருக்கட்டும்.

585. கேள்வி: இந்த 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் நிலை எப்படி இருக்கும்? இந்து மதத்தின் நிலை எப்படி இருக்கும்?

□பதில்: ஒவ்வொரு மனிதனும் இயல்பிலேயே தெய்விகம் வாய்ந்தவன்.

பலரிடம் தெய்விகக் குணங்கள் மங்கிய நிலையில் இருக்கின்றன. இது அறியாமை நிலை(அஞ்ஞான நிலை) என்று கூறப்படுகிறது. இதை ஆழ்ந்த உறக்கத்திற்கு ஒப்பிடலாம்.

சிலரிடம் தெய்விகக் குணங்கள் வெளிப்பட ஆரம்பித்திருக்கும். இது உறக்கம் கலைந்து விழிப்பு பெற இருக்கும் நிலை போன்றது. இந்த நிலை ஞானசூரியன் உதிப்பதற்கு முன்பு தோன்றும் சூரியோதயம் போன்றது. இந்த நிலையில் ஆன்மிக சாதகர்கள் பலர் இருப்பார்கள்.

தங்களிடம் புதைந்திருக்கும் தெய்விகக் குணங்கள் முழுவதையும் வெளிப்படுத்தியவர் களை மகான்கள், ஞானிகள் என்ற வரிசையில் உலகம் போற்றி வருகிறது.

21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தெய்விகம் மங்கிய நிலை என்பது குறைவா கவும், தெய்விகம் ஒளிவீசும் நிலை என்பது அதிகமாகவும் இருக்கும்.

21-ஆம் நூற்றாண்டில்-வேத காலத்தில் வாழ்ந்த ரிஷிகள் போன்ற-மகத்தான ஆன்மிக வலிமை வாய்ந்த மகரிஷிகள் பலரை இந்தியா தோற்றுவிக்கும் என்பது சர்வ நிச்சயம். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஒரு மாம்பழம் தரையில் வீழ்ந்து, அங்கேயே சில நாள்கள் கிடந்து, அழுகிப் போய்விடுகிறது என்று வைத்துக்கொள்வோம்.

அந்த அழுகிய மாம்பழத்தை இறைவனுக் கும் நாம் படைக்க முடியாது; மற்றவர்களுக்கும் தர முடியாது; நாமும் உண்ண முடியாது.

அதைப் பார்ப்பவர்கள், 'இந்த மாம்பழம் இனி எதற்குமே உதவாது!' என்ற முடிவுக்குத் தான் வருவார்கள்.

அப்படிப்பட்ட அழுகிய மாம்பழத்தி லிருந்து சில நாள்களுக்குப் பிறகு ஒரு துளிர் வெளிவருகிறது. அது படிப்படியாக மாங்கன் றாகி, சிறிய மரமாகி, பெரிய மரமாகி - நாளடைவில் இனிய சுவை மிகுந்த ஏராளமான மாம்பழங்ளைத் தரும் பழுமரம் ஆகிறது.

'இந்த அழுகிய மாம்பழம் இனி எதற்குமே உதவாது!' என்ற ஒரு நிலையில், இந்தியாவின் கடந்த சில நூற்றாண்டுகள் இருந்தன.

அழுகித் தரையில் வீழ்ந்திருந்த மாம்பழத்திலிருந்து ஒரு துளிர் (இளஞ்செடி) வெளிவருவதைப் போல, 19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் அவதரித்தார்கள்.

அவர்கள் தோற்றுவித்த சமய, சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனைகள் மெல்ல மெல்ல வளர்ந்து, மாங்கன்று மாமரமாகும் நிலையை இப்போது அடைந்துள்ளன. அந்த மாமரம் மாங்கனி என்ற தேசிய-ஆன்மிக மறுமலர்ச்சியை ஏராளமான விதங்களில் 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் ஏற்படுத்தும்.

இதனால் ஆன்மிகத்தின் அடிப்படையில் அரசியல், கல்வி, கலை, இலக்கியம், வணிகம், பொருளாதாரம், நிர்வாகம் போன்ற எல்லாத் துறைகளிலும் இந்தியா தன்னுடைய உன்னத ஆற்றல்களை வெளிப்படுத்தும்.

21-ஆம் நூற்றாண்டில் இந்திய மக்களிடம் மனவளம், பொருள்வளம் ஆகிய இரண்டும் இருக்கும்.

இந்தியா பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற நாடாக விளங்கும். அது இந்தியாவில் பல ஆக்கபூர்வமான முன்னேற்றங்களுக்கு வழி வகுக்கும்.

இந்திய மக்களின் பொருளாதார நிலை உயர்ந்ததும் - இது வரையில் இந்துக்களின்

வறுமையைப் பயன்படுத்தி நடந்து வந்த - கிறிஸ்தவ மதமாற்றங்கள் முதலானவை பெருமளவில் வலுவிழந்துவிடும்.

இந்தியாவின் கடந்த கால வரலாற்றில், இந்தியா பல காலங்களில் உயர்ந்த நிலையில் இருந்திருக்கிறது.

இனி வர இருக்கும் நூற்றாண்டில் - இதற்கு முன்பு இந்தியா உயர்ந்த நிலையில் இருந்த காலங்களை விடவும் - பல மடங்கு அனைத்துத் துறைகளிலும் பெருமைப்படத்தக்க வகையில் தலைநிமிர்ந்து நிற்கும்.

இன்று அறிவியல் வளர்ச்சியின் அபார சாதனைகளால் மனிதகுலம் எத்தனையோ நன்மைகளைப் பெற்றிருக்கிறது. அதோடு மனிதனிடம் தவறான போக்குகளும், அசுர வேகத்தில் வளர்ந்து வருகின்றன. இவற்றின் தீய விளைவுகளிலிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்றும் சக்தி இந்திய ஆன்மிகத்திற்கு மட்டும்தான் உண்டு.

வர இருக்கும் நூற்றாண்டில் உலக நாடுகளை அழிவிலிருந்து பாதுகாக்கும் பணியை, இந்திய ஆன்மிகம் செய்ய இருக்கிறது.

மேலைநாடுகளின் ஆன்மிக தாகத்தைத் தீர்ப்பதாகவும், உலக நாடுகளுக்கு அறநெறி காட்டும் வழிகாட்டியாகவும், உலகின் ஆன்மிக குருவாகவும் 21-ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பணி அமையும்.

21-ஆம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் பெண்கள் பல துறைகளில் முக்கியத்துவம் பெற்றுச் சாதனைகள் புரிவார்கள்.

எதிர்கால இந்தியாவைப் பற்றி சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறியுள்ளார்:

''மிருகபலத்தால் அல்லாமல், ஆன்மிக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப் போகிறது. அழிவு முறையின் லமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக, அமைதி, அன்பு ஆகிய முறைகளின் லமாகத் தான் இந்தப் பணி நடைபெறும்.... புராதன பாரத அன்னை மீண்டும் ஒரு முறை விழிப்படைந்துவிட்டாள். தனது அரியணையில் அவள் அமர்ந்திருக்கிறாள். புத்திளமை பெற்று, என்றுமே இல்லாத அரும்பெரும் மகிமைக ளோடும் அவள் திகழ்கிறாள். இந்தக் காட்சி யைப் பட்டப்பகல் வெளிச்சத்தைப் போன்று நான் தெளிவாகப் பார்க்கிறேன். அமைதியும் வாழ்த்தும் நிறைந்த குரலில் இந்தப் பாரத அன்னையை உலகம் முழுவதும் பிரகடனப் படுத்துங்கள்.''

103. இந்து மதம்

586. கேள்வி: இந்து மதத்தின் தலையாய கொள்கை எது?

☐பதில்: 'சமய சமரசம்' என்று நான் கருதுகி றேன்.

587. கேள்வி: இந்து மதம் வேதங்களுக்கு அதிக முக்கியத்துவம் தருவது ஏன்?

☐பதில்: இறைவனின் ஆணையாக வேதங்கள் விளங்குகின்றன.

588. கேள்வி: உலக இலக்கியங்களில் தலைசிறந்த இலக்கியம் என்று நீங்கள் எதைக் கருதுகி றீர்கள்?

□பதில்: மகாபாரதம்.

589. கேள்வி: 'வசுதைவ குடும்பகம்' என்றால் என்ன?

□பதில்: 'உலகம் முழுவதும் ஒரே குடும்பம்' என்பது பொருள். இது இந்து மதத்தின் ஒரு முக்கியக் கருத்தாகும்.

590. கேள்வி:இந்து மதம் குறிப்பிடும் நிலையாமை பற்றிய கருத்து, வாழ்க்கையில் தளர்ச்சியை ஏற்படுத்தி ஒருவனை முன்னேறவிடாமல் செய்துவிடுகிறதல்லவா?

□பதில்:நிலையாமை பற்றிய கருத்தை இந்து மதத்தவர்கள், பிற மதத்தவர்கள், மதத்திலேயே ஈடுபாடு கொள்ளாதவர்கள், நாத்திகர்கள் உட்பட அனைவருமே ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

வேதாந்தமாகச் சொன்னாலும் சரி, லௌகிகமாகச் சொன்னாலும் சரி; நிலையாமை என்பது இருந்துகொண்டுதான் இருக்கிறது.

நிலையாமை என்ற கருத்து, 'நாளை செய்வதை இன்றே செய்' என்று மனிதனைத் தூண்டி நற்செயல்களில் விரைந்து ஈடுபட வைக்கிறது; ஊக்கம் தந்து உழைக்க வைக்கிறது; பாவம் செய்வதிலிருந்து பாதுகாக்கிறது; நல்ல வனாக அறவழியில் வாழ வைக்கிறது.

591. கேள்வி: 'இந்து மதத்தில் தீண்டாமை என்பது ஒரு சாபக்கேடாக இருந்துகொண்டிருக்கிறது' என்று காந்திஜி கருதினார். இதுபோல் அருளா ளர்கள் வேறு யாராவது நினைத்திருக்கிறார்களா?

□பதில்:''தீண்டாமை கூடாது'' என்று ஸ்ரீராமா னுஜர், சுவாமி விவேகானந்தர் உட்பட பலரும்

பல காலமாக முயன்றிருக்கிறார்கள். ஆனால் அதை காந்தியடிகள்தான் ஓர் இயக்கமாகச் செய்தார்.

592. கேள்வி:இந்து மதத்தில் தீண்டாமை இருப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்:தீண்டாமை போன்றவை நாட்டைப் பீடித்திருக்கும் நோய்கள் ஆகும்.

''ஜாதி மதங்களைப் பாரோம்'' என்ற பாரதியாரின் பொதுநோக்கு வளர வேண்டும்.

''தீண்டாமை என்பது ஒரு பேய்; இது பாரத நாட்டைப் பாழாக்கிய பேய்; சண்டைகள் ட்டிடும் பேய்; ஜாதிப் பிளவை உண்டாக்கும் பேய்'' என்று, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார்.

தீண்டாமை இருந்த இடம் கூட தெரியாமல் நம் நாட்டை விட்டே தொலைந்து போக வேண்டும். ''தீண்டாமை கூடாது'' என்று அரசியல் தடைச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்றாலும் கூட, அழகான முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி போன்று - சேறு பூசியது போன்று -நாட்டில் தீண்டாமை இருந்துகொண்டிருக்கிறது.

உலகில் ஒரு பக்கத்தில் மணமேடை என்றால், இன்னொரு பக்கத்தில் பிணமேடையும் இருக்கத்தானே செய்கிறது?

593. கேள்வி:கிறிஸ்தவர்கள், ''இந்துக்களைக் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றம் செய்வது எங்கள் கடமை'' என்று கூறுகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்:தற்காப்பிற்காக இந்துக்கள், 'இந்துக் களைக் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றம் செய்வ தைத் தவிர்க்க வேண்டியது நமது கடமை' என்று நினைக்க வேண்டும்.

594. கேள்வி:இந்து ஒருவன் ஒரு கிறிஸ்தவப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வது பற்றி, உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

□பதில்:இந்து ஒருவன் கிறிஸ்தவப் பெண்ணை அல்லது இஸ்லாமியப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும்போது, பல சிறந்த பாரம் பரியப் பண்புகளை இழந்துவிடுகிறான் என்பது என் கருத்து.

595. கேள்வி:'இந்துத்துவம்' என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

□பதில்: இந்து மதத்தில் எத்தனையோ பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவினரும் 'இந்துத்துவம்' என்பதற்கு ஒவ்வொரு விதமான பதிலைக் கூறுவார்கள். அவர்கள் கூறும் பதில்களில் பொது வாகவும், அடிப்படையாகவும் சில கருத்துகள் இருக்கும்.

ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந் தரும் தங்கள் வாழ்வு-வாக்கு ஆகியவற்றால் எந்த உண்மைகளை விளக்கினார்களோ,அதையே நான் 'இந்துத்துவம்' என்று கருதுகிறேன்.

596. கேள்வி:சம்ஸ்கிருத மொழி பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்:இந்துமதக் கருத்துகளையும், இந்தியப் பண்பாட்டையும் கட்டிக் காத்ததில் சம்ஸ்கிருத மொழிக்கு முக்கிய பங்குண்டு.

இந்திய மொழிகள் அனைத்திலும் சம்ஸ்கிருத மொழி ஊடுருவி இருக்கிறது. அதனால் அது அனைத்து இந்திய மொழிகளுக்கும் தாயாகவும் தந்தையாகவும் விளங்குகிறது.

உலகிலுள்ள எல்லா மொழிகளையும்விட, சம்ஸ்கிருத மொழியில்தான் உயிர் எழுத்துகள் அதிகமாக அமைந்திருக்கின்றன.

104.புத்த மதம்

597. கேள்வி:புத்தருக்கு 'கௌதமர்' என்ற பெயர் எப்படி வந்தது?

□பதில்:முதன் முதலில் கௌதமர் என்ற முனிவருடன் புத்தர் சிறிது காலம் தங்கியிருந்தார். அதனால் அவருக்கு 'கௌதம புத்தர்' என்ற பெயர் ஏற்பட்டது.

598. கேள்வி:புத்தர் எந்த வயதில் சந்நியாசம் மேற்கொண்டார்? எந்த வயதில் ஞானம் பெற்றார்? எந்த வயதில் மறைந்தார்?

□பதில்:புத்தர் தமது 29-ஆவது வயதில் துறவறம் மேற்கொண்டார். அவர் புத்தகயையில், நிரஞ்ஜனா நதிக்கரையில் போதி மரத்தடியில் ஞானம் பெற்றபோது அவரது வயது 35. குசி நகரத்தில் அவர் தமது 80-ஆம் வயதில் மறைந்தார்.

புத்தர் பிறந்தது, ஞானம் பெற்றது, மறைந்தது ஆகிய ன்றும் வைகாசிப் பௌர்ணமியன்று நடைபெற்றன. ஆகவே, வைகாசிப் பௌர்ணமி நாள் ன்று விதங்களிலும் பௌத்தர்களுக்கு ஒரு புனிதமான நாள் ஆகும்.

மாதவியின் மகளான அறச்செல்வி மணி மேகலைக்கு அமுதசுரபி கிடைத்ததும், ஒரு வைகாசிப் பௌர்ணமி நாளில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

599. கேள்வி:''தெய்வங்களின் பெயரால் மிருகங் களைப் பலியிடக் கூடாது'' என்று கூறிய முதல் சமயத் தலைவர் யார்?

□பதில்:''ஆடு, மாடு, குதிரை போன்றவற்றை யாகங்களில் பலியிடுவது தவறு'' என்று முதன் முதலில் வாய்விட்டுச் சொல்லி, வெளிப் படையாகக் கண்டித்தவர் புத்தரே ஆவார்.

600. கேள்வி:'ஜென் பௌத்தம்' என்றால் என்ன?

□பதில்:'ஜென்' என்ற ஜப்பானிய சொல்லுக்கு 'தியானம்' என்பது பொருள்.

ஜென் பௌத்தம் மனிதரிடம் உள்ள 'நான்' என்பதை அகற்றுவதைப் பற்றி விரிவாக ஆராய்கிறது. '' 'நான்' என்பது நீங்கும்போது, நமது நிஜ சொரூபம் விளங்கும்'' என்று ஜென் பௌத்தம் கூறுகிறது.

105.மதம்

601. கேள்வி: 'மதம்' என்றால் என்ன?

□பதில்:விலங்கு நிலையில் இருப்பவனை, பாமர மனிதன் என்ற நிலைக்கு உயர்த்துவது மதம். பாமர மனிதனைப் பண்புள்ளவன் என்ற நிலைக்கு உயர்த்துவது மதம். பண்புள்ள மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்துவது மதம்.

மதம் என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்குக் 'கருத்து - கொள்கை, வழி' போன்ற பல பொருள்கள் உண்டு. மதம் என்பதை தமிழில் 'சமயம்' என்று வழங்குகிறோம். உணவைப் பக்குவப்படுத்துவது சமையல். மனிதனின் மனத்தைப் பக்குவப்படுத்துவது சமயம்.

மனிதனைப் பண்படுத்துவது, பக்குவப் படுத்துவது, உயர்ந்த இலட்சியத்திற்குத் தயார் செய்வது சமயம் ஆகும்.

வாழ்க்கையில் அறம் இருக்க வேண்டும். எளிமை இருக்க வேண்டும், தூய்மை இருக்க வேண்டும் - இதைத்தான் மதம் போதிக்கிறது.

கரடு முரடான கற்பாறையிலிருந்து, சிற்பி அழகிய தெய்வ வடிவம் அமைக்கிறான். ஆதலால் கரடு முரடாக இருந்த பாறை, ஆலயத்தில் வைத்து வழிபடும் தகுதியைப் பெறுகிறது.

கட்டையைக் கோடரி கொண்டு வெட்டி னால் கர்ணகடூர சப்தம் ஏற்படுகிறது. அதே கட்டையை அழகிய வீணையாக்கிய பிறகு - வெட்டக்கூட வேண்டாம் - தட்டினாலே இனிய ஓசை தருகிறது.

கற்பாறை வழிபடும் தெய்வ விக்கிரம் ஆவதுபோல - கட்டையின் கர்ணகடூர சப்தம் வீணையின் இன்னிசை ஆவதுபோல - பக்குவம் பெறாத மனிதனைப் பக்குவப்படுத்தி, இறைவ னுடன் இரண்டறக் கலக்கச் செய்வது மதம்.

602. **கேள்வி: உலகில் பல மதங்கள் உள்ளன. இந்த மதங்களுக்கிடையில் உள்ள ஒற்றுமை - வேற்றுமை என்ன?**

□பதில்: ''வணங்கும் துறைகள் பலப்பலவாக்கி'' என்பது நம்மாழ்வார் வாக்கு. எனவே எல்லா மதங்களும் ஒரே ஊற்றிலிருந்து தோன்றியவை யாகும்; எல்லா மதங்களுக்கும் அடிப்படையில் ஆன்மிகம் விளங்குகிறது; உலகிலுள்ள மதங்கள் எல்லாவற்றிலும் ஓர் இறைத்தத்துவம் இழை யோடிக்கொண்டிருக்கிறது, பின்னிப் பிணைந் திருக்கிறது.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' - இது மதநல்லிணக்கத்திற்கு அடிப்படை. போரும் பூசலும் எப்போதும் வெறுக்கத்தக்கது. உண்மையான மதம் எப்போதும் மக்களை ஒன்றுபடுத்துவதாகவே இருக்கும்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ''என் தெய்வம், உன் தெய்வம்'' என்று பேசாமல் இறைவனின் பொதுத்தன்மையைக் கூறினார்.

''தெய்வம் பலபல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவர் டர்; உய்வதனைத்திலும் ஒன்றாய் எங்கும் ஓர் பொருளானது தெய்வம்'' என்று 'முரசு' கவிதையில் கூறிய பாரதியார் மேலும், ''பாருக்குள்ளே தெய்வம் ஒன்று. இதில் பற்பல சண்டைகள் வேண்டா'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மதங்கள் தங்களுக்குள் சில கருத்துகளில் ஒட்டியும், சில கருத்துகளில் ஒட்டாமலும் உள்ளன.

603. கேள்வி: மதவெறி தோன்றுவதற்கு என்ன காரணம்?

□பதில்: மனிதனை நன்னெறிக்கு அழைத்துச் செல்லும் நோக்கத்தில்தான் உலகில் எல்லா

மதங்களும் தோன்றின. எனினும் மதங்கள் தங்களுக்கிடையில் சில கருத்துகளில் இணைந்தும், சில கருத்துகளில் முரண்படுபவையாகவும் உள்ளன.

மதத்தின் பெயரால் மனிதச் சிந்தனைகளின் போக்கு தவறாகச் செயல்படும்போது, மதவெறி தோன்றுகிறது.

மதவெறி என்பது ஒரு நச்சுப்பயிர். எங்கும் எதிலும் எப்போதும் உள்ள இறைவன் ஒரு மதத்தில், ஒரு நாட்டில், ஓர் இனத்தில் எப்படி கட்டுப்பட்டிருப்பான்? எல்லையற்ற இறைவனை மக்கள் தங்கள் எல்லைக்குள் அடக்க முற்படும்போது மதவெறி தோன்றுகிறது.

மனிதர்கள் மதவெறியால் தங்களுக்குள் மாறுபடுகிறார்கள்; வேறுபடுகிறார்கள்; கூறுபடுகிறார்கள். முடிவில் அதனால் ஊறுபடுகிறார்கள்.

உண்மையான ஆன்மிகம் என்பது சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

மனிதர்களை வேற்றுமைப்படுத்துவது, பிரித்து வைப்பது மதவெறியாகும். மனிதர்களை ஒன்றுபடுத்தி மனிதநேயத்தை வளர்ப்பது இறைநெறியாகும்.

604. கேள்வி:மதத்தின் பெயரால் சண்டைச் சச்சரவுகள், வேறுபாடுகள் இருப்பது ஏன்?

□பதில்: மதத்தின் பெயரால் மக்களைக் கூறு போடுவதிலும், மத வேற்றுமைகளை வளர்ப்ப

திலும் அரசியல்வாதிகள் தங்கள் சுயநலம் காரண மாகப் பெரிதும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

ஓர் ஊரை அடைவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அது போன்று, இறைவனை அடைவதற்குரிய பல பாதைகளாகவே அனைத்து மதங்களும் விளங்குகின்றன.

மதங்கள் அனைத்தும் மனிதன் பிறவியி லிருந்து விடுபட்டு, பிறவாத நிலையை அடைய வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் காட்டு கின்றன.

மதங்கள் அனைத்தும் வெவ்வேறு அளவுகள், வடிவங்கள் கொண்ட பாத்திரங்கள் போன்றவை. அந்தப் பாத்திரங்களில் வைக்கப் பட்டிருக்கும் பால் போன்றவன் இறைவன். பாத்திரங்கள் புறத்தோற்றத்தில் வேறுபட் டாலும் உள்ளே இருக்கும் பால் ஒன்றுதான்.

605. கேள்வி: 'சீக்கிய சமயம்' என்பதில் 'சீக்கியம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

□பதில்: 'சீக்கிய சமயம்' என்பதற்கு 'சீடர்களின் சமயம்' என்று பொருள். இந்தச் சமயம், ஆன்மிகத்தில் நாம் சீடர்களாக இருந்து நம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைப் பெரிதும் வலியுறுத்துகிறது.

சீக்கிய சமயம் பற்றித் தமது பாடலில் பாரதியார், 'சீடர்தம் மார்க்கம்' என்று குறிப் பிட்டிருக்கிறார்.

106. மதநல்லிணக்கம்

606. கேள்வி: மதங்களின் நோக்கம் என்ன?

□பதில்:அனைத்து மதங்களும், 'மனிதன் கடவுள் நிலையைப் பெற வேண்டும்' என்பதையே முடிந்த முடிவாகக்கொண்டுள்ளன.

607. கேள்வி:மதங்களின் நோக்கம் என்ன? ஆன்ம நெறி என்றால் என்ன?

□பதில்:உலக சகோதரத்துவ சமுதாயத்தைத் தோற்றுவிப்பது மதங்களின் நோக்கம்.

ஆன்மநெறி என்பது பொதுநெறி. இதில் ஆண், பெண், நாடு, நிறம், இனம், மொழி போன்ற எந்த வேற்றுமைக்கும் இடமில்லை.

608. கேள்வி:அர்த்தமுள்ள மதம் எது?

□பதில்: அர்த்தம் இல்லாத மதம் எது? ஆன்மிக ரீதியில், சாராம்சத்தில், அடிப்படையில் எல்லா மதங்களும் அர்த்தமுள்ளவைதான்.

மனிதகுலத்தின், உயிர்குலத்தின் ஒருமை யைக் காட்டுவதே உண்மையான ஆன்மிக மாகும்.

609. கேள்வி: உண்மையான சமய சமரசம் ஏற்படு வதற்கு என்ன வழி?

□பதில்: மனிதனைப் படைத்த இறைவன்தான் எல்லா மதங்களையும் படைத்திருக்கிறான். எனவே எல்லோரும் எல்லா மதங்களையும் மதிப்பதுதான், உண்மையான ஒருமைப் பாட்டிற்கு வழி வகுக்கும்.

610. கேள்வி: மதங்களுக்கிடையில் நிலவும் பொது வான கருத்து என்ன?

□பதில்:1. இறைவன் மீது நம்பிக்கை, 2.எல்லோ ரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற மனித

நேயம் ஆகியவை அனைத்து சமயங்களுக்கும் அடிப்படையாக விளங்குகின்றன.

611. கேள்வி: 'ராம்' என்று அழைத்தாலும், 'ரஹீம்' என்று அழைத்தாலும், ஆண்டவன் ஒருவன்தான் என்று நான் கருதுகிறேன்.

இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: நம் நாட்டில் தோன்றிய மகான்களின் கருத்து எதுவோ, இந்துக்கள் அனைவரின் கருத்து எதுவோ, அதைத்தான் நீங்கள் குறிப்பிட்டிருக்கி றீர்கள். அனைத்து மதங்களும் ஒரே இறைவனின் திருவடிகளையே சுட்டிக்காட்டுகின்றன என்பது தான் உண்மை. ஆனால் இந்தக் கருத்தை முஸ்லிம்கள் - கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே!

612. கேள்வி: உலகில் பல சமயங்களும், பல சமயப் பிரிவுகளும் இருப்பது ஏன்?

□பதில்: இறைவன் (காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையில்), மக்கள் உள்ளத் தில் ஆன்மிக எண்ணங்களைத் தோற்றுவிக்கும் பொருட்டு உலகில் பல சமயங்களையும், சமயப் பிரிவுகளையும் தோற்றுவித்திருக்கிறான்.

613. கேள்வி:மதப்பூசல்கள் கடந்த காலத்திலும் இருந்தன; இப்போதும் இருக்கின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்:கடந்த காலத்தில் மதப்பூசல்கள் நடந்தி ருப்பதைப் பார்த்து, நாம் வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

மனிதனைத் தெய்வநிலைக்கு உயர்த்த வேண்டிய மதங்கள், தங்களுக்குள் பூசலிட்டு

மனிதனை மிருகநிலைக்குத் தாழ்த்துவது, காப் பாற்ற வேண்டிய தாயே பேயாக மாறுவதுபோல் இருக்கிறது.

உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திலும், மதச் சம்பிரதாயங்களிலும் உள்ள நல்ல அம்சங்களைச் சான்றோர்கள் ஏற்று தங்கள் வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்கிறார்கள் - இதை நாம் கடைப்பிடித்தால் நமது வாழ்க்கையில் பல அற்புதமான நன்மைகளைப் பெற முடியும்.

''கிறிஸ்தவர் இந்துவாகவோ பௌத்த ராகவோ மாற வேண்டியதில்லை. அல்லது, இந்து பௌத்தராகவோ கிறிஸ்தவராகவோ மாற வேண்டியது இல்லை. ஒவ்வொருவரும் மற்ற மதங்களின் நல்ல அம்சங்களைத் தனதாக்கிக் கொண்டு, தன் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு, தன் வளர்ச்சி நியதியின்படி வளர வேண்டும்'' என்று, சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் நிகழ்த்திய தமது நிறைவு நாள் சொற்பொழிவில் கூறியுள்ளார்.

107. பொது

614. கேள்வி: 'அரிச்சந்திரன் ஒரு கற்பனைப் பாத்திரம்' என்று நான் நினைக்கிறேன். இதைப் பற்றி உங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

□பதில்: அரிச்சந்திரன் கதையாக இருக்கலாம், கற்பனையாக இருக்கலாம். ஆனால் அதில் இழையோடும் உண்மைகளை நாம் கவனிக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். கறை யில்லாத அரிச்சந்திரனின் வாழ்க்கை நமக்குக் கலங்கரை விளக்காக விளங்கட்டும்.

615. கேள்வி:சுருங்கக் கூறி விளங்க வைத்தல் என்பதற்கு உதாரணம் கூறுங்கள்?

□பதில்: திருக்குறள், ஆத்திசூடி.

616. கேள்வி: 'உபதேசம்' என்ற வடமொழிச் சொல் லுக்கு என்ன பொருள்?

□பதில்:'உபதேசம்' என்பதற்கு 'மிகவும் அருகில் இருத்தல்' என்று பொருள்.

இறைவனின் அருகில், அல்லது ஆன்மாவின் அருகில் நம்மை இருக்கச் செய்வது எதுவோ, அதுவே உபதேசம் எனப்படும்.

உபதேசம் என்றால் 'உயர்வழி காட்டுதல்' என்று பொருள்.

617. கேள்வி: திருமுருக கிருபானந்தவாரியார் போன்ற சமயச் சொற்பொழிவாளர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: ''யார் பகவானின் பெருமையை மக்களுக்குப் போதித்து, அவர்கள் மனத்தை இறைவனை நோக்கித் திருப்புகிறார்களோ அவர்களே மிகவும் பாக்கியசாலிகள்'' என்கிறார் நாராயண பட்டத்ரி.

618. கேள்வி: லோகம், உலகம் ஆகிய இரண்டு சொற்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

□பதில்: உலகம் என்பது தமிழ்ச் சொல். லோகம் என்பது வடமொழிச் சொல். 'லோக்' என்பது ஹிந்திச் சொல். மூன்றுக்கும் பொருள் ஒன்றுதான். 'லோகம்' என்ற சம்ஸ்கிருதச் சொல்லுக்குக் 'கண்ணுக்குப் புலனாவது' என்பது பொருள்.

Look என்ற ஆங்கிலச் சொல்லும், 'கண்ணால் பார்த்தல்' என்ற பொருளுடையது என்பதை நாம் அறிவோம்.

'உலகு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு அகராதியில் 'பரந்தும் விரிந்தும் இருப்பது' என்று பொருள் தரப்பட்டிருக்கிறது.

சம்ஸ்கிருத அகராதியில் 'லோகம்' என்பதற்கு, 'அகன்ற இடம், மக்கள் பரப்பு' என்று பொருள் தரப்பட்டிருக்கிறது.

619. கேள்வி:துறவி என்பவர் யார்?

☐பதில்: இறைவன் மீது தூய பக்தி கொண்டவர்கள், தியாகம் - தொண்டு உடையவர்கள், நேர்மையான வாழ்க்கை வாழ்பவர்கள், உலகப் பற்று இல்லாமல் இருப்பவர்கள் அனைவருமே - அவர்கள் துறவறம் மேற்கொள்ளாவிட்டாலும் கூட துறவிகள்தான்.

620. கேள்வி: நான் சமண மதத்தைச் சேர்ந்தவன். நான் சந்நியாசம் மேற்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதற்கு என் வீட்டார் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இதைப் பற்றி உங்கள் கருத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

☐பதில்:''சந்நியாசம் மேற்கொள்ள விரும்புபவர்களை அவருடைய குடும்பத்தினர் தடுக்க முயற்சி செய்வார்கள். அது அறமன்று. மாறாக, துறவறம் மேற்கொள்ள விரும்புபவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்'' என்று, சமண சமய நூலாகிய சீவக சிந்தாமணி கூறுகிறது.

621. கேள்வி: நல்ல நண்பர் யார்?

☐பதில்: நல்ல நண்பர்களை நீங்கள் அனுபவத்தின் லம்தான் அறிந்துகொள்ள முடியும்.

622. கேள்வி: நகைச்சுவை பற்றி உங்கள் கருத்து என்ன?

☐பதில்: நகைச்சுவை வாழ்க்கைக்குச் சுவையூட்டுகிறது. நகைச்சுவை உணர்வு மனிதனுக்குத் தேவை என்பதில் இரண்டாவது கருத்திற்கு இடமில்லை.

ஆனால் நகைச்சுவை என்ற பெயரால் நாம் பிறர் மனத்தைக் காயப்படுத்தக் கூடாது.

623. கேள்வி: பொழுதுபோக்குத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

☐பதில்: ஒட்டுமொத்தமாகச் சொல்வதென்றால், டெலிவிஷன் என்பதை டெலிவிஷம் (நஞ்சு) என்றுதான் சொல்ல வேண்டும்.

பொழுதுபோக்கு என்பதையே நோக்கமாகக் கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிக்கைகள், கதை, கட்டுரைகள், நகைச் சுவைகள், திரைப்படங்கள் ஆகியவை சமுதாயத்தில் எந்த நல்ல மாற்றத்தையும், நல்ல தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

624. கேள்வி: மக்கள் யார்? மாக்கள் யார்?

☐பதில்: வாழ்தல் என்பது மனிதனுக்கு மட்டுமே உரியது. மற்ற உயிர்கள் ஜீவிக்கின்றன.

நன்மை - தீமை, அறிந்து நல்ல வழியில் செயல்படுபவர்கள் மக்கள்.

நன்மை - தீமைகளை அறியாமல், தீய வழியில் செயல்படுபவர்கள் மாக்கள்.

மாக்கள் என்ற நிலையில் உள்ளவர்களை மனித நிலைக்கு உயர்த்தி, பிறகு அவர்களை அமர நிலைக்கு உயர்த்துபவையாக ஞானநூல்கள் விளங்குகின்றன.

625. கேள்வி:மனித இயல்பு எது? மிருக இயல்பு எது?

☐பதில்: தனக்கு உரியவற்றைப் பிறருடன் பகிர்ந்து வாழ்வது மனித இயல்பு. பிறருக்கு உரியவற்றைப் பறித்து வாழ்வது விலங்கு இயல்பு.

626. கேள்வி:'வஞ்சகம்' என்றால் என்ன?

☐பதில்: உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல், கபடத்தனமும் வஞ்சகமுமாகும்.

627. கேள்வி: பூமிக்குப் பாரமாக வாழ்பவர்கள் யார்?

☐பதில்: வீணில் உண்டு களித்து வாழும், சின்னஞ்சிறு கதைகள் பேசும், வேடிக்கை மனிதர் அனைவரும் பூமிக்குப் பாரமாகவே வாழ்கிறார்கள்.

628. கேள்வி: குற்றம் எது? தவறு எது?

☐பதில்: குற்றம் என்பது, தெரிந்து வேண்டுமென்றே பிறருக்குத் கேடு விளைவிக்கும் பொருட்டு செய்வது. அதற்குத் தண்டனை உண்டு.

தவறு என்பது, தெரியாமல் அறியாமையால் செய்வது. அதற்கு மன்னிப்பு உண்டு.

சட்டங்கள் குற்றவாளிகளுக்குத் தண்டனை தருகின்றன. அறநூல்கள், ஆன்மிக நூல்கள் மனிதன் தவறு செய்ய முற்படும்போது அவனைத் தடுத்து நிறுத்தி, நேர்மையான வழியில் செல்லத் தூண்டுகின்றன.

629. கேள்வி: கிறிஸ்தவ பாதிரிமார்கள், "எங்களுக்கு 72 நாடுகளிலிருந்து பணம் வருகிறது. எங்களை இந்துக்களாகிய உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்று அடித்துக் கூறுகிறார்களே, இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

□பதில்: அவர்கள் கூறுவது உண்மைதான்.

630. கேள்வி: அமரர் கல்கியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

□பதில்: ஆத்மசுத்தியுடன் எழுதும் நல்ல ஓர் எழுத்தாளன் காலத்தின் அடையாளமாக இருப் பான். இதற்கு அமரர் கல்கி சிறந்த ஓர் எடுத்துக் காட்டு.

631. கேள்வி:இப்போதிருக்கும் கவிஞர்களுக்கு நீங்கள் என்ன அறிவுரை கூற விரும்புகிறீர்கள்?

□பதில்: பெண்களின் அழகை வர்ணிப்பதையும் தாண்டி, நமது கவிஞர்களின் சிந்தனை செல்ல வேண்டும்.


632. கேள்வி: நீங்கள் ஆன்மிக வினா-விடைக்கு எந்த அடிப்படையில் கேள்விகளைத் தேர்ந்தெடுக்கி றீர்கள்?

□பதில்: எல்லாக் கேள்விகளுக்கும் எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. இந்த நிலையில், 'என்னால் பதில் சொல்ல இயலும்' என்ற நிலையிலுள்ள கேள்விகளுக்கு மட்டும்தான் பதில் எழுத முயற்சி செய்கிறேன்.

****

ஆன்மிக வினா-விடை

நான்கு பாகங்கள்



Aanmiga Vinaa Vidai - Volume 5 (Tamil) Rs. 70/-